ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி பகவத் விஷயம்.

ஈடு முப்பத்தாருயிரப்படி.

ஐந்தாம் பத்து.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி பகவத் விஷயம்.

ஈடு முப்பத்தாறுயிரப்படி.

ஐந்தாம் பத்து.

முதல் திருவாய்மொழி—கையார் சக்கரம் : ப்ரவேசம்.

*கண்ணுதார் முறுவலிப்பவிலே ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை யநுஸந்தித்து, அதுக்குப் பரிஹாரமாக, "பகவத்பாத்வஜ்ஞாநத்தையுண்டாக்குவோம்" என்று பகவத்பரத்வத்தை உபதேசித்தார்—கீழ்; இரண்டுகிட்டம் தன்னிலே சேரக்கிடக்க அதிலேயொன்று பொன்னுயிருக்குமாபோலே அவர்களிலே ஒருவராயிருக்கிற தாம் அவர்களையும் திருத்தும்படி தமக்குப்பிறந்த நன்மைக்கு "அடியென்"? என்று பார்த்து, தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே செய்தானத்தனை யென்கிறார் "அநாதிகாலம் ஸம்ஸரித்து, புத்திபூர்வம் விரும்புவது சப்தாதி விஷயங்களையேயாய், தன்பக்கல் எனக்குள்ளது அஹ்ருதயமான உக்திமாத்ரமேயாயிருக்க; நான் புத்திபூர்வம் பண்ணிப் போந்த ப்ராதிகூல்யங்களை விஸ்மரித்து ஜ்ஞாநம்பிறந்த பின்பு ப்ராமாதிகமாக வந்தவற்றில் அஜ்ஞனாய், என்ன இவ்வளவாக விஷயீகரித்தான்; பிறரையும் நான் திருத்தவல்லேனும்படி பண்ணினான்" என்று தாம்பெற்ற பேற்றின் கனத்தைச் சொல்லி ஈடுபட்டு அநுபவிக்கிறார். பகவத்பரத்வ ஜ்ஞாநத்தைத் தம்நெஞ்சிலே படுத்தினபடியையும், அதுக்கு உறுப்பாயிருப்பதொரு நன்மை தமக்கின்றிக்கே யிருந்தபடியையும், அநாதிகாலம் தாம் விபரீதங்களையே அநுஷ்டித்துப் போந்தபடியையும், புருஷார்த்தோபாயமாகச் சொல்லுகிறவற்றில் தாம் ஒன்றும் கனக்கண்டறியாதேயிருக்கிறபடியையும், (இகழ்ந்து நோவுபடா நிற்கச்செய்தே) "புருஷார்த்தம் வேணும்" என்னும் ப்ரதிபத்தியுமின்றிக்கே யிருந்தபடியையும் ஸம்ஸாரத்திலே தரைகாண வொண்ணுதபடி ஆழ்ந்து நோவுபடா நிற்கச்செய்தே "நோவுபடா நின்றோம்" என்று அறிவிக்கவும் மாட்டாதே உணர்த்தி யற்றிருக்கிறபடியையும், அம்ருதமிருக்க விஷத்தை விரும்புவாரைப்போலே ஆராவமுதை விட்டு இன்னமுதெனத்தோன்றின சப்தாதி விஷயங்களை விரும்பிப்போந்தபடியையும், அதுக்கு மேலே அவன்பக்கல் இச்சையின்றிக்கே யிருக்க அவனை யுகந்தார் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லிப் போந்தபடிகளையும் அநுஸந்தித்து; இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் தண்ணியேனுயிருக்கிற என்னை, அவையொன்றும் பாராதே, "தான் ஸர்வசேஷி" என்னுமிடத்தையும் "தன்திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம்" என்னுமிடத்தையும் என் நெஞ்சிலே படுத்தி என் பக்கலிலே வ்யாமுக்தனாய் என்னோடே வந்து கலந்தானென்று தாம்பெற்ற பேற்றைச்சொல்லி ஹ்ருஷ்டராகிறார். ... . *

முதற்பாட்டு என்பக்கலுள்ளது அஹ்ருதயமான உக்தியாயிருக்க, இத்தை ஸஹ்ருதயமாகக்கொண்டு விரும்பி, "இனி இதுக்கு அவ்வருகில்லை" என்னும்படியான பேற்றைப் பண்ணித் தந்தானென்கிறார்.

கையார்சக்கரத்து என்கருமாணிக்கமேயென்றென்று*
பொய்யேகைம்மைசொல்லிப் புறமேபுறமேயாடி*
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்றுகாப்பாரார் ?*
ஐயோ கண்ணபிரான் அறையோவினிப்போனலே. (1)

[கையார் சக்கரத்து] - வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியான கையிலே திருவாழியைத் தரித்தானாயிற்று. இதுதான் ஆபரணமுமாய் வினைத் தலையில் ஆயுதமுமாயிறே யிருப்பது. ஒருகைக்குப் படையா யிருக்குமிறே. "கூராராழி வெண்சங்கேந்தி-வாராய்" என்று அனுகூலர்க்கு ஆசைப்படுகைக்கு உடலாய், ப்ரதிபக்ஷத்தைத் துணிக்கைக்கும் உடலாயாயிற்று இருப்பது. [கையார் சக்கரத் தென்கருமாணிக்கமே]- அத்தென்பது - சாரியைச்சொல். இப்படி வருமிடமெங்கும் கண்டுகொள்வது. [என் கருமாணிக்கமே] - கையுந் திருவாழியுமான அழகை அநுஸந்தித்தால் அடைவே ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை அநுஸந்திக்கவல்லரல்லரே, அநந்தரம் வடிவழகிலே கால் தாழ்ந்தார். படிகடந்து அவ்வருகு போமவரல்லரே. ச்ரமஹரமாய் நீலரத்நம்போலே பெருவிலையனை வடிவழகை எனக்கு முற்றூட்டாக்கினவனே. [என்று என்று] - இத்தை ஒருகால் சொல்லித்தான் விட்டேனோ. பகவத் விஷயத்தி லுட்புக்கதெல்லாம் குற்றமாய்த் தோற்றுகிறதாயிற்று. "போராது" என்றிருக்கையாலே. இது பொல்லாதா யிருந்ததில்லையீ! என்ன - அழகிதிறே பாவபந்தத்தோடே சொன்னேனாகில்; [பொய்யே கைம்மை சொல்லி] - பொய்யென்றும் கைம்மையென்றும் இரண்டும் பர்யாயமான சொல். இத்தால் சொல்லிற்றாயிற்று - பிறரைப்பகட்டுகையன்றிக்கே ஸர்வஜ்ஞனும் "இதுமெய்" என்று ப்ரமிக்கும்படி பெரும்பொய்யையன்றோ சொல்லிற்றென்கை. பொய்யும் மெய்யுமாகக் கலந்தத்தையேதான் சொல்லப்பெற்றதோ? [புறமே புறமேயாடி] - இப்போது, புறவென்கிறது - சப்தாதி விஷயங்களை. "பகவத் விஷயத்தில் அவகாஹித்தது போராது" என்று இத்தை "பொய்" என்னநிற்கச் செய்தேயும், சப்தாதிகள் புறம்பாய்த் தோற்றுகிறதாயிற்று இவர்க்கு; "பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ" என்னுமவரிறே. ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே யாயிற்று விஷயங்கள்தோறும் தனித்தனியே கால்தாழ்ந்தபடி. இதுதான் எப்போதை நிலையைப்பற்றச் சொல்லுகிறாரென்னில் ;- காலத்ரயத்திலுமுள்ளதும் ஸமகாலத்திற்போலே தோற்றுகையாலே, பூர்வவ்ருத்தத்தைப்பற்றச் சொல்லுகிறாரென்னவுமாம். மயர்வறமதிநலம் பெற்ற பின்பும் தமக்கு விஷயாநுரூபமாகப் போராமையாலே சொல்லுகிறாராகவுமாம். 'இதுவாகிலும்முடைய நிலைபேறிருந்தபடியென்' என்ன. [மெய்யே] - என்பக்கலுள்ளது பொய்யேயானாப்போலே, அவனடியாக வந்ததாகையாலே மெய்யேயாயிருக்குமிறே. பேற்றில் கண்ணழிவு சொல்லலாவதில்லை. [பெற்றொழிந்தேன்] - பரமபதத்தேறப்போனாலும் இப்பேற்றை அசையிட்டிருக்குமத்தனை. இனி இதிற் காட்டில் ஏற்றம் செய்யலாவதில்லை. "ஹேதுவில்லை" என்னநின்றீர், பேறு கனத்திருந்தது; இதுக்கு அடியென் பின்னை? என்ன. - [விதிவாய்க்கின்று] - பகவத்க்ருபை கரைபுரளப் பெருகாநின்றால் நம்மாற் செய்யலாவதுண்டோ? விதியென்கிறது - பகவத்க்ருபையை. *கேசவன் தமர்க்கு இப்பாலெல்லாம் இவர், விதியென்கிறது - பகவத்க்ருபையை. அதுக்கடி - அவனால் தப்பவொண்ணாதபடியிருக்கையாலே. [வாய்க்கின்று] - பகவத்க்ருபை ஈச்வரஸ்வாதந்த்ர்யமாகிற கரை

புரளப் பெருகிவந்து கிட்டாநின்றுள்ள விடத்தில். [காப்பாரார்] - இதுக்கு நிவாரகராவாருண்டோ? காப்பதெது? என்னுதே, ஆரென்கிறது இரண்டு சேதநராலே காக்கப்போமோ? பரதந்த்ரனை இவனாலும் தகையவொண்ணுது. ஸ்வதந்த்ரனை அவனாலும் தகையவொண்ணுது; பல போக்தாவான இவனாலும் தகையவொண்ணுது; பலப்ரதாதாவான அவனாலும் தகையவொண்ணுது. [காப்பாரார்] - க்ருபாஜநகையான அவள் காக்கவோ? க்ருபா பரதந்த்ரனை நீ காக்கவோ? க்ருபாபாத்ரமான நான் காக்கவோ? [மித்ரபாவேந] என்கிற ச்லோகத்திலே, எம்பார், "ஸர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞாநமும் விஸ்ம்ருதியும், ஸர்வசக்திக்கு ஒரு அசக்தியு முண்டு" என்று அருளிச்செய்வர். ஒருவன் தன்னையாச்ரயித்தால், முன்பு புத்திபூர்வம் பண்ணின குற்றத்திலே விஸ்ம்ருதிபண்ணி, ஜ்ஞாநம்பிறந்தால் ப்ராமாதிகமாய் வருமவற்றில் அஜ்ஞாநம் - அவனைவிடவேண்டி வருமளவிலே அசக்தி; இப்படி இருக்கைக்கு அடி - ஸ்வாபாவிகமான குடல்தொடக்கு. "ஆர்" என்பானென்? ஸ்வதந்த்ரனை என்னுல் தகையத்தட்டென்? என்ன; [ஐயோ] - ஆமாகில் செய்துபார்த்துக்காணாய். ஐயோ வென்கிறது - ஹர்ஷாதிசயத்தாலே சொல்லுகிற பாசுரம். [கண்ணபிரான்] - உபகாரசீலனை க்ருஷ்ணனே! ஒரு தாயுடைய மெய்க்குப் போகமாட்டாத நீயோ என்னுடைய பொய்க்குப் போகப் புகுகிறாய்? ஓரிடைச்சிகையிலே கட்டுண்ட தசையிலே அந்த பந்தத்தைத் தப்ப விரகறியாதே சக்தியுமின்றிக்கே யிருந்த நீயோ போகப்புகுகிறாய்? (ஆர்ஜவமான கட்டவிழ்க்கமாட்டாதவன் க்ருத்ரிமமான பந்தத்தை அவிழ்க்கமாட்டா னென்றபடி.) [அறையோவினிப்போனாலே] - இனிப்போனாயாகில் அறையோவறை. என் பக்கலிலே, "மெய்" என்று பேரிடலாவதொரு பொய்பெற்ற பின்பு போனாயாகில் அறையோவறை. பகவத்க்ருபையை அண்டைகொண்டு ஈச்வரஸ்வாதந்த்ர்யத்தை அறைகூவுகிறார். கண்ணபிரானென்று ஸம்புத்தியாகவுமாம்; அன்றிக்கே, பரோக்ஷநிர்த்தேசமாய், கண்ணபிரானனவன் இனிப்போனானாகில் அறையோவறை யென்னுதல். .... (1)

இரண்டாம் பாட்டு: அஸ்த்தாநேபயசங்கிகள் சொல்லும் வார்த்தையை நான் அஹ்ருதயமாகச் சொல்ல, ஸர்வஜ்ஞனவன் அத்தை மெய்யாகக்கொண்டு தன்விபூதியோடேகூட நானிட்ட வழக்கானு னென்கிறார்.

போனாய்மாமருதின் நடுவே என்பொல்லாமணியே*
தேனே இன்னமுதே என்றென்றேசிலகூத்துச்சொல்ல*
தானேயெம்பெருமான் அவனென்னுகியொழிந்தான்*
வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே. (2)

[போனாய்மாமருதின்நடுவே] - அப்போது கண்டுநின்ற யசோதைப் பிராட்டியானவள், யமளார்ஜுநங்களின் நடுவே அவன் போனபடியைக் கண்டு பாவபந்தம் தோற்றச் சொன்ன பாசுரத்தை அதில்லாத நான் சொன்னேன். 'பூதகாலத்திலே' என்று தோற்றுகிறதில்லையாயிற்று இவர்க்கு ஜ்ஞாநவைசத்யத்தாலே. ஸர்வேச்வரன் பண்ணிக்கொடுத்த ஜ்ஞாந வைசத்யம் வயிறெரிகைக்கு உடலாய் விட்டதித்தனை. [மாமருதின் நடுவே] - பெரிய வடிவுகளையுடைய அஸுரர்களிறே அவையாய் நிற்கிறார்கள். இவனுடைய மௌக்த்யத்தை யறிந்து, பெருத்துத் தடித்து தர்சநீயமான வேஷத்தோடேயாயிற்று இருவரும் க்ருதஸங்கேதராய் ஒரு விவரமற நின்றபடி. ஒன்றிலே வெளிகண்டு போனாற்போலே யாயிற்றுப் போனபடி. [*யமளார்ர்ஜுநயோர்மத்யே ஜகாம*] என்ற ஆபத்தையாயிற்றுச் சொல்லுகிறது. [என்பொல்லாமணியே] - [*தத: கடகடாசப்தஸமாகர்ணநதத்பர: ஜகாம கமலேக்ஷண:] என்கிறபடியே, இவற்றைத் தப்பிப்போய், முறிந்து விழுகிற ஓசை

கேட்டு அபூர்வதர்சநத்தாலே சிவந்த மலர்ந்த கண்ணும் தானுமா யிருக்கிறபடி. "புணர்மருதமிறநடந்த பொற்குன்றினை" என்னக்கடவதிறே. அழகிது என்னில் - நாட்டில் அழகோபாதியாமென்று, வ்யாவ்ருத்திதோற்ற - பொல்லாமணியே யென்கிறாராதல்; நாட்டார்கண்டு கண்ணெச்சில் படாமைக்குக் கரிபூசுகிறாரென்னுதல். பொல்லல் - தொளைத்தல். பொல்லாமணி - தொளையாமணி; அநுபபுக்தமாயிருக்கும் மணி யென்றுமாம். இதுவும் யசோதைப்பிராட்டி ஸங்கிஹிதையாய்நின்று சொன்ன வார்த்தை. [தேனே] - வந்து எடுத்துக்கொண்டபோதை ஸ்பர்சத்தாலும் மூக்தஜல்பத்தாலும் கொண்டாடிச் சொல்லுகிற வார்த்தை. [இன் அமுதே] - அப்போதையில் போக்யதையாலே சொன்ன வார்த்தை. நிரதிசய போக்யமாய், போன உயிரை மீட்கவற்றாயிருக்கை. "அமுதென்றும் தேனென்றும் ஆழியானென்றும்" என்று சொல்லுகிறபடியே நிரவதிக போக்யமாயிருக்கை. [என்றென்றே] - ஒருகால் சொல்லி "தப்பச்செய்தோம்" என்று மீளத்தான் பெற்றதோ. [சில கூத்துச்சொல்ல]-ஒருவன் நினைவையும் செயலையும் வேறொருவன் செய்யுமது - கூத்தாவது. பரிவுடைய யசோதைப்பிராட்டி இவற்றிலே ஈடுபட்டுச் சொல்லும் பாசுரத்தைக்கிடீர் அதில்லாத நான் சொல்லிற்று. [தானே லெம்பெருமான்] - தானாகில், ஸர்வஜ்ஞனாய் ஸர்வநியந்தாவா யிருப்பானொருவன். அகவாயறியாதானொருவனல்லன், அறிந்தால் உபேக்ஷிக்கமாட்டாதானொருவனல்லன். [அவன்] - அப்படி ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியானவன். [என்னாகி யொழிந்தான்] - நானிட்டவழக்கானான். என்னையுடையவன் நானிட்ட வழக்கானான். உடையவன் தான் உடைமையானான், அததரோத்தரமாயிற்று. அவன் விபூதி செய்ததென்? என்னில்,—[யஸ்யைதே தஸ்ய தத் தநம்] என்கிறபடியே விபூதியையும் நானிட்ட வழக்காக்கினான். ஸவிபூதிகனாய்க்கொண்டு என்னுள்ளே புகுந்தான்; [வானே மாநிலமே] - பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். [மற்றும்] தத்கார்யமான அண்டங்களும், [முற்றும்] - நித்யவிபூதியும், [என்னுள்ளனவே] உபயவிபூதி நிர்வாஹமும் என்பக்கலிலே யிருந்து பண்ணுமத்தனையாய்விட்டது. அன்றிக்கே, [வானே யித்யாதி] - உபயவிபூதி ஐச்வர்யமும் என் பக்கலிலேயாய் விட்டது என்றுமாம். விஷயப்ரவணனானவன், தானுகந்த விஷயமே எல்லா ஐச்வர்யமுமாக நினைத்திருக்குமாபோலே. "உன்னைகமுற்று மகத்தடக்கி" என்கிறபடியே. ... (2)

மூன்றாம்பாட்டு: "பொய்யே கைம்மைசொல்லி" என்றும், "சிலகூத்துச் சொல்ல" என்றும் சொன்னவார்த்தையை விவரியா நின்றுகொண்டு, இப்படி வாங்மாத்ரத்தாலே உன்னைப்பெற்ற நான் உன்னையொழிய வேறொன்றை ஆசைப்படேனென்கிறார்.

உள்ளனமற்றுளவாப் புறமேசிலமாயம்சொல்லி*
வள்ளல்மணிவண்ணனே என்றென்றேயுன்னையும்வஞ்சிக்கும்*
கள்ளமனம்தவிர்ந்தே உன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன் *
வெள்ளத்தணைக்கிடந்தாய் இனியுன்னைவிட்டடென்கொள்வனே. (3)

[உள்ளன] - ஹ்ருதயத்திலுள்ளன. [மற்றுளவா] - வேறேசில உளவாக அந்த:கரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்க. [புறமேசிலமாயம் சொல்லி] - புறப்பூச்சாகச் சில பொய்களைச் சொல்லி. இத்தாலே "கூத்துச்சொல்ல" என்ற விடத்தைச் சொல்லிற்று. [வள்ளல்மணிவண்ணனே] - பரமோதாரனே! பெருவிலையனான ரத்நம்போலே ச்லாக்யமான வடிவை எனக்கு உபகரித்தவனே! [என்னென்றே] - அபுத்த்யா சொல்லா நிற்கச்செய்தேயும் "ஸஹ்ருதயமாகச் சொல்லுகிறான்" என்று தோன்றும்படியாகப் பலகாலும் - சொல்லி. [உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம்] - உள்ளுவாருள்ளத்தெல்லாம் உடனிருந்து அறியும்

ஸர்வஜ்ஞனாய் ஸர்வாந்தர்யாமியான நீயும் "மெய்" என்று கருதும்படி உன்னையும் பகட்டும் க்ருத்ரிமயுக்தமான மநஸ்ஸை [தவிர்ந்தே] - அஹ்ருதயமாக இழிந்தாரையும், மேல்விழும்படி கொண்டு முழுகும் விஷயமிறே. [உன்னை] - மித்ரபாவமே யடியாக [நத்யஜேயம்] என்னும் உன்னை. ப்ராப்தனுமாய் போக்யனுமான உன்னை *[கண்டுகொண்டு] - "ஒருபடி காணவல்லோமே!" என்ற நான், நிதியெடுத்தாற் போலே லபித்து. [உய்ந்தொழிந்தேன்] - [அஸந்நேவ] என்னும்படி இருக்கிற நான் உஜ்ஜீவிக்கப்பெற்றேன். த்ருஷ்ட்வா த்ருப்யந்தியிறே. இனி, நீர் செய்யப் பார்த்தது எது? என்ன,—[வெள்ளத்தணைக்கிடத்தாய்] - பரமபதத்தைவிட்டு க்ஷீராப்தியிலே இவ்வேலையிலே, என்னுடைய ரக்ஷணார்த்தமாக அவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே! [இனி] - உனக்கு ஸத்ருசமான பரமபதத்தைவிட்டு, விஸத்ருசமான ஸம்ஸாரத்திலே என்னுடைய ரக்ஷணார்த்தமாகக் கொண்டு கண்வளர்ந்தருளின பின்பு. [உன்னைவிட்டு] - நான்விட்ட அன்றும் என்னைவிடமாட்டாதே யிருக்கிற உன்னையொழிய. [என்கொள்வனே] - பச்சை கொண்டு, பல வேளையிலே நிஷ்பலங்களாயிருக்கும் விஷயங்களைப் பற்றவோ; ஆராதிக்குமிடத்தில் துராராதராய் வருந்தி ஆராதித்தாலும் கிடைப்பதொன்றில்லாதவர்களைப் பற்றவோ? .... (3)

நாலாம் பாட்டு: "பொய்யேகைம்மைசொல்லி' என்றும், 'சிலகூத்துச் சொல்ல' என்றும், 'உள்ளனமற்றுளவாப் புறமே சிலமாயஞ்சொல்லி' என்றும்-பகவத்விஷயத்திலேயும் பொய் சொல்லிப்போந்தேனென்றார்; 'இப்படி பொய்யனைக்கு நிபந்தனமெது' என்று பார்த்தார்; ப்ரக்ருதி ஸம்ஸர்க்கமாயிருந்தது; மெய்யேபெற்றொழிந்தேன்,' கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்; என்றவற்றை மறந்தார்; இந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே இதரவிஷயங்களிலே ப்ரவணமான மநஸ்ஸை அவற்றில் நின்றும் மீட்டு உன் பக்கலிலே ப்ரவணமாம்படிபண்ணி, தேஹத்திற்காட்டில் ஆத்மாவைப்பிரிய அநுஸந்திக்கைக்கு க்ஷமனாகிறிலேன், நீயே என் விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

அன்றிக்கே, "'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றார்; அது ஜ்ஞாநாநுஸந்தானமான காட்சியாயிருந்தது; காட்சிக்கு அநந்தரம் பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து கையை நீட்டினார், கைக்குள் அகப்படக்கண்டிலர், அத்தாலே தளர்ந்து; இதுக்கு அடி - தேஹஸம்பந்தமாயிருந்தது; இத்தைக்கழித்துக்கொள்ளுகைக்கு ஈடாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநக்ஷமனாகிறிலேன் பக்தி பாரவச்யத்தாலே; ஆனபின்பு நீயே என்விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக் கொண்டருளவேணுமென்கிறார்" என்று நிர்வஹிப்பாருமுண்டு. க்ரமத்திலேவரும் பக்தி தமக்கு உண்டாக நினைத்திராரிறே.

என்கொள்வனுன்னைவிட்டென்னும் வாசகங்கள்சொல்லியும்*
வன்கள்வனேன்மனத்தைவலித்துக் கண்ணநீர்கரந்து*
நின்கண்நெருங்கவைத்தே எனதாவியைநீக்ககில்லேன்*
என்கண்மலினமறுத்து என்னைக்கூவியருளாய்கண்ணனே. (4)

[என்கொள்வனுன்னை விட்டென்னும்] - பரமைகாந்திகளைப்போல, உன்னையொழிய நான் எத்தைக்கொள்வன்? என்று இங்ஙனே வாயாலே சொல்லாநிற்கச்செய்தேயும். [வன்கள்வனேன்] - களவாவது - பரத்ரவ்யாபஹாரம். வலிய களவாவது - [* சோரேணாத்மாபஹாரிணா] என்கிறபடியே, பகவதீயமான ஆத்மவஸ்துவையன்றோ "நான், என்னது" என்றிருந்தது. பிறகு களவு கண்டாரள

வல்லவிறே ரத்நாபஹாரம் பண்ணினாரளவிலே தோஷம். த்ரவ்யங்களை உபாதாநம் பண்ணுகிறவிடத்திலே ஆத்மவஸ்துவை ப்ரதானமாகச் சொன்னார்களிறே. த்ரவ்யம் விலக்ஷணமாவது, உடையவன் ஸர்வேச்வரனாவது, இனிச் சொல்ல வேண்டாவிறே. [மனத்தைவலித்து] இதரவிஷயங்களிலே ப்ரவணமான மநஸ்ஸை அவற்றினின்றும் மீட்டு. மனத்தை மீட்டென்னாதே, வலித்தென்கிறது அவற்றிலே நெஞ்சுபட்ட உறுதியை நினைத்து. நான் இந்த்ரியஜயம்பண்ண நினைக்கையாவது அவை என்னைமேலிடுகை [*இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:]. [கண்ணநீர்கரந்து] - அவற்றினுடைய அலாபத்தாலே பாய்கிற கண்ணநீரையும் மாற்றி. [நின் கண்நெருங்க வைத்தே] - அம்மநஸ்ஸை உன்பக்கலிலே கொண்டு போந்து மூட்டி நிரந்தரமாக அநுஸந்தித்து. [எனதாவியை நீக்ககில்லேன்] - இத்தேஹத்திற்காட்டில் ஆத்மாவைப் பிரிய அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேன். [என் கண்மலினமறுத்து] - இதுக்கு அடி என்னிடத்திலுண்டான மாலிந்யமிறே. மலினம் - மாலிந்யம். அதாவது - ப்ரக்ருதி ஸம்பந்தம். மெய்யனாய்க் கெட்டேனென்கிறார். (மெய் - சரீரம்) அத்தையறுத்து உன் திருவடிகளிலே என்னை அழைத்துக்கொண்டருளவேணும். [கண்ணனே] - சோகநிவர்த்தகனன்றோ நீ, எனக்குச் செய்தருள வேண்டுவது - அழகிய வடிவைக் காட்டி "*மாசுச:" என்னுமத்தனையன்றோ. அவ்வடிவைக் கண்டால் "மற்றொன்றினைக்காணா" என்னும்படியாயிறே யிருப்பது.

அதவா, [என்கொள்வன் இத்யாதி] - ஸ்வரூபாநுரூபமான பாசுரத்தை வாயாலே சொல்லிநிற்கச்செய்தேயும். [வன்கள்வனேன்] - உத்தேச்யவஸ்துவைக் கடுக லபிக்கப்பெறாத இன்னாப்பாலே 'மஹாபாபி' என்பாரைபோலே சொல்லுகிறார். [மனத்தை வலித்து இத்யாதி] - பக்திபாரவச்யத்தாலே சிதிலமாகிற மநஸ்ஸைத் திண்ணிதாக்கி "தனகேழிலொண்கண்ணநீர் கொண்டாள்" என்கிற கண்ணநீரையும் மாற்றி. நின்கண் நெருங்கவைத்தே] - *"காலாழும் நெஞ்சழியும்" என்கிறபடியே, உன்னைக்கிட்டினவாறே உடைகுலைப்படுகிற மநஸ்ஸைத் தரித்து நின்று உன்னை அநுஸந்திக்கும்படிபண்ணி, இச்சரீரத்தினின்றும் ஆத்மாவைப் பிரிய அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேன். "இவன், தான் தன் விரோதியைப்போக்கி க்ரமத்திலே வந்துகிட்டுகிறான்" என்று ஆறியிராதே, நினைத்தகாரியம் தலைக்கட்ட வல்ல நீயே என் விரோதியைப்போக்கி என்னை யழைத்துக்கொண்டருளவேணும். [கண்ணனே] - "பக்தி உபாயமன்று" என்று சோகித்தவனுக்கு நல்விரகு சொல்லிக்கொடுத்தவனன்றோ நீ. ... ... (4)

அஞ்சாம்பாட்டு: நீர் "மலினம்" என்கிறது எத்தையென்ன, இன்னதென்கிறார்.

கண்ணபிரானை விண்ணோர்கருமாணிக்கத்தையமுதை*
நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டு*
திண்ணமழுந்தக்கட்டிப் பலசெய்வினைவன் கயிற்றால்*
புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய்புறமே. (5)

விண்ணோர்கருமாணிக்கத்தை - கண்ணபிரானை - அமுதை. [விண்ணோர் கருமாணிக்கத்தை என்று தொடங்கி] - [*தத்விப்ராஸோவிபந்யவோஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே] என்கிறபடியே, நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வடிவழகை எனக்கு உபகரிக்கைக்காக க்ருஷ்ணனாய்வந்து அவதரித்தவனை. [அமுதை] - இப்படி அவதரித்துத் தன்னுடைய போக்யதையாயிற்று இவரை அநுபவிப்பித்தது. [நண்ணியும் இத்யாதி] - பெற்றுவைத்தே பெறாதார்கணக்கானேன். இவர்

நண்ணினாராகச் சொல்கிறது - பிறந்த ஜ்ஞாநலாபத்தை; நண்ணப்பெறுததாகச் சொல்கிறது—சரீரஸம்பந்தத்தோடேயிருக்கிற இருப்பை. [நடுவேயோருடம்பி லிட்டு] - ஆத்மாவுக்கு அசித்ஸம்ஸர்க்கம் அநாதியாயிருக்கச்செய்தேயும், நடுவே யோருடம்பு என்கிறார் - அது ஔபாதிகமாய்த் தோற்றுகையாலே. சலகில் கிடந்த முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கேறின நாள் அறிவாரில்லை. பின்பு கழியக் காண்கையாலே "இது வந்தேறி" என்று தோற்றுகின்றதிறே; அப்படியே பகவத் ஸமாச்ரயணத்தாலே கழியக்காண்கையிலே "இதுவந்தேறி" என்று தோற்று மிறே. ராஜபுத்ரன் வழிபோகாநிற்கச்செய்தே வேடர் கையிலே அகப்பட்டு தன்னை வேடனாக ப்ரதிபத்திபண்ணுமாபோலே இருப்பதொன்றிறே, சேதநன் தேஹத் திலே அஹம்புத்திபண்ணி [*தேவோஹம்] என்றிருக்கும் இருப்பு. திண்ண, மழுந்தக் கட்டி] - அவித்யாதிகளாலே த்ருடமாக நெருங்கக்கட்டி [பல செய்வினை இத்யாதி] - தான் பலவாய்ச்செய்யப்பட்டிருந்துள்ள வினையாகிற வலிய பாசங்களாலே த்ருடமாம் படி பந்தித்து. [புண்ணைமறையவரிந்து] - தோலைமேவிக் கைப்பாணியிட்டு மெழுக்கு வாசியிலே ப்ரமிக்கும்படி பண்ணின இத்தனையொழிய, அகவாய் புறவாயாயிற் றாகில் காக்கைநோக்கப் பணிபோருமத்தனையிறே. [என்னை] - ஸ்வரக்ஷணத்திலே அசக்தனும் அப்ராப்தனுமாயிருக்கிற என்னை. [போரவைத்தாய்புறமே] - ஏகாந்த போகத்துக்காகப் போந்த பிராட்டி அசோகவநிகையிலே யிருந்தாற்போலே தோற்றுகின்றதாயிற்று, ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபின்பு தேஹத்திலேயிருக்கிற இருப்பு. [புறமே] - உன் குணங்கள் நடையாடாத ஸம்ஸாரத்திலே - வைத்தாய். போரவைத்தாய் என்று - அவன் செய்தானாகச் சொல்லுகிறாரிறே தம்முடைய ஸ்வரூபத்தோபாதி "கர்மமும் அவனைக் குறித்துப் பரதந்த்ரம்" என்றிருக்கும் பரம வைதிகராகையாலே. ... ... (5)

ஆறும்பாட்டு. "போரவைத்தாய்புறமே" என்று - இவர் நொந்தவாறே, "இவருடைய இழவை மறப்பித்து உளராக்கி நடத்தவேணும்" என்று பார்த்துத் தன்வடிவழகைக்காட்ட, அவ்வடிவழகைக் கண்டவாறே தம் உடம்பை மறந்து ப்ரீதராய், கண்டு கொண்டேனென்கிறார். இவரை மெய்ம்மறக்கப் பண்ணிற்று அவன் வடிவு.

புறமறக்கட்டிக்கொண்டு இருவல்வினையார்குமைக்கும்*
முறைமுறையாக்கைபுகலொழியக் கண்டுகொண்டொழிந்தேன்*
நிறமுடைநால்தடந்தோள் செய்யவாய்செய்யதாமரைக்கண்*
அறமுயலாழியங்கைக் கருமேனியம்மான்தன்னையே. (6)

[புறமறக்கட்டிக்கொண்டு] - பிணைத்தவிடமறிந்து இவனால் அவிழ்த்துக் கொள்ளவொண்ணாதபடியாக, புச்சந்தோற்றாதபடி உள்முடியாக முடிந்து. [*மம மாயா துரத்யயா] - ஸர்வசக்தியான நான் பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்க ஒண்ணாது என்றானிறே. [இருவல் வினையார் இத்யாதி] - இருவகைப்பட்ட மஹா பாபம் தகர்க்கும். [வினையார் என்கிறது - அவற்றால் நெருக்குண்கிறபடியைக் கண்டு சொல்லிற்றாதல்; அவைதாம் பலவகையாகையாலே பஹுவசநமாதல்.]]குமைக்கும் முறைமுறையாக்கை] - புண்யத்துக்கென்று தேவசரீரத்தை ப்ரவேசியா, பாபத்துக்கென்று திர்யகாதிசரீரத்தை ப்ரவேசியா, உபயத்தாலு மென்று மநுஷ்ய சரீரத்தை ப்ரவேசியாப் படும்பாட்டுக்கு ஒரு முடிவில்லையிறே. திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம்போலே, கர்மாநு குணமாக தேவாதி சரீரங்கள்தோறும் ப்ரவேசித்துத் திரியும். [புகலொழிய] - புகுகைதவிர. ஜ்ஞாநாநந்த லக்ஷணமான வஸ்துவிறே உபசயாத்மகமாய் அஸ்த் திரமான சரீரத்திலே அகப்பட்டு நோவுபடுகிறது, அது தவிர. [கண்டுகொண்

டொழிந்தேன்] - உத்தேசயவஸ்துவைக் கண்டு அநுபவிக்கப் பெற்றேன். சரீர ப்ரவேசம் தவிர்ந்தேன். [நிறமுடை இத்யாதி] - [ஸர்வபூஷணபூஷார்ஹா:] என்கிற படியே ஆபரணத்துக்கு ஆபரணமாய், நாலாய் சுற்றுடைத்தான திருத்தோள்களை யுடையனாய் (*ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்] என்கிறபடியே - முறுவலெடுத்தகலம்" என்னும்படி திருமுகத்தைச் செவ்விப்பெறுத்தா நின்றுள்ள ஸ்மிதத்தையும், இழவு மறக்கும்படி குளிரக்கடாக்ஷிக்கிற திருக்கண்களையுமுடைய னாய்; தன்னிலும் ஆச்ரிதரக்ஷணமாகிற பரமதர்மத்திலே முயலாநின்றுள்ள திரு வாழியையுடைய அழகிய திருக்கையையும், அதுக்குத்தப்பிலும் தப்பவொண்ணாத குளிர்ந்தவடிவழகையும். "இதெல்லாம் எனக்கு" என்று அநுபவிக்கும்படியான ப்ராப்தியையுமுடையவனை - காணப்பெற்றேன். [நீலதோயதமத்யஸ்த்தா] என்கிற படியே ஹ்ருதயத்திலே யிருக்கிறபடி. முன்பு இவ்வுடம்பு அவ்வுடம்பை மறப்பித் தாற்போலே, இப்போது அவ்வுடம்பு இவ்வுடம்பை மறப்பித்தது. ... (6)

ஏழாம்பாட்டு. அவன் க்ருபையாலே தாம் பெற்றபேற்றைக்கண்டு விஸ்மித ராய் பகவத்க்ருபை நடையாடாநிற்க, சிலர்க்கு "நான் அயோக்யன்" என்று இழக்க வேண்டாகிடிகோளென்கிறார்.

அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான்யானார்*
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்றுவாய்க்கும்கண்டீர்*
கைம்மாதுன்பொழித்தாயென்று கைதலைபூசலிட்டே*
மெய்ம்மாலாயொழிந்தேன் எம்பிரானுமென்மேலானே. (7)

[அம்மான்] - ஸர்வேச்வரன். [ஆழிப்பிரான்] - கையும் திருவாழியுமான அழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் அவன். [அவ னெவ்விடத்தான்] - அவனெவ்வளவிலுள்ளார் பரிமாறுமவன். [யானார்] - நித்ய ஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகாயிருந்தேன் நான். பிள்ளையமுதனார், "அம்மானாழிப் பிரான்" என்று மேலேகாட்டி, "யானார்" என்று குறையச்சொல்லிக் காட்டுவர். [எம்மாபாவியர்க்கும் இத்யாதி] - எல்லா வழியாலும் மஹாபாபத்தைப் பண்ணின வர்கள் பக்கலிலும் பகவத் க்ருபை பெருகப்புக்கால் தடையில்லைகிடிகோள். பகவத் க்ருபை பெருகப்புக்கால் "கரையிலேநின்றோம்" என்னத் தப்பவிரகில்லை. நீர் கிட்டினபடியென்? என்னில், - [கைம்மா இத்யாதி] - ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்க ளொன்று மின்றிக்கே யிருக்கிற ஆனையானது பூர்வஜந்மவாஸனையாலே முட் பாய்ந்தவாறே "அம்மே" என்பாரைப்போலே, நோவுபட்டவாறே திருவடிகளை ஸ்மரிக்க, ஸர்வாதிகனை தன் மேன்மை பாராதே மடுவின் கரையிலே அரை குலையத் தலைகுலைய வந்து ரக்ஷித்த நீர்மையை அநுஸந்தித்து, "இதொரு உபகார மிருக்கும்படியே!" என்று அந்த உபகாரஸ்ம்ருதியாலே ஸ்நேஹிகள் சொல்லும் பாசுரத்தை பாவபந்தமில்லாத நான் சொன்னேன். [கைதலைபூசலிட்டே] - தலை யிலே கையை வைத்து, வாயாலே கூப்பிட்டென்னுதல்; மாறுதே அஞ்சலிபண்ணி என்னுதல். தலையிலே வைத்த கை மாறுதே யென்றுமாம். ஆனைக்கு உதவினது தங்களுக்கு உதவிற்றென்றிருக்கும் பரஸம்ருத்த்யேகப்ரயோஜநர், அந்த உப காரத்துக்குத் தோற்று உபகாரஸ்ம்ருதியாலே அஞ்ஜலிபண்ணிச் சொல்லும் பாசு ரத்தை, அஹ்ருதயமாகச் சொல்லி அது நெஞ்சிலே ஊற்றிருந்து பொய்ம்மால் போய் மெய்ம்மாலாய் விழுந்தது: அவள் உம்மளவில் செய்ததென்? என்ன,— [எம்பிரானுமென் மேலானே] - [நான் மெய்சொன்னவன்றோடு பொய்சொன்ன வன்றோடு வாசியற,] என்றுமொக்க மெய்ம்மாலாய்ப் போருகிறவன் விடுமோ, எனக்கு உபகாரகனானவனும், கலியர் சோறுகண்டாற்போலே என்பக்கலிலே வந்து மேல் விழுந்தான். இது இருந்தபடியால் - [எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்

கின்று வாய்க்குங்கண்டீர்] - எவ்வளவு மஹாபாபத்தைப் பண்ணினர்க்கும், பகவத்க்ருபை பெருகாநின்றுள்ள விடத்தில் தப்பவிரகில்லைகிடீர். பூசலிடுகை - ப்ரஸித்தமாகக் கூப்பிடுகைக்கும், ஒன்றோடொன்று ஸம்பந்திக்கிறதுக்கும் பேர். ... (7)

எட்டாம்பாட்டு. உபயவிபூதிநாதனானவன் என்பக்கலிலே மேல்விழுந்து என்னை விடாதே ஹ்ருதயத்திலே புகுந்திருந்தான்; நானும் இனி நித்யஸூரிகளைப் போலே நித்யஸம்ஸாரத்தை விட்டு, அவனையே எல்லாவுறவுமுறையுமாகப் பற்றப் பார்த்தேனென்கிறார்.

மேலாத்தேவர்களும் நிலத்தேவரும்மேவித்தொழும்*
மாலார்வந்தினநாள் அடியேன்மனத்தேமன்னினர்*
சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும்நன்மக்களும்*
மேலாத்தாய்தந்தையும் அவரேயினியாவாரே (8)

[மேலாத்தேவர்களும்] - நித்யஸூரிகளும். [நிலத்தேவரும்] - பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்களும். [மேவித்தொழும்மாலார்] - இளையபெருமாளும், இடக்கை வலக்கையறியாத குரங்குகளும் ஒக்க அடிமைசெய்தாற்போலே, இரண்டுவிபூதியிலுள்ளாரும் ஒரு மிடறாகச் சேர்ந்து அடிமைசெய்யும் ஸர்வாதிகனானவன். [வந்து] - தானிருந்தவிடத்தே நான் செல்ல ப்ராப்தமாயிருக்க, நானிருந்தவிடத்திலே தானே வந்து. [இனநாள்] - இப்போது. பூர்வக்ஷணத்தில் அறியாதிருக்க, இங்ஙனே விடிந்துகொண்டு நிற்கக் கண்டேன். இப்படி வருகைக்கு அடியென்? என்னில் - [அடியேன்] - விடவொண்ணாத ப்ராப்தியை யிட்டு வந்தான். வந்து செய்ததென்? என்னில்,-[மனத்தே மன்னினர்] - "மனத்துள்ளான் மாகடல்நீருள்ளான் மலராள் தனத்துள்ளான்" என்கிறபடியே - பரமயோகிகள் நெஞ்சிலும் திருப்பாற்கடலிலும் பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்திலுமிருக்கக்கடவ அவன், நித்யஸம்ஸாரியாய் போந்த என்நெஞ்சிலே ஸ்த்தாவரப்ரதிஷ்டையாயிருந்தான். இனி நீர் செய்யப்பார்த்த தென்? என்ன,—இனி எனக்கு ஒரு செயலுண்டோ? இவனையொழிய வென்கிறார், [சேலேய் இத்யாதி] - தங்கள் நோக்காலே துவக்கவல்ல ஸ்த்ரீகளும், நிரவதிக ஸம்பத்தும், குணாதிகரான புத்ரர்களும், தந்தாமையழியமாறியாகிலும் ப்ரஜையை நோக்கும் மாதாபிதாக்களுமெல்லாம் இனி அவரே எனக்காகப் பற்றப் பார்த்தேனென்கிறார், [அவரேயினியாவாரே] - க்லேசகரமான அவ்வோ ஸம்பந்தங்களாலே க்லேசப்படவேண்டா. [*மாதா பிதா*] [*அஹம் தாவத்*]. ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. பலசொல்லியென்? நான் ஸம்ஸாரத்தில் பட்ட கிலேசமெல்லாந் தீரும்படி தன்க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தானென்கிறார்.

ஆவாரார்துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும்*
நாவாய்போல்*பிறவிக்கடலுள் நின்றுநான்துளங்க*
தேவார்கோலத்தொடும் திருச்சக்கரம்சங்கினொடும்*
ஆவவென்றருள்செய்து அடியேனொடுமானனே. (9)

[ஆவாரார் துணையென்று] - துணையாவாராரென்று. [அலைநீரித்யாதி] - க்ஷுபிதமான கடலுக்குள்ளே அழுந்துகிற நாவாய்போலே, ஸம்ஸாரார்ணவத்திலே நின்று நான் நடுங்க. நாவாய்போல் என்கிறவிடத்தில் - நாவாய்மாத்ரத்தை நினைத்தபோது, ஆவாரார் துணையென்றவிடம் - கரையில் நின்றார் வார்த்தையாகக்

கடவது. அதுக்குக்கருத்து நோவுபடாநிற்க உணர்த்தியற்றிருந்தபடி. அன்றிக்கே, [*மஞ்சா : க்ரோசந்தி*] போலே தத்ரஸ்த்தரான புருஷர்களைச் சொல்லிற்றாகவுமாம். நடுங்குகையாவது - அசைந்துவருகை. இந்நடுக்கத்தில் அவன் செய்ததென்? என்னில்— [தேவாரித்யாதி] - (தேவு அழகு ; திவ்யமாய், அப்ராக்ருதமென்றபடி.) அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடும், அவ்வடிவுக்குச்சேர்ந்த திவ்யாயுதங்களோடுங்கூடவந்து, ஐயோ ஐயோ என்று என்பக்கலிலே க்ருபையைப்பண்ணி, என்னோடேவந்து கலந்தான். ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி — (திருச்சக்கரம்சங்கினொடும் - அடியேனொடுமானன் என்று) கையில் ஆழ்வார்களோடு பொருந்தினாற்போலே என்னோடேவந்து கலந்தானென்கிறார்" என்று. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இங்ஙனேயாகவடுக்கும் - 'கூராராழிவெண்சங்கேந்தி - வாராய்" என்றாயிற்று இவர் ஆசைப்பட்டிருப்பது, ஆசைப்பட்டபடியே திவ்யாயுதங்களோடேவந்து கலந்தானென்கிறார்" என்று அருளிச்செய்தருளும்படி. இவர் தாம் பூவேளைக்காரரைப்போலே, இவை காணாதபோது கைமேலே முடிவாரொருவரிறே. [அருள்செய்து அடியேனொடுமானனே] -* கேசவன்தமர்தொடங்கி, லோபத்தாலே, க்ருபையை - விதிசப்தத்தாலே சொல்லிப்போந்தவர், இப்பாட்டிலே "அருள்" என்று வெளியிடுகிறார். [அடியேனொடுமானன்] - ஸ்வரூபாநுரூபமாக சேஷியாயே வந்துகலந்தான். ... (9)

பத்தாம்பாட்டு. அவன் தன் க்ருபையாலே சப்தாதிவிஷயப்ராவண்யத்தை யறுத்துத் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பித்த மஹோபகாரத்தையநுஸந்தித்த க்ருதஜ்ஞதையேபற்றாசாக வந்து, என்னோடே நிரவதிகஸம்ச்லேஷத்தைப்பண்ணினானென்கிறார்.

ஆனானுடையானென்று அஃதேகொண்டுகந்துவந்து*
தானேயின்னருள்செய்து என்னைமுற்றவும்தானானான்*
மீனாயாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய்*
கானாரேனமுமாய்க் கற்கியாமின்னங்கார்வண்ணனே. (10)

[ஆனானுடையான்] - என்னை அடிமைகொள்வானானென்று, அறியாதே இங்ஙனே ஒருவார்த்தை சொன்னேன்; இந்த உக்திமாத்ரத்தையே கொண்டு. இப்படி சொல்லுகைக்குத் தான் பண்ணின க்ருஷியையடைய மறந்தான், இந்தவுக்தியையே குவாலாக நினைத்தான். [உகந்து] - பலபோக்தாவான நானன்றிக்கே, உகப்பும் தன்னதேயாயிற்று. [வந்து] - அதுவும் மாறாடிற்று. [தானே இன்னருள்செய்து] - நான் அர்த்தியாதிருக்கத் தானே தன்பேறாக க்ருபையைப் பண்ணி. [என்னைமுற்றவும்தானானான்] - உள்ளோடு புறம்போடு வாசியறக் கலந்தானென்னுதல், எனக்கு ஸர்வவிதபோக்யமானானென்னுதல். *ஆகமுற்றுமகத்தடக்கினான். [மீனாயித்யாதி] - ஸர்வவிஸஜாதீயனானதான் ஜ்ஞாநப்ரதாநார்த்தமாக ஜலசரஸஜாதீயனானான், தாரணார்த்தமாகக் கூர்மரூபியானான். சடக்கென விரோதியைப்போக்குகைக்காக இரண்டுவடிவைச் சேர்த்துக்கொண்டு வந்து பிறந்தான், கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு அர்த்தியானான், ஸம்ஸாரார்ணவத்தில்நின்றும் என்னை யெடுக்கைக்கு வராஹரூபத்தைக் கொண்டான். [கானாரேனம்] - காடடங்கக்கோலஞ்செய்தான். [*சோபயந் தண்ட காரண்யம்*] என்கிறபடியே - காடடங்க மயிற்கழுத்துச் சாயலாக்கும்படியான வடிவையுடையவனென்னுதல், மநுஷ்யஸஞ்சாரமில்லாத காட்டிலே வர்த்திக்குமென்னுதல். [கற்கியாமின்னம்] - என்காரியம் சமைந்தபின்பும், "ஸம்ஸாரத்தில்நின்றும் கால்வாங்குந்தனையும் இவர்க்குஎன் வருகிறதோ" என்று கொண்டகுறைமாறுகிறிலன்.

மேல்வரும் விரோதத்தைப் போக்குகைக்கும் இன்னம் கற்கியாகவிருந்தான். நான் தப்புகைக்குப் பிறந்தபிறவிகளோபாதிபோரும் அவன் என்னை ரக்ஷிக்கைக்காகப் பிறந்த பிறவி. நான் கர்மத்தாலே பிறந்த பிறவியடையத் தானும் அநுக்ரஹத்தாலே பிறந்தான். [கார்வண்ணனே] - வர்ஷுகவலாஹகம்போலே யிருக்கிறவனத்தனை. வர்ஷித்தானுயிருக்கிறிலன். வண்ணம் - ஸ்வபாவம். மீனையென்று தொடங்கி என்னைமுற்றவும் தானுனென்று அந்வயம். ... (10)

பதினோராம்பாட்டு. நிகமத்தில் - இப்பத்தை அப்யஸிக்கவல்லார், நிரவதிக ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயையுடையராய் அவன் திருவடிக்கீழே புகப்பெறுவரென்கிருர்.

கார்வண்ணன்கண்ணபிரான் கமலத்தடங்கண்ணன்தன்னை*
ஏர்வளவொண்கழனிக் குருகூர்ச்சடகோபன்சொன்ன*
சீர்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்*
ஆர்வண்ணத்தாலுரைப்பார் அடிக்கீழ்புகுவார்பொலிந்தே. (11)

[கார்வண்ணன்] - காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். [கண்ணபிரான்] - க்ருஷ்ணனுய் வந்தவதரித்து அவ்வடிவை என்னை அநுபவிப்பித்தவன். [கமலத்தடங்கண்ணன் தன்னை] - உத்புல்லபுண்டரீக தடாகம்போலே குளிர்ந்து செவ்வியை யுடைத்தான திருக்கண்களையுடையவனை, வடிவெல்லாம் கண்ணுயிருக்கிறபடி. "நிறமுடைநாற்றடந்தோள்" என்று - கீழே தமக்குக்காட்டி ஸமாதாநம்பண்ணின வடிவைச் சொன்னபடி. இவர் தேஹஸம்பந்தத்தை அநுஸந்தித்து அஞ்சினபோது, ச்ரமஹரமான வடிவைக் காட்டித் தன்னை முழுக்கக்கொடுத்துத் திருக்கண்களாலே குளிரநோக்கி நின்றநிலை. [ஏர்வளவொண் கழனி] - ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய் அழகியதான வயலோடேகூடின திருநகரி. வளமென்று - மிகுதிக்கும், அழகுக்கும் பேர். இங்கு மிகுதியைச் சொல்லுகிறது, சீர்வண்ணவொண்தமிழ்கள்] – சீரிதான ப்ரகாரத்தையுடைத்தான அழகிய தமிழென்னுதல். கவிக்கு அங்கமான சீரையும் வண்ணத்தையுமுடைய அழகிய தமிழென்னுதல். சீரென்று - பாவிலேகதேசம். வண்ணம்-ஓசை. [ஆர்வண்ணத்தால்]-பூர்ணமாகவென்னுதல். ஆர்தல் - பருகுதலாய், தொண்டர்க்கமுதுண்ண" என்கிறபடியே பருகுவாரைப்போலேயென்னுதல்; அபிநிவிஷ்டராய் உரைப்பாரென்கை. [பொலிந்தே - அடிக்கீழ்ப்புகுவார்] - விஸ்ரம்பமாத்ரமேயாய் ருசியின்றிக்கேயிருக்கப் போய்ப்புகுகையன்றிக்கே, எம்பெருமானுரைப்போலே நூறாண்டு ஸ்ரீவைஷ்ணஸ்ரீயோடே யிருந்து, பின்பு தாய்நிழலிலே யொதுங்குவாரைப்போலே அவன் திருவடிகளிலே புகப்பெறுவர். ... ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கையாரும்சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்கப்
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றையுபகரித்த பேரருளின் தன்மைதனைப்
போற்றினனேமாறன்பொலிந்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானுர் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாம்திருவாய்மொழி—பொலிகபொலிக ப்ரவேசம்

* இத்திருவாய்மொழியை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி— "ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைக் காண்கைக்காக நித்யஸூரிகள் இங்கேவர, அவர்களைக்கண்டு மங்களாசாஸநம்பண்ணுகிறார்" என்று. "*நண்ணாதார் முறுவலிப்பவிலே - ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தையநுஸந்தித்து, அதுக்குப் பரிஹாரமாக, *ஒன்றுந்தேவிலே - பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்த, அத்தாலே திருந்தி ஸம்ஸார பரமபதவிபாகமற்று அங்குள்ளாரும் இங்கே வரலாம்படியிருக்கிற இருப்பைக் கண்டு மங்களாசாஸனம் பண்ணுகிறார்" என்று, இங்குள்ளார் பக்கலிலே ப்ராதாந்யந்தோற்ற எம்பெருமானார் அருளிச்செய்யும்படி. தாம் பகவத்பரத்வத்தை உபபாதிக்க அத்தாலே திருந்தின ஸாத்விகரடைய விஸ்த்ருதராயிருக்கிபடியையும், ராஜஸராயும் தாமஸராயுமுள்ளார் அநவதாநத்தாலும் அஜ்ஞாநத்தாலும் ஸங்குசிதராயிருக்கிறபடியையும், ஸாத்விகர் பரிக்ரஹித்ததாகையாலே உத்தமதர்மமான வைஷ்ணவதர்மமே ப்ரஸித்தமாய்ப் போருகிறபடியையும், அதுக்கு விருத்ததர்மங்கள் அபிபூதமாய்ப் போருகிறபடியையும், தேசகாலங்கள் அதிகாரிகள் அங்கங்கள் என்கிறவற்றுக்குண்டான நன்மைகள், [*ஸர்வேஷாம்கில்தர்மாணுமுத்தமோவைஷ்ணவோவிதி: *] என்கிறபடியே - பகவத்ஸ்பர்சத்தாலேயாயிருக்கிறபடியையும், அது இல்லையாகில் எல்லாநன்மைகளுமுண்டானாலும் அவையடையத் தண்ணிதாயிருக்கிறபடியையும் சொல்லி, தம்மாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளிலே விழுந்தும், திருந்துகைக்கு யோக்யதையுடையாரைத் திருத்தியும், திருந்தாதாரை உபேக்ஷித்தும், இப்படி பாகவத ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார். ... *

முதற்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்தியைக் கண்டு மங்களாசாஸனம் பண்ணுகிறார்:

பொலிகபொலிகபொலிக போயிற்றுவல்லுயிர்ச்சாபம்*
நலியும்நரகமும்நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை*
கலியும்கெடும்கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள்மண்மேல்*
மலியப்புகுந்திசைபாடி ஆடியுழிதரக்கண்டோம். (1)

[பொலிக பொலிக பொலிக] - ஸம்ருத்தமாக வேணும், ஸம்ருத்தமாக வேணும், ஸம்ருத்தமாகவேணும். [* சாந்திச்சாந்திச்சாந்தி: *] என்று வைதிகமான மங்களாசாஸநங்கள் முக்கால் சொல்லக்கடவதாயிருக்குமிறே; "முற்பட பகவத் ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணி, பின்னை பாகவத ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணவேண்டாவோ? பெரியாழ்வாரைப்போலே" என்ன, "அப்படியேயன்றோ செய்தது, *வீற்றிருந்தேழுலகிலே - பகவத்ஸம்ருத்திக்கு மங்களாசாஸனம் பண்ணினர் கண்டீரே; பின்னை இதிலே - பாகவதஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்" என்று ஜீயர் அருளிச்செய்தார். பரமாசார்யரான இவரைப் பின்சென்றாரித்தனைகாணும் பெரியாழ்வாரும். [போயிற்றுவல்லுயிர்ச்சாபம்] - உயிரினுடைய வலிய சாபம் போயிற்று. சாபோபஹதரைப்போலே அநுபவித்தாலல்லது நசியாமையாலே, பாபத்தை - சாபமென்கிறது. ஆத்மாவைப் பற்றிக் கிடக்கிற அவித்யாதிகள் போயிற்றது. [நலியும்நரகமும்நைந்த] - கர்மாநுகூலமாக சேதநரைக்கொண்டுபோய் நலியக்கடவதான நரகங்களும் சிதிலமாயிற்றின. நரகாநுபவத்துக்கு ஆளில்லாமையாலே, நரகங்களும் கட்டி மேய்க்கை தவிர்ந்து கோப்புக்குலைந்தது. அவ்விடங்களுக்கு அதிகாரிகளா யிருக்குமவர்கள் செய்ததென்? என்னில், - [நமனுக்கிங்குயாதொன்றுமில்லை] - யமனும் இனிப்பரமபதத்

திலே போய் ஆராயில் ஆராயுமத்தனை; தனக்கு அடைத்த இந்நிலத்தில் ஆராயலாவதொன்றில்லை. [யாதொன்றுமில்லை] - தர்மபுத்ரனுக்கும் ஒருகால் நரகதர்சநம் பண்ணவேண்டிற்றிறே, அதுக்கும் ஆளில்லை. இவையெல்லாமுண்டாவது க்ருதயுகத்திலேயன்றோ, கலியுகத்திலே யுண்டாமோ பின்னை? என்னில்,—[கலியும் கெடும்] - அந்தக்கலிகாலமும் நசித்துப்போம். கீழ்ச்சொல்லிக்கொண்டு போந்தவற்றை - பூதகாலபரமாக்கி, கலியும்கெடுமென்ற இத்தை - பவிஷ்யத்தாக்கி நிர்வஹிக்கவுமாம். அன்றிக்கே, இவையுமெல்லாம் போயிற்றின, அதுவும் நசித்ததென்றே யிருக்க அமையுமென்று, இங்ஙனே ஏகரீதியாகச்சொல்லவுமாம். கலிக்கடைத்த காலமாயிருக்கச்செய்தே கெடுமாவதென்? என்னில், — [கண்டு கொண்மின்] - அநுபவத்தாலே யறியுமதுக்கு உபதேசம் வேணுமோ? நீர் "இது நசிக்கும்" என்று சொல்லுகிறது என்கொண்டு? என்னில், - [கடல்வண்ணன் இத்யாதி] - பாகவதஸஞ்சார மில்லாமையிறே இப்பொல்லாங்கு உண்டாகைக்கு அடி, அது, உண்டானபின்பு இதுநிற்குமோ. [* ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி.*] [கடல் வண்ணன்பூதங்கள்] - பூதங்களென்கிறது - [* பூஸத்தாயாம் *] என்று தாதுவாகையாலே], அவன் ஸத்தையே ஸத்தையாய் அறுகையாலே. அவனுடைய ச்ரமஹரமான வடிவழகை அநுஸந்தித்து அத்தாலே தங்கள் ஸத்தையாம்படி யிருக்குமவர்கள். அவனழகிலே தோற்றிருப்பாருள்ளது நித்யவிபூதியிலேயன்றோ? என்னில் - [மண்மேல்] - இங்கே யென்று படியெடுத்துக்காட்டுகிறார். பகவதநுபவத்துக்கு மேட்டுமடையான ஸம்ஸாரத்திலே, மருபூமியில் தண்ணீர்போலே எங்கேனும் ஒருவரிருவர் உண்டாமத்தனையன்றோ? என்ன, - [மலியப்புகுந்து] "அடியார்கள் குழாங்கள்" என்கிறபடியே, நெருங்கப்புகுந்து. [இசைபாடி இத்யாதி] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாடுவது, உடம்பு இருந்தவிடத்திலிராதே ஆடுவதாய்க்கொண்டு யமாதிகள் தலைமேலே அடியிட்டு ஸஞ்சரிக்கக்கண்டோம். உழிதருகை - நிர்ப்பயமாக எங்கும் ஸஞ்சரிக்கை. (கடல்வண்ணனென்றுதொடங்கி, உழிதரக்கண்டோம்) - போயிற்று வல்லுயிர்ச்சாபம். நலியும் நரகமும் நைந்த, நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை, கலியுங்கெடுங் கண்டுகொண்மின் - பொலிக பொலிக பொலிக. (1)

இரண்டாம் பாட்டு. இவ்வைஷ்ணவ ஸம்ருத்தியை அநுபவிக்கைக்கு அநுகூலரெல்லாரும் வாருங்கோளென்கிறார்.

கண்டோம்கண்டோம்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்*
தொண்டீர்!எல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்*
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள்மண்மேல்*
பண்டான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே. (2)

[கண்டோம் இத்யாதி] - காணப்பெற்றோம். ப்ரீதிப்ரகர்ஷத்தாலே - பலகாலும் சொல்லுகிறார். [கண்ணுக்கினியனகண்டோம்] - "கொடுவுலகங் காட்டேல்" என்று - அபாகவதரைக்கண்ட இன்னாப்புத்தீர, பாகவத ஸமுதாயத்தைக் காணப்பெற்றோம். [தொண்டீரெல்லீரும்வாரீர்] - பாகவதவிஷயத்தில் சபலராய், "பேராளன்பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேன்" என்றிருப்பாரடையத் திரளுங்கோள். "வாருங்கோள்" என்கிறது என்ன ப்ரயோஜநத்துக்கென்னில், —[தொழுதுதொழுது நின்றார்த்தும்] - ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் தேடவேணுமோ? கைமேலே ப்ரயோஜநமன்றோ. வீப்ஸையாலே அதுதானேப்ரயோஜநமாயிருக்கிறது- ஆர்த்தும் - ஆர்த்துக்கொள்வோம். ஸஹர்ஷகோலாஹலம் பண்ணுவோம். [வண்டார் இத்யாதி] - வண்டுகள் மாறாதபடியான செவ்வித்துழாய்மாலையை யுடையனாய், ஸ்ரீய: பதியாகையாலேவந்த ஏற்றத்தையுடையனாயிருக்கிறவனுடைய ச்ரிய: பதித்வத்திலும் ஒப்பனையிலும்

தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே" என்னும்தேசமொழிய விருத்தமானபூமியிலே, பரப்ரேரிதராயன்றிக்கே தங்கள் ப்ரீதிக்குப்போக்குவிட்டு, பண்மிகும்படிநின்று தாங்களேபாடி, அது இருந்த விடத்திலிருக்கவொட்டாமையாலே ஆடி, பரந்துதிரிகின்றன. கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம் தொண்டீரெல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும். ... ... (2)

மூன்றாம்பாட்டு. நித்யஸூரிகளுக்கும் புகுந்து பரிமாறலாம்படி ஸம்ஸார மடைய ஸ்ரீவைஷ்ணவர்களேயாயிற்று என்கிறார்.

> திரியும்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து*
> பெரியகிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம்பெருக*
> கரியமுகில்வண்ணனெம்மான் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்*
> இரியப்புகுந்திசைபாடி எங்குமிடம்கொண்டனவே. (3)

[திரியும்கலியுகம்நீங்கி]-[*பவிஷ்யதி அதரோத்தரம்*]என்கிறபடியே பதார்த்த ஸ்வபாவங்கள் மாறும்படியான கலிகாலமானது கழிந்தது. கத்வரஸ்வபாவமான காலமென்றுமாம். [தேவர்கள்தாமும்புகுந்து] - இவ்வருகில் ஆக்கரான இந்த்ராதிகளன்றிக்கே, அவர்கள் கந்தமும் பொறுக்கமாட்டாதே சர்த்தி பண்ணும் நித்ய ஸூரிகளுமகப்பட "இவ்விடம் ஸம்ஸாரம்" என்று பாராதே புகுந்து. [பெரியகித யுகம்பற்றி] - கலிகாலாதிகளால் வ்யவஹிதமல்லாத ஒருபோகியான க்ருதயுகத்தையுடைத்தாய். அன்றிக்கே, ஆப்பான் "ஆதிஸ்ருஷ்டியில் க்ருதயுகத்தைக்காண் சொல்லுகிறது" என்பராம். [பேரின்பவெள்ளம்பெருக] - அந்தமில்பேரின்ப வெள்ளம் இங்கே யுண்டாம்படி. [பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்பவெள்ளம் பெருக] - ஆதி க்ருதயுகத்தைப்பற்றி நடுவுள்ள காலதோஷங்கள் தெரியாதபடி பேரின்பவெள்ளம் பெருகிற்று. "கிண்ணகம் இத்தைப்பற்றிப் பெருகிற்று" என்னக்கடவதிறே. [பற்றி] - கலியைப்போகப்பற்றி, க்ருதயுகத்தைப் புகுரப் பற்றி? யென்றுமாம். [கரிய இத்யாதி] - [*மேகச்யாமம்*] என்கிற வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டாற்போலே எழுதிக்கொள்ளும் ச்ரமஹரமான வடிவிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள். [மண்மேலிரியப்புகுந்து] - பெரிய ஆரவாரத்தோடே ஸஞ்சரிக்கலாவது நித்யவிபூதியிலேயிறே. ஸம்ஸாரத்திலே ஆரவாரத்தோடே புகுந்து. [இசைபாடி] - பகவதநுபவஜநித ப்ரீதியாலே பாடி. [எங்குமிடங்கொண்டனவே] - எங்கும் தங்களுக்கு ஸ்த்தாநமாகக் கொண்டார்கள். பாஹ்ய குத்ருஷ்டிகளுக்கு இடமில்லாதபடி சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களுமாய் வ்யாபித்தார்கள். [* ப்ராகாரம் வாநரீக்ருதம் *] என்கிறபடியே ப்ரதிகூலர்க்கு இடமில்லாதபடியாயிற்று. ... ... (3)

நாலாம் பாட்டு. அவிசால்யமான பாஹ்யஸமயங்களை வேரோடே அறுப்பாரைப்போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய், பகவத்குணாநுபவஜநிதஹர்ஷத்தாலே களித்துத்திரியாநின்றார்களென்கிறார்.

> இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே*
> தடங்கடல்பள்ளிப்பெருமான் தன்னுடைப்பூதங்களேயாய்*
> கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபலபாடி*
> நடந்தும்பறந்துங்குனித்தும் நாடகம்செய்கின்றனவே. (4)

[இடங்கொள் இத்யாதி]-பயிர் தேயும்படிகளைவளருமாபோலே, ஸாத்விகர் ஒதுங்கும்படி வளருகிற பாஹ்யஸமயங்களையெல்லாம் பறித்துப்போகடுவாரைப்

போலே. "போலே" என்பானென்? என்னில்:—ஸாத்விகர்க்கு "பிறரை நலிய வேணும்" என்றொரு அபிஸந்தியில்லையிறே; நெற்செய்யப்புல்தேயுமாபோலே இவர்களூன்றவூன்ற அவை தன்னடையே தேயுமத்தனை. [தடங்கடல்பள்ளிப் பெருமான்] - தாளுந்தோளும் முடிகளும் பரப்பிக் கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற அழகையநுஸந்தித்து, "பாலாழிநீகிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்று, அதிலே ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேயாய். [கிடந்தும் இத்யாதி] - தங்களுக்கு இஷ்டஸர்வசேஷ்டித விஷயமாம்படி பூமியைக் கைக்கொண்டு. ஓரோ ப்ரதேசங்களிலே கிடந்தும், ஓரோப்ரதேசங்களிலேயிருந்தும், ஓரோவிடங்களிலே நின்றும், பகவதநுபவஜநிதஹர்ஷத்தாலே பலபல பாட்டுக்களைப்பாடியும், மநோஹாரியாம்படி உலாவியும், கால் தரையிலே பாவாதபடி ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணியும். [நாடகஞ்செய்கின்றனவே] - இவர்கள் வ்யாபாரம் இவர்க்கு வல்லாராடினாற் போலேயிருக்கை. "எம்பெருமானாருடைய கமநசயநாதிகளை நாம் கொண்டாடுமாபோலேயும், ஆளவந்தார்நடையை ராஜாஸ்திதி கொண்டாடினாற்போலேயும் இவர் கொண்டாடுகிறபடி" என்று அருளிச்செய்வர். இங்கும் கீழே அந்வயம். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸுரராக்ஷஸரான உங்களையும் முடித்து யுகத்தையும் பேர்ப்பர்களென்கிறார்.

செய்கின்றதென்கண்ணுக்கொன்றே ஒக்கின்றதிவ்வுலகத்து*
வைகுந்தன்பூதங்களேயாய் மாயத்தினாலெங்கும்மன்னி*
ஐயமொன்றில்லை அரக்கரசுரர்பிறந்தீருள்ளீரேல்*
உய்யும்வகையில்லைதொண்டீர்! ஊழிபெயர்த்திடும்கொன்றே. (5)

[செய்கின்றது இத்யாதி] - செய்கிறப்படி பார்த்தேனுக்கு, என் கண்ணுக்கொன்று போலே இராநின்றது. என்போலே இராநின்றதென்றால்;---பகவத்குணங்களுக்கு மேட்டுமடையான ஸம்ஸாரத்திலே. நித்யவிபூதி யிருப்புக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேயாய். [மாயத்தினால் எங்கும் மன்னி]- [*மாயாவயுநம் ஜ்ஞாநம்*] என்றபடியே, இச்சாபர்யாயமான ஜ்ஞாநத்தாலே. இச்சையாலே எங்கும் புகுந்திருந்து. [ஐயமொன்றில்லை] - 'இங்கேயிருந்தே அவ்விருப்புக்குத் தோற்றிருப்பர்கள்' என்றதில் ஒரு சம்சயமில்லை. "பேர்த்திடும்" என்னுமதில் ஒரு ஸம்ஸயமில்லை யென்றுமாம். [அரக்கர் இத்தியாதி]-ராக்ஷஸராயும் ஆஸுரப்ரக்ருதிகளாயு மிருப்பார் மநுஷ்யசரீரத்தை யேறிட்டுக்கொண்டு, ஸ்ரீவாநரஸேனையின் நடுவே சுகஸாரணர்கள் புகுந்தாற்போலே புகுரப்பார்த்தாருண்டாகில் உங்களுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை. "வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்" என்று தேடவேண்டாதே, எல்லாரும் வாழாட்பட்டு, அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேலென்று - தேடவேண்டும்படியாயிற்று ஒன்றுந்தேவுங்கேட்டு ஸம்ஸாரம் திருந்தினபடி. [தொண்டீர்] - [*ஸேவா ச்வவ்ருத்தி:*] என்கிற இதர விஷயங்களிலே தொண்டுபட்டிருக்கிற உங்களைக் கல்பந்தானே ஹிம்ஸித்துக்கொண்டு தானும் பேருமென்னுதல்; அன்றிக்கே, வைகுந்தன் பூதங்கள் உங்களையும் கொன்று ஊழியையும் பேர்ப்பரென்றுமாம். [அரக்கரசுரர் - பிறந்தீருள்ளீரேல் உய்யும் வகையில்லை, வைகுந்தன் பூதங்கள் - கொன்று - ஊழிபெயர்த்திடும் - ஐயமொன்றில்லை. இது வாக்யார்த்தத்துக்குச் சேரும்.] ... ... (5)

ஆறாம்பாட்டு. ஸகல து:கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள்; அவர்களோடே நீங்களும் அவனை யாச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார்.

கொன்றுயிருண்ணும்விசாதி பகைபசிதீயனவெல்லாம்*
நின்றிவ்வுலகில்கடிவான் நேமிப்பிரான்தமர்போந்தார்*
நன்றிசைபாடியும்துள்ளியாடியும் ஞாலம்பரந்தார்*
சென்றுதொழுதுய்ம்மின்தொண்டீர்! சிந்தையைச்செந்நிறுத்தியே. (6)

[கொன்றுயிர் இத்யாதி] - தேஹவிச்லேஷத்தைப் பிறப்பித்து ப்ராணன்களை அபஹரிக்கக்கடவதான வ்யாதி. அன்றிக்கே, ப்ராணனை விச்லேஷிப்பித்து சரீரத்தை முடிக்கும் வ்யாதியென்னுதல். உயிரென்று - இப்போது, சரீரம். அப்படி செய்யும் பகையும் பசியும். இப்படி பிரித்துச்சொல்லுகிறதென்? தண்ணியவையெல்லாம்,—[நின்றிவ்வுலகில்கடிவான்] - விடாதே நின்று போக்குகைக்காக. [நேமிப்பிரான் தமர்போந்தார்] - கையுந்திருவாழியுமான அழகிலே தோற்றிருக்குமவர்கள் வந்தார்கள். போந்தநேமிப்பிரான் தமர் [நன்று இத்யாதி] - நன்றான இசைபாடியும், ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணியும், இப்படி பூமியடையப் பரந்தார்கள். [சென்று தொழுதுய்ம்மின்] - அவர்கள்பாடே சென்று அவர்களைத் தொழுது உஜ்ஜீவித்துப் போங்கோளென்னுதல்; அவர்களோடே சென்று ஸர்வேச்வரனை யாச்ரயித்து உஜ்ஜீவித்துப் போங்கோளென்னுதல். [தொண்டீர்] - அப்ராப்த விஷயத்தில் தொண்டுபட்டிருக்கிற நீங்கள். திருந்துகைக்கு யோக்யதையுடைய நீங்கள். அது செய்யுமிடத்தில் [சிந்தையைச் செந்நிறுத்தியே] - தொழுதவநந்தரம் [*தேஹி மே ததாமி தே*] என்னுதே தொழுங்கோள். ... ... (6)

ஏழாம்பாட்டு. நாங்கள் நெடுநாள் தேவதைகளுக்குப் பச்சையிட்டு ஆச்ரயித்துப் போந்தோம்; அதின் முடிவுகண்டு பின்னை பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகிறோமென்ன; நீங்கள் ஆச்ரயிக்கிற தேவதைகள் உங்களை ரக்ஷிப்பதும் அவன் பக்கலிலே கொண்டு சென்று காட்டிக்கொடுத்தாயிற்று. ஆனபின்பு, அவனையே ஆச்ரயிக்கப் பெறில் அழகிது; அதுவும் மாட்டிகோளாகில், நீங்கள் அவர்களுக்கு இடுகிறவற்றை "இவர்கள் அவனுக்குத் தநுபூதர், இவர்கள் முகத்தாலே நாம் பகவத்ஸமாராதநம் பண்ணுகிறோம்" என்று புத்திபண்ணியாகிலும் இடப்பாருங்கோளென்கிறார்.

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளும் தெய்வங்களும்மையுய்யக்கோள்*
மறுத்துமவனோடேகண்டீர் மார்க்கண்டேயனும்கரியே*
கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை*
இறுப்பதெல்லாம் அவன்மூர்த்தியாயவர்க்கேஇறுமினே. (7)

[நிறுத்தி] - த்யேயவஸ்துவை ஸ்த்திப்பிக்கையும் த்யாநம் பண்ணுகிறவனுக்கே பாரமாயிற்று. ஆச்ரயிக்கிற இவன் எடுத்துநிறுத்த, நிற்கிறவையிறே அவை. [நும்முள்ளத்துக்கொள்ளும் தெய்வங்கள்] - உந்தாமுடைய ஹ்ருதயங்களிலே கொள்ளுகிற தேவதைகள். [உள்ளத்துக்கொள்ளும்] - "புறம்பே சிலரறியில் அபஹஸிப்பர்கள்" என்று தாங்களறிந்ததாக உபாஸிக்குமத்தனை. [உம்மையுய்யக்கோள்] - உந்தாமை உஜ்ஜீவிப்பித்துக்கொண்டார்களாகிறபடி. [மறுத்துமித்யாதி] - நீங்கள் "அவனிலும் இவர்கள் ஆச்ரயணீயர்" என்றுபற்ற, இவர்கள் உங்களை அவன்பக்கலிலே கொண்டுபோய்க்கிடிகோள் ரக்ஷிப்பது. என்றும் ரக்ஷணதர்மம் கிடப்பது அவன்பக்கலிலே, [*நஹிபாலநஸாமர்த்த்யம்ருதேஸர்வேச்வரம்ஹரிம்*] என்கிறபடியே வேறுசிலரை யாச்ரயிக்க, அவன் பலப்ரதனாகையாவதென்? என்ன, [மார்க்கண்டேயனும் கரியே] - கரியென்று - ஸாக்ஷிக்குப் பேர். இவ்வர்த்தத்துக்கு ஸாக்ஷி ஸ்ரீமார்க்கண்டேயன். அவன் நெடுநாள் தேவனை யாச்

ரயிக்க, அவனைப்பார்த்து, "நெடுநாள் நீ நம்மையாச்ரயித்தாய், இவ்வாச்ரயணம் பாழே போகவேண்ணுது, உன்னேடு என்னேடு வாசியில்லை, உனக்கொருபுகல் காட்டித் தரப்போரு" என்று ஸர்வேச்வரன்பக்கலிலே கொண்டுசென்று, அவன் அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டிக்கொடுத்தான்; ஆனபின்பு, இதில் ஸாக்ஷி அவனே. [கறுத்தமனமொன்றும்வேண்டா] - க்ஷுத்ரதேவதைகள் பக்கலிலே பரத்வ ப்ரதிபத்திபண்ணியிருக்கும் தண்ணியநெஞ்சு உங்களுக்கு வேண்டா. [கண்ணனல்லால் தெய்வமில்லை] - [* ஸர்வே தேவா தேவகீபுத்ர ஏவ *] என்கிறபடியே, அவனுக்கு ப்ரகாரமாயல்லது ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு தேவதையில்லை; [* யோயோ யாம்யாம் தநும்பக்த:*,]என்கிறபடியே-அவனுக்குத்தநுபூதராயுளராகிலாமித்தனை. [இறுப்பது இத்யாதி] - ஆனபின்பு, நீங்கள் அவ்வவதேவதைகளுக்குக் கொடுக்கும் ஸமாராதந த்ரவ்யங்களையெல்லாம் "இவர்கள் அவனுக்கு சரீரபூதர்" என்று புத்திபண்ணி, அவர்களுக்குக் கொடுக்கப்பாருங்கோள். இறுப்பதெல்லாம் - "தேவதாந்தராய" என்று தோற்றுகிற நித்யநைமித்திக கர்மங்களையெல்லாம், அவன்மூர்த்தியாயவர்க்கே - அவனுக்கு சரீரபூதரான அவர்களுக்கே. "அந்தராத்மா ஸர்வேச்வரன்" என்று புத்திபண்ணி தத்ஸமாராதந புத்த்யா பண்ணுங்கோள். ... ... (7)

எட்டாம் பாட்டு. ராஜஸராயும் தாமஸராயுமுள்ள சேதநர் குணாநுகுணமாக ஆச்ரயிக்கலாம்படி இதரதேவதைகளை லோகமடங்கப் பரப்பிவைத்தான்; அவனுடைய அஸாதாரணவிக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள். அவர்களைப்போலே நீங்களும் அவனை யாச்ரயிக்கப் பாருங்கோள் என்கிறூர்.

இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும்தன்மூர்த்தி *
நிறுத்தினுன் தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே *
மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள்கீதங்கள்பாடி *
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார் மேவித்தொழுதுய்யம்மினீரே. (8)

[இறுக்குமித்யாதி] - செய்த பயிருக்குக்கடமையிறுக்குமாபோலே, உந்தாமுடைய புண்யபாபாநுரூபமாக அவ்வவதேவதைகளுக்குக் கொடுக்கும் த்ரவ்யங்களைக்கொடுத்து ஜீவிக்கைக்காக, எல்லாலோகங்களிலும், தனக்குத் தநுபூதரான தேவதைகளை நிறுத்தினன்; இவ்வருகுள்ளாரோடு அத்தேவதைகளோடு வாசியற எல்லார்க்குமொக்க நியாமகனுயிருக்கிற தானே. ராஜாக்கள் ஊர்தோறும் கூறு செய்வார்களை வைக்குமாபோலே. [மறுத்திருமார்வன்] - ஸ்ரீவத்ஸத்தையும் பிராட்டியையுமுடைய மார்பனென்னுதல், ஸ்ரீவத்ஸத்தையுடைத்தான திருமார்வையுடையவனென்னுதல். [அவனித்யாதி] - அவனுடைய அஸாதாரணவிக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், ப்ரீதிப்ரகர்ஷத்தாலே கீதங்களைப்பாடி, "ஸம்ஸாரத்திலே வர்த்திக்கவேண்டாநின்றதே!" என்கிற வெறுப்பின்றிக்கே பூமியெங்கும் பரந்தார்கள். [மேவித்தொழுதுய்ம்மினீரே] - ஆனபின்பு, நீங்கள் அவர்களைச் சென்று ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்னுதல், அந்த ஸத்வநிஷ்டரானவர்களோடொக்க நீங்களும் அநந்யப்ரயோஜநராய் ஸர்வேச்வரனையாச்ரயித்து உஜ்ஜீவித்துப் போங்கோளென்னுதல். ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. பகவத்குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமியெங்கும் பரந்தார்கள்; நீங்களும் அவர்களோடொக்க அநந்யப்ரயோஜநராய் ஆச்ரயியுங்கோளென்கிறூர்.

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை *
நாவில்கொண்டச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே *
பூவில்புகையும்விளக்கும் சாந்தமும்நீரும்மலிந்து *
மேவித்தொழுமடியாரும் பகவரும்மிக்கதுலகே. (9)

[மேவி இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப்பாருங்கோள். [வேதப்புனிதவிருக்கை நாவிற்கொண்டு] - வேதத்தில் அவன் விபூதிவிஷயமாகப் பரக்குமவற்றை யன்றிக்கே, அஸாதாரண விக்ரஹத்திலும் குணங்களிலும் ஸ்வரூபத்திலுமாகப் பரந்திருக்கிற ஸ்ரீபுருஷ ஸூக்தாதிகளை நாக்கிலேகொண்டு. [அச்சுதன் தன்னை] - இவர்கள் நாவிலேகொண்டு அஹ்ருதயமாகச் சொன்னால் அத்தை ஸஹ்ருதயமாகக் கொண்டு [*நத்யஜேயம்*] என்னுமவன். [ஞானவிதிபிழையாமே] - ஞானமென்கிறது - ஜ்ஞாநவிசேஷமான பக்தியை. பக்திபலாத்க்ருதமான க்ரியைகளிலொன்றும் தப்பாமே. [பூவில் இத்யாதி] - பூவோடேகூடின புகை தொடக்கமான. ஸமாராதநோபகரணங்களை மிகுத்துக் கொண்டு அவனைவிடாதேநின்று அடிமைசெய்யுமவர்களும் குணநுஸந்தாநத்துக்கு அவ்வருகொன்றுக்கு க்ஷமரன்றிக்கேயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களும், மிக்கது லோகம். [தொடர்ந்தடிமைசெய்யும்] இளையபெருமாளையும், [கிடந்தவிடத்தேகிடந்து குணநுபவம் பண்ணும்] ஸ்ரீபரதாழ்வானையும்போலே இருப்பாரேயாயிற்று லோகமடைய. நீங்களும் மேவித்தொழுதுய்ம்மின். .... (9)

பத்தாம்பாட்டு. நீங்கள் ஆச்ரயிக்கிற தேவதைகள் செய்கிற இத்தை நீங்கள் செய்திகோளாகில், யுகப்ரயுக்தமான தோஷங்களும் போமென்கிறார்.

மிக்கவுலகுகள்தோறும் மேவிக்கண்ணன்திருமூர்த்தி *
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாக *
தொக்கவமரர்குழாங்கள் எங்கும்பரந்தனதொண்டீர் *
ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே. (10)

[மிக்க இத்யாதி] - விஸ்த்ருதமான லோகங்களெங்கும் க்ருஷ்ணனுடைய அஸாதாரணவிக்ரஹத்தை சுபாச்ரயமாகப்பற்றி. [நக்கன் இத்யாதி]-ருத்ரனோடே ப்ரஹ்மாவும் இந்த்ரனும் இவர்கள் தொடக்கமாகத் திரண்ட தேவதா ஸமூஹங்களெங்குமொக்கப்பரந்து விபூதிவிஸ்தாரத்தை யுடையரானார்கள். அப்ராப்தவிஷயத்தே தொண்டுபட்டுத் திரிகிற நீங்கள் அவர்களோடொக்க ஸர்வேச்வர ஸமாச்ரயணம்பண்ணப்பெறில், உங்கள் தோஷம் போகையேயன்றிக்கே யுகப்ரயுக்ததோஷமும் போமென்கிறார். ... ... (10)

பதினோராம்பாட்டு: நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தேவதாந்தரங்கள் பக்கலுண்டான பரத்வசங்கையும், எம்பெருமான்பக்கல் ப்ரயோஜநாந்தரபரதையுமான மாநஸதோஷம் போமென்கிறார்.

கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும் *
மலியும்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னை *
கலிவயல்தென்னன்குருகூர்க் காரிமாறன்சடகோபன் *
ஒலிபுகழாயிரத்திப்பத்து உள்ளத்தைமாசறுக்குமே. (11)

[கலியுகமொன்றுமின்றிக்கே] - [*கலௌ க்ருதயுகம் தஸ்ய*] என்கிறபடியே, கலிதோஷங்களொன்றும் வாராதபடியாகத் தன்னடியார்க்கு அருள்செய்யும்.

நாட்டுக்கிட்ட வஸ்க மல்லவிறே அந்த: புரத்துக்கிடுவது. [மலியும் சுடரொளிமூர்த்தி] அருள்செய்யாதொழிந்தாலும் விடவொண்ணாத வடிவழகு. சுடரென்றும் ஒளியென்றும் - பர்யாயமாய், இரண்டாலும் - மிகுதியைச் சொல்லுகிறது. மலிதல் - நிறைதலாய், மிக்கதேஜஸ்ஸாலே நிறைந்த வடிவென்றபடி. [மாயமித்யாதி] - ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணனையாயிற்றுக் கவிபாடிற்று. [கலிவயலித்யாதி] - கலியென்று - மிடுக்குக்கும் ஆரவாரத்துக்கும் பேர். இவற்றால்-பூஸாரத்தைச் சொல்லுதல்; நடுவது, அறுப்பது, உழுவதாய்ச் செல்லுகிற ஆரவாரத்தைச் சொல்லுதல். இப்படிப்பட்ட வயலையுடைத்தாயிருந்துள்ள திருநகரியில் ஆழ்வாரருளிச்செய்த, ப்ரஸித்தமான புகழையுடைத்தான ஆயிரத்திலும், இந்தப் பத்தும்; தேவதாந்தரங்கள் பக்கல் பரத்வசங்கை பண்ணுதல், ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் ஸஜாதீயபுத்தி பண்ணுதல், "அபாகவதஸஹவாஸம் நன்று" என்றிருத்தல், ப்ரயோஜநாந்தரங்களை அபேக்ஷித்தல் செய்கையாகிற மாநஸதோஷங்களைப் போக்கும். ... ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

பொலிகபொலிகவென்றுபூம்கள்கோன்தொண்டர்
மலிவுதனைக்கண்டுகந்துவாழ்த்தி...உலகில்
திருந்தாதார்தம்மைத்திருத்தியமாறன்சொல்
மருந்தாகப்போகும்மனமாசு.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும் திருவாய்மொழி—மாசறுசோதி ப்ரவேசம்

"மலியும்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை" என்று வடிவழகையும் குணங்களையும் ஸௌலப்யத்தையும் அநுஸந்தித்து; இப்படி ஸுலபனுமாய், ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனுமாய், அவையில்லையேயாகிலும் விடவொண்ணாதபடி வடிவழகையு முடையனான இவனை பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கக்கோலிக் கையைநீட்ட, அகப்படாதே கைகழிந்து நிற்க, அத்தாலே கலங்கி மடலெடுக்கையிலே உபக்ரமிக்கிறார். மடலெடுக்கையாவது - போர்சுட்டுப் பொரிகொறிக்கையோபாதி. "அநீதிசெய்யாதே கொள்ளுங்கோள்" என்று பிறரைத் திருத்தினவர், "நீர்செய்யப்பார்க்கிற இது அநீதி, அத்தைத்தவிரும்" என்று பிறர் திருத்தவும் திருந்தாதபடியானார். பிறரை பகவத் விஷயத்திலே ப்ரவணராக்குகைக்குத் திருத்துகிற இவரை, "பகவத்ப்ராவண்யமாகாது" என்று திருத்தப்பார்த்தால் திருந்தாரிறே.

அன்றிக்கே, *ஏறாளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டாவென்று அலாபத்தாலே கூப்பிடும் தம்மோடொக்கக் கூப்பிடுகைக்குத் துணைதேடி லோகவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தவிடத்து, தாம் பகவத்விஷயத்திலே ப்ரவணராயிருக்குமாபோலே அவர்கள் இதர விஷயங்களிலே ப்ரவணரா யிருக்கிறபடியைக்கண்டு, அவர்கள் அநர்த்தத்துக்கு நொந்து, அவர்களுக்கு பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்தி, "இவர்களிலே ஒருவனாயிருக்கிற என்னை, இவர்களையும் திருத்தும்படியாக்குவதே ஸர்வேச்வரன்" என்று அவன் தமக்குப்பண்ணின உபகாரத்தை ஸ்மரித்து, தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாசாஸநம்பண்ணி, இப்படி பரஹிதத்துக்கு வேண்டுவதெல்லாம் செய்து கையொழிந்த பின்பு பழைய தம்மிழவே தலையெடுத்து,

"வழியல்லாவழியேயாகிலும், கிட்டுமத்தனை" என்னும்படியான விடாய் பிறந்து மடலெடுக்கையிலே பொருப்பட்டுச் செல்லுகிறது - இந்தத் திருவாய்மொழி. ஓரோ விஷயங்களிலே ஓரொருத்தர்க்கு ஸங்கமுண்டானால் அவ்விஷயங்கள் கிடையாவிட்டால் "அவை இப்போதே பெறவேணும்" என்னும்படியான த்வரை பிறந்தால், பின்னையவை யிருந்தவிடங்களிலே புகைசூழ்ந்து புறப்படவேண்டும்படியாயிருப்பதொரு ஸாஹஸத்தைப் பண்ணிப் புறப்படவிடுவித்து முகத்திலே விழிப்பாரைப் போலே, "அத்தலைக்குப் பழியை விளைத்தாகிலும் முகத்திலே விழிக்குமத்தனை" என்று ஸாஹஸத்திலே யொருப்பட்டு, தமக்கு இவ்வளவாகப் பிறந்த தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

"அபிமத விஷயத்தைப் பிரிந்து ஆற்றமாட்டாதார் மடலெடுக்கக்கடவர்கள்" என்று ஒன்றுண்டு தமிழர் சொல்லிப்போருவது. அதாவது - [*துல்யசீல வயோவ்ருத்தாம்*] என்று சீலத்தாலும் வயஸ்ஸாலும் அபிஜநத்தாலும் வடிவழகாலும் ஸம்பத்தாலும் குறைவற்றிருப்பன இரண்டு விஷயமாய், அது தன்னில் "அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி" என்றார்போலே சொல்லுகிற நாயகலக்ஷணங்கள் நாயகனுக்கும் உண்டாய், "நாண், மடம், அச்சம், பயிர்ப்பு" என்றாற்போலே சொல்லுகிற நாயகலக்ஷணங்கள் நாயகனுக்கும் உண்டாய், "நாண் மடம், அச்சம், பயிர்ப்பு" என்றாற்போலே சொல்லுகிற நாயகியுடைய லக்ஷணங்கள் நாயகிக்கும் உண்டாய், இப்படி இரண்டு தலையும் குறைவற்று இவர்கள் தாங்கள் ப்ராப்தயௌவநருமாயிருக்க; இவர்களைப் புறம்புகூட்டுவாரின்றிக்கேயிருக்க, யாத்ருச்சிகமாக அவனும் "வேட்டைக்கு" என்று புறப்பட்டு இவளும் "பூக்கொய்து விளையாட" என்று உத்யாநத்திலே புறப்பட, அவ்விடத்திலே தைவயோகத்தாலே இருவர்க்கும் கண்கலவியுண்டாய், சிலரடியாகவந்த ஸம்ச்லேஷமல்லாமையாலே பிரிவோடே வ்யாப்தமாகப் பிரிந்து, குணாதிக்விஷயமாகையாலே இரண்டு தலைக்கும் ஆற்றாமைவிஞ்சி, ஒரு தலையை யொழிய ஒரு தலைக்குச் செல்லாமை பிறந்து இரண்டு தலையையுமழித்தாகிலும் பெறப்பார்க்கை. மடலூருகையாவதுதான் - அபிமத விஷயத்தைப் பிரிந்த ஆற்றாமையாலே அவ்விஷயத்தை ஒரு படத்திலே யெழுதி, வைத்த கண்வாங்காதே அத்தைப் பார்த்துக்கொண்டு, பனைமடலைக் குதிரையாகக் கொண்டு, பிரிந்தபோது தொடங்கி கண்ட போகோபகரணங்களெல்லாம் அக்நிகல்பமாய்த் தோற்ற, ஊணுமுறக்கமு மின்றிக்கே உடம்பில் தூளிசேரேறிட்டுக் கொள்ளாதே, மயிரை விரித்துக்கொண்டு திரியாநின்றால், இத்தர்மஹாநியைக் கண்ட க்ஷத்ரியாதிகள் "கெட்டேன், இவனுக்கு ஒரு விஷயத்திலே இத்தனை பாவபந்தமுண்டாகாதே" என்று அவர்கள் அவ்விஷயத்திலே கூட்டுதல்; இல்லையாகில், இதுவே ஹேதுவாக இரண்டுதலையிலுள்ள பந்துக்களும் கைவிட, அலக்குப்போர் போலே ஒருவர்க்கொருவர் புகலாய் அங்ஙனே கூடுதல், தோழிமார் கூட்டுதல், ஆற்றாமை கூட்டுதல், அந்த விஷயந்தான் குணாதிகவிஷயமாயிருக்குமாகில் பழிக்கு அஞ்சிக் கூடுதல், இவையித்தனையுமில்லையாகில் முடிந்து பிழைத்தல் செய்கையாவதொரு ஸாஹஸப்ரவ்ருத்தி விசேஷமாயிற்று. இது தன்னை "கடலன்னகாமத்தாராகிலும் மாதர் மடலூரார் மற்றையார்மேல்" என்று ஆச்ரயத்தளவல்லாதபடி ஆற்றாமைகரைபுரண்டாலும் ஸ்த்ரீகள் மடலூரக்கடவர்களன்று; நாயகன் தன்னாற்றாமையாலே மடலெடுத்து உலகின்மேல் வைத்துச் சொல்லுதல், [உலகின் மேல் வைத்துச் சொல்லுகையாவது - ஸ்வாபிப்ராயத்தை யறிவியாமல் "ஒருவன் மடலூரப்போகிறான்" என்று அந்யாபதேசேந சொல்லுகை.] "நான்வரை பாயப்புகாநின்றேன், மடலெடுக்கப்புகாநின்றேன்" என்று தோழிக்கு வந்து அறிவித்தால், அவள் கூட்டிற்றிலளாகில் பின்பு அவன் இது செய்யக்கடவன்; இத்தனையல்லது ஸ்திரீகள் மடலெடுக்கக் கடவரல்லர்கள் என்று இங்ஙனே ஒரு மர்யாதை காட்டினார்கள் தமிழர்; இங்கு அங்ஙனன்றிக்கே, பிராட்டிதான் மடலெடுத்ததாக

இராநின்றது, தமிழர் "ஸ்த்ரீகள் மடலூரக்கடவரல்லர்" என்றுசொன்ன இது பின்னைச்சேரும்படி என்? என்னில்; அவர்கள் ஒருதலையிலேதான் அத்தை யிசைந்தார்களே, அப்படியிசைகைக்கு அடி ஆற்றாமையே, அது இரண்டுதலைக்கு மொத்தபின்பு ஒரு தலையிலொதுக்குவாரார். வரம்பு அழியவாகிலும் முகங்காட்டி வைத்துக்கொண்டு தரிக்க வேண்டும்படியா யிருப்பதொரு விஷயம் புறம்பில்லையே; இங்ஙனே யிருப்பார் சிலரைக் கல்பித்துக் கொண்டார்களித்தனை யிறே. இதுக்கு ஒரு மர்யாதை கட்டுகையாவது - ஆசைக்கு ஒரு வரம்பிட்டார்களாமித்தனை யிறே; அப்போது பின்னை ராஜாஜ்ஞைக்கு நிற்கவேணும். இல்லையாகில் வேலியடைத் தால் நிற்கவேணும் ஆகையால் அவர்கள் ப்ரேமஸ்வபாவம் அறிந்திலர்களா மித்தனை.

இவர்தாம் *வளவேழுலகிலே - நாம் அவனோடே கலக்கையாகிற இது அவ னுக்கு அவத்யாவஹம், நம்பேற்றுக்காக அவனோடே கலந்து அவனுக்கு அவத் யத்தை விளைப்பதிற்காட்டில் நாம் அகன்று முடிந்தாகிலும் அத்தலைக்கு அதிசயத் தைப்பண்ணவமையுமென்றிருக்குமத்தோடும் சேராது; இனி *ஏறாளுமிறை யோனிலே - அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் நசித்துப்போக வமையு மென்று சொன்னவத்தோடும் சேராது; ஆக, வீதராகரா யிருப்பார் செய்வது மொன்றல்ல, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது, ஜ்ஞாநாதிகரா யிருப்பார் செய் வதுமொன்றல்ல, ஆனால் இது இருந்தபடியென்? என்னில்; இவற்றுக் கெல்லாம் பரிஹாரம், பட்டர் திருமடல் அருளிச்செய்கிறபோது அருளிச் செய்தருளினர், இங்குத்தைக்கும் வேண்டுவது சொல்லவேணுமிறே. ஜ்ஞாநாதிகராயிருப்பார் ஜனககுலத்திலுள்ளார்க்கு மேலில்லையிறே: அக்குடியிலே பிறந்த பிராட்டியான வள், [*யா ந சக்யா புரா த்ரஷ்டும்*] என்கிறபடியே, பெருமாள் காட்டுக்கு எழுந் தருளுகிறபோது "மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் அன்ன நடைய வணங்கு நடந்திலளே" என்கிறபடியே - அவர்பின்னே பிராட்டி புறப் பட்டுப்போகையாலே சிஷ்டாசாரமுண்டாயிருந்தது; இனித்தான் *மயர்வறமதிநல மருளப்பெற்ற இவர் அநுஷ்டிக்கையாலே இதுதானே ப்ரமாணமாகத் தட்டில்லை யிறே, [*யத் யதாசரதி ச்ரேஷ்ட்ட:] என்றும், [*ஸ யத்ப்ரமாணம் குருதே*] என்றும் ஸத்துக்களுடைய அநுஷ்ட்டாநத்தை ப்ரமாணமாகக்கொள்ளக் கடவதிறே. காமத்தை நிஷேதியாநின்றதேயென்னில்; அப்ராப்த விஷயத்தில் காமத்தையிறே நிஷேதித்தது, அவை நிலைநில்லாமையாலே; பகவத்விஷயத்தில் காமத்தை [*நிதித்யாஸிதவ்ய:*] என்று விதியாநின்றதிறே. வேதாந்த விஹிதையான பக்தியை யிறே - இங்கு, காமமென்கிறது. *வளவேழுலகில் - நாம் கிட்டுகை அவனுக்கு அவத்யமென்று அகன்ற இவர், அத்தலையை யழித்து முகங்காட்டுவித்துக்கொள் ளப் பார்க்கிற இது இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ என்னவும் வேண்டா; அங்கு அகல நினைத்ததும் அத்தலைக்கு அவத்ய பரிஹாரத்துக்காகவிறே; தமக்கு ஆற்றாமை கரைபுரண்டிருந்தது, "தன்னையாசைப்பட்டார் பெறுதேமுடிய, முகங் காட்டாதேயிருந்தான்" என்கிற அவத்யத்தைப் பரிஹரிக்கைக்குச் செய்கிறாரா கை யாலே [இதுவும் இவர் ஸ்வரூபத்தோடே சேரும்.] அங்கு அகன்றது ஜ்ஞாந கார்யம், இங்குமேல் விழுகிறது பக்தி கார்யம். இத்தனை கலங்கப்பண்ணிற்றில்லை யாகில் அத்தலையில் வைலக்ஷண்யத்துக்கு நமஸ்காரம். இவர்தாம் இப்படி கலங் கிற்றிலராகில் இவருடைய ப்ரேமத்துக்கு நமஸ்காரம். அவன் அருளிற்றும் மதிநல மிறே, அதுபடுத்துகிறபாடிறே இதெல்லாம்; மதியின் கார்யம் அது, நலத்தின் கார்யம் இது. இனித்தான் ஸித்தோபாயத்தை ஸ்வீகரித்து அது பலியாவிட்டால் ஸ்வரூபத்தை அந்யதாகரிக்குமித்தனையிறே; அவன் ஸ்வரூபம் அந்யதாகரித்தால் இத்தலைசொல்லவேண்டாவிறே. "இத்தலையில் கர்த்தவ்யமில்லையாகில் அவனுக்கு அசக்தியில்லையாகில் நடுவுவிளம்பத்துக்கு ஹேதுவென்?" என்று தோற்றுமிறே,

ஆற்ருமையையும் ஆவிஷ்கரித்து அம்பும் தொடுக்கவேண்டும்படியான. விஷயத்தை யனறே இவர்பற்றிற்று. இவர் தமக்கு "மடலெடுக்கக் கடவேன்" என்று துணிந்த துணிவுக்கு மேற்பட அநுஷ்டிக்கவேண்டுவதில்லையாயிற்று குணுதிகவிஷயமாகை யாலே. கடலை, பெருமாள் சரணம்புக்கவிடத்தில் தானுகவந்து முகங்காட்டாமை யாலே நாலுமூன்றும்பை விட்டு உடம்பிலே பாதிவெந்தபின்பிறே வந்து முகங் காட்டிற்று; இங்கு அதெல்லாம் வேண்டாமையாலே, [*சாபமாநய*] என்கிறவோ பாதி, "மடலூருவேன்" என்று அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப் பார்க்கிருர். தம்முடைய ஸ்வரூபத்தில் கலக்கம் அநுவர்த்தியா நிற்கச்செய்தேயும், அவனுடைய குணஜ்ஞானத்தில் கலக்கமின்றிக்கே யிருக்கிறது காணும் இவர்க்கு. *ஏருளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும் என் உடைமையும் வேண்டா என்று முடித்துக்கொள்ளப்பார்த்தவிடத்தில், அது தம்கையதன்றிக்கே, அவனுளனுக இது அழியாததாயிருந்தது; இனி "அத்தலையே பிடித்து ["அழிப் போம்" என்று,] வேர்ப்பற்ருேடே யழிக்கப்பார்க்கிருர்; உண்டாம்போதும் அத் தலையாலேயுண்டாய், இல்லையாம்போதும் ஒன்ருக இல்லையாம்படியிறே வஸ்துஸ்வ ரூபந்தானிருப்பது. "உயிரினுற்குறைவிலம்" என்ருர் அங்கு, இங்கு - உயிர்க்கு உயிரினுல் குறைவிலம் என்கிருர். ஏருளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல் லாத நானும் என்னுடைமையும் வேண்டாவென்ருர், இதில் - எனக்கு உறுப்பல் லாத அவனும் அவனுடைமையும் வேண்டா வென்கிருர். "ராவணன் மாயா சிரஸ்ஸைக்காட்டினபோது, இதரஸ்த்ரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன் ஞற்ருமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பானென்" என்று பட்டரைச் சிலர்கேட்க, "ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவநநிமித்தம், அத் தலையில் ஸத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லாமையாலே யிருந்தாள்" என்று அருளிச்செய்தார்.

இப்படி அத்தலையை அழித்தாகிலும் முகங்காட்டுவித்துக்கொள்ள வேண்டும் படி தமக்குப் பிறந்த தசாவிசேஷத்தை; எம்பெருமானேடே கலந்து பிரிந்தா ளொரு பிராட்டி ஆற்ருமை மீதூர்ந்திருக்கச் செய்தே இவள் தரித்திருந்த இருப் பைக்கண்டு, தோழியானவள், "முன்புத்தையளவுகளன்றிக்கே இவள் தேறியிருந் தாள், அவன் வாராதிருக்க இவளுக்கித்தனை தேற்றம் உண்டாம்போது, ஸாஹ ஸங்களிலே துணிந்தாளாகவேணும்" என்றுபார்த்து, "நீ செய்யநினைக்கிற இது உன் தலைமைக்கும் அவன் தலைமைக்கும், உன் மதிப்புக்கும், [அவன் மதிப்புக்கும்] உன் பிறப்புக்கும் உன்னுடைய மர்யாதைகளுக்கும் போராதுகிடாய்" என்ன; "என் ஸ்வரூபத்தை அழித்தாகிலும் [அவன் ஸ்வரூபத்தையழித்தும்] மடலெடுக்கை தவிரேன்" என்று துணிந்த துணிவைத் தோழிக்கு அறிவிக்க; இத்தைக்கேட்டு அஞ்சி, ஸர்வேச்வரன், இருந்தவிடத்தில் இருக்கமாட்டாமை வந்து முகங்காட்டித் தானும் ஸத்தைபெற்று இவளையும் தரிப்பித்தானுய்த் தலைக்கட்டுகிறது. இவர் மடலிலே துணிந்தால் கடுகவந்து முகங்காட்டிப் பிழைக்கில் பிழைக்கு மித்தனை போக்கி, இல்லையாகில் ஸத்தைகிடக்க விரகில்லையிறே அவனுக்கு; ப்ரஹ்மாஸ்த்ரத் துக்குத் தப்பவொண்ணுதிறே அவனுக்கு. இதுக்குமுன்பு, "அவனலேபேறு" என்று போந்தாரே யாகிலும்; ப்ராப்யமான கைங்கர்யத்துக்கு பூர்வகாலீநமா யிருப்பன பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளென்று சில உண்டிறே, அவை தவிர வொண்ணுதிறே. இனி, பக்திமானுக்கும் பக்தியுண்டு; ப்ரபந்நனுக்கும் பக்தியுண்டு, ருசியையொழிய ப்ரபத்தி பண்ணக்கூடாதே. பக்திமானுடைய பக்தி, வைதமாய் வருமது; ப்ரபந்நனுடைய பக்தி ருசிகார்யமாயிருக்கும். பக்திமானுக்கு ஸாதநரூபமா யிருக்கும், அவனுக்கு தேஹயாத்ராசேஷமாயிருக்கும். பக்திமானுக்கு பலச்ரத்தை யில்லாதபோது தவிரலாயிருக்கும், ப்ரபந்நனுக்கு ஸ்வரூபப்ரயுக்தமாய் வருமதாகை யாலே ஒருகாலும் தவிராதாயிருக்கும்.

முதற்பாட்டு. "ஸௌந்தர்யத்தாலும் சீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றதொரு விஷயமாயிற்று அது, நீ செய்யப்புகுகிற இது அவ்விஷயத்துக்குப் பழிப்பை விளைக்கப்புகுகிறாய் கிடாய்" என்று தோழி சொல்ல; நான் அவ்விஷயத்துக்குப்" பழிப்புண்டாக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பு அறுக்கப் புகுகிறேன் காணென்கிறாள். ... ... *

மாசறுசோதி என்செய்யவாய்மணிக்குன்றத்தை*
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியைநாடியே*
பாசறவெய்தி அறிவிழந்தெனைநாளையம்*
ஏசறுமூரவர்கவ்வை தோழீ! என்செய்யுமே? (1)

[மாசறுசோதி] - கலந்து பிரிந்தவள் ஆற்றாமையின்றிக்கே மர்யாதைகளை நோக்கிக்கொண்டிருக்கையாகிறது அத்தலைக்கு அவத்யம்போலே காணும் பிரிந்தால் இப்படி பண்ணாதவன்று, மாசிறே ஸௌந்தர்யத்துக்கு. நான் எனனுடைய மர்யாதைகளைக் குலைத்தாகிலும் அவன் முகத்திலே விழிக்கை தவிரேனென்கிறாள் வடிவு அதுவாயிருக்க, எங்ஙனே நான் மடலெடாதொழியும்படி. கெடுவாய், அவ்வடிவு ஹேயப்ரத்யநீகங்காண், நான் மடலெடாதிருக்கை அவ்வடிவுக்கு ஹேயத்தையுண்டாக்குகைகாண். "அவன் அவ்வடிவைபுகந்தார்க்குக் கொடான்" என்னும் பழியைத் துடைக்கக்காண் நான் பார்க்கிறது; [*பக்தாநாம்*] என்கிற உடம்பை "தனக்கு" என்றிருக்கையாகிற இது அவ்வடிவுக்கு மாசிறே. [மாசறுசோதி] - "மடலெடுக்கை மாசு" என்றிருக்கிறாள் தோழி; "மடலெடாதொழிகை மாசு" என்றிருக்கிறாள் இவள்; வ்யதிரேகத்தில் இப்படி யாற்றாமை விளையாதாகில் நாம் காண்கிற விஷயங்களோபாதியாமே. வடிவிலே அணைந்தவளாகையாலே முற்பட வடிவிலே மண்டுகிறாள். [மாசறுசோதி] - நாம் மடலெடுக்க நினைத்த வளவிலே மாசற்றுவருகிறபடி பாராயென்கிறாள். மேல், "ஆசறுசீலனை" என்னா நிற்கச்செய்தே, வடிவழகைச் சொல்லுகிறது - குணத்திலும் விக்ரஹம் ஆகர்ஷகமாயிருக்கையாலே. [என்செய்யவாய்] [*அவாக்யநாதர:*] என்று அவிக்ருதமாயிருக்கக்கடவ தத்வம், என்னோடே கலந்து அத்தால் வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டு ஸ்மிதம்பண்ணி விகாரித்ரவ்யம்போலே விக்ருதனாகாநிற்க, நான் அவனைப் பிரிந்து அவிக்ருதையாயிருக்கவோ. ஒரு வார்த்தை சொல்லக்கடவதன்றிக்கே, முகம் பார்த்து வார்த்தை சொல்லுகைக்குத் தன்னோடொப்பதொரு தத்வாந்தரமில்லாமையாலே அநாதரித்திருக்குமவனிறே. "கர்மநிபந்தநமான விகாரமில்லை" என்ற இத்தனைபோக்கி, ஆச்ரிதஸம்ச்லேஷ விச்லேஷங்களால் வரும் விகாரமில்லையென்னில் ஒருசேதநனோடு கலந்த தன்றிக்கேயொழியுமிறே அவன் கலந்த போது பண்ணின ஸ்மிதமன்றோ என்னை அவ்யவஹிதமான உபாயத்திலே மூட்டிற்று. ஸம்ஸாரி முக்தனானால் அவனுக்குப் பிறக்கும் ஹர்ஷம்போலேகாணும் இத்தலையைப்பெற்று அவன் ஸ்மிதம்பண்ணி நின்றநிலை. [என் செய்யவாய் இத்யாதி] - இவளுடனே கலந்தத்தாலுண்டான ப்ரீதியாலே ஸ்மிதம்பண்ணி வடிவிலே வேறுபாடுதோற்ற நின்றநிலையாயிற்று இவளைக் கையும் மடலுமாம்படி தொட்டுவிட்டது. [பண்டும் ஒருஸ்மிதமிறே ஊர்ப்பூசலை விளைத்தது.] வாய்க்கரையிலே நின்று மடலெடுக்கிறாளிறே; கழுத்துக்கு மேலேயிறே இவள் மடலெடுக்கப்பார்க்கிறது. [மணிக்குன்றத்தை] - கழுத்துக்குமேலேயன்றிக்கே மெய்யே மடலெடுக்கப் பண்ணிற்றென்கிறாள். என்னோடேவந்து கலந்தத்தாலே வடிவில் வைவர்ண்யம் போய்ப் புகர்த்துக்குளிர்ந்து [வளர்ந்து] நிலைபெற்றபடியும், பிரிவை ப்ரஸங்கித்துக் கால் வாங்கமாட்டாதே நின்ற நிலையுங்காண் என்னை மடலிலே துணியப் பண்ணிற்று. மாணிக்க மலை போலே போக்யனானவனை. [ஆசறுசீலனை] - வெறும் வடிவழகுகண்டன்றுகாண் நான் துவக்குண்டது, அகவாயில் சீலத்தையும்

கண்டுகாணென்கிறாள். ஆசு - குற்றம். குற்றமற்ற சீலத்தையுடையவனை. அவன் கலக்கிறபோது என்பேறாகக் கலந்தானாகிலன்றோ நானும் பிரிவில் என்பேற்றுக்கு வேண்டுமத்தைச் செய்திருக்கலாவது; அம்மேன்மையுடையவன் இப்படி தாழ நின்று என்னைப் பெற்றது பெறாப்பேறாகத் தான் நினைத்திருக்க, நான் அவனைப் பிரிந்து வைத்து, "வரில்போகடேன், கெடில்தேடேன்" என்று நினைத்திருக்கலாமோ? அவன் தன் குணம் பரிஹரித்துப்போக என்னைப் பழி பரிஹரித்திருக்கச் சொல்லுகிறாயோ? [ஆதிமூர்த்தியை] - "ஒருகுடியிலே பிறந்த உனக்கு, அவன் தானே வரவிருக்குமதொழிய நீ பதறுகிறவிது உன்மதிப்பை யறுத்துக் கொள்ளப் பார்க்கிறாய்கிடாய்" என்ன - நான் மதிப்பை யறுத்துக்கொள்ளப் பார்க்கிறேனல்லேன், மதிப்பையுண்டாக்கிக்கொள்ளப் பார்க்கிறேனென்கிறாள்; [*காரணம்து த்யேய:*] என்று சாஸ்திரங்கள் ஒருமிடறுசெய்கிற விஷயத்தையன்றோ நான் ஆசைப்பட்டது, இவ்விஷயத்தை ஆசைப்பட்டுப் பெறாதே முடிந்தாலும் அதுதானே மதிப்பாம்படியான விஷயமன்றோ. வ்யாக்யாநம் பண்ணுவதற்கு முன்பேயும் ஒருபொருளுண்டு இதுக்கு அருளிச்செய்வது - [*பூர்வஜ*] என்கிறபடியே நம்மோட்டைக் கலவிக்கு அவன் முற்பாடனாகச் செய்தே, பிரிவில் ஆற்றாமைக்கு நான் பிற்பாடையாகவோ. "ஆனாலும், 'அபிமத விஷயத்தைப் பிரிந்தாள், அநந்தரம் மடலூர்ந்தாள்' என்னுமே, 'சிலநாள் ஆற்றாமையோடே பாடாற்றிக்கிடந்தாள், பின்பு தன்னால் பொறுக்கவொண்ணாமையான வளவான வாறே மடலெடுத்தாள்' என்னும் வார்த்தை படைக்கவேணுங்காண்" என்ன, [நாடியே பாசறவெய்தி] - இன்றோ, நான் எத்தனைகாலமுண்டு இப்படி க்லேசப்படுகிறது. அவன் இத்தலையைப் பெறுகைக்குப் பட்டதெல்லாம் போராதோ நான் அவனைப்பிரிந்துபட்டது. காலமெல்லாம் தேடிக்காணப்பெறாதே து:கப்பட்டுத்திரிந்த தத்தனையாகாதேதான்; சிறைக் கூடத்திலே பிறந்து அங்கேவளருமாபோலே. விச்லேஷத்தாலே உந்நேயமித்தனைகாணும் ஸம்ச்லேஷம். பகவத் தத்வமுள்ளவிடமெங்கும் புக்குத்தேடிக் காணப்பெறாமை நசையற்று, பின்பாகாதே மடலெடுத்தது. [பாசறவெய்தி] - து:க்கத்தையுடையேனாய். பாசறவு - து:கம். பாசு என்று - பசுமையாய். அது அறுகையாவது - வைவர்ண்யமாய், வைவர்ணயத்தை பஜித்தென்னுதல்; அன்றிக்கே, பாசென்று - பாசமாய், அதாவது - பற்றாய், பந்துக்கள்பக்கல் ஸங்க மற்றென்னுதல். [பாசற வெய்தி] - ஸ்நேஹமடைய அவன் பக்கலிலே யெய்தி யென்னுதல் எல்லாம் செய்தாலும் இது அறிவுடையார் செய்வதொன்றல்லவென்ன, [அறிவிழந்தெனை நாளையம்] - அறிவு குடிபோய் எத்தனையோர்காலத்தோம். *மயர்வறமதிநலமருளப்பெற்றவன்றே போயிற்றில்லையோ நம்முடைய அறிவு. திர்யக்கின்காலிலேவிழுந்து தூதுவிட்டவன்று, "அது ஜ்ஞானகார்யம்" என்றிருந்தாயோ இன்றிருந்து கற்பிக்கைக்கு: அன்றே *மதியெல்லா முள் கலங்கிற்றில்லையோ. தன் பக்கலிலே கைவைத்தால் மற்றொன்று அறியாதபடி பண்ணும் விஷயமிறே, "பேரின்பமெல்லாந்துறந்தார்தொழுதாரத்தோள்" என்னக்கடவதிறே [*நோபஜநம் ஸ்மரந்*] என்று - ப்ராப்தி ஸமயத்தில் இவ்வருகுள்ளவற்றை நினையாதபடி பண்ணுகையே யன்றிக்கே, ஜ்ஞாநம்பிறந்த ஸமயமேபிடித்தும் இவ்வருகுள்ளவற்றை நினையாமே பண்ணவல்ல விஷயமன்றோ? தன்னையநுஸந்தித்து லோகயாத்திரையையும் அநுஸந்திக்கும்படியோ அவன்படி. நீயெல்லாம் சொன்னாலும் பழிக்கு அஞ்சவேணுங்காணென்ன, [ஏசறும் இத்யாதி] - நமக்கு மடலெடுக்கை குற்றமாகிலன்றோ அவர்களுக்கும் பழிசொல்லுகை குற்றமாவது. அறிவுடையார்க்கு வரக்கடவதான பழி, அது வாஸனையோடே குடிபோன நமக்கு வாராதுகாண்: இதுக்கு அஞ்சவேண்டா. இதுக்கு மூன்றுபடியாக அருளிச்செய்வர்:—"இவளை யொருபழி சொன்னோமாய் விடவல்லோமே" என்று அதிலேயற்றிருக்கிற வென்னுதல்; ஏசுகையிலே துணிந்திருக்கிற. அன்றிக்கே, 'பகவத் விஷயத்திலே கைவைத்திருக்கிறவர்களுக்கு ஒரு பழி சொன்னோமாய் விடவல்

லோமே" என்று து:கப்பட்டிருக்கிறவென்னுதல். ஏசற்றிருக்கிற நமக்கு. அதாவது. - ஏசுமெல்லை கடந்தவென்னுதல். [ஊரவர்கவ்வை] - பகவத்விஷயத்திலே கைவைத்தார் "இது பழி" என்னிலன்றே பழியாவது; இதுக்குப்புறம்பாய் நின்றவர்கள் சொல்லுமது நமக்குப் பழியோ ? [தோழி] - ஸமாநஸுகது:கையான உனக்கு. "இதுபழி" என்று தோற்றிலன்றே எனக்கு மீளவேண்டுவது: [என் செய்யுமே] - ஏசறுமெல்லையிலே நிற்கிற எனக்கு, இது ஏசாம்படியிருப்பார் சொல்லும் வார்த்தைகொண்டு காரியமென்? ஊரார்பழி புகழாமெல்லையிலே யன்றே நாம் நிற்கிறது; அவர்கள் சொல்லுகிற விது நமக்கு அவத்யமோ,''தாரகமாயித்தனையன்றே ? "அலரெழிலாருயிர் நிற்கும்' என்னக் கடவதிறே. "அலர் தூற்றிற்றதுமுதலாக்கொண்டவென்காதல்" என்கிறபடியே, அவர்கள்பழி தாரகமாகவன்றே மடலெடுக்க விருக்கிறது. ... ... (1)

இரண்டாம்பாட்டு. "கீழ்த்திருவாய்மொழியில்நின்றும் இத்திருவாய்மொழிக்குப் புகுருகைக்கு வழியிரண்டாயிருக்கும்; * சீலமில்லாச்சிறியனிலே - கூப்பிட்டார்; கூப்பிடச்செய்தேயும் வந்து முகங்காட்டாமையாலே, அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் எனக்கு வேண்டாவென்றார்: இப்படியொழியப் பேறிழவு புறம்பேயாயிருக்கிற ஸம்ஸாரிகள்படியைக் கண்டு வெறுத்தார்; 'ஈச்வரனும் கைவாங்கின இவர்களை நான் திருத்துவேன்' என்று பகவத்பாரத்வத்தை உபபாதித்துத்திருத்தினர்; 'இவர்களிலே ஒருவனுயிருக்கிற எனக்கு இவ்வாசியுண்டாவதே' என்று பகவத்க்ருபையைக் கொண்டாடினர்; தாந்திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்திக்கு மங்களாசாஸநம் பண்ணினர்; தொடங்கின கார்யம் தலைக்கட்டினவாறே பழைய இழவே தலையெடுத்து, தம் ஆற்றாமையாலே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறரென்னுதல். அன்றிக்கே, கீழே, 'மலியுஞ் சுடரொளி மூர்த்தி' என்று - வடிவழகை யநுஸந்தித்து, அநந்தரம் பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அப்போதே பெறுமையாலே, வழியல்லாவழியே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறரென்னுதல்.

> என்செய்யுமூரவர்கவ்வை ? தோழீ! இனிநம்மை *
> என்செய்யதாமரைக்கண்ணன் என்னைநிறைகொண்டான் *
> முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி *
> என்செய்யவாயும்கருங்கண்ணும் பயப்பூர்ந்தவே. (2)

[மாசறுசோதி இத்யாதி] - [மடலெடுத்தாகிலும் பெறவேண்டும்படி பழிப்பற்ற வடிவழகை யுடையனாய், என்னோட்டைக்கலவியால் வந்த ப்ரீதிதோற்ற ஸ்மிதம்பண்ணி, அந்தக் கலவியாலே வேறுபட்டுள்ள வடிவையுடையவனாய் என்னோடேகலக்கிறவிடத்துத் தன்பேறாகக் கலந்தவனுமாய், மடலெடுத்துப்பெறாதே முடிந்தாலும் 'இந்த விஷயத்தை யாசைப்பட்டன்றே மடலெடுத்தது' என்று அது தன்னைப்பீடாகச் சொல்லலாம்படி மதிப்பனுமாயுள்ளவனை]. ["என்செய்யவாய் - மாசறுசோதி - மணிக்குன்றத்தை] - என்று அந்வயமிருப்பது, 'இனி விசேஷணந்தோறும் ஒருபொருள் சொல்லவேணும்' என்னுமத்தாலே சொன்னோம்" என்று அருளிச் செய்வர். [நாடியே இத்யாதி] நெடுநாள் தேடி துக்கப்பட்டு, அறிவுகுடிபோனர் செய்யுமத்தைச் செய்கிறது எத்தனைகாலமுண்டு? "இவ்விஷயத்திலே கைவைத்தார்க்கு ஒரு பழி சொன்னோமாகவேணும்" என்று அதிலே துணிந்திருக்கிற.)

ஊரவர்சொல்லும் பழி நமக்கு என் செய்யப்புகுகிறதென்று நின்றது - கீழ்; இரண்டாம்பாட்டு — இதென்னவார்த்தை சொன்னயானாய், எல்லாம்செய்தாலும்

பழி பரிஹரிக்க வேணுங்காணென்ன ; நான் "பழி பரிஹரிக்கவேண்டா" என்றேனல்லேன், பழிபரிஹரிக்குமெல்லை கடந்ததுகாணென்கிருள்.

[என்செய்யும் ஊரவர்கவ்வை தோழி யினிநம்மை யென்று] - தன்வடிவைக் காட்டுகிருள். இந்த இனிக்குப் பொருள் சொல்லுகிறதாயிற்று - பாட்டில் மேலிற் குறையும். என்செய்ய தாமரைக்கண்ணனென்று தொடங்கி, என்செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த - என்செய்யும் ஊரவர்கவ்வை தோழி இனி நம்மை என்று அந்வயம். இனி என்னை யென்னுதே, நம்மையென்கிருள் - வாயாலே "மடலூரக் கடவதல்ல" என்று நிஷேதியா நிற்கச்செய்தேயும், உடம்பு வெளுக்கிறமை அவளுக்கும் ஒத்திருக்கையாலே. * "தோழிமாரும் எம்மின்முன் அவனுக்கு மாய்வராலோ" என்னக்கடவதிறே. "எனக்கு அவன் வேணும்", "இவளுக்கு அவன் வேணும்" என்னுமிதுவேயாயிற்று வாசி. இவளிலும் தோழிமார்க்கு ஆற்ருமை விஞ்சியிருக்கும் ; அதுக்கடி - நாயகனைப் பிரிகையாலுண்டான ஆற்ருமையிறே இவளுக்குள்ளது. இவள்நோவுபடக் காண்கையாலும், இவளும் அவனுமாய்ச் சேரவிருக்குமது காணப்பெருமையாலும் தோழிக்கு இரட்டித்திருக்குமிறே. [* ததாஸீதித்யாதி *] - 'பெருமாளும் பிராட்டியுமான இருப்பிலே பிரிவு விளைந்தது' என்று இளையபெருமாள் மஹாராஜர்க்கு அறிவிக்க, அவ்வார்த்தை செவிப்படப்பட, பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் இவருடம்பிலே மாறிற்ருயிற்று. [* அத்யர்த்தம் - நிஷ்ப்ரப: *] என்று பிராட்டியைப் பிரிகையாலுண்டான ஆற்ருமையிறே பெருமாளுக்கு உள்ளது. இவர்தம்முடைய ஆற்ருமையைக் காண்கையாலும், பிராட்டியும் தாமுமாகச் சேரவிருக்கக் காணப்பெருமையாலும் இவர்க்கு அவ்வளவன்றிக்கே மிக்கிருக்குமிறே. அபிதேயவசநமாயிற்று - அர்த்த சப்தம். அத்யர்த்தமாவது - அபிதேயமல்லவென்கிறது. [வாசாமகோசரமென்றபடி.] [தோழி இனிநம்மை] என்கிருள் - [* ஏகம் து:கம் ஸுகஞ்ச நௌ *] என்கிற ப்ராப்தியை முன்னிட்டுக்கொண்டு. "பழி" என்று பரிஹரிக்கப் பார்க்கிறவள் தன்னையும் பழி சொல்லுகிருளிறே, [* ஏகம் து:கம் ஸுகஞ்ச நௌ *] என்றிருக்குமது அவளுக்கு முண்டாகையாலே. பழிக்கு அஞ்சவேண்டாமைக்கு நமக்கு இப்போது வந்ததென்? என்ன, [என்செய்ய தாமரைக்கண்ணனென்னை நிறைகொண்டான்] - என்னுடைய ஆத்மாத்மீயங்களடைய நீயிட்ட வழக்கன்ருே" என்கிற அகவாயில் தண்ணளி தோற்றும்படி வாத்ஸல்யத்தாலே குதறிச்சிவந்த தாமரைபோன்ற திருக்கண்களாலே குளிரநோக்கி, "நானும் என்னுடைமையும் உன்னது" என்று சொல்லுவாரைப்போலே வந்து இத்தலையை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணிக்கொண்டு போனன். எனக்கு உபகரிப்பாரைப்போலேயிருக்க நோக்கி, என்னை உரிகூறை கொண்டுபோனன். சொல்லொன்றும் செயலொன்றுமாயிருந்தது ; "தூதுசெய் கண்கள் கொண்டொன்றுபேசி" என்னக்கடவதிறே. [என்னை நிறைகொண்டான்] - அவனுடைய புருஷோத்தமத்வத்துக்குப் புண்டரீகாக்ஷத்வம் எல்லையாயிருக்குமாபோலே யாயிற்று இவள் ஸ்த்ரீத்வத்துக்கு நிறை எல்லையாயிருக்கும்படி. அவன் புருஷோத்தமனுனற்போலேயாயிற்று, இவள் நாரீணுமுத்தமையாயிருக்கும்படி. [என்] - பிரிவோடேயிருந்து மடலூர்ந்து பழிவிளையாநிற்கச்செய்தேயும் "என்னுடையவன்" என்னலாம்படிகாணும் அவன் கிட்டினு விருக்கும்படி. (என்னை நிறைகொண்டான்) - "நூருயிரம் புருஷோத்தமர்கள் கூடினுலும் தோற்றப்போமிதுக்கு மேற்படச் செய்யலாவதில்லை" என்ருயிற்று இவளுடைய ஸ்த்ரீத்வாபிமாநந்தானிருப்பது. [என்செய்ய தாமரைக் கண்ண னென்னை நிறைகொண்டான்] - தன்னுடைய பும்ஸத்வத்தையடைய அழியமாறி என்னுடைய ஸ்த்ரீத்வத்தைக்கொண்டான். தான்தோற்றுப்போலே காணும் இவளைத் தோற்பித்தது. [என்னைநிறைகொண்டான்] - கடலைத் தரைகண்டான், "என்னைநிறைகொண்டான்" என்று இவள் தான் தோழிக்குச்

சொல்லும்படியிறே பண்ணிற்று. தோழிதானும் இவள் வடிவிலே வேறுபாடு கொண்டு "உற்றநன்றாயிதுதேறினோம்" என்று இவள் அகப்பட்டபடி யறியு மத்தனை போக்கி, இவள்தான் தோழிக்கும் வாய்விட்டுச் சொல்லாதபடியிறே ஸ்த்ரீத்வந்தானிருப்பது. [* நைவ மாகிஞ்சிதப்ரவீத் *] என்னக்கடவதிறே. [நிறை கொண்டான்] - நிறையாகிறது - அடக்கம். அகவாயிலோடுகிறவிது பிறர்க்குத் தெரியாதபடி மறைத்துக்கொண்டிருக்கையிறே. நான் எனக்கு ஓடுகிற தசையை உனக்கு வாய்விட்டுச் சொல்லும்படியன்றோ பண்ணிற்று. "நிறைகொண்டான்" என்கிற இதினுடைய வ்யாக்யாநமாயிருக்கிறது-மேல். உன்னை அவன் கொண்டது தானேதென்ன, "நிறைகொண்டான்" என்கிற சொல்லுக்குள் அடங்கினவை தன்னை எண்ணுகிறாள். [முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி என் செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த - என்செய்யு மூரவர்கவ்வை தோழி இனி நம்மை] - நீ "மடலூருவேன்" என்கிற வாயைப் புதைத்தால், என்வடிவு மட லெடுக்கிற வித்தை என்கொண்டு மறைப்பாய்? [முன் இத்யாதி] - இதுக்கு மூன்று படியாக அருளிச்செய்தருளுவர், — தன்பக்கல் கைவைப்பதற்குமுன்னே - பிறந்த போதே உண்டான நிறத்தையிழந்தென்னுதல்; அன்றிக்கே அல்லாத இழவு களுக்கு முன்னே நிறத்தையிழந்தென்னுதல்; முன்பு தோற்றினவற்றைப் பறித்துக்கொண்டு, பின்பிறே கிழிச்சீரை யறுத்துக்கொள்வது; அவன்தானும் முந்துற விரும்பிற்று இந்நிறத்தைக்காணும்; அங்ஙனன்றிக்கே முன்னே-காணக் காண நிறத்தை இழந்தென்னுதல். [செய்யமாமை] - "செய்யமாமை" என்றும் சொல்லா நின்றது, "மணிமாமை" என்றுஞ் சொல்லாநின்றது; இரண்டாலும் - சிவப்பும், கறுப்புமல்ல இங்குச்சொல்லுகிறது; இரண்டிலுமொக்க வேறின ப்ரயோஜநம் - ஸ்ப்ருஹணீயதையாயிற்று. [இழந்து] - அவனோடு கலந்துபெற்ற நிறத்தைத் தநமாக நினைத்திருந்தபடியாலே - இழந்தென்கிறாள். [மேனி மெலி வெய்தி] - இனி அவன் வந்தாலும் நிறம்வந்தாலும் தொங்குகைக்கு ஆச்ரயமில்லை; ஆச்ரயமுண்டானாலிறே தொங்குவது. நீர்ப்பண்டம்போலே காணக்காணச் சருகாகாநின்றதாயிற்று. [என்செய்யவாய் இத்யாதி] - அவயவியாகத் தேடு கிறேனோ, அவயவங்கள்தோறும் வற்றிவருகிறபடி பாராயோ? [என்செய்யவாயும் கருங்கண்ணும்] - இப்போது தன்னுடைய அவயவங்களைத் தானே ப்ரசம்ஸிக்கிறா ளல்லள்; அவன்வந்து கிட்டினபோது அவனுடைய ஸ்ரீஸஹஸ்ரநாமத்துக்கு விஷயம் இவையேயாயிற்று. அத்தைச் செவியாலே கேட்டிருக்குமே, அத்தாலே சொல்லுகிறாள். தான் இழந்த க்ரமம் சொல்லாநிற்கச்செய்தே, அவன் உகந்த க்ரமம் தோற்றாநின்றதுகாணுமிவளுக்கு. [என் இத்யாதி] - அவன் தனக்கு இத்தை ஸர்வஸ்வமுமாக நினைத்திருந்தபடியாலே, இவளும் "உன்னது என்னது" என்று ஒருதலை பற்றுகிறாள். ஸ்வஸ்ரூபமும் ப்ராப்யாந்தர்க்கதமாயிறே உத்தேச்ய மாவது. இங்ஙனன்றாகில், [* த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு: * என்கிற வழியாலே பற்றுகிறாளன்றே. [என்செய்யவாயும் கருங்கண்ணும்பயப்பூர்ந்த] - அவனுடைய வாய்ப்புகுசோறு பறியுண்ணாநின்றதென்கிறாள். "செங்கனிவாய்நுகர்ந்தான்", 'மணநோக்கமுண்டான்" என்னக்கடவதிறே. [செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த] - கடலும் மலையும் குடியிருப்புமான விடமெல்லாம் ப்ரளயகாலத்தில் ஏகோதகமாமாபோலே, எங்குமொக்க வைவர்ண்யமேயாயிற்று. ஒருவெளுப்பா யிற்று. விஷம்பரந்தாற்போலே காணக்காண வண்டலிட்டு வைவர்ண்யமானது பரப்புமாறிற்று. ... ... (2)

மூன்றாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; "எல்லாம்செய் தாலும் பழி பரிஹரிக்கவேண்டாவோ" என்றிருக்குமிறே இவள்; "இதுபழி" என்று பரிஹரிக்கவொண்ணாதபடி எனக்கு ப்ராவண்யத்தை விளைத்தவனெங் குத்தான், "இதுபழி" என்று மீளாதபடி இவ்விஷயத்திலே ப்ரவணையாயிருக்கிற

நான் எவ்வளவிலே நிற்கிறேன், "இதுபழி" என்று சொல்லுவர்கள்தான் எவ்வளவிலே நிற்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறதைச் சொல்லுகிற தோழியான நீதான் எவ்வளவிலே நிற்கிறா யென்கிறாள்.

ஊர்ந்தசகடம் உதைத்தபாதத்தன்*பேய்முலை
சார்ந்துசுவைத்தசெவ்வாயன் என்னைநிறைகொண்டான் *
பேர்ந்தும்பெயர்ந்தும் அவனோடன்றியோர்சொல்லிலேன் *
தீர்ந்தவென்தோழீ! என்செய்யுமூரவர்கவ்வையே? (3)

[ஊர்ந்தசகடமுதைத்த பாதத்தன்] - இதுக்கு முன்பெல்லாம் சகடாஸுரநிரஸநம்பண்ணினதும், பூதநா ஸ்தந்யபாநம் பண்ணி அவளை நிரஸித்ததும், "கம்ஸன் வரவிட்டவற்றைப் போக்கினது" என்றிருந்தாள் அவள்; "எனக்குத் தன்பக்கலிலே ப்ராவண்யத்தை விளைக்கைக்காகச் செய்தான்" என்றிருக்கிறாளாயிற்று இவள். பருவம் நிரம்பிப் ப்ரணயியாய் அதில் தேசிகனானபின்பு செய்தவையன்றோ இவளுக்குத் தன்பக்கலிலே ப்ராவண்யம் மிகுகைக்குச் செய்தவையாவது, பால்யத்திலே செய்தவை இவளுக்கு உடலாம்படி யெங்ஙனே? என்னில், — இவளுக்குத் தன்பக்கல் ப்ராவண்யத்தை விளைக்கை அவனுக்கு ஸத்தாப்ரயுக்தமென்கை. * "எங்நின்றயோனியுமாய்ப்பிறந்தாய்" என்று - அவற்றை யொழியவேயும் பின்பு பண்ணின வ்யாபாரங்களுமெல்லாம் தனக்காகப்பண்ணினான் என்றிருக்கிறாளாயிற்று. [ஊர்ந்தசகடம்] - ஊருகிற சகடமல்ல; அது செய்வதெல்லாம் செய்தற்றது, இவன் ஜீவநாத்ருஷ்டத்தாலே தப்பினவித்தனை. இரண்டு சகடத்தை இரண்டருகுமிழுத்து நடுவே தொட்டிலையிட்டு வளர்த்திப்போனாள் தாயார்; பாடி காப்பாரே களவு காணுமாபோலே, காவலாக வைத்த சகடமே அஸுராவேசத்தாலே ஊர்ந்துவந்ததாயிற்று. அசேதநமான சகடத்திலே அஸுரர்கள் ஆவேசித்து நலிவதாக ஊர்ந்துவந்தவித்தனையிறே. [உதைத்தபாதத்தன்] - அதுவும் செய்வதெல்லாம் செய்து, இவனும் அகப்படுவதெல்லாமகப்பட்டு நின்றான்; திருவடிகளினுடைய அவதாநத்தாலே தப்பினவித்தனை. இவனை யடிகாத்துத் திரிந்த வித்தனையிறே. [உதைத்தபாதத்தன்] முலைவரவுதாழ்த்துச் சீறி நிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய்த் துகளாய்ப்போன வித்தனையாயிற்று; [* ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ *]. நமக்குப்புகலான திருவடிகள்தானே நம் அநிஷ்டங்களையும் போக்கித் தருமாயிற்று. சகடாஸுரநிரஸநம் பண்ணினவிது, பருவம் நிரம்பி கம்ஸவதம் பண்ணினத்தோடொக்கச் சொல்லலாம்படியிறே இதுக்குமுன்பே பூதனையை நிரஸித்தசெயல். சகடம்வந்து கிட்டினபோது சிலராலே பரிஹரிக்கலாம்; பூதனை தாய்வடிவுகொண்டுவந்து நலியப்புக்கால் பரிஹார மில்லையிறே, ஈன்றாரே நஞ்சிட்டாற்போலே யிருப்பதொன்றிறே. [பேய்முலை இத்யாதி] - பிள்ளைகள் முலையுண்ணப்புக்கால் தாய்மார் முலைக்கீழே முழுசினவாறே பால்சுரக்கும், பின்னைப் பாலையுண்டு உபகாரஸ்ம்ருதியாலே முகத்தைப் பார்த்து ஸ்மிதம்பண்ணுமாயிற்று; அப்படியே அவளும் தாயாய் வந்து முலை கொடுக்கையாலே இவனும் பிள்ளையாயே முலைக்கீழே முழுசி முலையுண்டு; உபகாரஸ்ம்ருதியாலே முகத்தைப்பார்த்து அதரத்தில் பழுப்புத்தோற்ற ஸ்மிதம் பண்ணியாயிற்று முலையுண்டது. * "மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே" என்னக்கடவதிறே. "உயிரைவற்றவாங்கி யுண்டவாயான்" என்கிறபடியே - முலைப்பாலோடேகூடவிரங்கி உயிரையும் சுரக்கும்படியாகவாயிற்று முலையுண்டது. [என்னை நிறைகொண்டான்] - ஒரு வ்யாபாரத்தாலே இரண்டு ஸ்த்ரீவதம் பண்ணினான். தன்னை ஆசைப்பட்டாரில் உகவாதார்க்கே நன்றாயிற்று; அவளை நற்கொலையாகக் கொன்றான், என்னை உயிர்க்கொலையாகக் கொன்றான். அவனுடைய வ்யாபாரங்களிலேயொன்று குறைதல், நான் இழந்தவற்றிலே யொன்று குறைய இழத்தல். செய்யி

லன்றோ நீ சொல்லுகிற ஹிதவசநம் கேட்கவல்லேனாவது. ஆகில், இந்நினைத்த தசைகளுண்டானால் அவ்விஷயத்தை மறந்து லோகயாத்ரையை யந்வேஷித்துப் புறம்பு ஏதேனு மொன்றைக்கொண்டு போதுபோக்கி யிருக்கவேண்டாவோ, எல்லாம் செய்தாலும் இழக்கலாவதொன்றோ நிறையென்ன, —[பேர்ந்தும் பெயர்ந்தும் இத்யாதி] - மறக்கையாவது ஸ்மரிக்கையிலே யொன்றாகவேணுமே நான் ஆறியிருக்கைக்கு. "ஏது செய்தால் மறக்கேன்" என்னக்கடவதிறே; நாட்டார் அபிமத விஷயங்களோடு கலந்தபோது அவற்றை நினைத்து, பேரவிருந்தபோது அவற்றை மறந்திருப்பர்கள், கலந்தவிஷயத்தினுடையவும் பிரிந்தவிஷயத்தினுடையவும் தண்மையாலே; இது லோகத்தில் விஸஜாதீயமான விஷயமாகையாலே, பிரிந்தபோது மறக்கலாயிருந்ததில்லை, இனிக் கூடித்தான் பார்ப்போமோ மறக்கலாமாகில் என்கிறாள். கூடினாலும் மறக்கலாமோ? என்னில், — அது செய்யலாமன்றாயிற்று பிரிந்தபோது மறக்கலாவதென்று வ்யதிரேகோக்தி. [பேர்ந்தும்பெயர்ந்தும்] - போயும்வந்தும். [அவனோடன்றியோர்சொல்லிலேன்] - "அவனைமற, அவனைநினை" என்றே நீ சொல்லுவது, ஆகையாலே அவனையொழிய எனக்கு வேறொரு சொல்லின்றிக்கே யிருந்தது. இவள் இப்படி சொன்னவாறே, நிஷேதிக்கிற தோழி யுகந்தாள் - "நாம் இவளை அவனோடே சேர்க்கப்படும் பாடும் அப்படி சேர்ப்பித்தநாமே இவளை மறப்பிக்க யத்நித்தாலும் மறவாதபடி அவகாஹிப்பதே" என்று உகந்தாள்; இவள், நிஷேதிக்கிற உக்தியைவிட்டு இருள் நெஞ்சைக் கண்டாள் [தீர்ந்தவென்தோழி] - தாய்மார்சொல்லுகிற ஹிதவசநத்தை நீயும் சொல்லுகையாலே, "நீயும் அவர்களோடொக்க நிஷேதிக்கிறாய்" என்றிருந்தேன், உன் நினைவு இதுவாகப்பெறுவதே, நீ நீயாம்படியே யிருந்தாய், வரவிரு என்கிறாள்; "ராவணன்வரவிட்டஆள்" என்று சங்கித்திருந்தவள், "பெருமாள்பக்கலினின்றும் வந்தவன்" என்று அறிந்தபின்பு அவனைக்கொண்டாடினாற்போலே; [*அர்ஹஸே ச கபிச்ரேஷ்ட்ட மயா ஸமபிபாஷிதும்*] [* ஸகீபிஸ்ஸுகமாஸ்வ*] என்கிற அவர்கள் படியாயிருந்ததீ நீயென்கிறாள். [* ஸமாத்வாதச தத்ராஹம் *] என்கிறதும் உன்னோடே சொல்லலாயிருந்தது. அத்தோழிதானும், "பிறர்சொல்லுகிற ஹிதவசநமும் இவள் செவியிற்படும்படியோ இவள்தான் நின்றநிலை" என்று அறிகைக்காகச் சொன்னாளித்தனையிறே. ஊரார்பழிக்கு அஞ்சியன்றோ நான் விலக்குகிறதென்ன, — [என்செய்யும் இத்யாதி] - ஆகில் உனக்கு வார்த்தைசொல்ல வடுப்பது இப்படியே காண், "நாட்டார் பழிசொல்லுவர்கள்" என்று சொல்லாதே "என் நினைவு இருந்தபடி இது" என்று சொல்லலாவதுண்டாகிற் சொல்லிக்காணாயென்கிறாள். ஊரார் பழிகொண்டு காரியமென், உன்னெஞ்சிற் குறையில்லாமையேயன்றோ எனக்கு வேண்டுவது என்கிறாள். ... ... (3)

நாலாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; ஊரார்சொல்லும் பழியேயாய், அவன்தான் நமக்கு உடலானானே, அவர்கள் சொல்லும்பழி பொறுத்திருக்கைக்கு; ஆனபின்பு அவன் கடியன்காணென்றாள்; ஏதேனுமொன்றைச் சொல்லியாகிலும் மீட்கவேணுமே அவளுக்கு, "அவன் நிர்க்ருணன்காண்" என்ன; "கெடுவாய் நீ சொல்லும் வார்த்தையேயிது, அவன் நமக்கு என்னகுறை செய்தான்" என்ன, "ஊரவர் பழிசொல்லிலும் மீளாதபடியான ப்ராவண்யமுண்டான விடத்திலும் இத்தசையில்வந்து முகங்காட்டிற்றிலன் கண்டாயே" என்ன; அவன் இப்போது வந்து முகங்காட்டிற்றிலனாகிலும், தான் முகங்காட்டாத போதும் தன்னையொழிய நமக்கு மற்றொன்றால் பொருந்தாதபடி பண்ணினானே! அவன் செய்தபடி பொல்லாதோவென்கிறாள்.

ஊரவர்கவ்வையெருவிட்டு அன்னைசொல்நீர்படுத்து*
ஈரநெல்வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ்செயுள்*
பேரமர்காதல் கடல்புரையவிளைவித்த*
காரமர்மேனி நங்கண்ணன்தோழீகடியனே? (4)

[ஊரவர் இத்யாதி] - இதெல்லாம் செய்தாய் நீயோ, ப்ராதிகூல்ய நிவ்ருத்தி யுண்டான வன்றுதொடங்கி ஊரவர் பழிசொல்லத் தொடங்கினார்கள்காணும்; [*விபீஷணஸ்து தர்மாத்மா*] - ஜன்ரூர்களிறே தங்களைவிட்டுப்போருவதற்கு முன்னே; இவன் இக்குடியிலுள்ளார்படியல்லன், இவனுக்கு வாசியுண்டு; அந்த வாசி தன்னைச் சொல்லுகிறது 'தர்மாத்மா' வென்று "மறக்குடி யறஞ்செய்யக் கெடும்" என்றதிறே; [*நது ராக்ஷஸசேஷ்டித:*] - ஜாதிமாத்ரமே இவன்பக்கல் உபஜீவிக்கலாவது. ஊரார்சொல்லுகிற பழியை இவளுடைய ப்ரேமத்துக்கு எருவாக இட்டான். ஊரார் பழிசொல்லிற்றிலர்களாகில், இவள்தானும் கைவாங்கி யிருக்குங்காணும்; இவள் "மறப்பேன்" என்னுமன்றும், மறக்கவொண்ணாதபடி ஊரார் ஸ்மாரக கோடியிலே நிற்பர்களாயிற்று. [அன்னை இத்யாதி] தாயாரும் இதுக்குமுன்பெல்லாம், "என் மகள்" என்றேயிருந்தாள், ஊரார் பழிசொல்லப்புக்க பினபாயிற்று இவள் அறிகிறது. அன்னை சொல்லுண்டு-தாயாருடைய ஹிதவசநம், அத்தை நீராகபபாய்ச்சி. எருவாவது - அடியிலே ஒருகாலேயிட்டு விடுவதிறே நீர் மாறாமல் பாய்சசவேணுமே; ஊரார் ஒருகால் சொல்லிவிடுமித்தனையே, தாயார் அகத்துகருள்ளேயிருந்து எப்போது மொக்க ஹிதஞ்சொல்லாநிற்குமிறே. [ஈரநெல் இத்யாதி] - ஸங்கமாகிற நெல்லை வித்தி. இவள், ஸங்கமிருக்கும்படி வ்யுத்பத்தி பணணிற்றும் இவ்விஷயத்திலேயாயிற்று;* "மூலையோமுழுமுற்றும் போந்தில - பெருமான மலையோ திருவேங்கடமென்று கற்கின்றவாசகமிவள்பரமே" என்று - பால்யாத்ப்ரப்ருதி வேறொன்றறியாள். புறம்பே சிவவிஷயங்களிலே ஸங்கமுண்டாய் விரக்தி பிறக்க வேண்டாவாயிற்று இவளுக்கு. ஸ்வவிஷயஜ்ஞாநத்துக்கு உபகாரகமான மூலஸுக்ருதமும் அவன்தானே யாயிற்று. [முளைத்த] - எருவுமிட்டு நீரும்பாய்ச்சினாலும் முளைக்கும்போதும் அங்குரசக்தி யுண்டாம்போதும் அவன் உண்டாக்க வேணுமே; [*சரீராரோக்ய மித்யாதி*] ஸுகஸாதநங்களையுஞ் சொல்லி அவற்றுக்கு பலமான ஸுகந்தன்னையும் தனித்துச்சொல்லி, இரண்டுக்கும் அவன் கடாக்ஷம் வேணுமென்றதிறே. சிறியத்தைப் பெரியது நலியுமாபோலே, ஒருவன் பண்ணின ஸுக்ருதத்தினுடைய பலத்தை வேறொருவன் பறித்துக்கொள்ளாமே, அவன் தானே புஜிக்கும்படி பண்ணும்போதும் அவன் கடாக்ஷம் வேணுமே. [நெஞ்சப் பெரும்செய்யுள்] - ஸம்ச்லேஷவிச்லேஷங்களாலே புடைபடுத்தி, நித்யவிபூதியோபாதி பரப்புடைத்தாம்படி பெருக்கினதாயிற்று. நெஞ்சமாகிற பெரிய செய்யிலே. ஊரார் அலராகிற எருவையிட்டு, தாயாருடைய நிரந்தர ஹிதவசநமாகிற நீரை நிறுத்தி, ஆசையாகிற நெல்லை வித்தி முளைத்த நெஞ்சமாகிற பெரிய விளைநிலத்துக்குள்ளே, [பேரமர் இத்யாதி] - ஊரார் சொல்லும் பழிக்கும் தாயாருடைய ஹிதவசநத்துக்கும் மீளாதபடியான காதலாயிற்று. இங்கே "கடல்புரைய" என்றது, "கடலில்மிகப்பெரிதால்" என்னுகின்றது "அதனில பெரியவென்னவா" என்று - ஈச்வரன்தன்னை விளாக்கொலை கொள்ளும்படியான காதலென்றது; ஆக, *பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும் வர விளைத்துக்கொண்ட காரியம் இதுவாயிற்று கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷணவர்த்தியா யிருக்குமிறே பரமபக்தி; அது உண்டாகவேணுமிறே அவ்வருகு போம்போது, அங்கே போகக்கொண்டு அங்குள்ளாரது ஒருபடியாய் இவரது ஒருபடியா யிருக்கவொண்ணாதே. முதலிலே மயர்வறமதிநல மருளினது தன்னையே இவ்வளவாகப் பெருக்கினதாயிற்று. பெரிதாய் அமர்ந்த காதலாயிற்று. தர்ம்யநுபந்தியான காதல். அன்றிக்கே, பெரிய அமரைவிளைக்கக்கடவதான காதல். ஊர்ப்பூசலை விளைத்த

காதலிறே. காமவேள் மன்னுஞ்சிலைவாய் மலர்வாளிகோத்தெய்கிற காதலென்னுதல். [ஈரம் - ஸங்கம், காதல் - காமம்] "ஈரம்" என்றதுக்கும், "காதல்" என்றதுக்கும் வாசியென்? என்னில், —[* ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:*] என்று - அதிலே ஓரவஸ்த்தாவிசேஷமிறே; பூர்வாவஸ்த்தையைப்பற்ற, மேல்பிறக்கும் அவஸ்த்தாவிசேஷந்தான் த்ரவ்யாந்தரமென்னலாயிறே யிருப்பது. [காரமர் மேனி] - அடியிலே எருவுமிட்டு நீரும் பாய்ச்சினாலும், மேல்வர்ஷியாதாகில் அப்பயிர் தலைகுளிர்ந்திராதிறே; வடிவாலே யாயிற்று வர்ஷித்தது. வர்ஷுகவலாஹகம்போலே ச்ரமஹரமான வடிவு. [நங்கண்ணன்] - வெறும்வடிவிற் பசைகண்டு அகப்படுமவளன்று, அகவாயில் தண்ணளியும் உண்டாகவேணுமாயிற்று. க்ருஷ்ணனென்றால் "பெண்களுக்கு சேஷபூதன்" என்று ப்ரஸித்தமிறே. வடிவையும் தந்து தன்னையும் நமக்குத்தந்த க்ருஷ்ணன். [தோழீ] - நீதான் ஆராய் இவ்வார்த்தை சொல்லுகிறாய். இவ்விஷயத்திலே இப்படி பொருந்தவிட்ட நீயே மீட்கப்பார்த்தாலும் மீளாதபடியான ப்ராவண்ய முண்டாம்படி பண்ணினையாகில், இனி அவன் என்செய்வான். இரண்டுமுனக்கே பணியோ. "நீர்மையுடையவன்" என்று பொருந்தவிடுகையும் உனக்கே பணியாய், "நிர்க்க்ருணன்" என்று அகற்றப்பார்க்கையும் உனக்கே பணியாயோ இருப்பது முன்பு நீர்மையுடையவனாகச் சொல்லப்பட்டவன், இன்று பழிக்கும்படிகடியனானானோ? (4)

அஞ்சாம்பாட்டு. நீ "அவனுக்கு நீர்மையில்லை, நிர்க்க்ருணன்" என்றாயாகிலும், அச்சொலவுக்கு ஒரு ப்ரயோஜனமில்லைகாண், நீ அவனுக்கு குணஹாநி சொல்லுவது என்னை மீட்கைக்காகவிறே, அதுவும் நான் அவனைப்பற்றுகைக்கு உறுப்பாகச் சொன்னாயானவித்தனை என்கிறாள்.

கடியன்கொடியன்நெடியமால் உலகம்கொண்ட
அடியன் * அறிவருமேனிமாயத்தன் * ஆகிலும்
கொடியவென்னெஞ்சம் அவனென்றேகிடக்குமெல்லே! *
துடிகொளிடைமடத்தோழீ! அன்னையென்செய்யுமே? (5)

[கடியன் இத்யாதி] - அவனுக்குக் குணஹாநிசொல்லும்போதும் நானே சொல்லவேணுங்காண்; நீ மூட்டிக்கடக்கநின்றாயித்தனைபோக்கி, அவனைக்கலந்து உட்புகநின்றவென்றனைத்தெரியுமோ உனக்கு அவனை; ஆனபின்பு அவைதன்னையும் நான் சொல்லக் கேளென்கிறாள். [கடியன்] - கூரியன். கடுமை - கூர்மை. ஸ்வகார்யபரன். தனக்கு ஒரு கார்யமுண்டானால், எதிர்த்தலையிலளவு பாராதே மேல்விழுந்து வந்து கலக்குமவன். [கொடியன்]-தான் மேல்விழுந்து வந்து கலக்கச்செய்தே "பிரியேன்" என்னவல்லன். ஸம்ச்லேஷத்திலுடைய மத்யத்திலே பிரிவைநினைத்தவன் இனிச்செய்யமாட்டாத தொன்றுண்டோ? "பேதைநின்னைப் பிரியே னினியென்றகன்றான்" - கலக்கச்செய்தே மற்றொன்றை நினைக்கவல்லவனுக்கு இனிச்செய்யவரிய தொன்றுண்டோ? [நெடியமால்] - மாலென்று - பெருமை. நெடுமையால் நினைக்கிறது - அதின்மிகுதியையாய், அறப்பெரியவன். இத்தால் - கைபுக்கிருக்கச்செய்தேயும் அளவிடவொண்ணாதபடி யிருக்குமவனென்கை. "பிரியநினைக்கிறான்" என்று அறியாநிற்கச்செய்தேயும் "சேண்குன்றம் சென்று பொருள்படைப்பான் கற்றதிண்ணனவு" என்னவொண்ணாதபடியாயிருக்கை. மேல்விழுந்துவந்து கலவாநிற்கச்செய்தே பிரியநினைத்தால், அத்தையறியச்செய்தேயும், நீ பிரியநினைத்தாய்" என்று மடிபிடித்துக் காற்கட்டி விலக்கவொண்ணாதபடியாயிருக்கை. [உலகங்கொண்டவடியன்]- பிறருடைமையைத் தனக்காக்க நினைத்தால், பின்னையும் அவர்களுக்கு ஓரடியும் சேஷியாதபடி பண்ணுமவன். அவர்களைப் பின்னை பாதாளத்திலே தள்ளுமவன். * பாதாளங்

கலவிருக்கை கொடுக்குமவன். ஒன்றைக்கொள்ளப்பார்த்தால், அவர்களுக்கு ஒன்றும் சேஷியாதபடி கொள்ளுந் திருவடிகளையுடையவன். [அறிவருமேனி] - கிட்டினால், "இத்தலைக்கு ஸர்வஸ்வத்தையும் தர நினைக்கிறானோ, ஸர்வஸ்வாபஹாரம் பண்ண நினைக்கிறானோ" என்று அறியவொண்ணாதபடியான வடிவையுடையவன். "என்னுடைய ஆத்மாத்மீயங்களடைய நீயிட்டவழக்கு" என்பாரைப்போலே சொல்லியாயிற்று இத்தலையில் ஆத்மாத்மீயங்களை யபஹரிப்பது. தன்னையும் தன்னுடைமையையும் இவளிட்டவழக்காக்கி, பின்னையாயிற்று இவளைத்தனக்காக்கிற்று. [மாயத்தன்] - "நானும் என்னுடைமையும் நீயிட்டவழக்கு" என்ற இவ்வுக்தியை யநுஸந்தித்து அதிலே நெஞ்சு அபஹ்ருதமாயிருக்க, அவ்வளவிலே கண்ணிலே மணலைத்தூவி யகலவல்லவன். [ஆகிலும்] - நீ சொல்லிச்சொல்லமாட்டாதவையும், சிசுபாலாதிகள் சொல்லமாட்டாதவையுமெல்லாம் நான் சொல்லவல்லேனிறே அவை விடுகைக்குறுப்பாகப்பெற்றேனாகில். [கொடியவென்னெஞ்சம்] - உல்லோகமாய் லோகவிஸஜாதீயமான நெஞ்சு. நாட்டாருக்கு, குணம் பற்றுகைக்குப் பற்றாசாய் தோஷம் விடுகைக்கு உடலாயிறே யிருப்பது; அங்ஙனன்றிக்கே, குணஹாநிதானே பற்றுகைக்கு உடலாம்படியான என்னெஞ்சம். [அவனென்றேகிடக்கும்] - இதுக்குப்பிள்ளான் பணிக்கும்படி,—"இத்தோஷங்களவனிவன்றோ" என்று; அவன்கடியனென்றால், அவன்கடுமை இப்போதே காணவேணும்; கொடியனென்றால். அவன்கொடுமை இப்போதே காணவேணும்; அவன் துஷ்ப்ராபனென்றால், அவன் துஷ்ப்ராபனானபடியை இப்போதே காணவேணும்; அவன் ஸர்வஸ்வாபஹாரியென்றால், அவன் ஸர்வஸ்வாபஹாரம் பண்ண, நான் இழந்திருக்கக்காணவேணும்; அவன் துர்ஜ்ஞேயனென்றால், அவன் துர்ஜ்ஞேயதை இப்போதே யறியவேணுமென்றும். அன்றிக்கே, [அவனென்றேகிடக்கும்] - என்னெஞ்சுக்கு மாயாவாத ருசி உண்டாகிலு மறியேன். அதாவது - விசேஷணாம்சத்தில் தாத்பர்யமின்றிக்கே விசேஷ்யத்துக்கு அவ்வருகு அறிகிறதில்லை. இத்தால் - அவன் குணநிபந்தநமன்று அவனோட்டை ஸம்பந்தம், ஸத்தாப்ரயுக்தமென்கை. [எல்லே] என்னே! இதோராச்சர்யமிருக்கும்படியே! அன்றிக்கே, "உன்னை மீட்க நினைத்த நான் சொன்னபடியன்றிக்கே யொழிந்தபின்பு, இனி நீ நினைத்தபடி நினைத்திரு" என்று போகப் புக்காள் தோழி; இங்ஙனே வாராய் என்று அவளைக் கையைப்பிடித்து அழைக்கிறாளென்றுமாம். இவள் இப்படி சொன்னவாறே, "இது ஒரு ப்ரேமஸ்வபாவமிருந்தபடியென்?" என்று அவளுக்கு ஒரு விகாரம் பிறந்தது; அத்தைக்கண்டு [துடிகொளிடைமடத்தோழி] - என்கிறாள். துடியோடொத்திருந்துள்ள இடையையும், ஆத்மகுணத்தையுமுடைய தோழீ! உன்வடிவுக்கும் குணத்துக்கும் என்பக்கலுண்டான பாவபந்தத்துக்கும் ஈடாக வார்த்தை சொல்லப்பாராய். நான் அது அறியாமலும் வேண்டாமையும் சொல்லுகிறேனோ, தாய்சொல்லுமதுக்கு அஞ்சிக்காண் நான் இப்படி சொல்லுகிறதென்ன. [அன்னையென்செய்யுமே] உன்சொல் கேளாத நான், இனித் தாய்ச்சொல்லோ கேட்கப்புகுகிறது. வாக்யார்த்தாந்தரே நினைப்பது—அநஸூயை பிராட்டியைப்பார்த்து "ஸ்த்ரீகளுக்கு தைவம் பர்த்தாவேகாணும்" என்ன அநந்தரம் பிராட்டி லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருந்தாள்; "நான் இவர்பக்கல் ப்ரவணையாயிருக்கிற இருப்புக்கடி பெருமாள்பக்கலுண்டான குணத்தாலே என்றிறே நாட்டார் நினைத்திருப்பது; தைவயோகத்தாலே அவருக்கு குணமுண்டானதித்தனை போக்கி, குணஹீநருமாய் விரூபருமானாலும் நான் அவரை விடமாட்டாதேயிருக்குமிருப்பைக்காட்டலாயிற்றிறே அவரைக் குணங்களோடு வ்யதிரேகித்து வைக்கப்பெற்றதாகில்" என்றாளிறே. ஒருவிஷயத்திலே பாவபந்தமுறைத்திருப்பார் வார்த்தையாயிற்று இது. [வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது] குணாதிகவிஷயத்தில் சொல்லுகிற வார்த்தையாகில், "கரும்பின்புழு கரும்பன்றியுண்ணாது" என்ன வேண்டாவோ? என்னில்.—"அவனுக்கு இந்நன்மைகள் இல்லையேயாகிலும்

நான் அவனை விடமாட்டேன்'' என்கிற பாவபந்தத்தில் உறைப்புத்தோற்றும்படி வ்யதிரேகித்துச் சொல்லுகிறதல்லது, குணதிகவிஷயத்தில் இது உண்டாயிட்டன்றிறே, என் ஸ்வரூபத்தைப் பார்த்தால் நான் உன்னை விடமாட்டேன், நீ நீயன்றிக்கேயிருந்தாலும் என்னால் விடப்போகாது. ... ... (5)

ஆறாம்பாட்டு. கீழ், "அன்னை என்செய்யும்'' என்று - "நீ செய்கிற இத்தைப் பொருள்கிடாய்'' என்ன, - அவள் பொருதே செய்வதென்? என்னுமளவிலே நின்றது. இதில் - நீ இப்படி வ்யவஸிதையானபடியிருந்தால், அவள்ஜீவியாள்கிடாய் என்ன; அவள் ஜீவிக்கிலென்? முடியிலென்? என்கிறாள்.

அன்னையென்செய்யிலென்? ஊரென்சொல்லிலென்? தோழிமீர்' *
என்னையினியுமக்காசையில்லை யகப்பட்டேன் *
முன்னையமரர்முதல்வன் வண்துவராபதி
மன்னன் * மணிவண்ணன் வாசுதேவன்வலையுளே. (6)

[அன்னை யென்செய்யிலென்]-அவள்ஜீவிக்கிலென், முடியிலென் என்கிறாள். [*குரவ: கிம்கரிஷ்யந்தி*] முடியாதே யிருப்பார்க்கன்றோ இது பரிஹரிக்க வேண்டுவது. கையற்றார்க்கு இதுகொண்டு காரியமென். [ஊரென்சொல்லிலென்]-"தாயாருடைய நாசம் ஒருதலையாகவும் மீளாதபடியாய்,இவள் நாயகனுடைய ஸௌந்தர்யாதிகளிலே ப்ரவணையானாள்'' என்று ஊரார் பழிசொல்லுவர்கள் கிடாய் என்ன; [ஊரென் சொல்லிலென்] - அவர்கள் பழிசொல்லிலென், குணகீர்த்தநம் பண்ணிலென். *"கொல்லை'' என்னுதல், "குணம்மிக்கனள்'' என்னுதல் இத்தனை யன்றோ அவர்கள் பழிசொல்லுவது. [தோழிமீர் இத்யாதி] - "தாய் என்செய்யிலென், ஊர் என் சொல்லிலென்'' என்று நீங்கள் மேல்விழுந்து என்னை இவ்விஷயத்திலே ப்ரவணையாக்குகையன்றிக்கே, "தாய் பிழையாள், ஊரார் பழிசொல்லுவர்கள்'' என்று இத்தைப் பழியாகச் சொல்லுமளவானபின்புங்களது. [என்னை] - *தாய்வாயிற் சொற்கேளாள் தன்னாயத்தோடணையாள்* என்கிறபடியே, "தாயார் பிழையாள், ஊரார் பழிசொல்லுவர்கள்'' என்றால் மீளாதபடி இவ்விஷயத்திலே ப்ரவணையாயிருக்கிற என்னை. [இனி] - உங்கள்சொல்லும் கேளாதபடி கைகழிந்தபின். [உமக்கு] - "இதுபழி'' என்று மீட்கப்பார்க்கிறவளவிலே நிற்கிற உங்களுக்கு. [ஆசையில்லை] - இனி என்பக்கல் உங்களுக்கு நசையறவமையும். [தோழிமீர்] - இதுக்கு முன்பெல்லாம், "தோழி'' என்று-உயிர்த்தோழியொருத்தியையும் பார்த்து வார்த்தை சொல்லிப் போந்தாள்; இப்போது இவளுடைய வ்யவஸாயாதிசயதைக் கண்டவாறே, "ஆளொருவார்த்தை சொல்லியாகிலும் மீட்கவேணும்'' என்று ஆயவெள்ளமெல்லாம் திரண்டது; அத்தாலே - தோழிமீர்! என்கிறாள். [அகப்பட்டேன்] - "இப்போது 'ஹிதம்' என்கிற புத்தியாலே ஒருவார்த்தை சொன்னோமேயாகிலும், ஊரார்க்கும் தாய்மார்க்கும் இவ்வருகே எங்களுக்கு ஒரு வாசிநினைத்திருக்க வேண்டாவோ உனக்கு'' என்ன,—அதப்படியே, அதில்குறையில்லை; என்னைக் கடல் கொண்டது காணுங்கோள், நான் என்செய்வேனென்கிறாள். [முன்னை இத்யாதி] - "சிறியார், பெரியார்'' என்று வாசியின்றிக்கே எல்லாரையுமொக்க ஆழப்பண்ணும்கடலிலேயன்றோ நான் அகப்பட்டது.[* ரூபௌதார்யகுணை:*]- ரூபமென்கிறது - வடிவழகை. ஔதார்யமென்கிறது- அத்தை எல்லார்க்கும் அநுபவிக்கலாம்படி ஸர்வஸ்வதாநம்பண்ணிக்கொண்டிருக்கை. குணமாவது - கொள்ளுகிறவனிலும் தாம் தாழநின்றுகொடுக்கும் சீலம். தன்மேன்மைதோற்றவிருந்து கொடுக்குமன்று ஆள்பற்றுதிறே; அதுக்காகத் தாழநின்றாயிற்றுத் தன்னைக் கொடுப்பது. [* பும்ஸாம் *] - அந்த ஸௌந்தர்யமும் ஔதார்யமும் சீலமும் வயிரவுருக்காயிற்று, அபலைகள்படுமத்தை வன்னெஞ்சரையும் படுத்தவற்றாயிற்று. அன்

றியே, "ப்ரக்ருதி புருஷர்கள்" என்றாற்போலேயாய், அசித்விலக்ஷணரெல்லாரையும் ஈடுபடுத்தவற்றென்னவுமாம். [*த்ருஷ்டிசித்தாபஹாரிணம்*]- கண்ணுக்கு மநஸ்ஸஹகாரம் வேண்டாதே, கண்ணைப் பின்செல்லுமத்தனை நெஞ்சு. தாய்வேறு, கன்று வேறாக்கும் விஷயமிறே. [முன்னையமரர்] - [* யத்ரருஷய: ப்ரதமஜா யேபுராணா: *] என்னும்படி இருக்கிறவர்கள். [முதல்வன்] - நித்யஸூரிகளுக்கும் ஸத்தாஹேதுவாயிருக்கிற மேன்மையுடையவன். நித்தியாநுபவம் பண்ணுவார்க்கும் நித்யஸ்ப்ருஹ விஷயமான விஷயத்திலேயன்றோ நான் அகப்பட்டது. [வண்துவராபதிமன்னன்] முதன்மை தோற்ற ஓலக்கங்கொடுத்துக்கொண்டிருக்கிற; துறையல்லாதத்திலேயோ நான் இழிந்தது; பெண்களுக்கு உடம்புகொடுத்திருக்கிற நம் துறையிலேயன்றோ நான் இழிந்தது. *பதினாறு மாயிரவர் தேவிமார்பணிசெய்யத் துவரையென்னுமதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னுகோயில்* என்னக்கடவதிறே. [மன்னன்] - மேன்மை தோற்ற ஓலக்கங்கொடுத்துக் கொண்டிருக்கிறவிடமே நன்றாய்விட்டது நீர்மைதோற்றவிருக்கிற விடத்தில்விழுகிற பிரம்புகளிற்காட்டில். [மணிவண்ணன்] - அவ்விரண்டுமில்லையேயாகிலும் விடவொண்ணாததாயிற்று வடிவழகு. ப்ரணயிநி துவக்குண்பது வடிவழகிலேயிறே. [வாசுதேவன்] - வடிவழகில்லையே யாகிலும் விடவொண்ணாதாயிற்றுக் குடிப்பிறப்பு. [*ஸ்நுஷா தசரதஸ்யாஹம்*] - பிராட்டி, தனக்குப் பேற்றுக்குடலாக நினைத்திருப்பது "சக்கரவர்த்தி மருமகள்! என்னுமித்தையேகாணும். [* சத்ருஸைந்யப்ரதாபிந: *] - எங்கள்மாமனாருண்டாகில் எனக்கு இவ்விருப்பு இருக்கவேணுமோ? சத்ருக்களும் ஜீவிக்க, ஜீவித்தவரோ அவர். [முன்னையமரர் இத்யாதி] - அவனுடைய நைர்க்ருண்யத்தோடு நீர்மையோடு, ஊராருடைய பழியோடு புகழோடு வாசியற்றாற்போலே, அவன்மேன்மையோடு ஸௌலப்யத்தோடு வாசியற இரண்டும் ஆகர்ஷகமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [வலையுள் - அகப்பட்டேன்] - அப்பொதுவானதிலன்றிக்கே, அவன் என்னைக்குறித்து நோக்கினநோக்கிலும் ஸ்மிதத்திலுமன்றோ நான் அகப்பட்டது. ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் வலையாக அபிநயித்துப் பாடாநிற்க, திருக்கண்களைக் காட்டியருளினார் எம்பெருமானார்; —*கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு* என்னக்கடவதிறே. அநுகூலம்போலேயிருந்து தப்பாதபடி யகப்படுத்திக்கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன். .... (6)

ஏழாம் பாட்டு. அவன் குணஹாநிசொல்லுகிற ஸ்த்ரீகள் வாயடங்கும்படி நாம் அவனைவரக்கண்டு, அந்த உபகாரத்துக்காகத் தலையாலே வணங்கவல்லோமே யென்கிறாள்.

வலையுளகப்படுத்து என்னை நன்னெஞ்சங்கூவிக்கொண்டு *
அலைகடற்பள்ளியம்மானை ஆழிப்பிரான்தன்னை *
கலைகொளகலல்குல்தோழி! நங்கண்களாற்கண்டு *
தலையில்வணங்கவுமாங்கொலோ? தையலார்முன்பே. (7)

[வலையுளகப்படுத்தென்னை இத்யாதி] - என்னை, தப்பாதபடி ஸ்மிதவீக்ஷணாதிகளிலே யகப்படுத்தி. [நன்னெஞ்சம் இத்யாதி] - தானென்றால், *நெஞ்சேயியற்றுவாயெம்மொடுநீகூடி* என்று - நான் பிற்பாடையாம்படி என்னிற்காட்டிலும் முற்படும்படியான நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக்கொண்டு. [அலைகடல் பள்ளியம்மானை] - "ஸ்ரீமத் த்வாரகையிலேயிருக்கில், பெண்களுக்கு ஓலக்கங்கொடுத்தவிடம்' என்று ப்ராப்தி சொல்லிக்கொண்டுவரும்" என்று எட்டவொண்ணாதநிலத்திலே பின்னையும் போய்ப்புக்கான். [அலைகடல்] - பெண்பிறந்தார்க்குக் கணிசிக்கவொண்ணாதபடி க்ஷோபிதமான கடலாயிற்று. [அலைகடற்பள்ளியம்மானை] - மஹாதநம் கைப்பட்டவாறே கடலோடத்தொடங்கினான். [ஆழிப்பிரான்

தன்னை] - "புகவொண்ணாத நிலத்திலே புக்கான்" என்று விடவொண்ணாதபடி யாயிற்றுக் கையுந்திருவாழியுமான அழகு. கடலோடியாகிலும் பெறவேண்டியாயிற்றிருப்பது. [கலை இத்யாதி] - நல்லபரிவட்டத்தை யுடைத்தான அகன்ற நிதம்ப ப்ரதேசத்தையுடைய தோழீ! உன்வடிவுபோலே அநுகூலமாயிருக்கவேண்டாவோ உன்வார்த்தையும்? அன்றிக்கே, அவள்மடியிலேகிடந்து சொல்லுகிறாளாகவுமாம். "தோழிமீரென்னையினியுமக்காசையில்லை" என்றாள் கீழே; "தோழி நங்கண்களாற்கண்டு" என்று ஸம்போதியாநின்றாள் இங்கே; இதுதன்னில் சேர்த்தியென்? என்னில், — தாய்மார் சொல்லுகிற வார்த்தையை இவர்களும் சொல்லுகையாலே, "என்னையினியுமக்காசையில்லை" என்றாள்; இதுவேயாயிருப்பாரைவிட்டு "தீர்ந்தவென்தோழி" என்னலாம்படி நெஞ்சுகலந்து ஒருநீராயிருக்கிற உயிர்த்தோழியைப்பார்த்து வார்த்தை சொல்லுகிறாள். [நங்கண்களாற்கண்டு] - இப்போது இவள் ஹிதஞ்சொன்னாளேயாகிலும், காணும்போது நாலுகண்ணாலே காணும் காண்பது; அல்லது இரண்டுகண்ணாலுங்காணவேண்டாள். [தலையில் இத்யாதி] - "பிரிந்தவிடத்தில், தன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப்போரும்படி அவன் தானே வரப்பார்த்திருந்திலள், அவனும் வரவுதாழ்த்தான்" என்று பழிசொல்லுகிற இவர்கள் முன்பே அவனும்வந்து, அந்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாகத் தலையாலே வணங்கப்பெறவல்லோமோ? இத்திருவாய்மொழியை ஆழ்வான் ராஜேந்த்ரசோழனில் ஸந்த்யாஸதஸ்ஸிலே நிர்வஹியாநிற்க, ஆமருவிநிரைமேய்த்தான்நம்பியார் என்று நூறுவயஸ்ஸுபோந்திருப்பாரொருவர் நடுங்க நடுங்க எழுந்திருந்துநின்று, "ஆழ்வான், தலைமகள் தலையாலே வணங்கப்பெறுமோ" என்ன, "பெறும், சிஷ்டாசாரமுண்டுகாணும்; ஸ்ரீ ஜநகராஜன்திருமகள் அநுஷ்டித்தாள் காணும் [* சிரஸா சாபிவாதய *] என்று". [* கர்மணைவஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: *] என்று ஜநககுலத்திலுள்ளார்க்கு மேலில்லையிறே ஆசாரத்துக்கு. [* கௌஸல்யேத்யாதி *] - நாட்டில் ஸ்த்ரீகள் 'இங்கிருக்கும் நாளைக்கு நமக்கு ரக்ஷகனாய்ப்பின்பு நரகத்தில் புகாதபடி பரிஹரிக்கைக்கும் ஒருபிள்ளைவேணும்' என்று நோன்புநோற்றுப் பெறுவர்கள்: அங்ஙனன்றிக்கே, எங்கள் மாமியார் தன் நெஞ்சிலுண்டான வகலத்தாலே, 'லோகத்துக்காக ரக்ஷகனாகவல்லானொரு பிள்ளையைப் பெறவேணும்' என்று நோன்புநோற்றுப் பெற்றார். அவர்நினைவு தப்பவோ, அந்தலோகத்துக்குள் அந்தர்ப்பூதையல்லேனோ நான்- இனி, 'நாட்டில் ஸ்த்ரீகள் பர்த்தாக்கள் ஸமர்த்தரானபோது ஆதரித்தும், அஸமர்த்தரானபோது உபேக்ஷித்தும் போரக்கடவர்களாயிருப்ப தொன்றுண்டு; நீர் எல்லாவவஸ்த்தையிலும் அவரை யாதரித்துப்போருங்கிடீர்' என்று அவர் என்னைக்குறித்துச் சொல்லிவிட்டார்: நானும் அப்படியே செய்துபோராநிற்க, கிண்ணகத்தில் குமிழிக்கீழே சாவி போமாபோலே, தாம் என்னுடைய ரக்ஷணத்தில் நெகிழநின்றது அவர் நினைவுஸங்குசிதமாகவோ என்று சொன்னேனென்று சொல்லு. [*தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச *] எங்களுடைய ரக்ஷணத்துக்கு நாங்கள் ப்ரார்த்தித்துப் பெறவேண்டுவதொன்றில்லையிறே அதுவும் அவர்நினைவில் உண்டாகையாலே; இனி, க்ரமப்ராப்திபற்றாமையாலுள்ளதிறே இப்போதுபடுகிறது. தாமுளராகஎங்களுடைய ரக்ஷணம் தப்பாதிறே; ஆனபின்பு, தம்முடைய உண்மையை ஆசாஸிக்கையிறே இனி எங்களுக்குள்ளது, அங்குத்தைக்கு ஒரு குறைகளில்லையேயென்று கேட்டேனென்று சொல்லு. [* சிரஸாசாபிவாதய *] - நாட்டாரளவன்றிக்கே, தாம் விசேஷித்து எங்களைக் கைப்பிடிக்கையாலுண்டான வாசி நாங்கள் பெறாதபின்பு, நாட்டாரோபாதியாகிலும் பெறக் குறையில்லையிறே. இனி நாட்டார் பெறுவது பெறப்பார்த்தால், அவர்கள் தம்பக்கல் செய்யுமத்தையும் செய்யவேணுமிறே; ஆனபின்பு, நாங்கள் எங்கள் தலையாலே தந்திருவடிகளிலே வணங்கினேமென்று நீ எனக்காக அவர் திருவடிகளிலே விழு என்றும் அருளிச்செய்தாள்." "இதுதான் ப்ரணயரோஷம் தலையெடுத்துச் சொல்லுகிற வார்த்தையோ, அபேக்ஷ

தோற்றச் சொல்லுகிற வார்த்தையோ" என்ன, "கீழ் திருவடிவந்தபோது ப்ரணயரோஷத்தாலேவந்த சிவிட்குத்தோற்றச் சொன்னவார்த்தைகளடைய மாறும்படி குளிர அவன் வார்த்தைசொல்ல, அநந்தரம் திருவுள்ளத்திலே ஒரு ப்ரஸாதம் பிறந்து, ப்ராப்தியில்லாமையால் வந்த அநவாப்தியுங்கிடக்க அருளிச்செய்கிற பாசுரம்" என்று அருளிச்செய்தார். ... ... (7)

எட்டாம்பாட்டு. மஹோபகாரகனை "குணஹீநன்" என்று சொல்லுகிற தாய்மார், "இவனையாகாதே நாம் குணஹீநனென்றது" என்று லஜ்ஜிக்கும்படி என்றோ நாம் அவனைக் காண்பதென்கிறாள். அவன் தன்ஸத்தையையுண்டாக்கி, நம் ஸத்தையைத்தந்தான்; நாம் அவன் ஸத்தையாலுண்டான பலம் பெறுவதென்றோவென்கிறாள்.

பேய்முலையுண்டுசகடம்பாய்ந்து மருதிடை
போய்முதல்சாய்த்து* புள்வாய்பிளந்துகளிறட்ட *
தூமுறுவல்தொண்டைவாய்ப்பிரானை எந்நாள்கொலோ?
யாமுறுகின்றதுதோழி! அன்னையர்நாணவே. (8)

[பேய்முலை இத்யாதி] - பூதனையால்வந்த ஆபத்தைத் தப்பி; உணர்ந்து நோக்கவொண்ணாதபடி, ரக்ஷகமாகவைத்த சகடம் அஸுராவேசத்தாலே யூர்ந்துவர; அத்தை அநாயாஸேந முறித்து; தவழ்ந்துபோகாநிற்க, நிர்விவரமாக வழியிலேநின்ற மருதுகளின் நடுவேபோய். [முதல்சாய்த்து] - தான் அவற்றைத் தப்பிப்போனவளவேயன்றிக்கே அவைதன்னை வேரோடே பறித்துவிழவிட்டென்னுதல்; அன்றிக்கே, குருந்தத்தைப் பறித்துப்பொகட்டென்னுதல். பகாஸுரனை வாயைக்கிழித்து,குவலயாபீடத்தை முடித்த [தூமுறுவல்தொண்டைவாய்ப்பிரானை] ப்ரதிபந்தகமாய் வந்தவைதான் ப்ரபலமாயிருக்கச்செய்தேயும், தன்வீரத்துக்கு அவை பாத்தம்போராமையாலே ஸ்மிதம்பண்ணி நின்றபடி. தூய்தான தந்த பங்க்தியையும், தொண்டைபோன்றவதரத்தையு முடையவனை. வெண்முறுவலையும், சிவந்தவதரத்தையுமுடைய உபகாரகனை. இப்போது அவனையழிக்க நினைத்து மடலெடுக்கிறாளாகில் அவன் பண்ணினவுபகாரத்தைச் சொல்லுவானென்? என்னில் — இதிறே இவள்தான் அவனையழிக்கநினைத்தபடி - அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப்பார்க்கிற வித்தனைபோக்கி, அவனையழிக்கயுத்தேச்யமாய்ச் செய்கிறதன்றிறே. [பிரானை] - "அவ்வுபகாரங்களெல்லாம் தனக்காகச்செய்தது" என்றிருக்கிறாள். தமிழரது ஒருஸங்கேதமுண்டு, அதாகிறது - "பூத்தருபுணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி" களிறுதருபுணர்ச்சி — என்று. பூத்தருபுணர்ச்சியாவது - இவள் 'உத்யாநவநத்திலே பூக்கொய்ய' என்று புறப்பட்டுப் பூக்கொய்யாநிற்க, அருங்கொம்பிலெட்டாதேநின்றபூவை இவள் ஆசைப்பட்டால், அத்தை, தன்னைப் பேணாதே ஏறிப்பறித்துக்கொடுக்க, 'இவன் தன்னைப்பேணாதே தன்நினைவைத் தலைக்கட்டினான்'என்று அதுக்குத்தன்னைக்கொடுக்கை.புனல்தருபுணர்ச்சியாவது-புதுப்புனலாடப்போய் நீரிலேயிழிந்து விளையாடாநிற்க, அமிழ்ந்தவதில்நின்றுமெடுத்து ஏறவிட்டதுக்காகத் தன்னைக்கொடுக்கை. களிறுதருபுணர்ச்சியாவது - வீதியிலே நின்று விளையாடாநிற்க, யானையின்கையிலே யகப்படப்புக, அதின் கையில்நின்றும் மீட்டதுக்குத் தன்னைக்கொடுக்கை" என்றும் ஒருமர்யாதை கட்டினார்கள்; இவளை நோக்கினதுக்காக இவள் தன்னை அவர்களுக்காக்கவிறே சொல்லிற்று; அவ்வளவன்றிக்கே, இவள் தலைமையிருந்தபடி - அவன் தன்னைத் தப்புவித்த உபகாரத்துக்கு அநந்யார்ஹமாக எழுதிக்கொடுக்கிறாள்: அங்கு ஓரோவுபகாரத்துக்கிறே அவ்வவர்க்காக்குவது, இங்கு எல்லாவுபகாரங்களையும் பண்ணினால் அவனுக்காக்காதொழியவொண்ணாதிறே. [எந்நாள்கொலோ யாமுறுகின்றது தோழி - அவன்தன்னை யுளனாக்கிவைத்தான், இனி நாம் அவனைக்கிட்டுவது

என்றே? [தோழி] - [* சோகஸ்யாஸ்ய கதா பாரம் ராகவோதிகமிஷ்யதி *] என்று போலே காணும் தோழிதானிருப்பது. இப்போது அவனை ஸ்பர்சித்து நம் ப்ரயோஜநம் பெற ஆசைப்படுகிறோமல்லோம், (அன்னையர்நாணவே) - "பிரிந்தவநந்தரம் அவன் தானே வருமளவும் ஆறியிருந்திலள், அவன் தான் வரவுதாழ்த்தான்" என்று இரண்டுதலைக்கும் பழிசொல்லுகிற தாய்மார் முன்பே; "நாம் இத்தலைமடலெடுக்குமளவாம்படி பிற்பாடராணோமாகாதே" என்று, (*ஹ்ரீரேஷாஹி மமாதுலா*) என்கிறபடியே அவன் லஜ்ஜித்து வந்து நிற்கிறபடியைக்கண்டு, "இவனையோ நாம் இவ்வார்த்தைசொல்லிற்று" என்று அவர்கள் லஜ்ஜித்துக் கவிழ்தலையிடும்படியாக. (8)

ஒன்பதாம் பாட்டு. நெஞ்சு விம்மல்பொருமலாகாநிற்கவும், தன் ஸ்த்ரீத்வத்தாலே இதுக்குமுன்பு மறைத்துக்கொண்டுபோந்தாள்; இனி "அவனையழிக்கப்புகுகிற நாம் ஆர்க்குமறைப்பது" என்று அதுதன்னையே சொல்லுகிறாள்.

நாணும்நிறையுங்கவர்ந்து என்னை நன்னெஞ்சங்கூவிக்கொண்டு *
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை*
ஆணையென்தோழி! உலகுதோறலர்தூற்றி* ஆம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே. (9)

(நாணும்நிறையுங்கவர்ந்து) - ஸத்தாப்ரயுக்தமானத்தையுங் கொண்டான், களவு கலந்தால் வருமத்தையுங்கொண்டான். வாசல் விட்டுப் புறப்படக் கடவதல்லாத லஜ்ஜையையும் கைக்கொண்டு, அகவாயிலோட்டம் தாய்மார்க்கும் சொல்லக்கடவதன்றிக்கேயிருக்கும் அடக்கத்தையும் கைக்கொண்டு. (என்னை) - அவையே நிரூபகமான என்னை. (நன்னெஞ்சங்கூவிக்கொண்டு) - பறித்துக்கொண்ட நாணும் நிறையும் தந்தாலும் இட்டுவைக்கைக்குக் கலமில்லாதபடி; அவற்றுக்கு ஆச்ரயமான, என்னிற்காட்டிலும் தன்பக்கல் பாவபந்தத்தில் ஊற்றமுடைய நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக்கொண்டு. "இவற்றைக் கொண்டு இன்னம் கடலிலேகிடக்கில், இவள் த்வரையிருந்தபடியால் திரைமேலேயடியிட்டுக் கையும்மடலுமாய் வந்து நிற்கவுங்கூடும்" என்றுபார்த்து, எட்டாநிலத்திலேபோய் இருந்தானுயிற்று. (சேணுயர்வானத்திருக்கும்) - சேணென்றும் - உயர்த்தி, உயரென்றும் - உயர்த்தி; இரண்டாலும்-மிக்க ஓக்கத்தையுடைத்தான வானத்திலேயிருக்கும். அந்தரஜாதிகளான இந்த்ராதிகள் குடியிருப்பிலன்றிக்கே, பரமபதத்திலே. (தேவபிரான் தன்னை) - இங்கேவந்து கொண்டுபோன நாணும் நிறையுமான ஒடுக்குமாட்டைப் பாரித்துக்கொண்டு, தன்வெற்றி காட்டிக் கொண்டிருக்கிறபடி. "ஸம்ஸாரமண்டலத்திற்போய் நான் பெற்றுக்கொண்டு வந்தவை யிவை" என்று தன்வெற்றி காட்டிக்கொண்டிருக்கிற ஓலக்கம் முந்தற முன்னம் அதுவாகப்பெற்றோமிறே, ப்ரஹ்மாதிகளோலக்கம்போலே லாபாலாபாதிகளில்வரும் துடிப்பறியாத ஓலக்கமன்றிக்கே. வ்யதிரேகத்தால்வரும் வ்யஸநம் அறியார்களேயாகிலும், அந்வயத்தால்வரும் ரஸம் அறிவர்களிறே முன்னம். (சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை) - அவன்தானும், "ப்ரளயத்துக்கு அழியாதநிலம்" என்னுமித்தனையுமாயிற்று ஏற்றமாக அவ்விடத்துக்கு நினைத்திருப்பது; "விரஹப்ரளயம் ஏறிப்பாயாதவிடமில்லை" என்று அறியமாட்டுகிறிலன்; அறிந்தானாகில் கிடந்தவிடத்தே கிடக்குமே! (தன்னை)-பார்கிடாய் அவ்வோலக்கமும் அவனும் அவ்விருப்பும் என்கையிலே படப்புகுகிறபாடு; இருந்தவிடத்தே இருக்கவொட்டுவேன் என்றிருக்கிறாயோ? இப்போது இங்ஙனே ஒரு வாய்ப்பகட்டுச் சொல்லுகிறாயாகில், அதுசெய்து தலைக்கட்டவல்லையாகப்புகுகிறாயோ? என்ன. - (ஆணை) - இவள் இப்போது அவனாணை இடுகிறாளோ, தோழியாணையிடுகிறாளோ? என்னில்; — அழிக்கநினைக்கிறவனாணையிடாளே, இனித் தோழியாணையாமத்தனையிறே. இதுக்கு உடன்பட்ட தோழியையொழிய, "வேறுபரதேவதையுண்டு"

என்று இராளே இவள்தான். "இது ஸக்திஸாரமேயாய்ப்போகாமே, இவள் இத்தனையுஞ்செய்து தலைகட்டப்பெறுவதுகாண்" என்று தன்னினைவு தோற்ற விருந்தாள், "என்தோழி" என்று அவளை அணைத்துக்கொள்ளுகிறாள். அன்றிக்கே "இவளது கூடப்புகாநின்றதோ" என்றிருந்தாளாய், அவளைப்பார்த்து, "ஆணையென்" என்கிறாளென்னுதல். அவன் என்சொல்வழியே வருமாகில், நீ என்கருத்திலே யொழுகுவதியாகில், தாய்மார்தொடக்கமானார் வார்த்தைகொண்டு கார்யமில்லையாயிற்றபின்பு, இனித்தடையென்? என்றுமாம். அவன் இவள்வழியே வருகையாவது என் என்னில்,—ஸர்வாதிகனுகையாலே அழியவிடானே, இவள் தானே இவள் கருத்திலே நடப்பாளொருத்தியே. (ஆணையென்) - தடையென்? ஆணை - தடை. (உலகுதோறலர்தூற்றி) - "அஸாதாரண விபூதியிலுள்ளார்தாம் பிறரறியும்படி இரார்களிறே" என்றிருக்கைக்கு, அவ்வோலகத்திலே வந்தாலோ! நான்சொல்லுவது; வழியடையப் படப்புகுகிறபாடு பார்கிடாய் என்கையிலே. லோகங்களெங்கும் புக்கு அழிக்கக்கடவேன். அலர் - பழி. என்னை ஊரார் பழி சொல்லும்படி பண்ணினானாகில், தன்னை லோகமாகப் பழிசொல்லும்படி பண்ணுகிறேன். (ஆங்கோணைகள்செய்து) - என்னுலான மிறுக்குகளையெல்லாம பண்ணக்கடவேன். கோணை-மிறுக்கு, அதாவது - நான் கையும் மடலுமாய்ப் புறப்பட்டவாறே, "நம்குணநிஷ்டர்படியிதுவன்றோ" என்று குணங்கொண்டாடி அதிலே செலவெழுதக்கடவன்; "அன்று, உன்னைப்பெறுகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறேன்' என்னக்கடவேன். நான் கையும்மடலுமாய்ச் சென்றவாறே அஞ்சி எதிரே புறப்பட்டு நிற்கக்கடவன், அப்போதாக அவன் காலிலே குனியக்கடவேன். (* ருணம் ப்ரவ்ருத்தமிவ *) என்னும்படி தொட்டுவிடக்கடவேன் (* சிரஸாயாசதஸ்தஸ்ய வசநம்நக்ருதம்மயா*) என்று புண்படும்படி பண்ணக்கடவேன். பிள்ளை தலையாலேயிரந்த காரியத்தை மறுத்துப்போந்தோமென்றாரிறே. நான் இத்தைச் செய்தால், அவர் தம்மனிச்சழியாமைக்காக, 'தம்மோடு அஸாதாரணபந்தமுடையார் தங்கள் ஆதரத்தாலே செய்யக்கடவதொன்றன்றோ இது" என்னக்கடவன்,; "அதன்று இது, நான் ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறேன்" என்னக்கடவேன். [* நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா:] என்கிற விதிலே செலவெழுதப் பார்ப்பர் அவர்; "அங்ஙனன்று, உன்னுடம்புபெறுகைக்காகச் செய்கிறேன்" என்னக்கடவேன். [குதிரியாய்] - "குந்திரி" என்கிற வித்தை [குதிரி] என்கிறதாய், அதாகிறது - அடங்கா ஸ்திரீயாய், தடையில்லாப் பெண் என்றபடியாய், தடையுடையேனன்றிக்கே என்னுதல்; அன்றிக்கே, குதிரி என்று செப்பாய்; ஸ்த்ரீகளுக்கு தனமாகிறது — நாணும் நிறையுமிறே, அது இட்டுவைக்கும் கலமாகுமிறே சரீரம், அவைபோகையாலே கேவல சரீரமாத்ரமேயாய் என்னுதல். பனைமடலைக் குதிரையாகப் பண்ணிக் கையிலேகொள்ளக் கடவது, அத்தையுடையேனாய் என்னுதல். [மடலூர்துமே] - "செய்யக்கடவதாயிற்றபின்பு, இனி, ஒன்றைநினைத்து ஒன்றைச் சொல்லுகிறதென்" என்று பார்த்து அதுதன்னையே சொல்லுகிறாள். ... ... (9)

பத்தாம்பாட்டு. ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி மடலூர்ந்தாகிலும், நிரதிசய போக்யனானவனைக் காணக்கடவேனென்கிறாள்.

யாமடலூர்ந்தும் எம்மாழியங்கைப்பிரானுடை *
தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டுசூடுவோம் *
யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார் *
நாமடங்காப்பழிதூற்றி நாடுமிரைக்கவே. 10

[யாமடலூர்ந்தும்] - செய்யக்கடவதல்லாததைச் செய்தேயாகிலும். [* தத்தஸ்ய ஸத்ருதசம்பவேத் *] என்றிருக்கக்கடவ நாம், மடலூர்ந்தேயாகிலும்.

இங்கு, மடலாகநினைக்கிறது :— பெற்றன்றித்தரியாத உபேயவைலக்ஷண்யமும், அதுக்கடியான உபாயவைலக்ஷண்யாநுஸந்தாநமும், "அவ்வுபாயந்தன்னாலே பேறு" என்கிறதுணிவும், வேறொன்றை உபாயமாக நினையாமையும், க்ரமப்ராப்தி பற்றாதொழிகையும்-மடலாய்ச்செல்லுகிறது. "மடலூர்தும்" என்றாள் கீழ்; "இது உனக்கு வார்த்தையல்ல; முதல்தன்னிலே ஸ்திரீகள் மடலூரக்கடவதல்லவாக விலக்கிற்று; அதுக்கு மேலே, நீயாகிறாய் [* நித்யம் ப்ராணஸமாஹிதா*] என்கிற படியே, உன்னையழியமாறியும் அவனுக்கு ஹிதகாமையாயிருப்பாளொருத்தி; அவன்தான் உன்பக்கல் வருகைக்கு உன்னிற்காட்டில் த்வரித்திருக்கிறானொருவன்; க்ரமப்ராப்திபற்றாமல் படுகிறாயித்தனை, நீ ஸாஹஸத்திலே ஒருப்படுகிற இது உன் ஸ்வரூபத்தோடு சேராது" என்ன ;—அது பார்க்கவொண்ணாதபடிகாண் எனக்கு அவன்பக்கலுண்டான ப்ராவண்யாதிசயமென்கிறாள். யாமடலூர்ந்தும்] - இப்படியிருக்கிற என் ஸ்வரூபத்தை அழியமாறியாகிலும் பெறத் தவிரேன்; [மடலூர்ந்தும்] - இத்தைச் செய்தாகிலும். செய்யக் கடவதல்லாதது செய்தாகிலும் பெறக் கடவேன். அஹமர்த்தத்தோடு சேராத செயலைச் செய்தேயாகிலும். ப்ரணவத்தில் அஹமர்த்தத்துக்கு வாசக சப்தமிருக்கிறபடியாயிற்று யாமென்கிறது. அத்தலையையிட்டிறே இவனை நிரூபிப்பது. [எம்மாழி இத்யாதி] நாராயண சப்தார்த்தம். இவனையிட்டிறே அவனைநிரூபிப்பது. (எம் இத்யாதி) - அவன் கையுந்திருவாழியும் போலேயன்றோ நான் கையும்மடலுமாய் புறப்பட்டால் இருப்பது. நான் கையும் மடலுமாய் புறப்பட்டால், அஞ்சி எதிரேவந்து தன் கையிலாபரணத்தை வாங்கி என் கையிலேயிட்டு, தன் தோளில் மாலையைவாங்கி என்தோளிலேயிட்டானாகில் குடியிருக்கிறான்; இல்லையாகில் எல்லாங்கூடவில்லையாகிறது. (தூமடல்) - என் தோளில் மாலையைப்பாராய், நான் செவ்விமாலை சூடவேணுங்காண். விரஹத்தாலே தன்மார்பில் மாலை சருகாயிறேகிடக்கிறது.. செவ்விமாலையுள்ளது அவன்பக்கலிலேயிறே ஒன்றைச் சொல்லுகிறாயாகில் செய்து தலைக்கட்டப்புகுகிறாயோ, உன் ஸ்த்ரீத்வம் உன்னைக்காற்கட்டுங்காண் என்ன,— (யாமட மின்றி) - அதுவோ! ஸ்த்ரீத்வமில்லாதார் செய்வதை முதலிலே செய்யக் கடவோம். (தெருவு தோறு) - "உலகுதோறலர்தூற்றி" என்றாளே கீழே; அங்ஙன் லோகமாகத்திரண்டத்திலே லோகத்துக்காக ஒருவார்த்தை சொல்லி விடுவேனோ, தெருவுகள்தோறும்புக்கு, அறியாதாரெல்லாரும் அறியும்படி அலர் தூற்றக்கடவேன். "க்ருஹார்ச்சனைகள், அர்ச்சகபராதீனம்" என்று ஒருமூலைகளிலேபுக்கு இருக்கவொட்டுவேனோ. அயல் தையலாருண்டு - அங்கயைகளான ஸ்த்ரீகள் ; அவர்கள் நாப்புரளாதபடியான பழிகளையுமெல்லாம் சொல்லி. சிசுபாலாதிகள்வாயில் கேளாதவையெல்லாம் என் வாயிலே கேட்கவிறே புகுகிறான். அன்றிக்கே, அவர்கள் நா, மீளாதே உருவப்பழி சொன்னபடியே யிருக்கும்படியான பழிகளைத்தூற்றி யென்றுமாம். அன்றிக்கே, நாம் தங்களுக்கடங்காதே மடல்கொண்டு புறப்பட்டபழிதூற்றியென்றுமாம். (நாடு மிரைக்கவே) - அவன் என்னுடைய ஊரவர்கவ்வை பரிஹரித்திலனாகில், நான் தன்னை நாடாக இரைக்கும்படி பண்ணுகிறேன். ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி பண்ணுகிறேன். "ஒருத்தி ஒருவனைப்படுத்திற்றே! ஒருவன்முகங்காட்டிற்றிலன்" என்னும்படி பண்ணுகிறேன். தத்வபரமான வாக்யங்களும் உபாஸநபரமான வாக்யங்களுமெல்லாம் அழியவிறே புகுகிறது; "ஒருவன் உளனாகில், ஆசைப்பட்டவள் இப்படிபட இருக்குமோ, ஆனபின்பு நிரீச்வரங்காண் ஜகத்து" என்னும்படிபண்ணுகிறேன். அவனோடே கலந்த என்வார்த்தையொழிய, அடியில்லாத வேதஞ்சொன்ன வார்த்தையைக் கேட்பர்களோ? ப்ரமேயச்ரேஷ்டமானத்தை அழித்தேன், இனி ப்ரமாணச்ரேஷ்டமானது தானே நில்லாதிறே. "ஆசைப்பட்டார்க்குப் பலம் இதுவான பின்பு இனி உபாஸனத்துக்குப் பலமில்லை" என்று கைவாங்கி ஜகத்தடைய நாஸ்திகராம்படிபண்ணுகிறேன். (நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்)

நாட்டார் சொல்லும்பழிதானே தாரகமிறே. "ஊரவர்கவ்வை எரு" என்றாளே, அதிலேயிறே வேறொன்றித்தரிப்பது.? ... ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லாரிருந்த தேசத்தே அவன் தானேவந்து நித்யஸம்ச்லேஷம் பண்ணுமென்கிறார்.

> இரைக்குங்கருங்கடல்வண்ணன் கண்ணபிரான்தன்னை *
> விரைக்கொள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
> நிரைக்கொளந்தாதி யோராயிரத்துளிப்பத்தும் *
> உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகுந்தம்மூரெல்லாம். (11)

(இரைக்குங்கருங்கடல்வண்ணன்) - அநந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர் வந்து பட்டருக்கு, "(* சாபமாநய *) என்றபோது கடல் கீழ்மண்கொண்டு மேல் மண்ணெறிந்தாற்போலேயாயிற்று, இவள் 'மடலூர்வன்' என்ற துணிவைக் கேட்டு அவன்தன் ஸர்வாதிகத்வம் கலங்கினபடி" என்று அருளிச்செய்தார். வண்ணனென்றவிது - ஸ்வபாவபரமானபோதைக்காகிறது. (கடல்வண்ணன்) - மடலூர்ந்தாகிலும் பெறவேண்டும்படியான வடிவழகைச்சொல்லுகிறது. ஓதங்கிளர்ந்த கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடையவன். (கண்ணபிரான் தன்னை) - அவ்வடிவை, அவதரித்து எனக்கு உபகரித்த க்ருஷ்ணனை. வடிவழகிது, ஸ்வபாவமிது. (விரைக்கொள்பொழில்) - இவர் கையும் மடலுமாய்ப் புறப்பட்டவாறே, ஊர் ஸஞ்ஜாதபரிமளமானபடி, "அவன்வரவணித்து" என்று. (நிரைக்கொளந்தாதி)-இவர் முன்னடி தோற்றாதே மடலூரச்செய்தேயும், ப்ரபந்தமானது, எழுத்தும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேரவிழுந்தபடி. (* சோகச்ச்லோகத்வமாகத:*) - என்று சோகவேகத்தாலே சொல்லச்செய்தேயும், ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேதமானாற்போலே; இவர்முன்னடி தோற்றாதபடி கலங்கிச்சொல்லச் செய்தேயும், பகவத்ப்ரஸாதமடியாகப்பிறந்த ப்ரபந்தமாகையாலே லக்ஷணங்கள் சேரவிழத் தட்டில்லையிறே. (உரைக்கவல்லார்க்கு) - மடலெடுக்கவேண்டா. இப்பாசுரமாத்ரத்தைச் சொல்லவமையும். (வைகுந்தமாகுந் தம்மூரெல்லாம்) - அவர்களுக்கு உத்தேச்யபூமி பரமபதமாம். அன்றிக்கே, இவர்களுக்கு நாடறிய மடலெடுத்துக்கொண்டு புறப்படவேண்டாதே, இவர்களிருந்தவிடங்களிலே அவன் தானேவந்து நித்யஸம்ச்லேஷத்தைப் பண்ணுகையாலே, அவர்களிருந்தவிடந்தானே பரமபதமாம். அவன் ஸந்நிதியுள்ளவிடம் ஸ்ரீவைகுண்டமாகக் குறையில்லையிறே. இப்பாசுரமாத்ரத்துக்கு இதுகூடுமோ? என்னவொண்ணாது; இதில்சொல்லுகிற பகவத்குணங்களைப் பார்த்தால், "இந்த உக்திதானும் மிகை" என்னலாம்படியிருக்கும்; இது கூடாதாகில், பரிபூர்ணஸமாச்ரயணத்துக்கும் பலமில்லையாம்; இங்ஙனன்றாகில் புருஷோத்தமன் இதரஸஜாதீயனானனாமே. (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்

திருவாய்மொழி நூற்றந்தாதி

> மாசறுசோதிகண்ணன்வந்துகலவாமையால் *
> ஆசைமிகுந்துபழிக்கஞ்சாமல்—ஏசறவே *
> மண்ணில்மடலூரமாறனொருமித்தான் *
> உள்நடுங்கத்தான்பிறந்தவூர்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம் திருவாய்மொழி—ஊரெல்லாம் ப்ரவேசம்.

"நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்று - பெரியதொரு த்வராரஸமாயிறே கீழ்ச்சென்றது, மடலூரப்பெறுகைதான் அவனைப் பெறுகையோபாதி தேட்டமாம்படி பலஹாநிமிக்கது; இனித்தான், மடலூரும்போது அபிமத விஷயத்தைப்படத்திலே எழுதவேணுமே, அதுக்கு அவகாசமில்லாதபடி "ஆழி கொண்டன்றிரவிமறைப்ப'' என்கிறபடியே ஆதித்யனை மறைத்தானாதல், தைவ யோகத்தால் அஸ்தமித்ததாதல் செய்து ராத்ரியாய், அதுதான் ஸந்த்யாமாத்ர மன்றிக்கே சராசரங்களடங்கும்படி மத்யராத்ரமாய் ; பழிசொல்லுவாரோடு அநுகூலராய் ஹிதஞ்சொல்லி விலக்குவாரோடு வாசியற எல்லாருமொக்க உறங்குகையாலே ஒருவுசாத்துணையுமின்றிக்கே, இவ்வளவிலே, ப்ரளயாத்யாபத்துக்களிலே உதவும் ஸ்வபாவனுமாய் ஸர்வரக்ஷகனான புருஷோத்தமனுடைய குணங்களை அநுஸந்திக்க, அவைதான் பிரிவிலே அநுஸந்திக்கையாலே மிகவும் ஆற்றாமைக்கு உறுப்பாய், * வேண்யுத்க்ரதாநாதிகளிலே யொருப்பட்டாரோபாதி முடிந்து பிழைக்கவேண்டுமளவாய், அதுதன்னைப்பெறுகை மடலூரப்பெறுகையோபாதி தேட்டமாய்; [விட்டது] [[விஷயஸ்ய தாதா*] - இத்தனை நற்சரக்குத்தரும் உதாரரை இவ்வூரில்கிடைக்குமோ? [*மே*]- உண்டானால்தான் எனக்கு இது ஸம்பவிக்குமோ? [*சஸ்த்ரஸ்யவா*] - விஷம்போலே சிறிதுபோதுநின்று கொல்லுமதன்றியே கடுக முடிக்கும் சஸ்த்ரத்தைத்தான் தருவாருண்டோ ? [*வேச்மநி ராக்ஷஸஸ்ய*] - பிரித்து வைத்து உயிர்க்கொலையாக நலிகிறவனுடைய ஊரிலே, நற்கொலைக்குப் பரிகரமானத்தைத்தான் தருவாருண்டோ? இப்படி முடிகை தேட்டமாம்படியிருக்கிறவளவிலே, "நாம் ஸர்வரக்ஷகராகையாலே எல்லாருடைய ரக்ஷணத்துக்குமாகத் திருப்பாற்கடலிலேவந்து சாய்ந்தோம். உம்முடையரக்ஷணத்திலே உத்யுக்தராயிருந்தோம், க்ரமப்ராப்தி பற்றாமைப் பதறுகிற வித்தனை'' என்கிறவித்தை ஸ்மரிப்பிக்க; அவன் ஸர்வரக்ஷகனாகில், நம்முடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனாகில், க்ரமப்ராப்திபற்றாமல் பதறுகிறோமித்தனை. நம்மோபாதியாலுள்ள ரக்ஷணம் நமக்கு ஸித்தியாதோவென்று அவன்குணஜ்ஞானத்தாலே தரித்தாராய்ச்செல்லுகிறது. [கீழ் - தம்முடைய அநுபவாபிநிவேசத்தாலே ஸத்வராய்க்கொண்டு ஸ்வரூபாநநுரூபமான ப்ரவ்ருத்தியிலேயாகிலும் அவனைப்பெறுவதாக உத்யோகித்த இவர், அநுபவயோக்யமான காலம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தேயும் அவன் அஸந்நிஹிதனாகையாலே அத்யந்தம் ஆர்த்தராய் ஒரு ப்ரவ்ருத்திக்ஷமரல்லாதபடி மிகவும் அவஸந்நராய், விளம்பாக்ஷமராகையாலே, இவ்வவஸ்த்தையிலே அவன் வந்து ரக்ஷிக்கைக்கு உடலான குணங்களை ஆர்த்தராய்க் கூப்பிட்ட ப்ரகாரத்தை அபிமதநாயகனான ஈச்வரனைப்பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கிரங்கிக் கூப்பிட்ட நாயகிபாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.] ... ... *

முதற்பாட்டு. ப்ரளயாபத்திலே வந்து உதவினவன் என்னை விரஹப்ரளயங்கோக்க வந்து உதவாதபின்பு, இனி நான்ஜீவிக்கை என்று ஒரு பொருளுண்டோ ? என்று தன்ஜீவநத்திலே நசையறுகிறாள்.

ஊரெல்லாந்துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய் *
நீரெல்லாந்தேறி ஓர்நீளிரவாய்நீண்டதால் *
பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான்வாரானால் *
ஆரெல்லே! வல்வினையேன் ஆவிகாப்பாரினியே. (1)

[ஊரெல்லாம்துஞ்சி] - ஊரவர்கவ்வை தாரகமாக மடலூரவிருந்தோம், இனி ஆர்பழி தாரகமாக மடலூருவது. சிலர் உறங்கச் சிலர் உணர்ந்திருக்கை

யன்றிக்கே, எல்லாருமொக்க உறங்கிற்று. திருவடிசெல்லுகிறக்ஷணத்திலே
ராக்ஷஸிகளடைய உறங்கினாற்போலே, பழிசொல்லுவாரடங்க உறங்கிற்றாயிற்று.
அன்றிக்கே, இவள்பிறந்தவூராகையாலே இவள்தசையைக்கண்டு சோகித்து,
கோரை சாய்ந்தாற்போலே எல்லாருமொக்க உறங்கின படியைச்சொல்லிற்றாகவு
மாம். நாகபாசத்தினன்றாகில் ஒரு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் திருவடி
தொடக்கமானார்தானுணர்ந்திருந்தமையுண்டிறே; இங்கு அங்ஙனுமொருவர் இல்லை
யாயிற்று. ஆக, பழிசொல்லுவாரோடு ஹிதஞ்சொல்லுவாரோடு உசாத்துணை
யாவாரோடுவாசியற, எல்லாருமொக்க உறங்கிற்றென்கை. இத்தால் சொல்லிற்று
யிற்று - பழிசொல்லியலைப்பாருங்கூட இல்லாதபடி எல்லாருங்கூட உறங்குகை
யாலே, சிலருடன் உசாவிக்காலக்ஷேபம் பண்ணவொண்ணாதபடியான தசை
பிறந்தபடி சொல்லுகிறது. ஊரெல்லாம் உறங்கிற்றாகில், புறம்பே லோகத்திலே
போயாகிலும் உசாத்துணையாவாருண்டாகில் பார்த்தாலோ ? என்ன,—[உலகெல்
லாம்நள்ளிருளாய்] - ப்ரளயங்கோத்தாற்போலே லோகமடைய இருளேயாயிற்று.
நள்ளென்று - நடுவாதல், செறிவாதல். நடுவான இருளென்னுதல், செறிவான
இருளென்னுதல். அன்றிக்கே, எல்லாபதார்த்தங்களினுடையவும் ஒலியடங்கி
னால் ராத்ரிதனக்கென்னவே யொருத்வநியுண்டு, அத்தைச்சொல்லுகிறதாதல்.
ஆக, சக்ஷுர்விஷயமாவதொன்று மில்லாதபடியாயிற்றென்கை. [நீரெல்லாம்
தேறி] - ஜலசரஸத்வங்களடைய ஆழவிழிந்து. அங்குள்ள த்வநியும் அடங்கிற்று.
ஊரெல்லாம்துஞ்சி என்கையாலே - சிலர்வார்த்தைகேட்டுப் போதுபோக்கும
தில்லையென்கை. உலகெல்லாமென்று கண்ணுக்கிலக்காமதொன்றில்லாமையாலே
ஒன்றைக் கண்டுபோதுபோக்குமதில்லையென்கை. நீரெல்லாம்தேறி என்கையாலே -
முதலிலே ச்ரவணேந்த்ரியத்துக்கு விஷயமில்லையென்கை. இவைதான் - ஸர்வேந்த்
ரியவ்ருத்திகளுக்கும் உபலக்ஷணமாயிருக்கிறது. பகலில்வந்தால் இந்த்ரியங்கள்
ஸ்வஸ்வவிஷயங்களிலே பல்விபற்றுகையாலே ஆற்றாமை அரையாறுபட்டிருக்கும்,
ராத்ரியில் எல்லா இந்த்ரியங்களுக்கும் பிரிந்தவிஷயமொன்றுமே இலக்காகை
யாலே ஆற்றாமைகரைபுரண்டிருக்கும். (ஓர்நீளிரவாய்நீண்டதால்) - பண்டும் ராத்ரி
நெடுகாநிற்கச் செய்தே பகலும் இரவுமாய்வருமிறே. பகல்விரவாத ராத்ரியாய்.
(நீண்டதால்) - மநுஷ்யர்களுடைய ராத்ரியிற்காட்டில் தேவர்களுடையராத்ரி நீண்டி
ருக்குமாகிலும் அதுக்கு அவதியுண்டு, அங்ஙனமொரு அவதியில்லையாயிருந்தது.
(பாரெல்லாமுண்ட) - ப்ரளயாபத்தில் தரம்வையாதே எல்லாரையுமொக்கரக்ஷித்த
வன். ப்ரளயாபத்திலகப்பட்டாரெல்லார்க்கும் உண்டான ஆபத்து இவளொருத்
திக்கும் உண்டுபோலேகாணும். ப்ரளயத்தில், சிலர் மடலெடுக்கப்புக்கு அதுவும்
மாட்டாத தசையுண்டாயன்றிறே உதவிற்று. தந்தாமால் பரிஹரித்துக்கொள்ள
வொண்ணாதபடியான ஆபத்துவந்தால் உதவுமவன். (நம்பாம்பணையான்) - உகந்
தார்க்கு உடம்புகொடுக்குமவன். திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவன்.
ஆக, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர் படியுமில்லையாயிற்று, ஸம்ஸாரிகள்படியுமில்லை
யாயிற்றே! நமக்கென்கிறாள். நித்யஸூரிகளை நித்யாநுபவம்பண்ணுவிக்கும்;
ஸம்ஸாரிகளுக்கு அபேக்ஷையின்றிக்கே இருக்கச்செய்தேயும், தான் அறிந்ததாக
ஆபந்நரானவாறேவந்து ஆபந்நிவாரணம்பண்ணும், தன்னோட்டை ஸம்பந்தத்
தாலே. (நம்) - ஸம்ச்லேஷித்து, கூப்பிடுகைக்குவேண்டுவது கொடுத்தபடியாலே -
நம் என்கிறாள். (வாரானால்) - வயிற்றிலேவைத்து ரக்ஷிக்கவேண்டா, உடம்போடே
யணையவேண்டா, வந்துமுகங்காட்டவமையுங்கிடீர். (*த்ருஷ்ட ஏவ ஹி நச்சோகமப
நேஷ்யதி ராகவ: - தமஸ்ஸர்வஸ்யலோகஸ்ய ஸமுத்யந்நிவ பாஸ்கர:*) (இனி - இவ்
வளவில். (ஆவிகாப்பார் - ஆர்) - ப்ரளயாபத்தில் அகப்பட்டாரோபாதி ஆபந்
நையாயிருக்கிற நான் ரக்ஷிக்கவோ, "எம்மின் முன்னவனுக்கு மாய்வராலோ"—
என்கிறபடியே 'இவளுக்கு அவன் வேணும்' என்று என்பேற்றுக்கு எனக்கு
முன்னே நோவுபடுகிற தோழி ரக்ஷிக்கவோ, ஹிதஞ்சொல்லுகிற தாயார் ரக்ஷிக்

கவோ, பழிசொல்லுகிற ஊரார் ரக்ஷிக்கவோ? (எல்லே) - ஆச்சர்யத்திலேயாதல் தோழியை ஸம்போதிக்கிறாளாதல். மேலே "அன்னையரும்தோழியரும்" என்று- அவர்களும் உறங்கினார்களென்னுமிடக்கச்செய்தேயும், தன் ஆபத்தே செப்பேடாக "இவ்வளவில் அவள் உணர்ந்திருக்க ஸம்பாவனையுண்டு" என்று பார்த்து - எல்லே என்கிறாள். (வல்வினையேன்) - ஸர்வரக்ஷகனுமாய், உடம்போடணைந் தாரைப்பிரியாதவனுமாயிருக்கிற அவன் வந்து உதவாதபடியாயிருக்கிற மஹா பாபத்தைப்பண்ணினேன். (வல்வினையேனாவி) - பிரிவே ஹேதுவாக நூறேபிராயமா யிருக்கிற என்னுடைய ஆவியை. "பிரிவுக்குச்சிளையாத இது இனி முடியப் புகுகிறதோ" என்றிருக்கிறாள். ரக்ஷகனானவன் வந்திலன், எனக்குமுன்னே தோழி சோவுபட்டுக்கிடந்தாள், இனி பாதகர் ரக்ஷகராகவோ. ... (1)

இரண்டாம் பாட்டு. இத்தசையில் க்ருஷ்ணனும் வருகிறிலன்; என்னோட்டை ஸம்பந்தத்தாலே, அவனைப்போலே நெஞ்சே! நீயும் பாங்கன்றிக்கே யொழிந்தா யென்கிறாள்.

ஆவிகாப்பாரினியார் ஆழ்கடல்மண்விண்மூடி*
மாவிகாரமாய் ஓர் வல்லிரவாய்நீண்டதால்*
காவிசேர்வண்ணன் எண்கண்ணனும்வாரானால்*
பாவியேன்நெஞ்சமே! நீயும்பாங்கல்லையே. (2)

(ஆவிகாப்பாரினியார்) - உதவுமவன் உதவிற்றிலன், நெஞ்சும் பாங்கன் றிக்கே யொழிந்தது, இனி ரக்ஷகரார். கண்ணனும்வாரான் - நெஞ்சமே! நீயும் பாங்கல்லை - ஆவிகாப்பாரினியார். (ஆழ்கடல் இத்யாதி) - வ்யாபகபதார்த்தங்களை வ்யாப்யங்களிலேயொன்றுமறைத்தது. அபரிச்சேத்யமானகடல், எல்லாப்பதார்த் தங்களுக்கும் இடங்கொடுக்கக்கடவபூமி, அதுக்கும் அவகாசப்ரதானம் பண்ணும் ஆகாசம், இவற்றையடையமறைத்து. (மாவிகாரமாய்) - பின்னையும் அவ்வளவில் பர்யவஸிப்பதாயிருக்கிறதில்லை, மஹாவிகாரத்தையுடைத்தாய் நித்யவிபூதியையும் கணிசிக்கிறாப்போலேபிராநின்றது. வைச்வரூப்யங்காட்டின ஸர்வசக்தி செய்வ தெல்லாம் செய்யாநின்றது. (ஓர்வல்லிரவாய்) - ராத்ரிக்கும் இருளுக்கும்வாசி புத்தி பண்ணியிராமையாலே - இருளை ராத்ரியென்கிறாள். (ஓர்வல்லிரவாய்) - திரு வாழியையிட்டுத் துண்டித்து உதவவரிலும் வரவொண்ணாதபடி செறிந்திருக்கை. (நீண்டதால்) - ஒருமுடிவுகாணவொண்ணாது. (காவிசேர்வண்ணன்) - (* புல்லேந்தீ வரபத்ராபம் *) என்கிற நிறத்தையுடையவன். இருளோடு ஒருகோவையான நிறம்- இருளன்னமாமேனியிறே. கருப்பு உடுத்து வருவாரோபாதி வரலாங்கிடீர். (என் கண்ணன்) - கம்ஸன் காவலாகவைத்த துஷ்ப்ரக்ருதிகள் கண்படாதபடி. இருளிலேவந்து உதவினவன். நள்ளிருட்கண்வந்த வெந்தைபெருமானரிறே. (வாரானல்) - தாமஸப்ரக்ருதிகளை நிரஸிக்க வருமவன், தமஸ்ஸை தன்னையே நிரஸிக்கவந்தாலாகாதோ? வந்தானாகில் அப்போதே விடியுமே இவளுக்கு, பகற் கண்டேன் நாரணனைக்கண்டேனிறே. (பாவியேன்நெஞ்சமே) - உனக்கு அவனோ டொத்த ப்ராப்தியேயிறே. அவன் உதவும் ஸ்வபாவனல்லாமையன்றே உதவா விட்டது. என்னோட்டை ஸம்பந்தமிறே. - என்மார்விலேயணைக்கையிறே அவன் உதவாதொழிகிறது, அது உனக்குமொக்குமிறே (நீயும்பாங்கல்லையே) - ஓராகாரத்தாலே ஸாஜாத்யமுண்டானால் வேறோராகாரத்தாலே வ்யாவ்ருத்தியுண் டானலாகாதோ, ஸ்வதந்த்ரனைப் பரதந்த்ரனை அவனோபாதி யாகவேணுமோ; பாரதந்த்ர்யமே ஸ்வரூபமான நீயும் அவனுக்கு ப்ரணயித்வம் தவிர்ந்ததென்றால் ஸ்வாதந்த்ர்யமே ஜீவிக்கும், உனக்கு அங்ஙனென்றில்லையே. இருவர் பவ்யராயிருந் தால், அவர்களிலே ஒருவன் அபவ்யனுங்காட்டில் மற்றையவனும் அபவ்யனாக

வேணுமோ. "என்கண்ணனும்வாரானல்," "என்நெஞ்சமே" என்று ஒக்கச் சொல்லலாயிருக்கிறதிறே. ... ... (2)

மூன்ரும்பாட்டு. ஸகலது: கங்கைளயும்போக்கும் ஸ்வபாவனை காகுத்ஸ்த்தனும் வருகிறிலன், பரதந்த்ரையாகையாலே முடியவும் விரகறிகிறிலேனென்கிருள்.

நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே நீளிரவும்*
ஓயும்பொழுதின்றி ஊழியாய்நீண்டதால்*
காயுங்கடுஞ்சிலை என்காகுத்தன்வாரானல்*
மாயும்வகையறியேன் வல்வினையேன்பெண்பிறந்தே. (3)

(நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே) - கங்கைக்கு அக்கரைப்பட்டவன்று, இளைய பெருமாளைப்பார்த்து, "பிள்ளாய், நீயும் படைவீடேறப்போ" என்ருரிறே, "வநவாஸம் இவரையொழியவும் தலைக்கட்டலாம்" என்று ப்ரமித்து; அப்படியே இவரும் தந்திருவுள்ளத்தைப்பார்த்து, "நீயும்பாங்கல்லைகாண்" என்கிருர். *(மநஏவ)* என்கிறபடியே - நெஞ்சைக்கொண்டேயிறே எல்லாம் பெறவிருக்கிறது. ஆயிருக்கச் செய்தேயும், இன்னுப்பாலே சொல்லுகிருர். (நீளிரவு இத்யாதி) - முதலிலே நெடிதான ராத்ரியானது; அதுக்குமேலே, ஒருமுடிவுகாணவொண்ணுதபடி யிராநின்றது. அடிகாணவொண்ணுதபடியுமாய், முடிவுக்கும் ஓரெல்லை காணவொண்ணுதபடி யிராநின்றது. முடிவுகாணவொண்ணுதிருக்கச்செய்தேயும் அடியுற்றிருப்பனவுண்டிறே, இது அப்படி யிருக்கிறதில்லை. (ஓயும்பொழுதின்றி) நின்றவிடத்தில் நின்றும் கால்வாங்கக்கடவதன்றிக்கே. (ஊழியாய்) "சாத்தன், கூத்தன்" என்ருற்போலே சிலபேராய், அவர்கள் தாங்கள் ஜீவிக்கப்புக்கவாறே சிறுபேர் தவிர்ந்து "சோழக்கோனுர், தொண்டமானுர்" என்று பட்டப்பேர் பெற்று வாழுமாபோலே, ராத்திரியானதுபோய் "கல்பம்" என்னும் பேரையுடைத்தாகா நின்றது. (நீண்டதால்) அதுதனக்கும் ஓரவஸாநமுண்டிறே, அதுவுமில்லையாயிற்று இதுக்கு.

(காயும்கடும்சிலை இத்யாதி) ஒருத்தியுடைய நெடிதான ராத்ரியைப் பரிஹரிக்கைக்காக வ்யாபரித்த வில்வலியையுடையவனும் வருகிறிலன். ப்ரதிபக்ஷத்தின் மேலே காயாநிற்பதாய், எதிரிகள் பக்கல் பெருமாள்கண்பார்க்கிலும் தான் கண்பாராதபடியான சிலையையுடையவன். அவனுடைய சாங்கம் என்னளவிற் கண்டிலேன். (சாங்கமென்று - பக்ஷபாதத்துக்குப்பேர்.) (என்காகுத்தன்) பிராட்டிக்கு உதவினதும் 'தனக்கு உதவிற்று' என்றிருக்கிருள். 'தய்ரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சம்' என்று நான் தஞ்சமாக நினைத்திருக்குமவனும் வருகிறிலன். "சினத்தினல் இத்யாதி" - பிராட்டியுடைய விரோதியைப் போக்கினது அவளுக்குக் காரியம் செய்தானுக நினைத்திருக்கையன்றிக்கே, தன் சினம் தீர்ந்தானுயிருக்குமவன். (காகுத்தன்) கீழே, "கண்ணனும்வாரானல்" என்றது; அபிஷிக்தக்ஷத்திரிய புத்ரரல்லாதார்தாம் தவிருகிருர்கள், முடிசூடி நோக்கும் குடியிலே பிறந்தவனுக்கு வரத்தட்டென். ககுத்ஸ்த்தகுலோத்பவனைவனும் வாராதொழிவதே! (வாரானல்) எதிரிகள் வரப்பொரவிருக்கையன்றிக்கே தானே யெடுத்துவிட்டுச் சென்று பொருமவனும் வருகிறிலன். (*அபியாதா*) எதிரிகள் வரப்பொரவிருக்கையன்றிக்கே, எடுத்துவிட்டுப்பொருகையும் தமக்கே பணியாயிருக்கும். (*ப்ரஹர்த்தாச*) தூசித்தலையில்நின்று "முதல்வெட்டு ஆரது" என்ருல், அதில்முற்பாடும் தம்மதாயிருக்கும். (*ஸேநாநயவிசாரத:*) தாம் போகாதே, தூசியுமணியும் பேரணியுமாக வகுத்துவிட்டால், ஒக்க நின்று பொருவித்தாற்போலே வென்று மீளும்படி படைகோக்கவல்லவர். (மாயும்வகையறியேன்) இவன் வாராமையறிந்தால் இனிமுடிகையிறே ஸுகம், முடியும் விரகறிகிறிலேன். (வல்வினையேன்) முடிகை ஸுகமாய்த் தேட்டமானல் அதுவும் கிடையாதபடியான

பாபத்தைப் பண்ணினேன். பாபமானது விநாசஹேது வாகையன்றிக்கே, ஜீவிக்கைக்கு ஹேதுவாவதே! ஜீவிக்கைதேட்டமானபோது அரிதாம், முடிகை தேட்டமானபோது அரிதாம், ஏதேனுமாக அநிஷ்டாவஹம் பாபமாமித்தனையிறே. (பெண்பிறந்தே) பரதந்த்ரஜந்மத்திலே பிறந்தார்க்கு நினைத்தபோது முடியப் போமோ. பிறர்க்காக ஜீவிக்கவேண்டும். பரதந்த்ரஜந்மத்திலே பிறக்கைக்கீடான மஹாபாபத்தைப் பண்ணினேன். (*பாபாநாமாகரஸ் ஸ்த்ரிய:*) என்னக் கடவதிறே. (*நசாஸ்ய மாதா*) பிராட்டி திருவடியைக் கண்டவநந்தரம் பெருமாள் பக்கல் ப்ரணயரோஷத்தாலே, "இவன் அவர் வரவிட்ட ஆள்" என்று சீறிச் சிலவார்த்தையருளிச்செய்ய; "தேவரீர் எழுந்தருளியிருந்தவிடம் அறியாமலிருந் தாரித்தனையல்லது பாவபந்தத்தில் ஊற்றம் போராமையோ, அறிந்த பின்பு இனித் தாழ்த்தாராகிலன்றோ குற்றமாவது என்று அச்சிவிட்கு ஆறும்படி சிலவார்த்தை விண்ணப்பம்செய்து பின்னையுந்தான், "அவரைப்பிரிந்து பத்துமாஸமுண்டே, இவ்வளவும் முடியாமல் தரித்திருந்ததன்றோ தேவரீரும்" என்று தனக்குக்கருத்து என்னுமிடம் தோற்றவிருந்தான்; அதுவோ உனக்குநினைவு! வாராய், நாட்டா ருக்கு, மாதாவென்றும் பிதாவென்றும் ப்ராதாவென்றும் பந்துக்களென்றும் பலதலைத்திருக்கையாலே ஸ்நேஹமானது எங்கும் பாலிபாய்ந்திருக்கும்; பெருமாள் அங்ஙனன்றிக்கே. எல்லார்பக்கல்பண்ணும் ஸ்நேஹத்தையும் என் பக்கலிலே ஒருமடையாகச்செய்துவைக்கையாலே, எல்லாம் செய்தாலும், கடலை யணைசெய்து விரோதிவர்க்கத்தைக் கிழங்கெடுத்து 'தண்ணீர் தண்ணீர்' என்று வருகை தவிரார்; தாபார்த்தன் விடாய்ப்பட்டுப் பந்தலேற வரக்கொண்டு தண்ணீர்ச் சாலுருட்டிக்கிடந்தால் பிழையாதாப்போலே, அவர் இப்படிவரக்கொண்டு நானின் றிக்கே யிருப்பனாகில் பின்னையவரைக்கிடையாதென்று அவர்க்காக என்னை நோக்கிக்கொண்டிருந்தேன். அவரைக்கண்ட பிற்றைநாள் நான் இருந்தேனாகிற் காண் நீ இவ்வார்த்தை சொல்லுவதென்றாளிறே. (*தூத*) முன்பு "வாநர" என்றாற்போலே சொல்லிப்போந்தவள் இப்போது அவர்பக்கலுண்டான சிவிட்கு இவ்வளவும் ஏறிப்பாய்ந்து அவர்வரவிட வந்தவனன்றோ நீயும் என்றாளிறே. (வல்வினையேன் பெண் பிறந்தே - மாயும் வகையறியேன்) ஸ்வேச்சாதீநமான மரணமாம்போது ஆண் பிறந்த சக்ரவர்த்தி பீஷ்மாதிகளாகவேணுமாகாதே; ஜ்ஞாநவான்களாதல் ஸ்வதந்த்ரராதல் செய்ய வேணும்; அறிவிலிகளான பெண் பிறந்தார்க்கு நினைத்தபடி முடியப்போமோ. ... ... (3)

நாலாம்பாட்டு. கண்டார்க்குப் பொறுக்கவொண்ணாதபடி வ்யஸநம் சொல்லா நிற்க, வரையாதேரக்ஷிக்கும் ஸ்ரீவாமநனும் வருகிறிலன், என் சிந்தாவ்யஸ நத்தைப் போக்குவாரார்? என்கிறாள்.

பெண்பிறந்தாரெய்தும் பெருந்துயர்காண்கிலேனென்று*
ஒண்சுடரோன்வாராதொளித்தான்* இம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாய் எங்காரேறுவாரானல்*
எண்பெரியசிந்தைநோய் தீர்ப்பாராரென்னையே? (4)

(பெண்பிறந்தார் இத்யாதி) பரதந்த்ரஜந்மமாகையாலே முடியவும் பெறாதே, ம்ருதுஸ்வபாவைகளாகையாலே பிரிவும் பொறுக்கமாட்டாதேயிருக்கிற ஸ்த்ரீகள் அநுபவிக்கிற மஹாதுக்கத்தைக் காணமாட்டேனென்று (ஒண்சுடரோன்வாரா தொளித்தான்) ஸர்வரக்ஷகன் பொறுக்குமித்தனை போக்கி, ரக்ஷணைகதேசத்திலே அந்வயித்தவர்களுக்குப் பொறுக்கப்போமோ? புருஷோத்தமன் பொறுக்குமத்தனை போக்கி, புருஷர்களால் பொறுக்கப்போமோ? தன் தோற்றரவிலே ஸகல க்லேசமும் போம்படியான ப்ரகாசத்தையுடையவனும் வாராதே மறைந்தான். வந்திலன் என்னாதே, ஒளித்தானென்கிறது - (*பீஷாஸ்மாத் வாத:பவதே*) இத்

யாதியாலே பகவதாஜ்ஞையாலே முப்பதுவட்டம் வரவேணுமே; இங்ஙனே யிருக்கிறவன் "ஈச்வராஜ்ஞைமறுத்தால் வேணுமாகில் தலையை அறுத்துவைக்குமித்தனையன்றோ, இக் கொடுமை என் கண்ணால் காணப்போகாது" என்று ஈச்வரபடர்தேடிவந்தாலும் காணாதபடி யொளித்தான். "ஒளியவன்விசும்பியங்குந் தேரும்போயிற்று" என்னக்கடவதிறே. வரவுக்கு ஸூசகமும் காணவொண்ணாதபடி மறைந்தது; (*ஶோபி ரேணுர்நலக்ஷ்யதே*) "சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும்போய்மறைந்தான்" என்னுமாபோலே. (இம்மண்ணளந்த இப்பூமிக்கு என்ன துயருண்டான் அளந்துகொண்டான். பூமிக்கு மஹாபலியாலுண்டான இடரளவோ எனக்கு ராத்ரியாலுண்டான இடர். வரையாதே எல்லாரையும் ரக்ஷிக்குமவன். (கண்பெரியசெவ்வாய் இத்யாதி) க்ருபையால் பெரியனாய் பூமியையளந்து, பூமியிலுள்ளார் விடாய்போம்படி குளிரக்கடாக்ஷித்து அத்தாலுண்டான ப்ரீதிப்ரகர்ஷந்தோற்ற ஸ்மிதம் பண்ணுகையாலே சிவந்த அதரத்தையுடையவனாய், (எம்) ஸர்வவிஷயமாகப்பண்ணும் ரக்ஷணத்தையே ஸ்வபாவமாகவுடையவனுமாய். (கார்) இவற்றை ரக்ஷிக்கையால் தன்னிறம் பெற்றிருப்பானுமாய். (ஏறு) "அது தன்பேறு" என்னுமிடந்தோற்ற மேனாணித்திருக்குமவனும் வருகிறிலன். எம் என்று - ஸர்வரக்ஷகனுடைய ரக்ஷ்யவர்க்கத்திலே தானும் அந்யதமையாகையாலே சொல்லுகிறாள். என் என்று - பாடமானபோது - பண்டு என்னோடே கலந்தத்தாலே தன்னிறம்பெற்று மேனாணித்திருந்தவனென்கை. (வாரானால்) இரக்கவேண்டா, அளக்கவேண்டா, வடிவைக் காட்டவமையும். (எண்பெரியசிந்தைநோய்) (*யஸ்யாமதம் தஸ்யமதம்*) என்கிறபடியே - வேதாந்தங்கள், நிலமன்று என்று மீண்ட பகவத்விஷயத்தை இத்தனை போதும் பேசினார். தம்முடைய சிந்தாவ்யதை மயர்வறமதிநலமருளப்பெற்ற ஜ்ஞானத்துக்கும் அவிஷயமாயிராநின்றது. "எண் பெரியது" என்னுமித்தனை; "இவ்வளவு" என்னப்போகாது, பிரிந்த விஷயத்துக்கு அநுரூபமாயிறே சிந்தாவ்யதைதான் இருப்பது, அதுக்கு ஓரவதியில்லையே. (*ததப்ராப்திமஹாது:க*) சிந்தைநோய்தீர்ப்பாரார்) சிந்தாவ்யதை போமித்தனையேவேண்டுவது, அவனை மறக்கவும் அமையும்; "ஏதுசெய்தால்மறக்கேன்" என்னுமவர்களிறே இவர்கள் தான், அவனை மறக்கவுமாம் நினைக்கவுமாம், வ்யஸநம்போமித்தனையே வேண்டுவது. இப்போது மறக்கவும் அமையும் என்றது மறக்கை உத்தேச்யமாய்ச் சொன்ன வார்த்தையன்றே; ஓடுகிற வ்யஸநாதிசயத்தைச் சொன்னபடியிறே. அலாபதசையில் ஸ்ம்ருதிதான் மிகவும் ஆற்றாமைக்கு உடலாயிருக்குமிறே, "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்," "காட்டேன்மின் நும்முரு என்னுயிர்க்கதுகாலன்" எனக்கடவதிறே. (என்னையே) இவ்வ்யக்தியொன்றுக்குமேயுள்ளதொரு வ்யஸநமாயிற்று. நாட்டார் ஸ்மரித்து துஃகநிவ்ருத்திபண்ணிக்கொண்டு போகாநின்றார்களிறே, அது செய்யலாமிறே ஸாதநபுத்த்யா இழிந்தார்க்கு, (*நிதித்யாஸிதவ்ய:*) என்று - ஸ்ம்ருதிதன்னையே விதியாநின்றதிறே; அவனுடையபடியிலே இழிந்தார்க்கிறே இதுள்ளது. ... ... (4)

அஞ்சாம் பாட்டு. ஆபத்தில் உதவும் அன்னையரும் தோழியரும் ஆராய்கிறிலர்கள், அவர்கள் உதவாதபோது உதவும் க்ருஷ்ணனும் வருகிறிலன், நான் சப்தாவசேஷையானேனென்கிறாள்.

ஆரென்னையாராய்வார் அன்னையரும்தோழியரும்*
நீரென்னேயென்னாதே நீளிரவுந்துஞ்சுவரால் *
காரன்னமேனி நங்கண்ணனும்வாரானால் *
பேரென்னைமாயாதால் வல்வினையேன்பின்னின்றே. 5

(ஆரென்னையாராய்வார்) (* தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா *) திருவடிசென்று ராக்ஷஸிகளை நலியப்புக; இவர்கள் ராவணன் சோறுண்டு அவனுக்கு பரதந்த்ரைகளாகையாலே என்னை நலிந்தார்களாகில், தங்களாலே வந்ததொன்றன்றாகில், அது தனக்கு நாமும் "பொறுத்தோம்" என்று, சேர்த்தரவு கொடுத்தபின்பு இனி இவற்றை நலிகிறதென்? என்ன; ராவணனும்பட்டானாகில் நம்மை நெடுநாள் நலிந்துபோந்த இப்பெண்பயல்களை இப்போது பொறுக்க வேண்டுகிறதென்? என்ன (* துர்பலா *) "சிலர் நம்மை நலிந்தார்கள்" என்று நாம் அவர்களை நலியப்புக்கால், அப்போதே அவர்கள் கண்குழிவுகாணமாட்டாதார் பின்பு செய்வதென் பொறுமல் ராவணனும்பட்டு, பெருமாளும் விஜயிகளானபின்பு, இனி இதொழிய வேறொரு தௌர்பல்ய மில்லையிறே. தன்னை நலிந்த ராக்ஷஸிகளையும், நீங்கள் அஞ்சாதேகொள்ளுங்கோள் என்று (* பவேயம் சரணம் ஹி வ: *) என்னக்கடவ அவள், இப்போது, தன்னை யாராய்வார் தேட்டமாய் - ஆரென்னையாராய்வா ரென்கிறாளிறே. (அன்னையருந் தோழியரும்) என் தசையைக்கண்டு என்னோடொக்க உறக்கந்துறந்தவர்களோடு, "உறக்கம் துறக்கக்கடவதன்று" என்று நிஷேதிக்குமவர்களோடு, வாசியற ஒக்கவெடுக்கும்படியாய் வந்து விழுந்தது. என் நினைவே நினைவாயிருக்குமவர்களோடு, தங்களுக்கென்ன ஒரு நினைவுண்டாய் நியமிக்கத் தக்கவர்களோடு வாசியற்றது. (அன்னையரும் தோழியரும் நீரென்னே யென்னுதே நீளிரவும் துஞ்சுவரால்) "துஞ்சுவரால் என்னுமிது - துஞ்சுகிரால் என்னும் அர்த்தம் பெற்றுக்கிடக்கிறது" என்று சொல்லுவாருமுண்டு. அன்னையரும் தோழியருமான நீங்கள், என்னேயென்னுதே - என்பட்டாய் என்னுதே யென்னுதல். அன்றிக்கே அன்னையரும் தோழியரும், நீரென்னே யென்னுதே - இதொருநீர்மை இருக்கும் படியே! என்னே! என்னுதே. அவன் தன்னைப் பொகட்டுப்போய் வேறுசில வற்றாலே போதுபோக்கித் தன்னை நினையாதேயிருக்கச் செய்தேயும், தான் அவனை யொழியப் போதுபோக்கமாட்டாதேயிருப்பதே! இதொருநீர்மையே! என்னே - இதென்ன ஆர்ச்சர்யம், என்னுதே - இப்படி சொல்லாதே. "நிரைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீரபேதையார் நட்பு." (நீளிரவும்துஞ்சுவரால்) எனக்கு உறங்காமையே ஸ்வபாவமாம்படி, நெடிதானராத்ரியெல்லாம் அவர்களுக்கு உறங்குகையே ஸ்வபாவமாய்விட்டது. (காரன்னமேனி) ஒருநீர்ச்சாவியிலே ஒரு பாட்டம் வர்ஷித்தாற்போலே குளிரும்படியான வடிவையுடையவனுமாய், * தாஸாமாவிரபூத் * என்கிறபடியே முன்பு உதவிப்போந்தவனும் வருகிறிலன். "தாஸாம்" என்கிறது - அவர்கள் பூர்வாவஸ்த்தையைப் பற்றவிறே. (நங்கண்ணனும்வாராரனுல்) பெண்களுக்கே உதவிப்போந்தவனும் வருகிறிலன் (பேரென்னை மாயாதால்) அவனோடு ஒவ்வாநின்றதீ! பேரும். அவன் வருகிறிலன், இது போகிறதில்லை. நான் கார்யத்திலே முடிந்தேனுயிருக்கச்செய்தேயும் "இன்னுள், இன்னுள்" என்கிற இப்பேர் என்னை முடிந்தேனுகவொட்டுகிறதில்லை. ஆழ்வாருடைய திருநாமம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸத்தாஹேதுவானப்போலே இவர் தமக்கும் ஸத்தாஹேதுவானபடி. அடியுடைய பேராகையாலே ஸர்வர்க்கும் தாரகமாயிருக்குமே. இதினுடைய அடியுடைமையிறே எல்லாரும் சிரஸாவஹிக்கிறது. (பேரென்னை மாயாதால்) சப்தாவசேஷையானேனென்றபடி (வல்வினையேன்) நான் முடியச்செய்தேயும் என்னை முடிந்தேனுகாதபடி பண்ணும்படியான பேரைப் படைக்கும்படியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (பின்னின்று) நான் முடியச்செய்தேயும் இப்பேரானது எனக்குப்பின்னும் நின்று முடிந்தேனுக வொட்டுகிறதில்லை. வருகிறபோது ஒக்கவந்தால், போகிறபோதும் ஒக்கப்போக வேண்டாவோ. (* நாமரூபே வ்யாகரவாணி,*) (* நாமரூபஞ்ச பூதாநாம் *) என்று ஒக்கச்சொல்லக்கடவதிறே, முற்பட வந்தார்க்கு முற்படப்போகவேண்டியிருக்க, பிற்படவும் போகலாகாதோ? ... ... (5)

ஆறும்பாட்டு. விரஹவ்யஸநமும் செல்லாநிற்க, ராத்திரியுமாய் ரக்ஷகனை வனும் வாராதொழிந்தால் முடியப்பெறாத ப்ராணனை ரக்ஷிப்பாராரென்கிறாள்.

பின்னின்றகாதல்நோய் நெஞ்சம்பெரிதடுமால் *
முன்னின்றிராவூழி கண்புதையமூடிற்றால் *
மன்னின்றசக்கரத்து எம்மாயவனும்வாரானால் *
இந்நின்றநீளாவி காப்பாராரிவ்விடத்தே. 6

(பின்னின்ற காதல்நோய்) புக்கவிடம்புக்கு வடிம்பிட்டுநலிகிற ப்ரேமவ்யாதியானது இடைந்தொதுங்குகைக்கு ஒரு நிழலில்லாதபடியிருக்கை. (நெஞ்சம்பெரிதடுமால்) நெஞ்சை மிகவும் நோவுபடுத்தாநின்றது. நெருப்பானது சருகினை வேவப்பண்ணி, பின்னையிறே புறம்பேபோய்ச்சுடுவது; அப்படியே, தான் கிடக்குமிடத்தை மிகவும் நலியாநின்றதாயிற்று. (முன்னின்று இத்யாதி) ப்ரேமவ்யாதியும் ராத்ரியாகிற கல்பமும் தன்னிலே ஸங்கேதித்து வந்தாப்போலே இராநின்றது. "நான் பின்னிட்டுவருகிறேன், நீ முன்னே தப்பாமே சூழ்ந்துகொள்" என்று வருவாரைப்போலே வந்தது. எதிரிகள் எளியரானால் அவர்கையில் வில்லைப் பறிப்பது க்ஷேபிப்பதாய்க்கொண்டு பரிபவிப்பாரைப்போலே, இத்தலையில் எளிமை கண்டு ராத்ரியாகிறவூழி, முன்னேநின்று கண்ணைமறையாநின்றது. உட்கண்ணைக் காதல் மறையாநின்றது, கட்கண்ணை ராத்ரி மறைத்தது. (கண்புதையமூடிற்றால்) க்ராஹகமுமாய் ப்ரகாசகமுமாயிருக்கிற சக்ஷுரிந்த்ரியத்தை, க்ராஹ்யமான இருள்வந்து மூடாநின்றது. அன்றிக்கே இருளோடொத்த நிறத்தையுடையவன் வந்து முன்னேநின்றாலும் காணவொண்ணாதபடி, இராவாகிறவூழி கண்ணை மறையாநின்றதென்னவுமாம். (மன்னின்ற இத்யாதி) "எப்போதும் கைகழலா நேமியான்" என்கிறபடியே, ஆச்ரிதர்க்கு விரோதிகளுண்டானபோதாக ஆயுதமெடுக்கப் பார்த்திராதே, எப்போதுமொக்கக் கையிலே விடாதேகொண்டிருக்குமாயிற்று. (எம்மாயவனும்) ப்ரகாசத்ரவ்யத்தையிட்டுத் தமஸ்ஸை அழைக்கவல்ல ஆச்சர்யபூதன். நிவர்த்தகத்தையிட்டு நிவர்த்யத்தை அழைக்குமவனுக்கு, நிவர்த்தகத்தையிட்டு நிவர்த்யத்தை நிவர்த்திப்பிக்கத் தட்டுண்டோ? (வாரானால்) இங்கு ஸங்கல்பம் அழியவேண்டா, வருவதாக நினைக்கவமையும். (* ஸம்பவாம்யாத்மமாயயா *) வருவதாக இச்சிக்கவமையும். "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், ப்ரகாசத்ரவ்யத்தையிட்டுத் தமஸ்ஸைப் போக்கக்கடவதென்கிற மர்யாதையைக் குலைக்கையுமாகிற இவைவேண்டா, தான்வரவமையும்; நிவர்த்தக ஸ்வபாவத்தாலே நிவர்த்யம் தன்னடையேபோம். (இந்நின்றநீளாவிகாப்பாரார்) முடியவேண்டுமளவிலே நூறேபிராயமாயிருக்கிற இவ்வாத்மவஸ்துவை முடித்து நோக்குவாரார். (* அச்சேத்யோயமதாஹ்யோயம் *) என்கிற வசநத்தைக்கொண்டு நின்று வழக்குப் பேசாநின்றதாயிற்று ஆத்மவஸ்து. இத்தைமுடித்து நம்மை நோக்குவார் ஆர்? என்கிறதென்று இப்படி முறுகச்சொன்னதுதன்னை, ஒரு தமிழன் இச்சப்தத்துக்குத் தாத்பர்யமாக இட்டுவைக்கிறான் "பிரிவினும் முடியாத என்னுயிர்ப்பகையை நீக்கி, என்னை நோக்குவாரார்" என்று. (இவ்விடத்தே) ஸர்வரக்ஷகனைவனுமுதவாத இவ்வவஸ்தையில் இனிமுடிந்து பிழைக்கையிறே ஸுகம். ... ... (6)

ஏழாம்பாட்டு. ராத்ரியாகிற யுகம் செல்லாநிற்க அவன் வந்து தோற்றாமையாலே, அநிமிஷராகையாலே உறங்காத தைவங்களைக் குறித்து, நான் என் செய்வேனென்கிறாள்.

காப்பாராரிவ்விடத்துக் கங்கிருளின் நுண் துளியாய் *
சேட்பாலதூழியாய்ச் செல்கின்றகங்குல்வாய் *
தூப்பாலவெண்சங்கு சக்கரத்தன்தோன்றானால் *
தீப்பாலவல்வினையேன் தெய்வங்காளென்செய்கேனோ ? (7)

[காப்பாராரிவ்விடத்து] ரக்ஷகனானவன் உதவாதிருக்க, இவ்வளவில் பாதகரானார் ரக்ஷகராகவோ. ரக்ஷகனானவன் வரவுதாழ்த்தாலும் இப்புத்தி பிறவாதிருக்கக் கடவ இவள் இப்போது “காப்பாரார்” என்று இவ்வார்த்தைசொல்லும்படி காணும் பிறந்த தசாவிசேஷம். [*சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம்*] திருவடி, பிராட்டியை, “பெருமாள் பாடேற இனியெழுந்தருளவமையாதோ?” என்ன ; ராக்ஷஸஸங்குலையானவித்தை ராமசரஸங்குலை யாக்கிக்காண் நாம் போவது, வேற்றுமனிசர் முகத்திலே விழித்துப்போகவோ? [*பரபுரார்த்தந:*] அவரோடே விரோதித்து இதுக்குமுன்பு ஜீவித்துப்போந்ததும் ஒருபடை வீடுண்டோ? [*மாம் நயேத்யதி*] [*நயாமி பரமாம்கதிம்*] என்கிறவர் இரண்டு வார்த்தை சொல்லுவரோ? [காகுத்ஸ்த்த:*] இந்த்ராதிகள்விரோதிகளையும் போக்குங்குடியிலே பிறந்தவர் ஸ்வகார்யத்தில் சோரநிற்பரோ? [தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்*] அவர்க்கு அநுரூபமானவற்றைச் செய்துபோகக்கடவ நாம். நம்முடைய ஆற்றாமை பரிஹரிக்கைக்காக அவர்க்கு நிறக்கேடானவற்றைச் செய்யவோ, “ராம மஹிஷியை ஒரு ராக்ஷஸன்பிரிக்க, அவள் சபித்துப்போனாள்” என்னுதல், “ஒரு குரங்குமீட்டது” என்னுதல் செய்கையாகிறவிது, அவர் வில்வலிக்கு வசையாங்காண் ; அவர் வம்சத்துக்குக் கொத்தையாங்காண். அவர் விஷயத்தில் ராவணன் செய்தத்தை நாமும் செய்யவோ? ராமதநத்தை “என்னது” என்றாரோடு ஒப்பர்களிறே அவருடைய ரக்ஷணத்தைத் தந்தலையிலே ஏறிட்டுக்கொள்ளுமவர்கள். ஏதேனும் பயஹேதுக்களுண்டானாலும் அஞ்சாதேயிருக்கக்கடவ இவள் பிரிவாற்றாமைக்கு அஞ்சினபடியிறே இவ்வார்த்தை சொல்லிற்று. [*கஜம்வேத்யாதி, நாஹாரயதி ஸந்த்ராஸம்*] ஸ்வரூபப்ரயுக்தமான ஸத்ரீத்வம் போயிற்று. [*பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா*] பயஹேதுக்களுக்கு அஞ்சுவர்களோ கணையத்துக்குள்ளேயிருப்பார். ஆனைத்திரள்கள் ஸிம்ஹத்திரள்களளவல்லவிறேயிது.

[காப்பாராரிவ்விடத்து] “ரக்ஷ்யமிவை, ரக்ஷகனிவன்” என்று தெளிந்து அறுதியிட்டு “அம்ம என்று அப்புக்தட்டியிருந்தவளிறே இப்போது “காப்பாரார்” என்கிறாள், பிறந்த ஆற்றாமையின் அதிசயம். அவனுடைய ஸர்வரக்ஷகத்வம் ஓர் அச்சாயிறேயிருப்பது, இவர் அல்லிலே கிடந்து நோவுபடுகிறாரிறே. அவனுண்டாயிருக்க, முதலிலே, க்லேசமில்லையிறே ஒருவர்க்கும். [கங்கிருளில்] கங்கென்று - எல்லையாய், எல்லையான இருளென்னுதல்; [கங்கென்று] மருங்குலை “மருங்கு” என்னுமாபோலே, கங்குலை கங்கென்று குறைத்துக் கிடக்கிறதாய், கங்குலிருளென்னுதல். அப்போது, கங்குல்வாய் என்கிறவிடம் - தசராத்ரம் ஸப்தராத்ரம் என்றால் பத்துநாள், ஏழுநாளென்று காலபரமாகிறவோபாதி, இதுவும் காலபரமாகிறது. [நுண் துளியாய்] தடித்தவிருளும், நேரியதுளியுமாய். [சேட்பால இத்யாதி] மிக்கநெடுமையை ஸ்வபாவமாகவுடைத்தான கல்பமாய்க்கொண்டுசெல்லுகிற, கங்குல்வாய் - ராத்ரியிடத்து - தமிழாசாரியன் என்று தமிழர்க்கு அகஸ்த்யனோபாதியாயிருப்பானொருவன், செல்கின்ற நாளகத்து” என்று வ்யாக்யாநம் பண்ணிவைத்தான். [தூப்பால இத்யாதி] இருளைப்போக்கும்போது சந்த்ராதித்யர்கள் சேரவுதித்தாற்போலேயிருக்கிற திவ்யாயுதங்களையுடையவன் வருகிறிலன். அந்தச்சந்த்ராதித்யர்கள் வேணுங்காணும், இவ்விருளைப் போக்கும்போது. “ஆங்கத்திகிரிசுடரென்றும் வெண்சங்கம் வானில் பகருமதியென்றும்” என்று சொல்லக்கடவதிறே. பண்டே இவள்கைகண்டு வைத்தவையிறே இவைதான். இருளோடே சீறுபாறு

என்று போக்குவானொருவனும், இருளோடே கண்கலந்துநின்று போக்குவானொருவனுமாயிற்று. [தூப்பால வெண்சங்கு] தூய்மையை ஸ்வபாவமாக உடைத்தான வெண்சங்கு. அன்றிக்கே, பாலென்பது - இடமாய், குறைவற்ற இடத்தையுடைத்தாயிருக்கிற. "பெருமுழக்கு" என்னக்கடவதிறே, 'ஸம்பூர்ணேதரநிஸ்ஸ்ருதத்வநி' என்னக்கடவதிறே. தூய்மையால் - குறைவறுதலைக் காட்டுமோ? என்னில்;— "அவன் இவ்வர்த்தத்தில் தூயன்காண்" என்கையாகிறது - அதில் குறைவற்றிருக்குமென்கையிறே; லக்ஷணையிருக்கிறபடி. அன்றிக்கே, [வெண்சங்கு] இத்தாலும், தூய்மையாலும் - வெளுப்பின் மிகுதியைச் சொல்லுகிறதாகவுமாம்; அப்போது பதாந்தர வ்யவதாநத்தாலே அதுதான் யுக்தமல்ல. [தீப்பாலவல்வினையேன்] தீயஸ்வபாவத்தையுடைத்தாய், பேர்க்கப்பேராதபடி கனவிய பாபத்தைப் பண்ணின நான். அதாவது - ரக்ஷணத்திலே தீக்ஷித்து, ரக்ஷிக்கைக்கு ப்ராப்தனாய், அதுக்கென்னக் கருவி பிடித்திருக்கிறவனுங்கூட உதவாதபடியான பாபமிறே. [தெய்வங்காளென்செய்கேனே] தெய்வங்களோடு இவளுக்கு ஒரு ஸாம்யமுண்டு; அவர்கள் பிறப்பே அநிமிஷர், இவள்தானே "உண்டோகண்கள் துஞ்சுதல்" என்றிருக்கும். இப்போதுதான் இருளுக்கஞ்சியுமுறங்காள்; தன்தசையைக் கண்டதுக்கு அவர்கள் உறங்காதேயிருக்கிறார்களாகக்கொண்டு, அவர்களைத் தஞ்சமாக நினைத்துக் கேட்கிறாள். சிறையுறவுபோலே. தோழிமாருங்கூட உறங்கா நிற்கச்செய்தே அவர்கள் உறங்காதிருக்கையாலே, அவர்களிற்காட்டிலும் இவர்களை அண்ணியவுறவாக நினைத்துச்சொல்லுகிறாள். "ஆயுமமருலகுந்துஞ்சிலும்" என்று - தாய்மாரோடொக்க எடுக்கக்கடவதிறே தேவதைகளையும். ஆர்த்திமிக்கால் "அம்மே! என்செய்வேன்" என்றாற்போலே இருகிறது காணும். ... (7)

எட்டாம்பாட்டு. ஏகராத்ரி அநேகயுகமாய் மிகவும் நலியாநின்றது, எம்பெருமானும் வருகிறிலன், அதுக்குமேலே தென்றலும் நலியாநின்றதென்கிறாள்.

தெய்வங்காளென்செய்கேன்? ஓரிரவேழூழியாய் *
மெய்வந்துநின்று எனதாவிமெலிவிக்கும் *
கைவந்தசக்கரத்து என்கண்ணனும்வாரானால் *
தைவந்ததண்தென்றல் வெஞ்சுடரில்தானடுமே. (8)

(தெய்வங்காளென்செய்கேன்) மற்றும் உறங்காதிருப்பாருண்டாகிலிறே அவர்களைப் பார்த்துச்சொல்லுவது. (ஓரிரவேழூழியாய்) கீழ் "ஊழியாய்" என்றவிடம் - ராத்ரி மாத்ரமாய்நின்று நலிந்ததென்னும்படி, இது அநேககல்பமாய் நலியாநின்றது. ஸௌபரி, போகத்துக்கு அநேகம் வடிவுகொண்டாற்போலே, இது பாதிக்கைக்கு அநேகம் வடிவுகொள்ளாநின்றது. (மெய்வந்துநின்று) ராவணன் இடம்பார்த்து வந்தாப்போலே விரஹதசையறிந்து நலியாநின்றது. ஈச்வரன்மர்யாதை குலைக்கவொண்ணாமை வந்தமாத்ரமன்றிக்கே, தனக்கே ஆக்ரஹமுடையாரைப்போலே மெய்யே முன்னேவந்து நின்று. (எனதாவி மெலிவிக்கும்) போனவுயிரை மீளக்கொடுத்து நலியவற்றாயிற்று. "சென்றற்றது" என்னும்படியிருக்கிற என்னுடைய ஆவியையுண்டாக்கி நலியாநின்றது. மோர்க்குழம்புகொடுத்துத்தேற்றி, விடுநகங்கட்டி நலிவாரைப்போலே. (கைவந்தசக்கரத்து) இவ்வ்யஸநத்தைப் பரிஹரிக்கைக்குப் பரிகரமில்லாமல்தான் இருக்கிறானோ? அழையாதிருக்கச் செய்தேயும் நினைவறிந்து கையிலே வந்திருக்கும் திருவாழியையுடையவன். அற விதேயமான பரிகரத்தை யுடையவனென்றபடி. பாவஜ்ஞமாய்க் காரியஞ்செய்யும் பரிகரத்தையுடையவன். (*பாவஜ்ஞேந*) ஸ்ரீ பர்ணசாலை சமைக்கும்போது இளையபெருமாள்; ருஷிகளுக்கு ஓலக்கங்கொடுத்திருக்குமிடம் பண்ணும்படியும், அக்நிசாலை சமைக்குமிடமும், இவையிறே பெருமாள் அருளிச்செய்வது; பிராட்டியுந் தாமும் ஏகாந்தமாக இருக்கும்படிகள் இவருடன்

தாம் அருளிச்செய்யாரே, அவையடையக் கருத்தறிந்து செய்வாராயிற்று. அவர் * தூதுசெய்கண்கள்கொண்டு ஒன்றுபேசினுல். இவரும் செவிகண்ணுகக் கேட்டுச் சமைக்குமித்தனை (* க்ருதஜ்ஞேந –) வருந்தி இவர் நினைவைப் பின்சென்றமாத்ர மன்றிக்கே; அறுபதிணுயிரமாண்டு மலடுநின்று பிள்ளைபெற்ற சக்ரவர்த்தி, பெருமாளுக்குப் பொருந்துமிடம்பார்த்து மாளிகைசமைத்து முன்பு செய்துபோந்த கட்டளைகளறிந்து, அப்படியே செய்தாராயிற்று. (* தர்மஜ்ஞேந *) இதுதான் “தம்பியாயிருந்து இப்படிச்செய்தார்” என்று குணமாகையன்றிக்கே, “இது கர்த்தவ்யம்” என்றுசெய்தார். “உஜ்ஜீவநஹேதுவான அநுஷ்டேயதர்மமிது” என்று செய்தார். (* த்வயா புத்ரேண *) போன ஐயருக்கு நிரயநிஸ்தாரகர் நீரேயிறே. “நாம் உள்ளதனையும் இவருடைய ரக்ஷணம் இப்படி செல்லுகிறது, நமக்குப்பின்பு இவர்க்கு ரக்ஷகரார், என்செய்யக்கடவது” என்று இதுவே யாயிற்று அவர்க்கு எப்போதும் நெஞ்சாறல்; அவர் செய்யுமவற்றை நீர் செய்கை யாலே அவர்க்கு து:கநிவர்த்தகர் நீரேயிறே. (* தர்மாத்மா *) ஐயருமொருவரே தான்! பரமதார்மிகர்கிடீர்; தாம் இருந்த நாளும் நமக்குவேண்டும் ரக்ஷணங்கள் பண்ணி, தாம்போன நாளைக்கும் தண்ணீர்ப்பந்தல் வைப்பாரோபாதி உம்மை வைத்துப்போவதே! (* நஸம்வ்ருத்த: பிதா மம *) நாம் ஐயரை இழந்திலோமிறே, நீர் இழந்தீராகிலித்தனையிறே. * ராமஸ்ய தக்ஷிணோ பாஹு: * என்கிறபடியே விதேயமாய்க் காரியஞ்செய்யும் பரிகரத்தையுடையவர். (கண்ணன்) ஸ்ரீ பீஷ்மரைத் தொடருகிறபோது கையிலேவந்திருந்ததிறே திருவாழி. ஸ்ரீ பீஷ்மர் நெடும்போது பொருதபடியாலே அர்ஜுநன் இளைத்தான், அவன் இளைத்தவாறே ஸர்வேச்வரன் தன்ப்ரதிஜ்ஞையை மறந்தான். தேரில் நின்றும் குதித்துத் திருவாழியைக் கொண்டு தொடர்ந்தான். வந்துகொன்றருளீர் என்கிறுன். (* ஏஹ்யேஹீத்யாதி *) என்றும் ஆணைமறுத்தாலும் சேதமில்லையீ! இச்சீறிச்சிவந்த கண்ணழகை அநுபவிக்கப்பெற்றால். (* ப்ரஸஹ்ய *) தேவர்க்கும் வீரத்துக்கும் தோலேன், என்கையிலாயுதத்தைப்பொகடச்சொல்லித் தலையையறுத்தருளீர். (*லோகநாத*) வீரத்துக்குத்தோலேனுகிலும் முதன்மைக்குத் தோற்பனிறே. (என்கண்ணன்) ஆச்ரிதர்க்காக ப்ரதிஜ்ஞையை அழியமாறுமவனிறே. ஆச்ரிதரிலே ஒருவர்க்குச் செய்தது எல்லார்க்குமாயிருக்குமே. “ஆச்ரிதர்க்காக ப்ரதிஜ்ஞையையழிய மாறும்” என்னுமிது தஞ்சமாகவிறே இவனைப்பற்றுகிறார் பற்றுகிறது. தனக் கென்னவும் சில நியதமாயிருக்குமாகில் இவனைப் பற்றுவார்க்குப் பலமில்லை. (தைவந்ததண்தென்றல்) குளிர்ந்த காலத்திலே வந்த குளிர்ந்த தென்றலென்னுதல்; தைவருகையாவது - தடவுகையாய், காந்தனுடைய கரஸ்பர்சத்துக்கு ஸ்மாரகமாயிராநின்றதாயிற்றுக் குளிர்ந்த தென்றல். “தான்சென்று மண் மகளைத் தைவந்தான்” என்று ப்ரயோகித்தார்களிறே. (வெஞ்சுடரில் தானடுமே) வெவ்விய சுடரிற்காட்டில் அடுமென்னுதல், சுடர்போலே நலியாநின்றதென்னு தல். லௌகிகாக்நியிற்காட்டில் நரகாக்நிக்குள்ள வாசிபோருமிறே பிரிந்த ஸமயத்தில் அநுகூலபதார்த்தத்துக்கு. ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. ராத்ரியும் நலியாநின்றது, ஸூர்யோதயமும் “நமக்கு” என்றவாறே ப்ரார்த்த்யமாய்விட்டது, ரக்ஷகனனவனும் தோற்றுகிறிலன், என் மநோதுக்கத்தை இனிப்போக்குவார் ஆரென்கிறுள்.

வெஞ்சுடரில்தானடுமால் வீங்கிருளின் நுண் துளியாய் *
அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர்தோன்றுதால் *
செஞ்சுடர்த்தாமரைக்கண் செல்வனும்வாராறுல் *
நெஞ்சிடர்தீர்ப்பாரினியார் ? நின்றுருகுகின்றேனே. (9)

(வெஞ்சுடரில் இத்யாதி) ராவணன் மாரீசஸஹாயனுய்க்கொண்டு வந்து தோற்றினாப்போலேயாயிற்று நுண்ணிய துளியோடே செறிந்த இருள்வந்து தோன்றினபடி. இரண்டும் போகத்துக்கு ஏகாந்தமாயிருக்குமிறே. "ஒழுகு நுண்பனி" இத்யாதி - வர்ஷாவில் கைக்குள்ளேயடங்க அணைக்கவேணும். இருள்தானே போகவர்த்தகமிறே. (வீங்கிருளின் நுண்துளியாய் - வெஞ்சுடரில்தானடுமால்) வளர்ந்த இருளும், நுண்ணிய பனியும், வெவ்விய சுடரிற் காட்டில் அடாநின்றதென்னுதல், வெஞ்சுடர்போலே அடாநின்றதென்னுதல். இவற்றில் ப்ரதாநமெது? என்னில்; — அதுவெணுமோ, "பாதகங்களிரண்டுண்டு" என்னவமையாதோ. இனித்தான் இத்திருவாய்மொழிதன்னில் - ராத்ரி வ்யஸநமிறே சொல்லிப்போருகிறது; ஆனபின்பு, இருளுக்கே ப்ராதாந்யமாக வமையுமிறே. (அஞ்சுடர் இத்யாதி) இளையபெருமாள் அகலநின்றாப்போலேயாயிற்று இது. தன்னுடைய தோற்றரவிலே துக்கநிவ்ருத்தியுண்டாம்படியான அழகிய சுடரையுடைய ஆதித்யனும் வருகிறிலன். (தோன்றுதால்) ப்ரளயத்தில் அல்பசேஷமாம்படி நீஞ்சி, "கரையைக்கிட்டினோமோ, கிட்டினோமோ!" என்று பார்ப்பாரைப்போலேகாணும் ராத்ரியெல்லாம் நோவுபட்டு "விடிந்ததோ, விடிந்ததோ" என்று பார்க்கிறபடி. (செஞ்சுடர் இத்யாதி) *தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ* என்று ஆதித்ய மண்டலத்திலே எழுந்தருளியிருக்கிறவனும் வருகிறிலன். ஆதித்யனுடைய வரவுக்கு அருணோதயம்போலே இருப்பதொன்றிறே, அவனுடைய வரவுக்கு ஆதித்யனுடைய தோற்றரவு. சிவந்த சுடரையுடைய தாமரைபோன்ற கண்களையுடைய ஸ்ரீமானும் வருகிறிலன். ஆதித்யன் வந்தாலும் இருள்வர ஸம்பாவனையுண்டிறே, அஸ்தமியாத ஆதித்யனும் வருகிறிலன். அவனுடைய பிரகாசமும் ப்ராதேசிகமாயிருக்குமிறே. உபயவிபூதிக்கும் ப்ரகாசத்தைப்பண்ணுமவனிறே இவன். "பகற்கண்டேன் நாரணனைக்கண்டேன்" என்னக்கடவதிறே. (நெஞ்சிடர் தீர்ப்பாரினியார்) ஆந்தரமான தமஸ்ஸைப் போக்குவாரார்? பாஹ்யமான தமஸ்ஸைப் போக்குவனிறே அவன்; ஆந்தரமான தமஸ்ஸாகிறது வயிரம்பற்றின இடரிறே; அத்தைப்போக்கும்போது, நிலவனுமாய் அந்தரங்கனுமானவனே வேணும். "ஞானமாகி ஞாயிறாகி" என்னக்கடவதிறே. (நின்றுருகுகின்றேனே - நெஞ்சிடர்தீர்ப்பாரினியார்) விலக்ஷணவிஷயத்தில் விச்லேஷம், உருகிற்றாய் தர்மிலோபம் பிறக்கவுமொட்டாது, தரிக்கவுமொட்டாது, முடியவுருகினபடியே நிற்குமித்தனை. "இன்னமொருகால் காணலாமோ" என்னும் நசை முடியவொட்டாது, அப்போதை யிழவு ஜீவிக்கவுமொட்டாது. ... ... (9)

பத்தாம்பாட்டு. இந்த ராத்ரியில் என்னுடைய வ்யஸநத்தைக்கண்டுவைத்து அவன்திறமாக ஒருவார்த்தைசொல்லாதே லோகமாகவுறங்குவதே! என்கிறாள்.

நின்றுருகுகின்றேனேபோல நெடுவானம் *
சென்றுருகிநுண்துளியாய்ச் செல்கின்றகங்குல்வாய் *
அன்றொருகால்வையம் அளந்தபிரான்வாரானென்று *
ஒன்றொருகாற்சொல்லாது உலகோவுறங்குமே. (10)

(நின்று இத்யாதி) பரப்பையுடைத்தான, சகலபதார்த்தங்களுக்கும் அவகாசப்ரதாநம் பண்ணும் ஆகாசமானது, சென்றற்று நுண்ணிய துளியாய் இற்றுவிழாநின்றது. ஆரைப்போலேயென்றால், (நின்று உருகுகின்றேனேபோல) ப்ரத்யக்ஷித்தத்தையிறே உபமானமாகச்சொல்லுவது. (மஹாதத்த்வமான ஆகாசம் அழிகிறபடிக்கு வேறு த்ருஷ்டாந்தமில்லை, என்னைச் சொல்லுமித்தனை. அளவுடையாரெல்லாரும் அழிகிற காலமாகாதே.) *யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத் தேஜ:* என்று பெரியவர்களுடைய பெருமையும் தன்ஸம்பந்தத்

தாலேயாம்படி யிருக்குமவளிறே. "ச்ரிய:பதியாகையாலே ஸர்வாதிகன்" என்னக்கடவதிறே. இப்படிசெல்லுகிற இரவிடத்து. (அன்றொருகால் இத்யாதி) "பிரிவாற்றாமையிலும் ஜீவிக்கைக்கு நிமித்தம் அவனுடைய அடிப்பாடு - வரையாதே எல்லாரையுமொக்க ரக்ஷித்தவன், தன்னாலேவந்த ஆற்றாமையைப் பரிஹரியாதிருக்குமோ' என்னுமதிறே, அதுவும் அவனுக்கு புழுக்குறித்தது எழுத்தானாற்போலே காதாசித்கமாக வந்ததொன்று, அது அவனுக்கு நியஸ்தவபாவமன்றுகாண்" என்று சொல்லுகிறாரில்லை. (அன்றொருகால்) அன்று அங்ஙனே ஒருகால் செய்தானித்தனை, அவனுக்கு எற்றைக்கும் நியதமாயிருப்பதொரு ஸ்வபாவமன்றுகாண் என்கிறாரில்லை. (பிரான்) - என்னுகிற்கச்செய்தேயிறே (வாரான்) என்கிறது. "'லோகத்தையடைய அளந்துகொண்ட உபகாரகனன்றோ' என்று நினைக்கிறாயாகில், பெறுக்காறு பெருகினாற்போலே அது அங்ஙனே ஒருகால் செய்துபோனவித்தனை, வாரமையேகாண் ஸ்வபாவம்" என்கிறாரில்லை. (ஒன்று) - "வாரான்" என்னவேண்டா, "வரும்" என்னவுமமையும். "இன்னம்வரும்" என்னும் நசைகொண்டு ஜீவிக்க இருப்பார்க்கிறே "வரும்" என்றே சொல்லவேண்டுவது "வரும்" என்னவுமாம்; வாரான் என்னவுமாம். (ஒருகால்)-ஒருகால்சொன்னால் பின்னையும் ஜீவிப்பார்க்கிறே. இருகால்மட்டுச் சொல்லவேண்டுவது. "அவன் இனிவாரான்" என்று அறிந்தபோதே மூச்சடங்குமிறே. (உலகுஒ! உறங்குமே) - "அன்னையரும்தோழியரும் உறங்காநின்றார்கள்" என்று இன்னாதானத்தை, லோகத்தையடைய இன்னாதாம்படிகாணும் அதுக்குப் பின்பு பிறந்த தசாவிசேஷம். பிரிந்தவனோடொத்ததீ! இந்தலோகம். ... (10)

நிகமத்தில், இவர்பாசுரங்கேட்டார், இவர்தசையை யநுஸந்தித்தார் பிழையார்களென்கிறார். (பரமபதஸித்தி சொல்லிற்று.) முடிந்தார் புகலிடம் அதுவாகையாலே சொன்னவித்தனை.

உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை*
சிறந்தபொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொல்*
நிறங்கிளர்ந்தவந்தாதி ஆயிரத்துளிப்பத்தால்*
இறந்துபோய்வைகுந்தம் சேராவாறெங்ஙனேயோ. (11)

உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை) - அவன்வரவு தாழ்க்கையாலே "நம்மைமறந்து உறங்குகிறானோ" என்று சொன்னவித்தனை, அவன் உறங்குகிறிலன்; நம்முடைய ரக்ஷணசிந்தை பண்ணுகிறானித்தனை. *நித்ராஸி ஜாகர்யயா* அந்யபரதையைத்தவிர்ந்து நம்முடையரக்ஷணசிந்தை பண்ணுகிறானித்தனையல்லது, மறந்து உறங்குகிறானல்லன். மேல் உஜ்ஜீவிப்பிக்கவிருக்கிற ஸர்வேச்வரன், இவ்வளவிலே தன்படிகளை ஸ்மரிப்பித்தான். (சிறந்த பொழில்) - அவன் ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறபடியை அநுஸந்தித்து இவர் தரித்தவாறே, ஊரும்தரித்தது. விரஹத்தில் * அபி வ்ருக்ஷா: * என்றும், வரவணித்தானால் *அகாலபலிநோ வ்ருக்ஷா:* என்றும் சொல்லலாம்படியாயிறே யிருப்பது. (நிறங்கிளர்ந்தவந்தாதி) - பண்ணிலே கிளர்ந்த அந்தாதி. (இப்பத்தால் இத்யாதி) - இப்பத்தையும் அநுஸந்தித்தவர்களுக்கு, பகவத்விரஹத்தில் இவரைப்போலே "பேரென்னைமாயாதால்" என்று முடிவுதேட்டமாய் நோவுபடுமது வேண்டா; இத்தை அநுஸந்தித்தவர்கள் பிழையார்கள். இப்பாசுரத்தைக்கேட்டு பிழைக்கமாட்டாதவர்கள் புகும் தேசம் பரமபதமாகையாலே சொன்னவித்தனை - இவ்விடம். இத்தால் ஒருபலம்சொல்லிற்றாகவும் வேணுமிறே, இது என் சொல்லிற்று? என்னில், - பகவத்விஷயத்தில் அவகாஹித்தவர்களுடைய பாசுரம் கேட்டவர்களுக்கு, ப்ரக்ருதிவிச்லேஷாநந்தரம், அவர்கள் ப்ராப்யமாக நினைத்திருக்கும் தேசப்ராப்தி தப்பாதென்கை. பகவத்ப்ரவணரானார் பாசுரங்கேட்டுப்

பொறுக்கமாட்டாதே ஈடுபட்டு ப்ரக்ருதிவிச்லேஷம் பிறந்தவர்கள், அவர்களுக்கு உத்தேச்யமான தேசத்தைக் கிட்டாதொழியவிரகுண்டோ. (இப்பத்தாலிறந்து போய் வைகுந்தம்சேராவாரெங்ஙனேயோ) "நீளிரவாய்நீண்டதால்", "ஒண்சுடரோன்வாராதொளித்தான்" என்று - இங்கேயிருந்து க்லேசப்படாதே, அஸ்தமியாத ஆதித்யனும் அஸ்தமியாத பகலுமான தேசத்திலே புகப்பெறுவர். ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஊர நினைந்தமடலூரவுமொண்ணுதபடி*
கூரிருள்சேர்கங்குலுடன் கூடிநின்று - பேராமல்*
தீதுசெய்யமாறன் திருவுள்ளத்துச்சென்றதுயர்*
ஓதுவதிங்கெங்ஙனேயோ. (44)

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாந்திருவாய்மொழி—எங்ஙனேயோ ப்ரவேசம்

*மாசறுசோதியிலே "நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்று மடலூரப் பாரித்தாள்; பாரித்தபடியே தலைக்கட்டப்பெறாமையாலே "*ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய், முதலிலே மடலூருகைக்கு விஷயந்தான் இல்லாதபடி பழிசொல்லுவாருங்கூட உறங்கிற்று" என்று வெறுத்தாள். "அஞ்சுடர வெய்யோன் அணிநெடுந்தேர்தோன்றாதால்" என்று ஆதித்யோதயத்துக்கு ஸூசகமுங்கூட இல்லையாயிற்றென்று வெறுத்தாள்; "நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே" என்று - ஒன்றை ஸ்மரித்து தரிக்கைக்கு விரகற்றதென்றும் வெறுத்தாள். *மாசறுசோதியில் - ப்ராப்யத்வரையாலே உபாயாத்யவஸாயம் கலங்கினபடி; *ஊரெல்லாந்துஞ்சியில் - அத்த்வரையுங்கூடக் கலங்கினபடி; இதில் - "ரக்ஷகன் அவன்" என்னும்தெளிவும் செல்லாநிற்க, ப்ராப்யருசி நலிகிறபடி. இக்குறைகளெல்லாம் தீரும்படி போதும் விடியப்பெற்று, "அன்னையருந்தோழியரும்" என்கிற இழவுதீர. உகப்பாரும் பொடிவாரும் ஹிதஞ்சொல்லுவாருமாகப் பெற்றது. அநந்தரம் பந்துவர்க்கமடைய உணர்ந்து "தீர்ந்தவென்தோழி" என்று இவளுடைய துணிவுகண்டு உகப்பாரும், "தோழிமீரென்னையினி யுமக்காசையில்லை" என்னவேண்டும்படி ஹிதஞ்சொல்லி யலைப்பாருமாகப்பெற்றது; அவ்வழியாலே அவர்கள் தாங்கள் இவ்விஷயத்துக்கு ஸ்மாரகராவார்களிறே. ஆதித்யனும் உதித்து, பதார்த்ததர்சநம் பண்ணப்பெறுகையாலே வ்யஸநமும் பாலிபாயப் பெற்றது. இவ்வளவு ஆச்வாஸமுண்டானவாறே, நெஞ்சு ஸ்மரித்து தரிக்கைக்கு ஸஹகாரியாயிற்று. இப்படி ராத்ரி வ்யஸநம்போம்படி போதுவிடியப்பெறுகையாலே ஒருதரிப்புமுண்டாய், அவனை அநுபவிக்கப்பெறாமையாலே ஆற்றாமைக்கு முடலாய் நோவுபட்டுச்செல்லாநிற்க, உணர்ந்த பந்துக்களடைய, "நீ இப்படி இவ்விஷயத்திலே அதிமாத்ரப்ரவணையாகிற இது உனக்குக்குடிப்பழி, உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப்போராது, அவன் தலைமைக்கும் போராது" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, "இவர்கள் உகந்தருளின நிலங்களில் வாசியறியார்கள்" என்றிருந்தாளிவள், "நீங்கள் சிலர் காட்டக் கண்டிகோளல்லாமையாலே இவ்விஷயத்தை உள்ளபடி அறிந்திலிகோள்" நான் அங்ஙனன்றிக்கே, அவன்தானே மயர்வறமதிநலமருளித் தன்னைக்காட்டக் காண்கையாலே உள்ளபடி கண்டேன்; ஆகையாலே, நம்பியுடைய வடிவழகிலும் ஒப்பனையழகிலும் ஆபரணச்சேர்த்தியிலும் வேண்டற்பாட்டிலும், நான் உங்கள் ஹிதவசநத்துக்கு மீளாதபடி அகப்

பட்டேன்'; என்று இங்ஙனே தன்படிகளைச் சொல்லாநிற்கச்செய்தே; "ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு அறியவொண்ணாதபடியாகப் பெற்றோமிறே, இவ்வஸ்து தான் உண்டாகப் பெற்றால் நாம் பெற்றபோது பெருகிறோம், பிறரறியாதொழியப் பெற்றோமிறே" என்னும் ப்ரீதியோடே தலைக்கட்டுகிறது. ஆக, போதும் விடிந்து ஹிதஞ்சொல்லியலைப்பாரும் உண்டாகப்பெறுகையாலே ஒருதரிப்பும், அதுதான் நினைத்தவிடிவாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; அவனை ஸ்மரிக்கப் பெறுகையாலே ஒரு ப்ரீதியும், அதுதான் அநுபவமாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; ஆதித்யனுதித்துப் பதார்த்ததர்சநம் பண்ணப்பெறுகையாலே ஒருப்ரீதியும், அதுதான் ;அவனைக்காணப்பெறாமையாலே ஒரு அப்ரீதியுமாய்; ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது.

*ஏழையராவியும் - உருவெளிப்பாடாயிருக்கச்செய்தே, அதில் இதுக்கு வாசி-அதில், "இணைக்கூற்றங்கொலோ" என்றும், "உய்விடமேழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும் எவ்விடம்,' என்றும், பாதகத்வம் உறைத்திருக்கும்; இதில் - கீழ்ப்பிறந்த துஃகநிவ்ருத்தி யுண்டாம்படி ஸ்மரித்து தரிக்கவும்பெற்று அதுதான் அநுபவமாகப்பெறாமையாலே வந்த அப்ரீதியுமாய், இப்படி ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது. ஜாபாலிபகவானும் வார்த்தை சொல்லி, "ஸ்ரீ வஸிஷ்டபகவானும் இக்குடியில்போந்தபடிகளையுமெல்லாம்சொல்லி, "இனி மீண்டும் திருவபிஷேகம் பண்ணவமையும்" என்ன, பெருமாள் "அங்ஙன்செய்வதில்லை" என்று முடிய நின்றபடியைக் கண்டவாறே, பௌரஜநங்களெல்லாம் உகப்பதுஞ்செய்தார்கள் வெறுப்பதுஞ்செய்தார்கள்; "ரக்ஷகனானவன் தொடங்கினகார்யத்திலே இப்படி முடியநின்றவிடம் நம்முடைய ரக்ஷணத்துக்குமுண்டிறே" என்று உகப்பதுஞ் செய்தார்கள், "அத்தாலே நாம் பெற்றதென், இப்போது பதினாலாண்டு இழந்திருக்கவேண்டாநின்றதே" என்று வெறுப்பதுஞ் செய்தார்களிறே. திருவடி பிராட்டியைத் திருவடிதொழுதபோது, "நமக்குப் பராக்ரமிக்கைக்கு கைம்முதலுண்டாகப் பெற்றோமிறே" என்று உகப்பதும்செய்தான் இவள் அவரைப் பிரிந்து இவ்விருப்பிருப்பதே என்று வெறுப்பதுஞ்செய்தான். பிராட்டிதான் திருவடிவார்த்தையைக்கேட்டபோது. *(அம்ருதம் விஷஸம்ஸ்ருஷ்டம் த்வயாவாநர பாஷிதம்)* என்று பெருமாள் என்னைப்பிரிந்தவிடத்தில் என்னையல்லது அறியார் என்றுசொன்னது எனக்கு இனிதாயிருந்தது. அவர் பிரிவிலே தளராநின்றாரென்று சொன்னபடியாலே வெறுப்பாயிருந்ததென்றாளிறே. அப்படியே இவர்க்கும் ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச்செல்லுகிறது. ... ... *

முதற்பாட்டு, திருக்கையிலாழ்வார்களோடே சேர்ந்த நம்பிதிருமுகத்திலழகிலே, என் அந்தஃகரணம் மிகவும் ப்ரவணமாகாநின்றதென்கிறாள்.

எங்ஙனேயோவன்னைமீர்காள்! என்னைமுனிவதுநீர்*
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
சங்கினோடும்நேமியோடும் தாமரைக்கண்களோடும்*
செங்கனிவாயொன்றினோடும் செல்கின்றதென்னெஞ்சமே. (1)

[எங்ஙனேயோ இத்யாதி] - ஹிதஞ்சொல்லத் தொடங்கினவாறே தந்தாமை மறக்கு மித்தனையோ. ஒன்றைப் பரிஹரிக்கப்பார்த்தால் அதினுடைய நிதாநமறிந்து பரிஹரிக்கவேண்டாவோ. என்னுடைய ப்ராவண்யத்தைப் பரிஹரிக்கப் பார்த்தால், எனக்கு இவ்வளவான ப்ராவண்யத்தைவிளைத்த நப்பியுடைய அழகையறிந்து அத்தையன்றோபொடிவது. என்னுடைய நிலைக்கும் உங்களுடைய ஹிதவசநத்துக்கும் என்னசேர்த்தியுண்டு. நம்பியுடைய அழகையறிந்து அநுபவித்திருக்கிற நீங்கள், அதிலே துவக்குண்டிருக்கிற என்னை மீட்கப் பார்க்கிறபடி

எங்ஙனேயோ? [அன்னைமீர்காள்] - இக்குலதர்மத்திற்கு நான் ஏதேனும் தப்பநின்றதுண்டோ. "பேராளன்பேரோதும் பெரியோரை" என்றும், "யவரேலுமவர்" என்றும் நீங்கள் சொல்லும்வார்த்தைகேட்டு வளர்ந்தவளன்றோ நான். தாந்தாம் செய்யுமத்தை வயிற்றிற்பிறந்தார்செய்தவாறே குற்றமாமித்தனையோ. புத்ரர்களாகவுமாம், சிஷ்யர்களாகவுமாம், பகவத்விஷயத்தில் ஓரடிவரநின்றவர்கள் ச்லாகநீயராமத்தனையன்றோ. கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிசார்ந்தவாறே, "இன்னமுமொரு விவாஹம்பண்ணுவோமோ" என்று விசாரித்து "இதுதான் க்ரமத்தாலேவந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும்; இனித்தான், *அநாச்ரமீ ந திஷ்டேத்* என்று சாஸ்த்ரம் சொல்லாநின்றது; இச்சாஸ்த்ரார்த்தத்தை அநுஷ்டிப்போமோ! பாகவதபரிசர்யையைப்பண்ணுவோமோ" என்று விமர்சியா, "அஸ்ஸாமாந்யதர்மத்திற்காட்டில் இவ்விசேஷதர்மமே ப்ரபலம்" என்று தவிர்ந்தார். [என்னை முனிவதுநீர்] - என்னை உங்கள் சொற்கேளாதபடி பண்ணின நம்பியழகையன்றோ முனிவது. [என்னை] - நம்பியுடையவழகிலே துவக்குண்டிருக்கிற என்னை இதுவே யாத்ரையாயிருக்கிற நீங்கள் விலக்குகிறபடி எங்ஙனேயோ. [நங்கள் இத்யாதி] - உங்களையறியாவிட்டால் அவ்விஷயத்தையும் அறியாதொழியவேணுமோ என்கிறாள். [நங்கள்] இக்குடிக்காக முற்றூட்டுப்போலே காணும் நம்பியுடையவழகு. ஸர்வேச்வரனைநோக்கி அநந்தவ்ரதம் நோற்றுப்பெற்றவர்களைப் போலன்றிக்கே, நம்பியை ஆச்ரயித்தாயிற்று இவரைப்பெற்றது. "உடையநங்கையார் நம்பியை யாச்ரயித்து ஆழ்வாரைத் திருவயிறுவாய்த்தார்" என்று ப்ரஸித்தமிறே. *நெடுங்காலமும்கண்ணன் நீள் மலர்ப்பாதம் பரவிப்பெற்ற* இறே பெற்றது. கோலமென்கிற இது நகரத்துக்குவேண்டும் அலங்காரங்களை உடைத்தாயிருக்குமென்று, திருக்குறுங்குடிக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, நம்பி தம்முடைய ஸௌந்தர்யத்தைச் சொல்லுதல். [நம்பியை] - கல்யாணகுணங்களால் பூர்ணமான விஷயத்திலே அகப்பட்டிருக்கிற என்னை எங்ஙனே மீட்கப்பார்க்கிறபடி. [நம்பியைநான்] அகப்படுத்துகைக்கு ஸௌந்தர்யசீலாதிகளால் அத்தலை குறைவற்றிருக்கிறப்போலே யாயிற்று அகப்படுகைக்குச் சாபலத்தால் இத்தலை குறைவற்றிருக்கிறபடி- [கண்டபின்] - நீங்களும் இவ்விஷயத்தைக் கண்டன்றோ ஹிதஞ்சொல்லுகிறது. [கண்டபின்] - கதே ஜலே ஸேதுபந்தமன்றோ நீங்கள் செய்கிறது. காண்பதற்குமுன்னே மீட்டிகோளல்லிகோளே, இனிமீட்கப்போமோ? மீட்கப்போகாமல் இப்போதுவந்ததென்?என்ன; கைமேலே ஒருமுகத்தாலேதான் அகப்பட்டபடியைச் சொல்லுகிறாள். [சங்கு இத்யாதி.] நீங்கள் ஹிதஞ்சொல்லுவதுதான் நெஞ்சுடையார்க்கன்றோ. [சங்கினோடும்] - "செங்கமலநாண்மலர்மேல் தேனுகரு மன்னம்போல்" என்கிறபடியே ச்யாமமான திருமேனிக்குப்பரபாகமான வெளுத்தநிறத்தையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடும்; இக்கைக்கு இது ஆபரணமானால், வேறொன்றுவேண்டாதே தானே ஆபரணமாகப் போரும்படியிருக்கிற நேமியோடும். [தாமரைக்கண்களோடும்] - கண்காணக்கைவிட்டுப்போயிற்றுக்காணும். விகாஸாதிகளாலே தாமரைபோலேயிருக்கிற திருக்கண்களோடும். [செங்கனிவாய்] - கண்டபோது, நான் உன்சரக்கன்றோ - *(தவாஸ்மி)* என்ற முறுவலோடும். [ஒன்றினோடும்] - ஸம்ஸாரயாத்ரையை முக்தன் மறக்குமோபாதி, இவ்வருகுண்டானவற்றோடு அவ்வருகுள்ளவற்றோடு வாசியற எல்லாவற்றையும் மறக்கப்பண்ணவற்றான திருவதரத்தோடும்- அன்றிக்கே. ஜாதி, வ்யக்திதோறும் பரிஸமாப்யவர்த்திக்குமாபோலே, நெஞ்சுஅழகுதோறும் செல்லாநின்றது. ஸர்வேச்வரனோடு ஸாம்யம் பெற்றதாகிலும் தெரிகிறதில்லை. அவன் வ்யாபியாநிற்கச்செய்தே ஆகாசவ்யாப்திபோலன்றிக்கே பதார்த்தங்கள்தோறும் பரிஸமாப்யவர்த்திக்குமாப்போலே, இதுவும் அழகுகள்தோறும் பரிஸமாப்ய வர்த்தியாநின்றது. [செல்கின்றது] - இன்னமும் தறைகண்டதில்லை. நாங்களுமெல்லாம் நம்பியுடைய

அழகை அநுபவித்திருக்கிறோமன்றோ, எங்கள் சொல்லுமறுக்கலாகாதுகாண் என்ன; உங்கள் சொல்லை மறுத்தேனேயாகிலும் நம்பியுடையதிருமுகம் மறுக்க வொண்ணுதென்கிறாள். எங்களுக்கு இப்படியிராதொழிவானென்? என்ன,—[என் னெஞ்சமே] - உங்களைப்போலன்றிக்கே, அவன்தானே காட்டப்பெறுகையாலே முழுக்க அநுபவித்த என்னெஞ்சானது.

[எங்ஙனேயோ இத்யாதி] - ஹேதுவான நம்பியுடைய அழகைப்பொடியாதே என்னைப்பொடியக்கூடினபடி எங்ஙனேயோ? ப்ராவண்யமே ஸ்வபாவமாம்படி வளர்த்து வைத்து, இப்போதாகப்பொடிகிறபடி எங்ஙனேயோ? முன்பு நீங்கள் கற்பித்துப்போந்து, அதுபலிக்கப்புக்கவாறே பொடியுமத்தனையோ? [கோலம்] - உங்கள் ஹிதவசநத்துக்கு மீளாதபடியான ஸௌந்தர்யத்தையுடையவர். [திருக்குறுங்குடி நம்பியை] - பரத்வத்தில் முதன்மையிலேயோ அகப்பட்டது மீளுகைக்கு. [நம்பியை] - குணத்தில் அபூர்த்தியுண்டாய்த்தான் மீளுகிறதோ. [நான்கண்டபின்] - இவ்விஷயத்தில் சாபலமில்லாமல் மீளுகிறேனோ. சங்கிேைடும்] - ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடே விசேஷித்து ஒரு ப்ராப்தியுண்டுகாணும் இவளுக்கு, வாகம்ருதச்சுவடறிந்திருக்கையாலே; ஒருகலத்திலே ஜீவிப்பாரைப் போலே. ... ... (1)

இரண்டாம்பாட்டு- நம்பியுடைய தோளழகும் ஆபரணஸ்ரீயும் ஸர்வதோமுகமாக நின்று நலியாநின்றதென்கிறாள்.

என்னெஞ்சினல்நோக்கிக்காணீர் என்னைமுனியாதே *
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
மின்னுநூலுங்குண்டலமும் மார்பில்திருமறுவும்*
மன்னுபூணும்நான்குதோளும் வந்தெங்குநின்றிடுமே. (2)

[என்னெஞ்சினல் இத்யாதி] - நாங்களும் நம்பியை அநுபவித்தே ஸ்த்ரீத்வங் கெடாமலிருக்கிறிலோமோவென்ன,—[என்னெஞ்சினல் நோக்கிக்காணீர்] - நீங்கள் என்னைப்பொடியாதே உங்களையே பொடிந்துகொள்ளும்படி, என் நெஞ்சை இரவலாகவாங்கிப்பார்க்கவல்லிகோளோ. [என்னை] "இவளையாகாதே நாம் இத்தனை சொல்லிற்று" என்று பின்னை உங்களை நீங்களே பொடிந்துகொள்ளுவுதிகோள். [முனியாதே] - "கணபுரம் கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப்பெறுவரே" என்னக்கடவதாயிருக்க, நம் வயிற்றிற்பிறந்த இதுவே ஹேதுவாக, இவள்நின்றநிலைபாராதே நாம்பொடிந்தோமித்தனையாகாதே' என்று பின்னையும் உங்களை நீங்களே பொடிந்துகொள்ளுவுதிகோள். [என்நெஞ்சினல் நோக்கிக்காணீர்] - *(பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்த்தநம்)* - என்கிறபடியே ஸஞ்சயனைநோக்கி த்ருதராஷ்ட்ரன், நீயும்நானுமொக்க சாஸ்த்ரவாஸனைகள் பண்ணிப்போந்தோம், இங்ஙனே இருக்கச்செய்தே எனக்கு உன்பக்கலிலேகேட்டு அறியவேண்டும்படி உனக்கு இவ்வர்த்தத்தில் வைசத்யமுண்டானபடி எங்ஙனே? என்ன,—எனக்கு வாசிகேளாய், *(மாயாம் நஸேவே)* - நான் வஞ்சநங்கள் செய்துபோரேன். ராஜாவானவனுக்கு ஒரு தாழ்ச்சியும் தனக்கொரு உத்கர்ஷமும் சொல்லுகிறுனைகையாலே 'பத்ரம் தே' என்கிறான். *(நவ்ருதா தர்ம மாசரே)* நான் ஒருநாளும் சலதர்மங்களநுஷ்ட்டியேன். *(சுத்தபாவம் கத:)* நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருப்பன். *(பக்த்யா)* - வரியடைவே கற்று அவனை அறிந்தவனல்லேன், பக்தி ஸஹக்ருத சாஸ்த்ரத்தாலே அவனை அறிந்தவன் என்றானிறே. *(நாபிஜாநாஸி கேசவம்)* - என்று தந்தாமுக்கென்னவும் ஒரு கைம்முதலுடையார்க்கு அவனை அறியப்போகாதென்றதிறே. அப்படியே நீங்களும் என் நெஞ்சையுடையீராய்க்கொண்டு அறியப்பாருங்கோள்.

[தென்னன் இத்யாதி] - நம்பியுடைய வடிவுக்கு ஆபரணம்போலேயாயிற்று ஊருக்குச் சோலை. தெற்குத்திக்கிலேயாய் நன்றான சோலையென்னுதல்; அன்றிக்கே, * "தென்னன்கொண்டாடும்" என்னுமாபோலேயாதல். [நான் கண்டபின்] - ஆபரணச்சேர்த்தியையும் சோலைவாசியையும் அறிந்த நான் கண்டபின். [மின்னுநூலும் இத்யாதி] - மேகத்தில் மின்னிற்போலேயிருக்கிற திருயஜ்ஞோபவீதமும், [குண்டலமும்] - பரந்த மின் ஓரிடத்தில் சுழித்தாற்போலே யிருக்கிற திருமகரகுண்டலமும், வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படி யிருக்கிற திருமார்பிலே கிடக்கிற ஸ்ரீவத்ஸமும், [மன்னுபூணும்] - நாய்ச்சிமாரோடு கலக்கும்போதும் ,கழற்றவேண்டாதபடியிருக்கிற ஆபரணங்களும். அதாவது - அத்யந்த ஸுகஸ்பர்சமாயிருக்கை. [நான்கு தோளும்] - ஆபரணத்துக்காபரண மாய்க் கல்பகதரு பணைத்தாற்போலேயிருக்கிற திருத்தோள்கள் நாலும். *(ஸர்வ பூஷணபூஷார்ஹா:)* என்கிறபடியே. [வந்தெங்கும்நின்றிடுமே] - "உங்கள் ஹிதவசநத்தின்படியே செய்யவேணும்" என்று நான் கடக்கநிற்கவும், அங்கேயும் பலவகையாக வாராநின்றது. *(வ்ருக்ஷேவ்ருக்ஷேச பச்யாமி)* போலே, உகப் பார்க்கும் உகவாதார்க்கும் பலமொன்றாய்விட்டது. நான் எங்கே ஒதுங்குவேன், சொல்லிக்காணீர்கோள். ... ... (2)

மூன்றாம்பாட்டு. நம்பியுடைய திவ்யாயுதவர்க்கம் உள்ளும் புறம்புமொக்க நிரந்தரமாகத் தோற்றாநின்றதென்கிறாள்.

நின்றிடுந்திசைக்குமையுமென்று அன்னையரும்முனிதிர்*
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
வென்றிவில்லும்தண்டும்வாளும் சக்கரமும்சங்கமும்*
நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்காவே. (3)

[நின்றிடும்] - *(சிந்நம் பிந்நம் சரைர்தக்தம்)* என்று ராமசரங்கள் ஒன்று செய்தது மற்றையது செய்யாதாப்போலேயாயிற்று, நம்பியுடைய வழகுகளும். ஒன்று ஸ்தம்பநத்தைப்பண்ணும், ஒன்று அறிவைக்குடிபோக்கும், ஒன்று அறிவைக்கொடுத்து நையப்பண்ணும். ஸ்தப்தையாகாநின்றாள், அறிவுகெடா நின்றாள், சிதிலையாகாநின்றாளென்று என்குற்றமாக நினைத்துப்பொடியாநின்றி கோள். [அன்னையரும்முனிதிர்] - தெளிந்திருப்பார்தான் பொடியப்பெற்றதோ: இதுக்கெல்லாம், தாயாயிருக்கிற நீங்கள் இப்படி செய்யக்கடவதோ. தெளிவது கலங்குவதாய் இதுதானே யாத்திரையாய்ப்போந்த நீங்களும் முனியாநின்றிகோள். "ஆழியொடும்பொன்னார்சார்ங்கமுடையவடிகளை யின்னாரென்றறியேன்" என்னு மவர்களிறே. யௌவநத்தில் நீங்கள் செய்துபோந்தது அப்பருவத்தில்நான் செய்த வாறே குற்றமாயிற்றோ. இக்குடிக்காக பகவத்ப்ராவண்யமே யாத்ரைபோலே காணும். [குன்றமித்யாதி] - மலைகளை நெருங்கவைத்தாற்போலேயிருக்கிற மாடங் களையுடைத்தான. [நான்கண்டபின்] - ஆயுதம்பிடித்தபிடியில் வாசியறியும் நான் கண்டபின். வீரபத்நியாகையாலே வாசியறியுமிறே! பெருமாளுக்கு வில்லெடுத்துக் கொடுப்பாள் பிராட்டியிறே. பெருமாள் "வில்லைத்தா" என்ன, கொடுத்து, அவர் கையும்வில்லுமாய்நின்ற நிலையைக் கண்டவாறே, நீர் இப்படி ஸாயுதராய்த் திரியப்புக்கால் உம்மை ருஷிகள்வந்து சரணம்புகுவர்கள்; அவர்களுக்கு விரோதி களான ராக்ஷஸரோடே எதிரிடவேண்டிவரும் அது பின்னை சாதிப்பகையாம், பின்னை நீரும் நானும் இரண்டிடத்திலேயாகவேண்டிவரும், ஆனபின்பு, வில்லைப் பொகட்டு தாபஸவேஷத்தோடே திரியவமையும்" என்றாளிறே பெருமாள்பக்கல் சாங்கமிறே இப்படி சொல்லுவித்தது. [வென்றிவில் இத்யாதி] - திவ்யாயுதங் களுக்குஇரண்டிலும் மெய்க்காட்டுண்டுகாணும். ஆயுதங்களிலும் ஆபரணங்

களிலும். வினைத்தலையிலாயிற்று "ஆயுதம்" என்றறியலாவது. [வென்றிவில்லும்] - உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற வெற்றியே ஸ்வபாவமாயிருக்கிற திருவில்லும். *(சக்ரசாபநிபே சாபே க்ருஹீத்வாசத்ருநாசநே)* - அநுகூலர்க்குக் கண்டு ஜீவிக்கைக்குமாய், சத்ருக்களுக்குப் பிடித்தபிடியிலே முடிகைக்கும் உடலாயிருக்குமிறே. [தண்டும் இத்யாதி] - அதின்ஸ்வபாவத்தையுடைத்தான மற்ற திவ்யாயுதங்களும் [நின்றுதோன்றிக்கண்ணுள் நீங்கா] கண்வட்டத்தைவிடாதே நின்று தோன்றாநின்றது. இவை கண்முகப்பேநின்று நலியப்புக்கவாறே, அஞ்சிக்கண்ணைச்செம்பளித்தவாறே நெஞ்சுக்குள்ளே நின்று ப்ரகாசிக்கத்தொடங்கிற்று. [நெஞ்சுள்ளும் நீங்காவே] கீழ் "வந்தெங்கும்நின்றிடுமே" என்றது, இங்கு உள்ளும் புறம்புமொக்க நலியாநின்றன. நம்பியுடையவழகுக்கு உள்ளதெல்லாம் உண்டாயிற்று இவளுக்கும்; அவ்வழகு எங்குமொக்க நலிகிறப்போலேயாயிற்று இவளும் கட்கண்ணாலும் உட்கண்ணாலும் அநுபவிக்கிறபடியும். ... (3)

நாலாம்பாட்டு. ரக்ஷணத்துக்குக் கவித்தமுடியும்; தனிமாலையும், பரிவட்டப்பண்பும் முதலானவை பார்ச்வத்திலே நின்று என்னை நலியாநின்றனவென்றாள் :

நீங்கநில்லாகண்ணநீர்களென்று அன்னையரும்முனிதிர்*
தேன்கொள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
பூந்தண்மாலைத்தண்டுழாயும் பொன்முடியும்வடிவும்*
பாங்குதோன்றும்பட்டும்நாணும் பாவியேன்பக்கத்தவே. (4)

[நீங்கநில்லாகண்ணநீர்கள்] - அவன்நீங்க, கண்ணநீர்கள் நீங்குகிறனவில்லை. அன்றிக்கே. நீங்கநில்லா — பேரநில்லாவென்னுதல் "நீக்கநில்லா" என்கிறத்தை; மெலித்து [நீங்கநில்லா]-என்று கிடக்கிறதாய், மாற்றநிற்கிறனவில்லை யென்னுதல். [அன்னையரும்முனிதிர்] - உங்கள்கண்களால் ஆநந்தாச்ருவும் பாய்ந்தறியாதோ. [தேன்கொள் இத்யாதி] அச்சோலையில் தேனை வற்றப்பண்ணமாட்டிகோளோ நான் என் கண்ணநீரை மாற்ற. இக்கண்ணநீர்க்கு ஸஹ்யம் அவ்வூரில் போக்யதைபோலேகாணும். [நான்கண்டபின்] அவனுடைய ஸ்வாபாவிகமான மேன்மையையறியும் நான்கண்டபின். [பூந்தண் இத்யாதி] - உபயவிபூதிக்குமாக முதலியாகவிட்ட, தர்சநீயமாய்க் குளிர்ந்த செவ்வித்திருத்துழாய்த் தனிமாலையும், உபயவிபூதியும் தன்முடியிலே செல்லும்படி கவித்த திருவபிஷேகமும், அம்மாலைக்கும் முடிக்கும் இசைந்த வடிவும்; "இவனே மாலைக்கும் முடிக்குமுரியான்" என்று படியெடுத்துக்காட்டலாமே. "'வடிவும்' என்பதே" என்று வித்தராயருளுவர் [பாங்குதோன்றும்பட்டும்] திருவரை பூத்தாற்போலே அங்குத்தைக்குப் பாங்காய்த் தோற்றுகிற திருப்பீதாம்பரமும், [நாணும்] விடுநாணும். [பாவியேன்பக்கத்தவே] - அநுபவிக்கத்தருதல், உருவெளிப்பாடாய்த் தோன்றாதேயொழிதல் செய்யாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன். அருகேநின்று ப்ரகாசியாநின்றது அநுபவயோக்யமாகப் பெறுகிறதில்லை. அணைக்கத்தருதல், அகலநிற்றல் செய்கிறதில்லை. ... ... (4)

அஞ்சாம்பாட்டு. ஒன்றுக்கொன்று தகுதியான நம்பியுடைய திருமுகத்திலழகுகள் என் உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள்.

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்*
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும்*
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனுயிரின்மேலனவே. (5)

[பக்கம் நோக்கி நிற்கும்] - அவன்வருகைக்கு ஸம்பாவனையுள்ள பார்ச்வத்தைப் பார்த்துக்கொண்டு நிற்குமாயிற்று; (நைஷா பச்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந், ஏகஸ்த்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபச்யதி)* (நைஷா பச்யதி இத்யாதி) ராக்ஷஸீதர்சநத்தோடு புஷ்பபலத்ரும தர்சனத்தோடு வாசியற்றிருக்கிறதுகாணும் இவளுக்கு. *(ஏகஸ்த்த இத்யாதி)* அருகிருந்தவர்களையும் பாராளாயிற்று. அத்திக்கில் வந்து தோற்றுமையாலேயையும். [என்று அன்னையரும் முனிதிர்] * அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்தபடியை அறியும் நீங்களும் முனியாநின்றிகோள். *(பால்யாத் ப்ரப்ருதிஸுஸ்நிக்த:)* என்னும் படியிறே இவள்தன்படி, [தக்க இத்யாதி] - சொன்ன சொன்னபடியெல்லாம் தரும்படியிருக்கிற கீர்த்தியையுடைய திருக்குறுங்குடி நம்பியை. [நான் கண்டபின்] - அக்கீர்த்தியே ஜீவநமாக இருக்கும் நான்கண்டபின். [தொக்க சோதித்தொண்டைவாயும்] - சோதிதொக்கதொண்டைபோலேயிருக்கிற திருவதரமும். * "கோலந்திரள்பவளக்கொழுந்துண்டம்" என்னுமாப்போலே, தேஜஸ்தத்வம் திரண்டாப்போலேயிருக்கிற தொண்டைபோன்றவாயும். தொண்டையென்பது - கோவை. இத்தை அதரத்துக்கு ஒப்பாகச் சொல்லக்கடவதிறே. [நீண்டபுருவங்களும்] - உபமாநரஹிதமாய், தனக்கு ஓரவதியில்லாமையாலே தன்னினேற்றமே சொல்லும்படியிருக்கிற திருப்புருவங்களும். [தக்கதாமரைக் கண்ணும்] - அதினுடைய நெடுமைக்கு அவதியில்லாதாப்போலே அபரிச்சேத்யமாய், அப்புருவங்களுக்குத் தகுதியாயிருக்கிற தாமரைக்கண்ணும். தாமரையை ஒரு போலியாகச்சொல்லில் சொல்லலாமத்தனை. [பாவியேனுவியின்மேலனவே] - உயிர்நிலையிலே நலியாநின்றன. [பாவியேன்] - அகவாயில் வெளிச்சிறப்பழகிது, அப்படியே புறம்பேயும் தோற்றப்பெறுகிறதில்லை, பாவியேன். .... (5)

ஆறும்பாட்டு. நம்பியுடைய திவ்யாவயவசோபைகள் என்னெஞ்சுநிறையப் புகுந்து நலியாநின்றனவென்கிறாள்.

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்*
சோலைசூழ்தண்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும்*
நீலமேனியும்நான்குதோளும் என்னெஞ்சம்நிறைந்தனவே. (6)

[மேலும் இத்யாதி] - இப்போது சிலர் நாலுவார்த்தை சொல்லிவிடுகையன்றிக்கே மேலும் இக்குடிக்கு உருவநிலைநின்றபழியை விளைக்குமவள் இவளென்று. [அன்னைகாணகொடாள்] - தன்னோடு ஸாம்யமுடையார் சொல்லுகையன்றிக்கே, அடியிலே என்னைப்பெறுகைக்கு நோன்புநோற்றுப்பெற்ற இவளும் இப்படி சொல்லாநின்றாள். [சோலை இத்யாதி], - ச்ரமஹரமான சோலையாலே சூழப்பட்ட திருக்குறுங்குடிநம்பியை. [நான்கண்டபின்] - பழி புகழாம்படி இவ்விஷயத்திலே அவகாஹித்த நான் கண்டபின். "பழி" என்று அச்சமுறுத்தி மீட்கவொண்ணாதபடி அவகாஹித்த நான் கண்டபின் [கோலநீள் இத்யாதி]-அழகு மிக்க கொடிபோலேயிருக்கிற திருமூக்கும், அதன்படியேயாயிருக்கிற தாமரைக் கண்ணும். அக்கொடி பூத்தாற்போலேயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. [கனிவாயும்] - அது ஒருபலத்தையுண்டாக்கினாற்போலேயிருக்கிற கனிவாயும், அத்தாமரையின் இலைபோலே;நீலமாயிருக்கிற திருமேனியும்; ஒருபெருவெள்ளம்போலேயாயிற்றுத் திருமேனி, அத்தை நீஞ்சுகைக்குச் சில தெப்பங்கள்போலேயிருக்கிற திருத்தோள்கள்நாலும். [என்னெஞ்சம் நிறைந்தனவே] - உங்களுடைய ஹிதவசநத்துக்கெல்லாம் என்னெஞ்சில் இடமில்லை. ... ... (6)

ஏழாம்பாட்டு. நம்பியுடைய திருமேனியிலழகுவெள்ளம் என்னெஞ்சிலே வேர் விழுந்த தென்கிறாள்.

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்*
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
நிறைந்தசோதிவெள்ளஞ்சூழ்ந்த நீண்டபொன்மேனியோடும்*
நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான் நேமியங்கையுளதே. (7)

[நிறைந்த இத்யாதி] - ஆண்டாள் ஒருநாள் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் காட்டி, "இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், பேசாதே இருக்கிறதென்?" என்ன,—"ஆகில், நாளைப் பெருமாள்பாடேபோனவாறே வரக்காட்டு" என்ன, அவர்களையுங்கொண்டு திருமுன்பே நிற்கச்செய்தே, பெருமாள் அருளப்பாடிட்டு, "ஒன்றுசொல்லுவாய்போலே இருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, "'இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள்' என்று சொல்லா நின்றார்கள்" என்ன, "நாமே ஸத்ருசமானவிடத்திலே ஸம்பந்தித்துத்தருகிறோம்" என்று அருளிச்செய்ய, பிற்றைநாள் மன்னியைக்கொண்டுவந்து நீர்வார்த்தார்கள். ஆக, "அத்தலையாலே வருமதொழிய, தாந்தாம் ஒன்றை ஆசைப்படுகையுங்கூடப் பழி" என்றிருக்குங்குடி காணும். *(அத பாதகபீதஸ்த்வம்)* - "தர்மபுத்ரன் ஒருதடவற்பொய்சொல்லி அதுக்கு நரகதர்சநம் பண்ணினான்" என்று ப்ரஸித்தமிறே. அடுத்தடுத்து ராஜஸூயங்களைப் பண்ணினானித்தனைபோக்கி, 'நிஷித்தாநுஷ்டாநம் பண்ணினான்" என்று ப்ரமாணப்ரஸித்தியில்லை. *(அத பாதகபீதஸ்த்வம்)* - கீழே செய்து போந்தவை பாதகமென்றுதோற்றி பீதபீதனானாயாகில். அஹங்கார மமகாரகர்பமான க்ரியாகலாபமடைய, "க்ருஷ்ணனே நங்காரியத்துக்குக் கடவன்" என்று அறிந்தவநந்தரம் பாதகஸமமாய்த் தோற்றிற்றாயிற்று. *(விமுக்தேதப்பாதி)* உப்பைத்தொட்டுப் புளியைத்தொட்டு நீகின்று சிலவற்றைச் செய்யாதே, புறம்புள்ளவற்றையடையப் பொகட்டு, "உடையவனே நங்காரியத்துக்குக்கடவன்" என்று அவன் பக்கலிலே பரத்தைப்பொகட்டிருக்கப்பார். இப்போது "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறது இவ்விஷயத்திலுள்ள ப்ராவண்யத்தையிறே. பழி என்று பரிஹரிக்கப்பார்க்கிற திருத்தாயாராயும், "பழியென்று மீளேன்" என்கிற பிராட்டியாயும் ஓடுகிற இவ்விரண்டாகாரமும் ஆழ்வார்தமக்குப் பிறந்த அவஸ்தா விசேஷங்களிறே. சரமச்லோகத்துக்குக் கீழுள்ளவற்றை அநுபாஷித்தாற்போலே இருக்கிறதாயிற்று - "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிற திருத்தாயார்வார்த்தையானவிடம். சரமச்லோகத்தில் நிஷ்கர்ஷம்போலே இருக்கிறதாயிற்று - "பழியென்றுமீளேன்" என்கிற இவள் வார்த்தையானவிடம். "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறவிது-உபாயத்தில் கொத்தையறுக்கிறது; "பழியென்றுமீளேன்" என்கிறவிது - உபேயத்தில் கொத்தையறுக்கிறது. ஸ்வரூபமாய் அந்வயித்தத்தில் மிகுதியாய்க்கழிவதொன்றுண்டோவென்றபடி; *(ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே)* என்கிறவிதில் மிகுதியாய் த்யாஜ்யமாயிருப்பதொன்றில்லையிறே. உபாயாம்சத்தில் வந்தால், "கர்த்தவ்யாம்சங்களிலேயும் உபாயபுத்திபிறக்கிறதோ" என்று துணுக்கென்னவேண்டும்படியாயிருக்கும்; உபேயத்தைப்பார்த்தால், *(அஹம் ஸர்வம் கரிஷ்யாமி)* என்கிறபடியே, விடலாவதொன்றில்லையாயிருக்கும். பழைய நாஸ்திக்யத்தாலே கர்த்தவ்யாம்சத்தில் சோம்பிக் கைவாங்கினத்தை, "உபாயவிரோதியான ஆகாரத்தாலே விட்டேன்" என்னுமதுவும் வார்த்தையல்ல; உபேயருசியாலே செய்யுமத்தை, "இவை உபாயமாய் அந்வயிக்கிற் செய்வதென்?" என்று விடுமதுவும் வார்த்தையல்ல. லௌகிகரோபாதி கர்த்தவ்யமடைய அநுஷ்டியாநிற்கச் செய்தே அவற்றில் உபாயபுத்திபண்ணாதேபோரும் நம்முதலிகளுடைய யாத்ரையிருக்கும்படியிறே இது. ஆக, "இதுபழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறவிடம் -

பூர்வார்த்தத்தில் நிஷ்கர்ஷமிருந்தபடி; "இதுபழி" என்று மீளாதொழிகிறவிடம் - உத்தரார்த்தத்தில் நிஷ்கர்ஷமிருந்தபடி. [சிறந்த இத்யாதி] - தகுதியாயிருந்துள்ள கீர்த்தியையுடைய திருக்குறுங்குடிநம்பியை. [நான்கண்டபின்] - அக்கீர்த்தியோபாதி அங்குத்தைக்குச் சிறந்த நான்கண்டபின். *(யஸ்ய ஸாஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:)* என்கிறபடியே, அவனுக்கு அக்கீர்த்தியோபாதி, தன்னேட்டை ஸம்பந்தமும் ஏற்றமாம்படி யிருக்குமவளிறே. [நிறைந்த இத்யாதி] - கங்காதரங்கமத்யே வர்த்திப்பாரைப்போலே தேஜஸ்தரங்கமத்யேயாயிற்று இருப்பது. தேஜஸ்ஸின் நடுவே வடிவு உந்நேயமாயாயிற்று இருப்பது. அவ்வடிவு தான் எவ்வளவுபோருமென்னில், — அபரிச்சேத்யமாய் ச்லாக்யமா யிருக்கும். [நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்] - ஒருநாள் ஜீயர் கோவிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக்கண்டு, "ஈச்வரனுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ உள்ளது; விக்ரஹவ்யாப்தியுமுண்டோ?" என்றுகேட்க, "ஸர்வவிஷயமாக ஸ்வரூபவ்யாப்தியேயுள்ளது; உபாஸகவிஷயத்தில், அவர்கள்பக்கல் அநுக்ரஹத்தாலே, அவர்கள் சுபாச்ரயமாக பாவித்த விக்ரஹத்தோடே எழுந்தருளியிருக்கும்; இனி ஸ்வரூபவ்யாப்திக்கு ப்ரமாணங்கண்டவிடம் - ஸாமாந்யவிஷயமாகிறது, விக்ரஹவ்யாப்திக்கு ப்ரமாணங்கண்டவிடம் - விசேஷவிஷயமாகிறது" என்று பணித்தானும். [நேமிஅங்கையுளதே] - வடிவழகெல்லாம் ஒருதட்டும், கையுந் திருவாழியுமான அழகு ஒருதட்டுமாயாயிற்று இருப்பது. அவன்கையில் திருவாழி பிடித்திலனாகில் நான்பழி பரிஹரித்துமீளேனோ? அவன்கையில் திருவாழியிருக்க, என்னாலே பழிக்கஞ்சிமீளப்போமோ? [நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான்] - உங்கள் ஹிதவசனம் கேட்கைக்கு உள் அவகாசமில்லாதபடி நிறைந்துநின்றான். [நின்றொழிந்தான்] - இனி கந்தவ்யமில்லையாம்படி அவன் வந்து உள்ளேநிற்க, எனக்கு இனி கந்தவ்யமுண்டோ. அவனை என் உள்ளினின்றும் புறப்படச் சொல்லமாட்டிகோளோ, நான் என் பழியைப் பரிஹரிக்க. வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும் கையிலே திருவாழியுமானால் மீளப்போமோ. அவனுடைய நிறைவைக் குறைக்கவோ, என்பழி நிறைவைக் குறைக்கவோ. ... (7)

எட்டாம்பாட்டு. ஸார்வத்ரிகமான அங்கசோபை என்முன்னே நின்று நலியாநின்றதென்கிறாள்.

கையுள்நன்முகம்வைக்குமையுமென்று அன்னையரும்முனிதிர்*
மைகொள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்*
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும்*
மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே. (8)

கையுள்நன்முகம்வைக்கும்] - அவனைப்பிரிகையால் வந்த தளர்த்தியாலே கையிலே முகத்தை வையாநின்றாள். இத்தனை ஸாஹஸத்திலே துணியும்படி யாவதே இவள். தன் முகத்தில்வாசி தான் அறியாதொழியவேணுமோ. [*புஜமங்யஸ்ய கஸ்யசித்*] என்னக் கடவதிறே. காந்தனுடைய கரஸ்பர்சமேயாயிற்றுப் பொறுப்பது. இத்தால் - தன்னோடு தனக்கு அந்வயமில்லாத பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. அதிறே - நமச்சப்தார்த்தமாகிறது. இதினுடைய ஸங்க்ரஹரூபமான உகாரத்திலேயும் இது உண்டாயிருக்கச்செய்தே இங்கேயும் சொல்லும்போது - இதுவே அர்த்தமாகவேணுமிறே. [நையும்] - தன்கையுங்கூடப் பொறுமையாலே நையும். [என்று அன்னையரும் முனிதிர்] - ஊரவர்கவ்வைக்கு நான் வெறுக்கிறதென். [மைகொள்மாடம்] - பழைமையாலேயாதல், உள்ளுநிற்கிறவனுடைய நிழலீட்டாலேயாதல். [*சோபயந் தண்டகாரண்யம்*] என்னுமாப்போலே. [நான் கண்டபின்] அம்மாடத்தோபாதி நைவுக்குப்பழையேனான நான் கண்டபின்.

"நைவாயவெம்மேபோல்" என்னக்கடவதிறே. [செய்யதாமரைக்கண்ணும்] அநங்யார்ஹமாக்கும் கண்ணும். [அல்குலும்] அங்கோக்குக்குத்தோற்றார் தரித்து இளைப்பாறும் அல்குலும். [சிற்றிடையும்] - இரண்டும் ஏகஸந்தர்ப்பமாயிருக்கையாலே உங்கேயமான இடையும். [வடிவும்]-என்னை மீளவொட்டாதவடிவும். மெய்யே மீளவொட்டுகிறதில்லைகாணும் இவளை. [மொய்ய இத்யாதி] - தர்சநீயமாய், கண்டார்க்கு ஒருகாலும் மறக்கவொண்ணுதபடியிருக்கிற திருக்குழலானவை தாழ்ந்து, அணைக்கைக்கு யோக்யமான திருத்தோள்களும். [பாவியேன் முன்னிற்குமே]-அநுபவ யோக்யமல்லாதது முன் நிற்கையாகிறது க்லேசாதிசயத்துக்கு உடலாயிருப்பதொன்றிறே. "முன்னிற்கும்" என்று நிற்கச்செய்தேயிறே "பாவியேன்" என்கிறது. கண்ணுக்குத் தோற்றா நிற்கச்செய்தே ஆனைக்குக் குதிரைவையாநின்றது. ... . (8)

ஒன்பதாம்பாட்டு. நம்பி, போக்யதைக ளெல்லாவற்றோடுங்கூட என் நெஞ்சிலே புகுந்து விடுகிறிலனென்கிறாள்.

முன்னின்றாயென்றுதோழிமார்களும் அன்னையரும்முனிதிர் *
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
சென்னிநீண்முடியாதியாய உலப்பிலணிகலத்தன் *
கன்னல்பாலமுதமாகிவந்து என்னெஞ்சங்கழியானே. (9)

[முன்னின்றாயென்று] - தோழிமார்முன்புங்கூட நின்றறியாள்போலே காணும் இவள்தான். [*யா ந சக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாசகைரபி *] -என்னும் படியிருக்குமவளிறே இவள்தான். இவள் துணிவைக்கண்டவாறே, உகப்பாரோடு, பொடிவாரோடுவாசியறப் பொடியத் தொடங்கிற்று. [மன்னுமாடம்] - [* வாஸுதேவக்ருஹம் த்வேகம் நப்லாவயதி ஸாகர:*] என்கிறபடியே, ப்ரளயாதிகளிலுங் கூட அழியாதென்றிருக்கிறாள். [நான்கண்டபின்] - பிற்காலியாதபடியான நான். லஜ்ஜைகுடிபோன நான். [சென்னி இத்யாதி] - தலையான முடிதொடக்கமான முடிவில்லாத ஆபரணங்களையுடையவன் சென்னியிலுண்டான ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகந் தொடக்கமான எண்ணிறந்த திவ்யாபரணங்களை யுடையவன். [அணிகலன்] - சேர்த்தியிருக்கிறபடி. [கன்னல்பாலமுதாகி] - ஸர்வரஸத்துக்கும் உபலக்ஷணம். [வந்து இத்யாதி] - வந்து என்னெஞ்சினின்றும் போகிறிலன். முன்னேநிறுத்தினவனைப் பொடியமாட்டார்கள்; "பெற்றோம், பிழைத்தோம்" என்று, "முன்னின்றாய்" என்று என்னைப் பொடியுமித்தனை காணும் இவர்கள் வல்லது. எனக்கு மறக்கைதேட்டம், முடியாமையிருக்கிறேனத்தனை. .... (9)

பத்தாம்பாட்டு. நம்பியுடைய திருமேனி என் நெஞ்சிலே ப்ரகாசிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள்.

கழியமிக்கதோர்காதலளிவளென்று அன்னைகாணகொடாள் *
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின் *
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே *
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழும் ஆர்க்குமறிவரிதே. (10)

[கழியமிக்கதோர் காதலளிவள்] - இதர விஸஜாதீயமான காதல்; அன்றிக்கே, நாள்கழியக்கழியப் பெருகிவருகிற காதலென்னுதல்; [சோகச்சகில காலேந கச்சதா ஹ்யபகச்சதி, மமசாபச்யத: காந்தாமஹந்யஹநி வர்த்ததே]-நாட்டார் அபிமதவிஷயத்தைப் பிரிந்தநாள் ஒருபடியாய், பின்பொருபடியாய், பின்னைத் தானே மறந்து போகாநிற்பர்கள்; எனக்கு அங்ஙனன்றிக்கே, நாள்செல்லச்

செல்ல சோகம் பெருகிவாராநின்றது. [அன்னைகாண கொடாள்] - "இவளொரு விஷயத்திலே காதல்பண்ணக் கண்டேனாகவல்லேனே" என்றிருக்குமவளும் காணவேண்டுகிறிலள். ஆனால் இப்போது இங்ஙன் படுகிறதென்? என்னில்,— தர்மிலோபம்வரும்படி ப்ரவணையாக வொட்டாளே, "ஆச்ரயமுண்டாய் மேல் நடக்கவேணும்" என்றிருக்குமே. காண்கையாகிறது - அநுஸந்திக்கை. "நெஞ்சென்னும் உட்கண்" என்னக்கடவதிறே. நெஞ்சையுங்கூட வாய்கட்டாநின்றாள். [வழுவில் இத்யாதி] - குறைவற்ற கீர்த்தியையுடைய. [நான்] - அக்கீர்த்திக்குப் பிரித்து ஸ்திதியில்லாதாப்போலே, அவனை யொழியத் தனித்து ஸ்திதியில்லாத நான். [கண்டபின்] - இவர்க்கு இப்போது காட்சியாவதுதான் ஏதென்னில்,— அடியில் * பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி * முனியேநான்முகனளவும் செல்ல ஏகவாக்யமிறே; நடுவுள்ளவை அநுபவப்ரகாரங்களால் பிறக்கிற விசேஷங்களிறே. [குழுமி இத்யாதி] - நித்யஸூரிகளுடைய திரளானவை, கிண்ணகத்தில் இழிவாரைப்போலே கைகோத்துக்கொண்டு இழியும்படி. [சோதிவெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு] - [தேஜஸாம் ராசிமூர்ஜிதம்*] தேஜஸ்ஸின் நடுவே உந்நேயமாயாயிற்று வடிவிருப்பது. [என்னெஞ்சுள்ளெழும்] - நித்யஸூரிகள் நடுவே தோன்றுமாபோலே என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாசியாநின்றது. அது நாங்கள் காண்கிறிலோமே! என்ன; [ஆர்க்குமறிவரிதே] - ஸ்வயத்நத்தால் காண பார்க்கும் அறியவொண்ணாது, த்வரையில்லாதார்க்கும் அறியவொண்ணாது; எனக்கு மறக்கவொண்ணாதாப்போலேயாயிற்று ஸ்வயத்நத்தாலறிவார்க்கும் அறியவொண்ணாதிருக்கிறபடியும் ... ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் ஸம்ஸாரத்திலேயிருந்தே வைஷ்ணவர்களென்கிறார்.

அறிவரியபிரானை ஆழியங்கையனையேயலற்றி *
நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன *
குறிகொளாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல் *
அறியக்கற்றுவல்லார்வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே. (11)

[அறிவரியபிரானை] - நாம் பெறுதல் இழத்தல் செய்கிறோம், ஸ்வயத்நஸாத்யமன்றிக்கே யொழியப்பெற்றோமே முன்னம். வஸ்துதான் உண்டானால் நினைத்தபோது பெற்று அநுபவிக்கலாமிறே. இவர்கள் பின்னை ஸ்வயத்நத்தாலே அறியுமவர்களோ? என்னில்; — ஆக வேணுமிறே, "மீளலாம்" என்றிருந்தபோதே, "தந்தாமாலே யறியவுமாம்" என்றிருந்தார்களாமிறே. [ஆழியங்கையனையே யலற்றி] - "சங்கினோடும் நேமியோடும்" என்று தொடங்கினபடியே தலைக்கட்டுகிறார். அவனைக் கைவிடாமல் அநுபவிக்கவல்லார் இவரைப்போலில்லை. கையுந்திருவாழியுமானவழகை அல்லாத வழகுகளோடே சேர்த்து அநுபவித்த வித்தனை - இதுக்குமுன்பெல்லாம்; கையுந்திருவாழியுமான அழகையாயிற்று உருவச்சொல்லிக் கூப்பிட்டது. இதில். [நறியநன்மலர்நாடி] - பரிமளத்தையுடைத்தாய் நன்றாயிருக்கிற புஷ்பங்களானவற்றைத் தேடிக்கொண்டு. "அடிசூட்டலாகுமந்தாமம்" என்னக்கடவதிறே. [நன்குருகூர்ச் சடகோபன்] - இக்காதலுண்டாகைக்கடி அவ்வூரில் பிறப்பாயிற்று. [குறிகொள் இத்யாதி] - ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, நம்பியுடையவழகை மெய்க்காட்டுக் கொண்ட இப்பத்தும் திருக்குறுங்குடிவிஷயம். திவ்யாயுதங்களும் திவ்யாபரணங்களும் சேர்ந்த சேர்த்தியாலுண்டான நம்பியுடையவழகைத் திரளச்சொன்ன பத்தும். [திவ்யலாஞ்சநங்களைக்கொண்டு சொன்ன பத்தென்னவுமாம்.] இத்தை [அறியக்கற்றுவல்லார்] - கற்றறியவல்லார். அறிந்து கற்கையாவது - "ஸ்ரீவைகுண்டத்திலே நித்ய

ஸூரிகள் நடுவேயிருக்கிற இருப்பிலுங்காட்டில், திருக்குறுங்குடியில் நிற்கிற நிலையிலே குணாதிக்யமுள்ளது" என்னுமிடத்தை யறிந்து அப்யஸிக்கவல்லவர்கள். வஸ்துவுக்கு குணத்தாலேயிறே உத்கர்ஷம்; அந்த குணாதிக்யமெங்கேயுண்டு, அங்கேயிறே ஏற்றம். [ஆழ்கடல் ஞாலத்துள்ளே - வைட்டணவர்] · மருபூமியான ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே நித்யஸூரிகளோடொக்கச் சொல்லலாம்படி யாவர்கள் உகந்தருளின நிலங்களில் வாசியறியுமவர்கள் ... ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்

திருவாய்மொழி நூற்றந்தாதி.

எங்ஙனேநீர்முனிவது என்னையினிநம்பியழகு *
இங்ஙனே தோன்றுகின்றதென் முன்னே *—அங்ஙன்
உருவெளிப்பாடா வுரைத்ததமிழ்மாறன் *
கருதுமவர்க்கின்பக்கடல்.

ஆழ்வார்திருவடிகளே சரணம், எம்பெருமானார்திருவடிகளே சரணம்,
ஜீயர்திருவடிகளே சரணம்.

ஆறாந்திருவாய்மொழி—கடல்ஞாலம் : ப்ரவேசம்

கீழில் திருவாய்மொழியில்—ப்ரீத்யப்ரீதி ஸமமாயிறே சென்றது; இரண்டுமாய்க் கலந்துசென்றால் ப்ரீதியே தலையெடுக்கவுமாமிறே, பாக்யஹாநியாலே அப்ரீத்யம்சமே தலையெடுத்தது; கீழ் உருவெளிப்பாட்டாலே அவனை ஸ்மரித்து தரித்த அம்சமும்போய், அலாபத்தால் வரும் துவட்சியேயாயிற்று; இப்படி துவண்ட இவள் பிரிவாற்றாமையாலே அவனை யநுகரித்து தரிக்கப்பார்க்கிறாள். ஒரோ அர்த்தோபந்யாஸங்கள் பண்ணவிருப்பாரைப்போலே ஜ்ஞாநமுத்ரையுந் தானுமாய் கீதோபநிஷதாசார்யனைப்போலே யிருந்தாள்; இத்தைக் கண்ட திருத்தாயார், "இது ஏதேனும் மணிமந்த்ரௌஷதாதிகளாலே வந்த விகாரமோ?" என்று சங்கித்து, அங்ஙனொருபுடைகள் காணாமையாலே "அதல்ல" என்று அறிந்தாள்; இனி, "அவனைப் பிரிகையாலேவந்த ஆற்றாமையாலே அநுகரித்து தரிக்கிறாள்" என்று தெளியமாட்டிற்றிலள் தன்கலக்கத்தாலே; இவ்வளவிலே புகுந்து "இதுதான் என்?" என்று வினவப்புகுந்த பந்துக்களைப்பார்த்து திருத்தாயார்; அவனோட்டை வசநவ்யக்தி ஸாதர்ம்யத்தாலும் ஜ்ஞாநமுத்ராநிரீக்ஷணாதிகளிருந்தபடியாலும், ஸர்வேச்வரன் இவள்பக்கலிலே ஆவேசித்தானாக வேணுமென்று சொல்லுகிறாள், "அநுகரித்து தரிக்கிறாள்" என்று அறியமாட்டாமையாலே. பிரிவாற்றாமையுண்டானால் அநுகரித்துதரிக்கக்கடவதிறே, க்ருஷ்ணனை அநுகரித்தார்களிறே திருவாய்ப்பாடியில் பெண்கள்: [* கிருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி :*] நான் க்ருஷ்ணன், இங்ஙனே நடக்கப் புகாநின்றேன் நடைச்சக்ரவத்துப்பிடிக்க வேண்டும்படியாக; கண்படைத்தாரடையக் கண்டுகொள்ளுங்கோள் என்றாளிறே. [* துஷ்டகாளீய திஷ்ட்டாத்ர *] - ஒருத்தி காளியனாய்க்கிடக்க, ஒருத்தி க்ருஷ்ணனாய் ஏறி ஆடினாளிறே. "ப்ரதிகூலனான காளியனானாலாகாதோ க்ருஷ்ணனாகத் தன்னை அநுகரிக்கிற பெண்ணின் கால்பொடி படப்பெறில்" என்றிருந்தாள்; க்ருஷ்ணனானவள் தானும் இவளை "காளியன்" என்றே நினைத்துக் கண்ணற்றுத் துகைத்தாளிறே அநுகாரத்தில் மெய்ப்பாட்டாலே. அவர்கள் ஓரவதாரத்திலே அநுபவிக்கையாலே அங்குள்ள சேஷ்டிதங்களை அநுகரித்தார்கள், இவள் மயர்வறமதிநல மருளப் பெற்றவளாகையாலே உபயவிபூதியுக்தனை அநுகரிக்கிறாள். இங்கு - கால், நடை தாராமையாலே அங்குப்போலே காயிகமான அநுகாரமல்ல, வாசிகமாத்ரத்தாலேயாயிற்று அநுகரிக்கிறது. ஆக, "பிறப்பே பாரதந்த்ரஜந்மத்திலே பிறந்தவள் பிறப்பே ஸ்வதந்

த்ரனவன் வார்த்தையும் சொல்லா நின்றாள். ஸ்த்ரீத்வத்துக்கு எல்லையான இவள் புருஷோத்தமன்சொல்லும் வார்த்தையையும் சொல்லாநின்றாள்; அறிவுக்கு விஷயம் வ்யவஸ்திதமாயிருக்க, ஸர்வஜ்ஞன்சொல்லும் வார்த்தையைச் சொல்லா நின்றாள்'' என்று கொண்டு; இவள் செய்கிறபடிகளைத் திருத்தாயார், வினவப் புகுந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

கீழில் திருவாய்மொழியில் - உருவெளிப்பாட்டாலே அநுபவித்தது விக்ரஹ வைலக்ஷண்யத்தையிறே, அதுவேயிறே சுபாச்ரயம். *[தேஹாத்மாபிமாநம் முற்றி லை வேறென்று தோற்றுதாப்போலே, ப்ரகாரியான அவனளவும் செல்லத் தன்னையநுஸந்தித்த பாவநாப்ரகர்ஷத்தாலே அவன் தானாகப்பேசுகிறாள்] அத்தை யிறே பாவித்தது. பாவநாப்ரகர்ஷத்தாலே, *[தத்பாவபாவமாபந்நஸ்ததாஸௌ பரமாத்மநா-புவத்யபேதீ*] என்றும், [*அஹம் மநுரபவம்ஸூர்யஸ்ச*] என்றும், [*மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம்*] என்றும் - அவனாக பாவித்தால் பின்னை அவன் சொல்லும் வார்த்தை சொல்லலாயிருக்குமிறே; அப்படியே, விபூத்யத்யாயத்தில் அவன் சொன்னபடிகளை ப்ராசுர்யேண அநுகரிக்கிறாள். அதர்வ சிரஸ்ஸிலே- ருத்ரன் தன்வைபவத்தைப் பரக்கநின்று பேசினான், தனக்கு அடங்காத ஐச்வர்ய மாயிருந்தது. இவன் இப்படி பேசுகைக்கு அடியென்? என்று ச்ருதி தானே சங்கித்து, [*ஸோந்தராதந்தரம் ப்ராவிசத்*] - என்று பரமாத்ம ப்ரவேசத்தாலே சொன்னான் என்றதிறே. அந்த பாவம் வந்தால் அப்படியே சொல்லலாயிருக்குமே. ஆக, "இப்படி பிரிவாற்றாமையாலே அவனை யநுகரித்து தரிக்கிறாள்'' என்று அறியமாட்டாதே, "ஸர்வேச்வரன் ஆவேசித்தான்போலே இராநின்றது'' என்று, திருத்தாயார் வினவவந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

முதற்பாட்டு. என்மகள், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் பண்ணி னேன் நான் என்னாநின்றாள்; எம்பெருமான் தன்பக்கலிலே ஆவேசித்துச் சொல்லுகிறாள்போலே இராநின்றதென்கிறாள்.

கடல்ஞாலஞ்செய்தேனும்யானேயென்னும் கடல்ஞாலமாவேனும்யானேயென்னும்*
கடல்ஞாலங்கொண்டேனும்யானேயென்னும் கடல்ஞாலங்கீண்டேனும்யானேயென்னும்*
கடல்ஞாலமுண்டேனும்யானேயென்னும் கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ ?*
கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன் ? கடல்ஞாலத்தென்மகள்பறகின்றவே. (1)

[கடல்ஞாலம் இத்யாதி] - [*அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ:*] என்னா நின்றாள். கடலோடுகூடின ஜகத்திலே ஸகல பதார்த்தங்களும், கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாதபடி அழிந்து, [*ஸதேவ*] என்கிறபடியே - தனக்கென்ன ஒரு நாம ரூபங்களில்லாதபடி அழிந்தவன்று, இத்தை உண்டாக்கினேன் நான் என்னாநின் றாள். ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டப்ரஹ்மமே காரணமாய், அது தானே ஸ்தூலா வஸ்த்தையை பஜிக்கையிறே கார்யமாகிறது. விசிஷ்டமே காரணமுமாய் கார்யமு மாயிருக்கையாலே புறம்பு ஒரு காரணமில்லாமையாலே, தானே உபாதாநமும் நிமித்தமும் ஸஹகாரியுமா யிறே யிருப்பது. இப்படி த்ரிவிதகாரணமும் தானே யாய் இத்தை உண்டாக்கினேன் நான் என்னாநின்றாள். அவதாரணத்தாலே காரணாந்தரநிஷேதம் பண்ணினபடி. [கடல்ஞாலமாவேனும்] [*தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத் ததநுப்ரவிச்ய ஸச்சத்யச்சாபவத்*] என்கிறபடியே இவற்றை உண்டாக்கி, இவற்றினுடைய வஸ்துத்வநாமபாக்த்வங்களுக்காக அநுப்ரவேசித்து இவற்றைச் சொல்லும் சப்தங்கள் தன்னளவும் வரும்படி இவையாய் நிற்கிறேன் நான் என்னாநின்றாள். வாசகமாயாதல் போதகமாயாதல் அவனைக் காட்டக்கடவ திறே; தோற்றுகிற இத்தைச் சொல்லிக்கொண்டு அபர்யவஸாந வ்ருத்தியாலே அவனளவும் வருதல், இஸ்ஸங்காதந்தனக்கே வாசகமாயாதல் இருக்குமிறே.

[*ஸச்ச த்யச்சாபவத்*]-என்கிறவிது ஸ்வரூபைக்யமல்ல, அநுப்ரவேச க்ருதம் என்னுமிடத்தைச் சொல்லிற்றிறே [*ததநுப்ரவிச்ய*] என்று. [கடல் இத்யாதி]-இவற்றை ஸ்ருஷ்டித்து, "மேலுள்ளது தானே நடக்கிறது" என்று விடுகையன்றிக்கே, இவற்றை அடியொத்திக்கொண்டுசென்று ரக்ஷிக்கும்படி. மஹாபலி போல்வார், பருந்திருஞ்சிறைப்போலே இத்தையபஹரித்து "என்னது" என்னுமன்று, இத்தை எல்லை நடந்து மீட்டுக்கொண்டேன் நான் என்னுநின்றாள். (யானே] - "ஆஸுர ப்ரக்ருதிகள் இவன்முன்பு நில்லார்களிறே" என்னுமதத்தாலே, "ராஜ்யத்தை வாங்கித்தரவேணும்" என்று அபேக்ஷித்தமாத்ரமேயிறே இந்த்ரன் பக்கல் உள்ளது; அவனுடைய ஔதார்யத்துக்கீடாகத் தன்னை அர்த்தியாக்கி, அவன் தரும் விரகறிந்து வாங்கினான் தானேயிறே. [கடல் இத்யாதி] - ஆஸுர ப்ரக்ருதிகளாயிருப்பார் இத்தை அழிக்கையன்றிக்கே, பூமிக்கு ரக்ஷகமாகவைத்த கடல் தானே இத்தையழிக்க, அண்டபித்தியிலேபுக்குச் சேர்ந்த இத்தை இடந்தெடுத்தேனும் நான் என்னுநின்றாள். அமிழ்ந்து கிடக்கிற பூமி, "என்னை எடுக்கவேணும்" என்று அபேக்ஷித்தமை இல்லையிறே; தானேயிறே செய்தான். [உண்டேனும்] - சிலர் இருக்கச் சிலர் அழிகையன்றிக்கே, ஸ்ரஷ்டாக்களோடு ஸம்ஹர்த்தாக்களோடு வாசியற எல்லாரையுமொக்க ப்ரளயங்கொள்ளப்புக, இத்தையடைய வயிற்றிலே வைத்து ரக்ஷித்தேன் நான் என்னுநின்றாள். "அப்போது வேறு சிலர் ரக்ஷித்தார்கள்" என்கைக்கு மற்றொருவர் உண்டாகைக்கு ஸம்பாவனையுமில்லை. [ஈசன்] - ஸர்வஸ்ரஷ்டாவாய் ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வாபத்ஸகனை ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ, அறிகிறிலேன். "உன்னைக்கேட்டு அறுதியிட வந்தோம், நீயும் ஒக்க விசாரியாநின்றாயீ! நாங்கள் பின்னை நிர்ணயிக்கும்படி என்?* [நாங்கள் தெரியும்படி என்?] நாங்கள் தெளியும்படி நீயே சொல்லாய்" என்ன, —[கடல்ஞாலத் தீர்க்கு] - "வைகுந்தத்தமரர்" என்னுமாபோலே, நித்ய ஸம்ஸாரிகளாய், பகவத்விஷயம் புதியது உண்டறியாதே போருகிற உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவேன். கொலோ என்றவிடம் - ஸம்சயோக்தியல்ல, காணுங்கோளென்று நிர்ணயித்துச் சொல்லுகிறாள். [கடல் இத்யாதி] - இதுதான் நித்யஸூரிகள் சொல்லக்கடவ வார்த்தை; ஆக நித்யஸூரிகள் சொல்லக்கடவ வார்த்தையை ஸம்ஸாரத்திலேயிருந்து என்மகள் சொல்லுகிற இதுக்கு நான் எத்தைச் சொல்லுவது. ... ... (1)

இரண்டாம் பாட்டு. ஸகலவித்யாவேதநமும் அவ்வித்யா ப்ரவர்த்தகத்வாதிகளும் நானிட்ட வழக்கென்கிறாள்.

கற்குங்கல்விக்கெல்லையிலனேயென்னும் கற்குங்கல்வியாவேனும்யானேயென்னும்*
கற்குங்கல்விசெய்வேனும்யானேயென்னும் கற்குங்கல்விதீர்ப்பேனும்யானேயென்னும்*
கற்குங்கல்விச்சாரமும்யானேயென்னும் கற்குங்கல்விநாதன்வந்தேறக்கொலோ?
கற்குங்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன்? கற்குங்கல்வியென்மகள்காண்கின்றவே. (2)

[கற்கும் இத்யாதி] - அல்பகாலத்துக்குள்ளே ஸாந்தீபநியோடே நான் கற்ற பரப்புக்கு ஓர் எல்லையில்லை என்னுநின்றாள். அன்றிக்கே, [*யதோவாசோ நிவர்த்தந்தே*] என்கிற ச்ருதிக்கு நிலமன்றிக்கே யிருக்கிறேன் நான் என்னாநின்றாள். கற்கும் கல்வியினுடைய எல்லைக்குள்ளே நிற்கிறேனல்லேன். அன்றிக்கே, "வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கை" என்கிறபடியே, வேதாந்தவேத்யன் நான் என்னுநின்றாள் என்னுதல். [ஆவேனும்] - அவற்றுக்கு அவிஷயமான வளவேயோ, அவைதான் என் அதீனமன்றோ. [*த்வமேவவித்யா*] என்கிறபடியே [செய்வேனும்] - அவ்வித்யைகள் தம்மை அவ்வவகாலங்களிலே உண்டாக்குவேனும் நான் என்னுநின்றாள். [கற்குங்கல்வி தீர்ப்பேனும்] - அவற்றின் ஸம்ச

யங்களைத் தீர்த்து தாத்பர்ய நிர்ணயம் பண்ணுவேனும் நான் என்னுநின்றாள். பரக்கக் கற்றுவைத்தே "சூந்யமே தத்வம்" என்கிறார் உண்டிறே. அன்றிக்கே, அத்யேதாக்களும் அத்யாபகரும் நானிட்ட வழக்கு என்னுநின்றாள் என்றுமாம். தீர்ப்பேனென்னுங்காட்டில் - இவ் வர்த்தத்தைக் காட்டுமோ? என்னில், - தீர்க்கை யாகிறது - அவற்றினுடைய எல்லை காண்கையிறே. [சாரமும்] - அவ்வித்யை களுடைய ஸாராம்சமான ப்ரயோஜநமும் நான் என்னு நின்றாள். [நாதன் வந் தேறக்கொலோ] - ஸகல வித்யாவேத்யனை ஸர்வேச்வரன் வந்து ஆவேசித் தானோ? [கற்கும் இத்யாதி] - இப்போது கற்று அறியவேண்டும்படி, பகவத் விஷ யத்தில் ஒவ்வோக்குழியிடாதேயிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. [கற்கும் இத்யாதி] - சொன்ன வார்த்தையைச் சொல்லுமித்தனை போக்கி, தானுக ஒரு வார்த்தை சொல்லமாட்டாத அளவாயிருக்கிற இவள் இவ்விஷயத்திலே அவ காஹிக்கிற எல்லையை, நான் எத்தைச் சொல்லுவது. ... ... (2)

மூன்றாம்பாட்டு. காரணமான ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களும் நானிட்ட வழக் கென்னு நின்றாளென்கிறாள்.

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும் காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும்*
காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னும் காண்கின்றவிக்காற்றெல்லாம்யானேயென்னும்*
காண்கின்றகடலெல்லாம்யானேயென்னும் காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ*
காண்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்? காண்கின்றவென்காரிகைசெய்கின்றவே. (3)

[காண்கின்ற இத்யாதி] - காணப்புக்கால் கண்டதாய்த் தலைக்கட்ட முடியாத படியான பரப்பையுடைத்தான பூமியெல்லாம் நானிட்ட வழக்கு என்னு நின்றா ளென்கிறாள். இப்படி இருக்கிறதுதான் கார்யரூபையான ப்ருதிவியிறே, கண்ணுக் குத் தோற்றுகிற இது இவ்வளவானால், இதுக்குங்கூடக் காரணமாய்த் தான் சாஸ்த்ரங்கொண்டு அறியவேண்டும்படி யிருக்குமது இவ்வளவல்லவிறே. [காண் கின்ற இத்யாதி]-காணப்புக்கால் கண்டதாய் முடியவொண்ணுதபடியாய், இது தனக் குங்கூட அவகாசப்ரதாநம்பண்ணும் ஆகாசமும் நானிட்ட வழக்குஎன்னுநின்றாள். [காண்கின்ற இத்யாதி] அப்படிப்பட்ட தேஜஸ்தத்வமும் நானிட்ட வழக்கு என்னு நின்றாள். ஸ்பர்சங்கொண்டு அறியும்படியிருக்கிற காற்றும் நானிட்டவழக்கு என்னுநின்றாள் [காண்கின்ற] - காண்பார்க்குக் கண்டதாய்த் தலைக்கட்ட முடியாத படியான பரப்பையுடைய கடலெல்லாம் நானிட்ட வழக்கு என்னுநின்றாள். காணப் புக்கால் கண்டதாய் மீளவொண்ணுதபடியான கடல்போலே ச்ரமஹரமான வடிவையுடைய ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ? [காண்கின்ற இத்யாதி] - நீங்களும் என்னோடொக்கக் காணுநின்றி கோளாகில், உங்களுக்கு நான் என்ன பாசுரமிட்டுச் சொல்லுவது; உங்களோடு என்னோடு வாசியுண்டோ சொல்ல வொண்ணுமைக்கு. [காண்கின்ற இத்யாதி] [*யதோவாசோநிவர்த்தந்தே*] என் கிற அபரிச்சேத்யமான விஷயத்தை யுட்புக்குப் பேசுகிற என் பெண்பிள்ளைசெய் கிற இத்தை நான் சொல்லுவதென்? ... ... (3)

நாலாம்பாட்டு. காலத்ரயத்திலுமுண்டான க்ரியாஜாதமெல்லாம் நானிட்ட வழக்கென்னுநின்றாளென்கிறாள்.

செய்கின்றகிதியெல்லாம்யானேயென்னும் செய்வானின்றனகளும்யானேயென்னும்*
செய்துமுன்னிறந்தவும்யானேயென்னும் செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னும்*
செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னும் செய்யகமலக்கண்ணனேறக்கொலோ*
செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்கேன்? செய்யகனிவாயிளமான்திறத்தே. (4)

[செய்கின்ற இத்யாதி] - அதில் வர்த்தமானமான க்ரியாஜாதம், செய்யக் கடவதாய் நிற்கிற க்ரியாஜாதம், முன்பு செய்தற்ற க்ரியாஜாதம் இவையடைய நானிட்ட வழக்கு என்னுகின்றாள். [செய்கைப்பயனுண்பேனும்] - [*அஹம்ஹி ஸர்வயஜ்ஞாநாம்போக்தாச*] என்னுகின்றாள். க்ரியாபலபோக்தாக்களும் நானிட்ட வழக்கு என்னுகின்றாள். அன்றிக்கே, செய்கையாகிற க்ரியையும், பலபோக்தாவும் நானிட்ட வழக்கு என்னுகின்றாள். [செய்வார்களை இத்யாதி] - க்ரியாகர்த்தாக்களை இடுவித்து அவற்றை அநுஷ்டிப்பிப்பேனும் நானென்னுகின்றாள். அன்றிக்கே, அவர்கள் இவற்றைக்கொண்டு என்னையாச்ரயிக்கும்படி பண்ணுவேனும் நானென்னுகின்றாள். [செய்ய] - அஸிதேக்ஷணையான ஆகாரம் போய், புண்டரீகாக்ஷன்படியாய்விட்டது. *மையகண்ணாளான ஆகாரம்போய்,* செய்யகோலத் தடங்கண்ணன்படியாய்விட்டது. [செய்யவுலகத்தீர்க்கு] - "சொல்லலாம், ஆகாது" என்று அறியாதே, "சொல்லு, சொல்லு" என்று அலைக்கிற படுபாடரான உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. [செய்ய கனிவாய்] - அநுகார (ரஸ)த்தாலே ஸம்ச்லேஷஸமயத்திற்போலேயிருக்கிற இவள், அதரம் செவ்விபெற்று வரும்படி விக்ருதையாய், அதிமுக்தையாயிருக்கிறபடி நான் எத்தைச் சொல்லுவது. பிரிவில் விவர்ணமாகை ப்ராப்தமாயிருக்க, இவளதரம் செவ்விபெற்று வருகிறதிறே அநுகாரத்தால் வந்த தரிப்பாலே. சிவந்தகனிபோலேயிருக்கிற அதரத்தையுடையளாய், முக்தமான மான்போலே பேதையான இவளிடையாட்டத்தே ... (4)

அஞ்சாம்பாட்டு. ஜகத்ரக்ஷணப்ரமுகமான சேஷ்டிதங்களுமெல்லாம் பண்ணினேன் நானென்னுகின்றாளென்கிறாள்.

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னும் திறம்பாமல்மலையெடுத்தேனேயென்னும்*
திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னும் திறங்காட்டிஅன்றுஐவரைக்காத்தேனேயென்னும்*
திறம்பாமல்கடல்கடைந்தேனேயென்னும் திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ*
திறம்பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்? திறம்பாதென்திருமகளெய்தினவே. (5)

[திறம்பாமல் இத்யாதி] - ஒருவர்கூறை எழுவர் உடாதபடி, [*பீஷாஸ்மாத்வாத:பவதே*] என்கிறபடியே, பூமியை நோக்குகிறேன் நானென்னும். ஒரு பசுவின்மேலாதல் ஒரு இடையன்மேலாதல் ஒரு துளி படாதபடி கோவர்தநகிரியை தரித்து ரக்ஷித்தேனும் நானென்னுகின்றாள். அஸுரவர்க்கத்தைத் தப்பாதபடி அறுத்துப்பொகட்டேனென்னும். [திறங்காட்டி இத்யாதி] - லோகத்திலே என்படிகளைக்காட்டி; பகலை இரவாக்கியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், சத்ருக்களுடைய உயிர்நிலையைக் காட்டியும் இப்படி அன்று பாண்டவர்களை பக்ஷபதித்து ரக்ஷித்தேனும் நானென்னுகின்றாள். [*நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண*] என்ற அர்ஜுநனை, [*கரிஷ்யேவசநம்தவ*] என்னப் பண்ணினனிறே. [திறம்பாமற்கடல்] - ஒருதாழிக்கு உட்பட்ட தயிரை ஒன்றும் பிறிகதிர்ப்படாதபடி கடைவாரைப்போலே, ஸமுத்ரமென்கிற மஹாதத்த்வத்தின் நடுவே மந்தரத்தை நட்டுக் கடைகிறவிடத்துக் கீழேவிழுதல் மேலேகொந்தளித்தல் செய்யாதபடி கடலைக்கடைந்தேனும் நானென்னும் [திறம்பாத] - தன் சாஸநத்தை ஒருவரால் தப்பவொண்ணாதபடியிருக்கிற அபரிச்சேத்ய ஸ்வபாவனான ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ? [திறம்பாத] - "கேட்டல்லது கால்வாங்கோம்" என்று இருக்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. லக்ஷ்மீஸமையான என்மகள், ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாதபடி ப்ராபித்தவற்றை நான் எத்தைச் சொல்லுவது? ஆழங்காலிலே இழிந்தார்படியைக் கரையிலே நின்றாராலே சொல்லப்போமோ? ... ... (5)

ஆறாம்பாட்டு. கோவர்த்தநோத்தரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் பண்ணினேன் நான் என்னாநின்றாளென்கிறாள்.

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும் இனவேறுகள்செற்றேனும்யானேயென்னும் *
இனவான்கன்றுமேய்த்தேனும் யானேயென்னும் இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும் *
இனவாயர்தலைவனும்யானேயென்னும் இனத்தேவர்தலைவன்வந்தேறக்கொலோ *
இனவேற்கண்ணல்லீர்க்கிவையென்சொல்லுகேன் ? இனவேற்கண்ணியென்மகளுற்றனவே. (6)

[இனவேய்மலை] - அணுக்களைக் கவிழ்த்துப் பிடித்தாற்போலே, திரள் திரளான மூங்கிலையுடைத்தான மலையை அநாயாஸேநதரித்தேன் நான் என்னாநின்றாள். [இனம்] - ஒன்றிரண்டன்றிக்கே ம்ருத்யுஸத்ருசமாயிருக்கிற ருஷபங்கள் ஏழையும் ஒருகாலே ஊட்டியாகநெரித்துப்பொகட்டேன் நான் என்னும். [இனவான்கன்று] - [* வத்ஸமத்யகதம் பாலம் *] என்கிறபடியே என்னோடொத்த பருவமான கன்றுகளை மேய்த்தேனும் நானென்னும். [இனவாநிரை] - முன்பு ப்ரஹ்மசர்யமநுஷ்டித்துப் பின்புகார்ஹஸ்த்யதர்மம் அநுஷ்டிப்பாரைப்போலே, பால்யத்திலே கன்றுகளைமேய்த்து, பருவம்நிரம்பின பின்பு பசுக்களை மேய்த்தேனும் நானென்னும். [இனவாயர்] - " தன்னேராயிரம்பிள்ளைகள் " என்கிறபடியே, என்னோடொத்த பருவத்தில் பிள்ளைகளும் நானுமாய்த் தீம்புசெய்து திரிகிறவிடத்தில், அவர்களில் என்றனைத் தீம்பரில்லையென்னும். [இனத்தேவர்] - நைரபேக்ஷ்யத்துக்குத் தன்னோடொத்திருக்கிற நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ ? அன்றிக்கே, [இனத்தேவர்] - தனியநுபவிக்கவொண்ணாமையாலே திரள் திரளாயிருக்கிற நித்யஸூரிகளென்னுதல். " அடியார்கள் குழாங்கள் " என்னக்கடவதிறே. [இனவேல்] - வேலொழுங்கு போலே, " இவள் தசை எவ்வளவாய்த் தலைக்கட்டுகிறது " என்று கூர்க்கப் பார்த்துக்கொண்டிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. ஏன்றான், சொல்ல அருமையென் ? என்ன, [இனவேற்கண்ணி] - தன் கண்ணுக்கிலக்கானார் படுவதைக் தான் படுகிறபடியைச் சொல்லப்போமோ.* " உயிர்காமின்கள்ஞாலத்துள்ளே " என்றிறே இவன் கண்ணுக்கு இலக்கானார் படுவது. ... ... (6)

ஏழாம்பாட்டு. எம்பெருமான் ஆச்ரித விஷயத்தில் இருக்கிற இருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாளென்கிறாள்.

உற்றார்களெனக்கில்லையாருமென்னும் உற்றார்களெனக்கிங்கெல்லாருமென்னும்*
உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும் உற்றார்களையழிப்பேனும்யானேயென்னும்*
உற்றார்களுக்குற்றேனும்யானேயென்னும் உற்றாரிலிமாயன்வந்தேறக்கொலோ?*
உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லுகேன்யான்? உற்றென்னுடைப்பேதையுரைக்கின்றவே. (7)

[உற்றார்கள் எனக்கில்லை யாருமென்னும்] - எனக்கு ஒருபாதியால் வந்த பந்துக்கள் ஒருவருமில்லை யென்னும். அன்றிக்கே, என்னோட்டை ஸம்பந்தமறிந்து எனக்கு ஸ்நேஹிக்கக்கடவார் ஒருவருமில்லை யென்னுதல், [*பதிம்விச்வஸ்ய*] என்று இத்தை ஓதிவைத்தே தேவதாந்தரபஜநமிறே பண்ணுவது. [உற்றார்கள் எனக்கு இங்கெல்லாருமென்னும்] - எனக்குநிருபாதிக பந்துக்களல்லாதார் இல்லை யென்னும். அவர்கள் இப்படி யிருக்கச்செய்தே நிருபாதிகபந்துவாய் எல்லார்க்கும் ஸ்நேஹித்திருப்பனென்னுதல். [உற்றார்களைச்செய்வேனும் யானேயென்னும்] - அவர்களிலே சிலர் வந்து என்னை ஆச்ரயிக்கும்படி பண்ணுகிறேனும் நானென்னும். [உற்றார்களையழிப்பேனும்] - அவர்களுக்கு ப்ரயோஜநாந்தரங்களிலே ருசியுண்டானால், அந்த ப்ரயோஜநங்களைக் கொடுத்து என்பக்கலினின்றும் அகற்றுவேன்

நானென்னும். அன்றிக்கே, ஆண்டான் பணித்தானாக, இளையபெருமாள், "அவர்களை ஸௌந்தர்யாதிகளாலே அழிப்பேனும் நானென்னாநின்றாள்" என்றும் அருளிச்செய்வர். [உற்றார்களுக்கு உற்றேனும் யானேயென்னும்] - என் பக்கல் அநந்யப்ரயோஜநராய்ப் பரிமாறுவார்க்கு என்றனை யநந்யப்ரயோஜநர் இல்லையென்னுதல். அன்றிக்கே, என்னையே ஸர்வவிதபந்துவுமாகப் பற்றினவர்களுக்கு, நானும் அவர்களையே ஸர்வவிதபந்துவுமாக இருப்பேன் என்னவுமாம். [உற்றாரிலி] - இற்றைக்கு முன்பு ஸ்வயத்நத்தாலே கிட்டினார் ஒருவருமில்லாதபடியிருக்கிற ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ? [உற்றீர்கள் இத்யாதி] - "இங்ஙன் சம்ஸயிக்கக்கடவதோ, பந்துக்களுக்கு நிச்சயித்துச் சொல்ல வேணுங்காண்" என்ன, - உறவுமுறையாரா மித்தனையோ வேண்டுவது, சொல்லலாய்ச் சொல்லவேண்டாவோ. என்ன பாசுரத்தைச் சொல்லிச் சொல்லுவேன்? ஏன்றான், சொல்லவொண்ணாமைக்கு வந்ததென்? என்னில், - [உற்று இத்யாதி] - பருவம் நிரம்பாத என்பெண், மறுபாடுருவத்தைத்துச் சொல்லுகிறவற்றை, கரையிலேநிற்கிற நான் எத்தைச் சொல்லுவது. திருத்தாயாரான தசையும் இவர் தமக்கே யுள்ளதொன்றாகில், இங்குச்சொல்ல வொண்ணாதபடி கலங்குகை யாவதென்? என்னில், — "தனக்கும் தன் தன்மையறிவரியான்" என்று - ஈச்வரனை, தன்படி தானும் அறியான் என்று சொல்லுமாபோலே; தம் தசை தமக்குங்கூடப் பேச்சுக்கு நிலமன்றென்கிறது. ... ... (7)

எட்டாம்பாட்டு. ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மாதிகள் நானிட்ட வழக்கு என்னாநின்றாளென்கிறாள்.

உரைக்கின்ற முக்கட்பிரான்யானேயென்னும் உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும்*
உரைக்கின்றவமரரும்யானேயென்னும் உரைக்கின்றவமரர்கோன்யானேயென்னும்*
உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும் உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ*
உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்? உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே. (8)

[உரைக்கின்ற] - வேதத்திலே பகவத்விபூதியைப் பரக்கச்சொல்லுகிற இடங்களிலே யாதல், அர்த்தவாதப்ரகரணங்களிலே யாதல், தாமஸபுராணங்களிலே யாதல் சொல்லப்படுமவனாய், ஸ்வகோஷ்டிக்கு உபகாரகனான ருத்ரன் நானிட்ட வழக்கு என்னாநின்றாள். [*ருத்ராணாம் சங்கரச்சாஸ்மி*] என்று ஈச்வரனுக்கு ப்ரகாரமாகச் சொல்லப்பட்டவனென்றுமாம். [உரைக்கின்றதிசைமுகன்] - ['விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்ட்டாய ச்ரேஷ்ட்டாய*] என்கிறபடியே, அவன் தனக்குங்கூட ஜநகனாக ப்ரமாணப்ரஸித்தனாயிருக்கிற சதுர்முகனும் நானிட்ட வழக்கென்கிறாள். [அமரர்] - ப்ரஹ்மாவாலே ஸ்ருஷ்டராய், நித்யஸ்ருஷ்டிக்குக் கடவராக சாஸ்த்ரங்களிலே சொல்லப்படுகிற தசப்ரஜாபதிகளும் நானிட்ட வழக்கென்னும். [உரைக்கின்ற அமரரென்று] - [*ப்ரஹ்மதக்ஷாதய:*] என்று பகவத்ப்ரகாரமாகச் சொல்லப்படுகிற என்றுமாம். [உரைக்கின்ற அமரர்கோன்] - [*நகிரிந்த்ரத்வதுத்தர:*] என்று சொல்லப்படுகிறவன் என்னுதல். [*தேவாநாமஸ்மிவாஸவ*] என்று ப்ரகாரமாகச் சொல்லப்படுகிறவன் என்னுதல். [முனிவரும்] - வேதார்த்தத்தை ஸ்மரித்து, ஜகத்துக்கு கர்த்தவ்யங்களைச் சொல்லும் மந்வாதிகளும் நானிட்ட வழக்கென்னும். [முகில்வண்ணன்] - [*நீலதோயதமத்யஸ்த்தா*] என்று வர்ஷுக வலாஹகமாகச் சொல்லப்படுகிற என்னுதல். வார்த்தை சொல்லுவதாய், கழுத்தே கட்டளையாக நீரைமுகந்து, மின்னி, முழங்கி, வில்லிட்டு வருவதொரு மேகம்போலே வடிவழகையுடைய ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ! அறிகிறிலேன். [உரைக்கின்ற உலகத்தீர்க்கு] - சிலவற்றைச் சொல்லுமித்தனையாய், "சொல்லலாம், சொல்லவொண்ணாது" என்று பாராதே, 'சொல்லு,

சொல்லு" என்றலைக்கிற லௌகிகரான உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. [உரைக்கின்ற இத்யாதி] - அதுவும் சொல்லியொழிவேனிறே வார்த்தை சொல்லிற்றிலளாகில். கோமளமென்கையாலே - ஸௌகுமார்யத்தைச் சொல்லிற்று. கொடியென்கையாலே - [*பதிஸம்யோகஸுலபம்வய:*] என்கிறபடியே ஒரு கொள்கொம்போடே சேராதபோது தறைப்படும் பருவமென்கை. ... (8)

ஒன்பதாம்பாட்டு. அகர்மவச்யத்வ ப்ரமுகமான பகவதுக்திகளைத் தன்னினைவாகப் பேசாநின்றாளென்கிறாள்.

கொடியவினையாதுமிலனேயென்னும் கொடியவினையாவேனும் யானேயென்னும்*
கொடியவினைசெய்வேனும்யானேயென்னும் கொடியவினைதீர்ப்பேனும்யானேயென்னும்*
கொடியானிலங்கைசெற்றேனேயென்னும் கொடியபுள்ளுடையவனேறக்கொலோ*
கொடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன் கொடியேன்கொடியென்மகள்கோலங்களே. (9)

[கொடியவினையாதுமிலனேயென்னும்] - கர்மவச்யரைக்கண்ணற்று நலியும் கர்மங்கள் எனக்கு ஒன்றுமில்லையென்னும். [*அநச்நந்நந்யோ அபிசாகசீதி*] [*நமாம்கர்மாணிலிம்பந்தி*] என்று அவன்படியைத் தான் சொல்லாநின்றாள். "நாட்டிற்பிறந்துபடாதனபட்டு" என்கிறவிடம் - ஐச்சிகமிறே. [ஆவேனும்] - நான் இவற்றால் ஸ்பர்சிக்கப்படாதமாத்ரமேயாய், அவைதான் எனக்குப் புறம்பாயிருக்கிறதோ; அப்பாபமாகிறது - என்னுடைய நிக்ரஹமன்றோவென்னும். [செய்வேனும்] - ஆச்ரிதவிரோதிகளுக்குக் கொடியதான பாபத்தை விளைப்பேனும் நானேயென்னும். ஆச்ரிதவிரோதிகளைப் பாபங்களிலே மூட்டுகை - செய்கையாகிறது. [*தாநஹம்த்விஷத:க்ரூராந்*]. [தீர்ப்பேனும்] - என்னை ஆச்ரயித்தவர்களுக்கு அவைவந்துகிட்டாதபடி, [*ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி*] என்பேனும் நானென்னும். [கொடியானிலங்கை செற்றேனேயென்னும்] - இவ்விடத்தில், "கொடியானென்கிறவிடம் - திருத்தாயார் வார்த்தை காண்" என்று அருளிச்செய்வர் ஜீயர், எதிரிகளை இவன் ஒன்றாக மதித்திருந்தானாகாமைக்கு; அவனாலே ஆவிஷ்டையிறே இவள். * சுரிகுழல்கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையுடையவன் என்னக்கடவதிறே [கொடியபுள்] - ஆச்ரிதவிரோதிகளுக்கு ம்ருத்யு ஸத்ருசமான பெரியதிருவடியை வாஹநமாகவுடைய ஸர்வேச்வரன் வந்து ஆவேசித்தானோ? [கொடியவுலகத்தீர்க்கு] - "கேட்கவேணும்" என்று திரண்டு கிடக்கிற உலகத்தீர்க்கு என்னுதல்; 'சக்யம், அசக்யம்' என்று பாராதே, "சொல்லு, சொல்லு" என்று நிர்ப்பந்தித்து ஸ்வார்த்தபரைகளாயிருக்கிற உங்களுக்கு எத்தைச் சொல்லுவது என்னுதல். [கொடியேன்] - இவள் அநுகரித்துச்சொல்லுகிற பாசுரங்களைக் கேட்கவேண்டும்படியான பாபத்தைப் பண்ணின என்மகள் தர்சநீயமான ப்ரவ்ருத்திகளையென்னுதல், ஒருப்பாடுகளையென்னுதல், ... (9)

பத்தாம்பாட்டு. ஸ்வர்க்கப்ரமுகமான பதார்த்தங்களெல்லாம் நானிட்ட வழக்கென்னாநின்றாளென்கிறாள்.

கோலங்கொள்சுவர்க்கமும்யானேயென்னும் கோலமில்நரகமும்யானேயென்னும்,*
கோலந்திகழ்மோக்கமும்யானேயென்னும் கோலங்கொளுயிர்களும்யானேயென்னும்*
கோலங்கொள்தனிமுதல்யானேயென்னும் கோலங்கொள் முகில்வண்ணனேறக்கொலோ*
கோலங்கொளுலகத் தீர்க்கென்சொல்லுகேன்? கோலந்திகழ்கோதையென்கூந்தலுக்கே. (10)

(கோலங்கொள் இத்யாதி) - ஸுகரூபமான ஸ்வர்க்கம். நிலைநில்லாமையாலே, முகப்பில் தர்சநீயதையைப் பற்றச்சொல்லுகிறது. "நரகத்தோடு ஒத்திருக்

கச்செய்தே, வாசலிலே கழஞ்சுசெம்மண் பூசியிருக்குமாபோலேகாண்'' என்று அருளிச்செய்வர். (கோலமில்) - ஆபாதப்ரதீதியில் அங்ஙனும் ஒன்றின்றியிலே யிருக்கிற நரகமும் நானிட்டவழக்கு என்னுநின்றாள். (மோக்கமும்) - அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷமும் நானிட்டவழக்கு என்னுநின்றாள்."கடல்ஞாலம் செய்தேன்'' என்று - ஸ்ருஷ்டிதொடங்கி, மோக்கமும்யானேயென்று மோக்ஷ பர்யந்தமாக ஸ்வகார்யமென்கிறாள். (கோலங்கொள் உயிர்களும்) - நாடகங்கட்டி ஆடுவாரைப்போலே, தேவனாக, மநுஷ்யனாக; இப்படி நாநாவான சரீரபரிக்ரஹம் பண்ணுகிற ஆத்மாக்கள் என்னுதல்; ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மாக்களென்னுதல். (கோலங்கொள்தனிமுதல்) - இதுக்கெல்லாம் காரணமான மூலப்ரக்ருதியைச் சொல்லுதல், ஸங்கல்பரூபஜ்ஞாநத்தைச் சொல்லுதல். விசித்ரகார்யகாரிணியான ப்ரக்ருதியையும், அப்படிப்பட்ட ஸங்கல்பரூபஜ்ஞாநத்தையும் ப்ரகாரமாகவுடையனாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரனென்னுதல்; (கோலங்கொள்முகில்வண்ணன்) - திருமேனிக்கு மேகத்தை ஒப்பாகச் சொல்லும்போது, அலங்கரித்துச் சொல்லவேணுமாயிற்று. மின்னிமுழங்கிவில்லிட்டு வந்து தோற்றினபோதாயிற்று ஒப்பாகச் சொல்லலாவது. (கோலங்கொள்உலகத்தீர்க்கு) "கேட்கவேணும்'' என்று ஒருப்பட்டிருக்கிற உலகத்தீர்க்கு. அன்றிக்கே, மயிரும் உகிரும்பேணி, உடம்புபேணிவந்து அலங்கரித்து நிற்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. (கோலம் இத்யாதி) - அழகியமாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப் பிறந்த அவஸ்த்தைகளை. இவள்மாலையையும் மயிர்முடியையும் கண்டார் படுகிற பாட்டைத்தான்பட்டு அநுகரித்துச்சொல்லுகிறவற்றை நான் எத்தைச்சொல்லுவது. ... ... (10)

நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லவர்கள் 'ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்யப்பெறுவர்களென்கிறார்.

கூந்தல்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர்கொழுந்துக்குங்கேள்வன்தன்னை*
வாய்ந்தவழுதிவளநாடன் மன்னுகுருகூர்ச்சடகோபன்குற்றேவல்செய்து*
ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார் *உலகில்
ஏந்துபெருஞ்செல்வத்தராய் திருமாலடியார்களைப்பூசிக்க நோற்றார்களே. (11)

(கூந்தல்மலர்மங்கைக்கும்) - ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்துக்கும் ஹேதுபூதையாயிருக்கும் பெரியபிராட்டியார் (விஷ்ணோஃஸ்ரீ:) என்கிறபடியே, ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தாயிருக்கிற பெரியபிராட்டியார். அதுக்கு விளைபூமியாயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி. அதினுடைய பலரூபையாயிருக்கும் நப்பின்னைப்பிராட்டி (*ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:*) (கேள்வன்தன்னை) - இவர்களுக்குப் பதியாயுள்ளவனை. இத்தால்-ஒரு அவதாரமாத்ரமன்றிக்கே, உபயவிபூதிநாதனை பூர்ணவிஷயத்திலே அநுகரிக்கிறாரென்று தோற்றியிருக்கிறபடி. (வாய்ந்த) - வாய்க்கையாவது-கிட்டுகை. கிட்டின. அனுகாரத்தாலே கிட்டினபடியை நினைக்கிறது. (குற்றேவல்செய்து) - ஆழ்வார் அவன் திருவடிகளிலே அந்தரங்கவ்ருத்திகள் பண்ணினபடியாயிற்று இவைதான். வாசிகமாக அடிமைசெய்தபடியாயிற்று. அநுகாரம் அடிமையானபடி எங்ஙனே? என்னில், - அப்படியாகத் தட்டென், கொள்ளுகிறவன்கருத்தாலே. அவனுகப்பேயிறே அடிமையாலும் புருஷார்த்தம். "நம்முடைய விச்லேஷத்தில் அநுகரித்து தரிக்கவேண்டும்படி ஸம்ஸாரத்திலே இப்படியுண்டாவதே'' என்று திருவுள்ளம்போர உகக்கும், அது அடிமையாய்த் தலைக்கட்டுமித்தனை. (ஆய்ந்த தமிழ்மாலை) - ஆராய்ந்து சொன்ன தமிழ்த்தொடை ஆயிரத்திலும் இப்பத்தை அப்யஸிக்கவல்லவர்கள் (உலகிலேந்துபெருஞ்செல்வத்தராய்) - இந்த லோகத்திலே எல்லாரும் கொண்டாடும்படி வைஷ்ணவ ஸ்ரீயையுடையராய். அன்றிக்கே "நின்

னையேதான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் தன்னையேதான்வேண்டும் செல்வம்'' என்கிறபடியே, லோகத்திலே முகங்கெழுபானையான நிரவதிகஸம்பத்தை யுடையராய்க்கொண்டு (திருமாலடியார்களைப்பூசிக்க நோற்றார்களே) - ஸ்ரீமத்புத்ரர்களை ஆராதிக்கப் பெறுவர்கள். ச்ரியःபதியடியாரை ஆராதிக்கையாவது - இவர் அநுகாரத்தாலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியகரரானப்போலே, இது கற்றார்களும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியகரமான வ்ருத்திபண்ணப்பெறுவரென்கை. அதாவது - இவர் அநுகரித்த இப்பாசுரத்தைச் சொல்லுகை. "தொண்டர்க் கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்'' என்னக்கடவதிறே. ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கடல்ஞாலத்தீசனை முன்காணமல்நொந்தே*
உடலுவநுகரிக்கலுற்று*— திடமாக
வாய்ந்தவனைத்தான்பேசும்மாறனுரையதனை*
ஆய்ந்துரைப்பாராட்செய்யநோற்றார்.

ஆழ்வார்திருவடிகளே சரணம், எம்பெருமானார்திருவடிகளே சரணம்,

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஏழாந்திருவாய்மொழி—நோற்றநோன்பு : ப்ரவேசம்.

கீழில்திருவாய்மொழியில் - அநுகரித்து தரிக்கப்பார்த்தார். "அநுகரித்து தரிக்கவேண்டும்படியான கலக்கம் பிறந்தவிடத்திலும் வந்து முகங்காட்டிற்றிலன்; இதுக்கு அடியென்? தன்பக்கல் ஆசாலேசமுடையார்க்குத் தானே வந்து முகங் காட்டி ரக்ஷிக்கக்கடவ ஸர்வேச்வரன் நம்பக்கல் ஆறியிருக்கைக்கு நிபந்தநமென்'' என்று பார்த்தார்; "இனி இங்ஙனேயாமித்தனை; நம்ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலே, தன்னாலல்லது செல்லாதபடியாயிருப்பதோர் ஆற்றாமை யுண்டாயிருந்தது; நமக்கு அத்தை 'ஸ்வரூபம்' என்று அறியாதே 'உபாயம்' என்று இருந்தானுகவேணும்'' என்று பார்த்து, தன்கையில் ஒன்று இல்லாமையை யறிவித்து அவன் திருவடி களிலே சரணம் புகுகிறார். கடற்கரையில் வெளியிலே, மஹாராஜருள்ளிட்ட முதலிகளோடும், (*லக்ஷ்மணம் புண்யலக்ஷணம்*) என்கிற தம்பியோடுங்கூட எழுந் தருளியிருக்க, ஸ்ரீவிபீஷணாழ்வான் (*ராவணோ நாமதுர்வ்ருத்த:*) என்று ஸ்வநிகர் ஷத்தை முன்னிட்டுக்கொண்டுவந்து பெருமாள் திருவடிகளிலே விழுந்தாப்போலே, இவரும், அவன் கடற்கரையிலே தனியிருந்த இழவுதீர, பிராட்டிமாரோடும் நித்ய பரிகரத்தோடுங்கூட சிரீவரமங்கலநகரிலே திருவநந்தாழ்வான்மேலே எழுந்தருளி யிருக்கிற வானமாமலை திருவடிகளிலே, வேரற்றமரம்போலே புகலற்றுவிழுந்து சரணம் புகுகிறார். இவர்தாம் என்கொண்டு அவனை வடிம்பிடப்பார்க்கிறது? என்னில்,—அவன் ரக்ஷ்யவிஷயாபேக்ஷியாயிருந்தான், நமக்கு ரக்ஷகாபேக்ஷை யுண்டாயிருந்தது, ஆனபின்பு இதுக்குமேற்பட ஸம்பந்தமுண்டோ? ... *

முதற்பாட்டு. எனக்குப் பேற்றுக்கு உடலாயிருப்பதொரு கைம்முதலில்லை, இல்லாமையாலே ரக்ஷகாபேக்ஷையுண்டு; பரிபூர்ணரான தேவர் ரக்ஷ்யவிஷயார்த்தி யாய் இருந்தீர், ஆகையாலே தேவரே என் அபேக்ஷை செய்தருளவேணுமென்கிறார்.

நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் *ஆகிலுமினியுன்னைவிட்டொன்று
மாற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே*
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர்*
வீற்றிருந்தவெந்தாய் உனக்குமிகையல்லேனங்கே. (1)

(நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்)-(*நதர்மநிஷ்ட்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே*) என்கிறார்.(*நதர்மநிஷ்ட்டோஸ்மி*)-நாட்டார் "இவன் சில செய்யாநின்றான்" என்றிருக்கைக்கும் அதுகண்டு நான் "நமக்குச் சில உண்டாகாதே" என்று ப்ரமிக்கைக்கும், நீ கைவிடுகைக்கும் வேண்டுவதுண்டு; பலத்தோடே வ்யாப்தமாயிருப்பதொன்றில்லை. (*நசாத்மவேதீ*) - தாச்சீல்யந்தோற்றவிருப்பன், எனக்கு அதுதானுமில்லை. [*தத் ஜ்ஞாந மஜ்ஞாந மதோந்யதுக்தமிறே*] ஆத்மயாதாத்ம்யஜ்ஞாந பூர்வகமாயிருக்கும் ஈச்வரஜ்ஞாநம் எனக்கில்லை. [*நபக்திமாந்*] பக்தியில்லை என்று சொல்லவேண்டாவிறே, கீழில் அவை இரண்டும் உண்டானால் வருமதிறேயது. [நோற்ற நோன்பிலேன்] - நோன்பிலேன் என்னவமையாதோ 'நோற்ற நோன்பிலேன்' என்னவேணுமோ? என்னில், - ஸாதநங்களைச் சமைய அநுஷ்ட்டித்து, பலத்தோடே வ்யாப்தமாகப் பார்த்திருக்கலாவது ஒன்றில்லை என்கைக்காக. சக்ரவர்த்தி ஸ்ரீவஸுதேவரைப்போலே பேற்றுக்கடியாக நினைத்திருக்கலாவதொன்றில்லை. [நுண்ணறிவிலேன்] - [*நதர்மநிஷ்ட்டோஸ்மி*] என்கிறவிடத்தில், தர்மமில்லை என்னாதே தர்மநிஷ்டனாகப்பெறுகிறிலேன் என்றாற்போலே, அறிவிலேன் என்னாதே, நுண்ணறிவிலேன் என்கிறது: ஸ்வஸ்வரூபஜ்ஞாநபூர்வகமாக பரஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரபர்யந்தமாக அறியும் அறிவையுடையேனல்லேன். [*நபக்திமாந்*] என்றும், "நின்கணும்பத்தனல்லேன்" என்றும் எடுத்துக்கழித்தமாத்ரம் இங்கும் எடுத்துக்கழியாதொழிவானென்? என்னில்,— [*உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய*] என்கிறபடியே, அவையிரண்டுமுண்டானால் வருமதிறேபக்தி: அவை இல்லாமையாலே எடுத்துக்கழிக்கவும் வேண்டாவிறே. ஆனால் இவ்வோபாதி, "கர்மமில்லை" என்றபோதே ஜ்ஞாநமில்லையாகாதோ, அது எடுத்துக்கழிக்கவேண்டுவானென்? என்னில்— பூர்வஜந்மத்திலே கர்மம் தலைக்கட்டின வளவிலே சரீரவிச்லேஷம் பிறந்தால் அநந்தர ஜந்மத்திலே ஜ்ஞாநமுண்டாகக்கடவது. பக்தியும் அப்படியானாலோ? என்னில்—ஜ்ஞாநகர்மங்களிரண்டும் உண்டானால் பக்தி கூடியல்லது நில்லாது, ஆனபின்பு இங்கு அப்படியாகவொண்ணாது. "உன்னைவிட்டொன்றுமாற்றகிற்கின்றிலேன்" என்று இவர் சொல்லுகிற இது பக்தியன்றோ, [*ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்தி:*] இறே; ஆனபின்பு இது உபாயமானாலோ? என்னில்,— அங்ஙனொண்ணாதிறே, கர்மஜ்ஞாந ஸஹக்ருதாந்த:கரணனுக்குப் பிறக்கும் பரபக்தியிறே சாஸ்த்ரங்களில் ஸாதநமாகச் சொல்லிப்போருகிறது; இது அங்ஙனன்றிக்கே, அவனனுக்ரஹமடியாக வந்ததாகையாலே இது ஸ்வரூபமாமித்தனை. அங்ஙனன்றிக்கே, புராணங்களிலே தனித்தனியே கர்மஜ்ஞாநங்களை ஸாதநமாகச் சொல்லுகையாலே சொல்லிற்றாகவுமாம். இவையில்லையாகில் முதலில்லாதார் பலிசை இழக்குமத்தனையன்றோ? என்ன,— [ஆகிலும்] - இங்ஙனே இருந்ததேயாகிலும், "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற இத்தை "உபாயம்" என்று இருந்தாராகில் [ஆகிலும்] என்கைக்கு விஷயமில்லை. ஆனால், நீர் இந்நாள்வரையும் ஆறியிருந்தீரே? என்ன, [இனி] - உன்னையும் அறியாதே என்னையும் அறியாதே இருந்தவன்று இழக்கவமையாதோ. உன்நிறைவும் என்குறைவும் அறிந்த இன்றும் இழக்கவேணுமோ? ஒருவன் கையிலே சோறுமுண்டாய் அவன் இடுவானுமானால், ஒருவனுக்குச் சோறுமின்றிக்கே பசியனுமானால் இழக்கவேணுமோ? [இனி] என்கையிலேயும் ஒன்றுண்டாய் அது சமையுந்தனையும் ஆறியிருக்கிறேனோ. ஸத்தையை உபாயத்திலே சிலவெழுதிக் கைவிடப்பார்க்கில் பார்க்குமித்தனை. அநாதிகாலம் மெய்மறந்து இழந்தகாலம் போராதோ, நான் மெய்யாக இசைந்த இன்றும் இழக்கவேணுமோ? [உன்னைவிட்டு] - நீயும் என்னைப்போலே இருந்தாயாகில் நான் ஆறியிரேனோ, நானும் சிறிது செய்துவரவேண்டும்படியோ நீ இருக்கிறது. [உன்னைவிட்டு] ப்ராணனைவிட்டு ப்ரக்ருதி தரிக்கவற்றோ. [ஒன்றுமாற்றகிற்கின்றிலேன்] உன்னுடைய ஸ்வரூபஜ்ஞாநம் எனக்கு தாரணத்துக்கு உடலாயிருக்கிறதில்லை. [*தத்தஸ்யஸத்ருசம்பவேத்*]என்று

ஆறியிருக்கைக்கும் ஒருவழியுண்டிறே அவளுக்கு, கடலை அணைசெய்யவும் ராவணனை அழியச்செய்யவும் வேண்டாவிறே இவர்க்கு. [அரவினணையம்மானே] - கீழ் - தம்முடைய அபூர்த்தி சொல்லிற்று; மேல் - அவனுடைய பூர்த்தி சொல்லுகிறது. [அரவினணை] - உன்னுடைய போகப்ராவண்யம் என்னால் ஆறியிருக்கலாயிருக்கிறதோ? நீ பரமபோகியாயிருக்க, என்னால் ஆறியிருக்கப்போமோ? அநந்தசாயித்வம் - ஸர்வாதிகத்வத்துக்கு லக்ஷணமிறே அரவை அணையாகவுடைய ஸர்வேச்வரனே! இன் - சாரியை [சேற்றுத்தாமரை இத்யாதி] - வெறும் அரவினணையம்மானாயாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே; [சேற்றுத்தாமரை] - பரமபதத்தையும் விஸ்மரிக்கும்படியான தேசம். சேறுகளிலே தாமரைகளானவை செங்நெலோடே, அவற்றுக்கு அணுக்கனிட்டாப்போலே அலராநிற்கும். ராஜாக்கள் எடுத்துவிட்ட விடத்தேபரிகரமும் புகுமித்தனையிறே. [சிரீவரமங்கலநகர்] [தேவாநாம்பூரயோத்யா*] என்னுமாபோலே. பரமபதத்திற்காட்டில் தனக்கு நகரமாக விரும்பி வர்த்திக்கிற தேசம். ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காக நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [வீற்றிருந்த] - "அங்கே இருக்கக்கடவ நமக்கு இவ்விருப்பு இருக்கவேண்டாநின்றதே" என்னும் வெறுப்போடன்றிக்கே, தட்டியிலிருந்தவன் முடிசூடினாப்போலே தன் வேறுபாடுதோற்றவிருக்கை. [எந்தாய்] - அங்குத்தையிருப்பு நித்யஸூரிகளுக்கு ஆனாப்போலே, இவ்விருப்பு எனக்காகவன்றோ இருக்கிறது. சிரீவரமங்கலநகரான - அங்கே - வீற்றிருந்த எந்தாய்! [உனக்கு மிகையல்லேன்] - நித்யவிபூதியிலே நெடுங்கைநீட்டாக இருந்தாயாகில் நான் தரித்திருக்கலாயிற்றே, எனக்காகவந்தவிடத்தே நான் இழக்கவோ. [அங்கே - வீற்றிருந்த - உனக்கு மிகையல்லேன்] - ரக்ஷயவிஷயம் தேட்டமான உனக்குப் புறம்பல்லேன். அன்றிக்கே, [உனக்கு மிகையல்லேன்] - [*வைதர்ம்யம் நேஹ வித்யதே*] என்று மற்றைப்போதைக்கு நானிரேன்- உனக்கு மிகையானபோது அல்லேனாய்விடுவன். இத்தால் நமக்கு லாபமென்? என்ன, - [அங்கே [*தவசார்த்த : ப்ரகல்பதே*] என்று, இத்தால் வரும் ப்ரயோஜநமும் தேவரதே. ஸ்தநந்தய ப்ரஜையைப் பால்குடித்து வயிறு நிறையக்கண்டு உகக்கும் தாயைப்போலே, சேஷபூதன் ஸ்வரூபம்பெற்று அடிமை செய்கை சேஷிக்குப்பேறிறே ... ... (1)

இரண்டாம்பாட்டு. "ஆற்றேன்" என்றால் பெற்றதென், ப்ரதிபந்தகங்கள் இன்னமுண்டே? என்ன; - பிராட்டிக்கு வந்த ப்ரதிபந்தகங்களைப் போக்கினாப்போலே அடியேனுடைய விரோதியையும் போக்கியருளவேணுமென்கிறார்.

அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன் உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து*நான்
எங்குற்றேனுமல்லேன் இலங்கைசெற்றவம்மானே*
திங்கள்சேர்மணிமாடநீடு சிரீவரமங்கலநகருறை*
சங்குசக்கரத்தாய் தமியேனுக்கருளாயே. (2)

(அங்குற்றேனல்லேன்) முக்தர் இஸ்ஸம்ஸாரத்திலே யுலாவினாப்போலே ஸித்தஸாதநனாய்த் திரிகிறேனல்லேன். (இங்குற்றேனல்லேன்) இங்கேயிருந்து ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவர்களிலே யொருவனாயிருக்கிறேனல்லேன். அன்றிக்கே, (அங்குற்றேனல்லேன்) (நோபஜநம் ஸ்மரந்நிதம்சரீரம்) என்கிறபடியே, உன்னை யநுபவித்து ஸம்ஸாரத்தை நினையாதிருக்கிறேனல்லேன். (இங்குற்றேனல்லேன்) "மறந்தேனுன்னைமுன்னம்" என்கிறபடியே, உன்னைமறந்து "அவர் தரும் கலவியேகருதி" என்கிறபடியே அதுவே ப்ராப்யமாக இருக்கிறேனல்லேனென்னுதல். *யாதானும் பற்றிநீங்கும்விரதத்தை நல்வீடுசெய்கையாலே அப்படி இருக்கமாட்டாரே. (உன்னை இத்யாதி) ஆனால், மேலொருகாலாகிலும் சிலசெய்யவல்லீரோ? என்னில்:—அது, முன்பே "உன்னைவிட்டொன்றுமாற்றகிற்கின்றி

லேன்" என்றுசொன்னேனிறே. ஒன்று செய்கைக்கு யோக்யர் சக்தரா யிருப்பரன்றே. "உன்னைக்காணவேணும்" என்று ஆசையாலே பலஹீநனாய்த்தளர்ந்து இனி உபாயாநுஷ்டாநக்ஷமனல்லேன். இது பூர்வர்கள் நிர்வாஹம். (அங்குற்றேனல்லேன்) நித்யஸூரிகளோடொக்க அங்கேயிருக்கிறேனல்லேன். (இங்குற்றேனல்லேன்) ஸம்ஸாரிகளோடொக்க இங்கேயுண்டுடுத்துப் போருகிறேனல்லேன். (உன்னை இத்யாதி) இங்ஙனேயானால், நீவந்து முகங்காட்டுமளவும் நடுவோரிடத்தில் நிற்க க்ஷமனாகிறிலேன். (அவாவில்வீழ்ந்து நான்) "ஆசையென்னுங் கடலில் வீழ்ந்திங்கயர்த்தோம்" என்கிறபடியே, அவ்வபிநிவேசத்திலே விழுந்து கரையேறமாட்டாதே தடுமாறுநின்றேன். (அங்குவரமாட்டேன், அபிநிவேசத்தாலே இங்கு நிற்கமாட்டேன்.) (இலங்கைசெற்றவம்மானே) தந்தலையில் ஒன்றுமில்லாமையைக் கண்டார். ஒன்றுமில்லாதார்பெற்றவிடத்தைப் பார்க்கிறார்; கைம்முதலற்றவன் ஸஞ்சிதமான தநத்தை வாங்கிப்பார்க்குமாபோலே (இலங்கைசெற்றவம்மானே) தன்பேறாயிருக்கிறபடி ஸ்வரூபம் ப்ரகாசித்தால், அவன் தலையிலே தள்ளிவைக்கவுங் கடவதாய், அவனும் பிராட்டிமாரோடொக்க மேல்விழுந்து விரோதிகளையும்போக்கி அணைக்கைக்கு வேண்டும் ப்ராப்தியுண்டாய்க்காணு மிருப்பது. அவையெல்லாம் செய்தமையுண்டு. ஆனாலும் அதுக்குப்பிற்பட்டதே என்ன, — அக்கண்ணழிவு அறுத்து வைத்தாயிறே. (திங்கள் இத்யாதி) சந்த்ரபதத்திலே செல்லவோங்கி ரத்நமயமான மாடங்களையுடைய சிரீவரமங்கலநகரிலே, அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம்பண்ணுகிறிலையோ? (திங்கள்சேர்மணிமாடநீடு) சந்த்ரனோடேசேரும்படி மாணிக்யமயமான மாடங்கள்வளருகிற. நீடுகை நீட்சியையுடைத்தாகை. அது அப்படியேயானாலும் பரிகரமில்லையே? என்ன,—(சங்குசக்கரத்தாய்) அங்ஙன் கண்ணழிவுசொல்லலாமோ, ஓரோகைக்குப்படையன்றோ கூட நிற்கிறது என்கிறார். இங்கு, *சாபமாநய ஸௌமித்ரே* என்னவேண்டும் குறையுண்டோ. பிறர்கைபார்த்திருக்கவேண்டும் குறையுண்டோ இங்கு. பரிகரங்களையழைத்துக் காரியங்கொள்ளவேண்டும்படியோ உனக்கிருக்கிறது. நீ ஸந்நிஹிதனல்லாமையோ, நீ சக்தனல்லாமையோ, உனக்குப் பரிகரமில்லாமையோ, பரிகரந்தான் கைகழிய நின்றோ, எத்தாலேதான் இழக்கிறதென்ன;—அவையெல்லாமப்படியே, இத்தலை இப்படி குறைவற்றாலும் ப்ரயோஜநமில்லையே, அத்தலையும் குறைவறவேணுமே? என்ன, —(தமியேனுக்கு) இத்தலையும் குறைவற்றதென்கிறார். அங்கே பிரியாதிருக்கிறார்படியல்லேன், இங்கே பிரியாதிருக்கிறார்படியல்லேன். இங்குள்ளார்க்கு இவ்விஷயத்தை யறியாமையாலே பிரிவில்லையே. (தமியேனுக்கு) உன்னை யொழியத் துணையில்லாத எனக்கு ஸ்வரூபத்தை, "ஸாதநம்" என்று சில வெழுதிக்கழிக்கில் கழிக்குமித்தனை. (நீ உபாயமானாலும் உபாயப்ரதிபத்திபண்ணுவார்வேண்டாவோ.) (தமியேன்) பிராட்டியில் வ்யாவ்ருத்தி. அங்கானால் ஒரு த்ரிஜடையாகிலுமுண்டிறே. இங்கு "ஆவாரார்துணை" என்னும்படியிறே தனி. ஆனால் செய்யவேண்டுவதென்? என்ன, (அருளாயே) என் வெறுமையும் உன் பௌஷ்கல்யமும் அறிக்கைக்கு. நீ அடியில் தந்த அருள் இன்று குடிபோயிற்றோ. அன்று நான் அபேக்ஷியாதிருக்க அருளின நீ, அபேக்ஷிக்கைக்கு யோக்யதையைப் பிறப்பித்துப் பொகடவோ. ருச்யுத்பாதநம்பண்ணுவாரொருவரும், உபாயாநுஷ்டாநம்பண்ணுவாரொருவருமாயோ இருப்பது. *நின்னருளேபுரிந்திருக்கிற எனக்கு அருளாயாகில் பின்னை யார்க்கு வேறு அருள இருக்கிறாய். ... (2)

மூன்றாம்பாட்டு. "அருளாய்" என்றீர், அருளக்கடவோம், அதில் ஒரு தட்டில்லை; ஆனாலும், *சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி.* *கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்* அன்றோ, அருள்பெறுவார்பக்கலிலேயும் சிறிது உண்டாகவேணுங்காணுமென்ன; இது மேலுற்றைக்கிட்ட மர்யாதையோ! கீழுற்றைக்கும் ஏதேனுமுண்டோ; ஆன பின்பு, இத்தலையில் கிஞ்சித்காரத்தைவிட்டு உன்க்ருபையாலே செய்தருளாயென்

கிறார். இவ்வளவும் வர இதுக்குமுன்பு நீ நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபின்பு, மேலும் நீ செய்தருளவேணுமென்கிறார்.

கருளப்புட்கொடிசக்கரப்படை வானநாடவெங்கார்முகில்வண்ணா*
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி யடிமைகொண்டாய்*
தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்கு*
அருள்செய்தங்கிருந்தாய்! அறியேனொருகைம்மாறே. (3)

(கருளப்புட்கொடி) நீமுன்பருளிற்று உன்னையறிந்தோ, என்னையறிந்தோ! (கருளப்புட்கொடி) இன்னமும் ஒன்று வேண்டும்படியோ உன்னுயர்த்தி. பெரியதிருவடியை த்வஜமாகவுடையனாயிருக்கிறவிருப்பு. *அருளாழிப்புள்ளிறே. (சக்கரப்படை) அதுவும் வரவேண்டும்படியோ இது இருக்கிறது. *அருளார்திருச்சக்கரமிறே. (வானநாட) ஒன்று எடுக்கவும் ஒன்று பிடிக்கவும்வேணுமோ, இருப்பிடமேயமையாதோ. பெரியதிருவடியை த்வஜமாகவும், திருவாழியை ஆயுதமாகவும், பரமபதத்தை வாஸஸ்தாநமாகவு முடையையாய்வைத்து. பெரியதிருவடியை மேற்கொள்ளுதல், திருவாழியைச் சலியாமல்பிடித்தல், பரமபதத்தை இருப்பிடமாகவுடையனாதல்: இவையாயிற்று ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணம்; இவையோரொன்றே யமைந்திருக்க, ஸர்வப்ரகாரபரிபூர்ணனாயிருக்கிறபடி. (கருளப்புள்) புள்ளென்று - பக்ஷிஸாமாந்யமாய், கருடனாகிற புள்ளென்று விசேஷிக்கிறது. "ஈடே" என்கிறவித்தை - "ஈளே" என்னுமாப்போலே - கருளனென்கிறது. அன்றிக்கே, கருளென்று - கறுப்பாய், அது - சீற்றமாய், ப்ரதிபக்ஷத்தின்மேலே சீற்றத்தையுடையவனென்றுமாம். "கருளுடையபொழில்மருது" என்னக்கடவதிறே. (எங்கார்முகில்வண்ணா) பெரிய உன்னுயர்த்தி பாராவிட்டால், வர்ஷிக்கிற ஸ்தலத்தைத்தான் பார்த்தாயோ. என்பக்கலிலே ஔதார்யத்தைப்பண்ணினவனே. என்னளவு பாராதே ப்ரயோஜநநிரபேக்ஷமாகப்பண்ணினபடி. பண்ணின ஔதார்யமேதென்ன:— (பொருளல்லாத இத்யாதி) வஸ்துமுன்பேயுண்டாய், அதுக்கு ஓர் உத்கர்ஷம்பண்ணிவிட்டாயோ; *அஸந்நேவ ஸபவதியிறே விஷயீகாரத்துக்கு முன்பு, இப்போது ஒரு வஸ்துவாக்கி, *ஸந்தமேநம்* என்று உஜ்ஜீவிக்கும்படி பண்ணினாய்: (அடிமைகொண்டாய்) 'பெருமக்களுள்ளவர்' என்கிறபடியே, நித்யஸித்தர் செய்யக்கடவ கைங்கர்யத்தையன்றோ என்னைக்கொண்டது. உண்டாக்கினவளவேயோ, ஜீவனமு மிட்டிலையோ. "கார்முகில்" என்றது பலித்தபடியிறே. அடிமைகொண்டா யென்கிறது-"அடிதொழுதெழு" என்னப்பண்ணின அவ்வளவையிறே. *மயர்வறமதிநல மருளப்பெற்றவர் இப்படி சொல்லுகையாலே, ஸ்வநிகர்ஷம் சொல்லுகை ஜ்ஞாநகார்யம்; "ஈச்வரோஹம்" என்றிருக்கை அஜ்ஞாநகார்யம். (தெருள்கொள் நான்மறைவல்லவர்) தெரியும்படி வேததாத்பர்யம் கைவந்தவர்கள். ஜ்ஞாநாதிசயத்தை யுடையராய்க்கொண்டு, நாலுவகைப்பட்ட வேதங்களையும் தாங்கள் நினைத்தபடி நிர்வஹிக்கவல்லவர்கள். (பலர்) ஒருவரிருவரன்றிக்கே ஸ்ரீவைகுண்டம்போலே திரள் திரளாயிருக்கை. (வாழ்) வேதார்த்தபூதனைக்கண்டு அநுபவிக்கிறவர்கள். தீர்த்தங்களிலே வர்த்திக்கிற ஸத்த்வங்களுக்குப் பாபம் போகிறதில்லையிறே ஜ்ஞாநமில்லாமையாலே; அங்ஙனன்றிக்கே. ஜ்ஞாநமும் அத்தோடுசேர்ந்த வ்ருத்தியுமுடையராயிருக்கை. (சிரீவரமங்கலநகர்க்கருள் செய்தங்கிருந்தாய்) அங்குள்ளார்க்குத் தன்னைக்கொடுத்துக் கொண்டிருக்கிற இருப்புத் தன்பேறாக இருக்கிறபடி. சிரீவரமங்கல நகரிலுள்ளார் அர்த்திக்கவன்றிக்கே, அவர்கள் பக்கல் தண்ணளியாலே வந்திருந்தவனே. என்னை அடிமைகொள்ளுகைக்காக அங்கே வந்திருந்தாயென்றுமாம். "கைங்கர்யத்தளவும்வரநிறுத்தினோம், இனியதுக்கு விச்சேதம் வரவொண்ணாது" என்று அங்கேவந்திருந்தாய். (அறியேனொருகைமாறே) நீ இவ்வளவாக உபகரித்து நின்றவிதுக்கு, நானென்றுசெய்

தேனை அறிகிறிலேன். இதுக்குமுன்பு உபகரித்ததுக்கு ஒருஹேது என்பக்கலிலே யுண்டென்று சொன்னாயாதல், மேலும் நீயே நிர்வஹித்தாயாதல் செய்யவேணும். "நீர் உள்ளீராகையாலே செய்தோம்" என்றும் சொல்லலாவதில்லை உன்னால், *பொருளல்லாதவென்னைப் பொருளாக்கியிறே அடிமைகொண்டது. ... (3)

நாலாம்பாட்டு. "வெறும் உன்க்ருபையாலே ரக்ஷிக்கவேணும்" என்று நின்றீர், நாம் இதுக்குமுன்பு அங்ஙன் செய்தவிடமுண்டோ? என்ன,—ஒன்றிரண்டு உதாஹரணத்தை எடுத்துக்காட்டி, இங்ஙனே செய்ததில்லையோ, எனக்கும் செய்தருளவேணுமென்கிறார்.

மாறுசேர்படைநூற்றுவர்மங்க ஒரைவர்க்காயன்றுமாயப்போர்பண்ணி*
நீறுசெய்தவெந்தாய் நிலங்கீண்டவம்மானே!
தேறுஞானத்தர்வேதவேள்வியருச் சிரீவரமங்கலநகர்*
ஏறிவீற்றிருந்தாய் உன்னையெங்கெய்தக்கூவுவனே? (4)

[மாறுசேர்படைநூற்றுவர்] எதிரிகளாய்க்கொண்டு வந்துசேர்ந்த படையையுடைய நூற்றுவர். அவர்களுக்கு ஸஹகாரிகளாய் வருகையன்றிக்கே, தனித்தனியே சத்ருக்களாய்வந்துகிட்டுகை. (படை - ஸேனை.) அன்றிக்கே, [மாறுசேர் படைநூற்றுவர்] மாற்றராய்ச்சேர்ந்து ஸாயுதரான நூற்றுவரென்றுமாம். (படை - ஆயுதம்) *த்விஷதந்நம் நபோக்தவ்யம்* என்கிறபடியே, தனக்கு சத்ருக்களாக நினைத்திருக்கிறபடி. [மங்க] மாள. விளக்குப்பிணம்போலே காணவொண்ணாதபடி. [ஒரைவர்க்காய்] இரண்டுபக்ஷமும் ஒத்திருக்க, ஒருதலையிலே நின்றாயோ. உள்ளனை ஒரு ஸாரதியுங்கூட அப்ரதாநனும்படி தனியரான ஐவர். [ஐவர்க்காய்] அவர்களுக்குத் தன்னை இஷ்ட விநியோகார்ஹனாக்கிவைத்தபடி. [அன்று] யுத்தோந்முகராய்வந்த அன்று. [மாயப்போர்பண்ணி] ஆச்சர்யமான யுத்தமென்னுதல், வஞ்சகமான யுத்தமென்னுதல்; அதாவது - பகலை இரவாக்கியும். 'ஆயுதமெடேன்' என்று ஆயுதமெடுத்தும், சத்ருக்கள் உயிர்நிலையைக் காட்டிக்கொடுத்தும் செய்தவை. [நீறுசெய்த] பஸ்மமாக்கின. "கூறாய்நீறாய்நிலனாகி" என்று சொல்லுகிறபடியே. [எந்தாய்] பாண்டவர்களுக்காக துர்யோதநாதிகளை நிரஸித்ததும் தம்பேறாயிருக்கிறபடி. நீர்சொல்லுகிறவை யெல்லாமுண்டு, ஆனாலும் அவர்கள் எனக்கு பவ்யரன்றோ என்ன,—ஆனால் அதுவும்பாராதேயன்றோ நீ பூமியை ரக்ஷித்தது. [நிலங்கீண்டவம்மானே] அதுகிடக்கிடு, வேணுமாகில், அதுக்கொன்றுசொல்லுகிறாய்; இப்ப்ரளயங்கொண்டபூமிக்கு என்ன தக்கோர்மையுண்டாய் நீ செய்தது. [நிலங்கீண்ட] "எடுக்கவேணும்" என்று அபேக்ஷிக்கவும்மாட்டாதே, உபகாரஸ்ம்ருதியுமின்றிக்கேயிருக்கிற இதுக்கு உதவிற்றிலையோ, இங்கு ஒருதலையேயிறேயுள்ளது. [அம்மானே] "உடைமையிழக்கவொண்ணாது" என்று வெறும் உன்க்ருபையாலே செய்தவித்தனையன்றோ. [தேறுஞானத்தர் இத்யாதி] அநுஷ்டாநாநுஷ்டாநங்களை விகல்பிக்கலாம்படி தெளிந்திருக்குமவர்கள். அநநுஷ்டாநம் ஸாதநமாகாதே. "நிஷித்தாசரணம் நமக்கு ரக்ஷகமன்று" என்றிருக்குமோபாதி "விஹிதாசரணமும் நமக்கு ரக்ஷகமன்று" என்றிருக்குமவர்கள். ஆனால் இது அநுஷ்டிக்கிறதென்? என்னில்,—ஈச்வராஜ்ஞாநுவர்த்தநம் பண்ணினானாகிறான்; இனித்தான் நிஷித்தாசரணம் ரஜஸ்தமஸ்ஸுக்களை வர்த்திப்பிக்குமாபோலே, இதுவும் ஸத்த்வவ்ருத்தியையும் பண்ணிக்கொடுக்கக் கடவதாயிருக்குமிறே; இனித்தான் சேதநனாகையாலே ஒருப்ரவ்ருத்தி பண்ணியன்றி நில்லானே, *ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் * என்று ஜ்ஞாநத்துக்கும் அடியாயிருக்குமிறே; ஆகையாலே அநுஷ்டேயமாகக்கடவது. [சிரீவரமங்கலநகரேறி வீற்றிருந்தாய்] இவனும் அவர்களிலே யொருவனாய் ஒக்கக்குடியேறியிருக்கிறபடி. [வீற்றிருந்தாய்] "இவர்கள்

நடுவேயிருக்கப்பேற்றேமே" என்று பெருப்பேறுபெற்றானாயிருக்கிறபடி. [உன்னை] அநந்யஸாத்யனான உன்னை. [எங்கெய்தக்கூவுவனே] நீ இவ்விருப்பிருக்கைக்கு நான் அநுஷ்டித்தது ஏதேனும் ஸாதநமுண்டாகிலன்றோ என் ப்ராப்திக்கு நான் ஏதேனும் செய்வது, இவ்வளவாகப்பண்ணின நீ மேலும் உன் க்ருபையாலே செய்தருளவேணும். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. ஆச்ரிதபக்ஷபாதத்தையும் ஸ்ரீவரமங்கல நகரிலிருப்பையும் உமக்குக் காட்டினோமே, "எங்கெய்தக்கூவுவன்" என்று - ஒன்றும் பெறுதாரைப் போலே கூப்பிடாநின்றீரேயென்ன,—செய்த அம்சமறிந்தேன், அத்தாலே பர்யாப்தனாகிறிலேனென்கிறார்.

எய்தக்கூவுதலாவதேயெனக்கு? எவ்வதெவ்வத்துளாயுமாய்நின்று*
கைதவங்கள்செய்யுங் கருமேனியம்மானே!*
செய்தவேள்வியர்வையத்தேவரறாச் ஸ்ரீவரமங்கலநகர்*
கைதொழவிருந்தாய் அதுநானுங்கண்டேனே. (5)

[எய்தக்கூவுதலாவதேயெனக்கு] பொகடு, அதுகிடக்கிடாய், இந்த ச்ரிய:பதியைக்கண்ட உனக்கு "இவன் ஸாதநாநுஷ்டாநம்பண்ணுவான்" என்று தோற்றிற்றோ. நீ எனக்குக் கைப்படும்படியாக அபேக்ஷிக்கையாவதே. உன்னிலும் நான் என்னையறிவேனிறே! என்னால் செய்யலாவதுண்டோவென்று கேட்கிறார் "அவனாலேபேறு" என்றிருக்குமவராகையாலே; நீ கைவிட்டவன்று நான் அநுஷ்டிக்கும்படி, ச்ரிய:பதியான உன்னோடொக்க விகல்பிக்கலாம்படி யிருந்தேனோவென்கிறார். [எனக்கு] ஒரு துர்பலன் தலையிலே ஒருமலையை வைத்தாற்போலே யிருக்கிறது காணும் இவர்க்கு. *மாம் நமஸ்குரு* என்றால், அநந்தரமில்லையாகாதே தான். இனி ப்ரபலனாயிருப்பானொருவன் அத்தைத்தள்ளி "அஞ்சாதேகொள்" என்ன வேணுமிறே. [எவ்வ இத்யாதி] அநந்யகதிகளாயிருப்பார் பக்கலிலும், அநாச்ரிதர் பக்கல் செய்வது செய்யப்புக்கதோ இப்போது. எவ்வகைப்பட்ட சத்ருஸமூஹங்களினுள்ளேபுக்கு [எவ்வ] எவ்வகைப்பட்ட. தெவ்வரென்று - சத்ருக்கள். தெவ்வமென்று - சத்ருஸமூஹம். "தெவ்வ ரஞ்ச" என்னக்கடவதிறே [கைதவங்கள் செய்யும்] க்ருத்ரிமங்களைச் செய்யும். அதாவது - புத்தமுனியாய் அவர்கள் நடுவே புக்கு நின்று அவர்களுக்குண்டான வைதிகச்ரத்தையைப் போக்கினபடி. [கைதவங்கள் செய்யும் கருமேனியம்மானே] வசநங்களாலும் யுக்திகளாலும் க்ருத்ரிமத்தைப்பண்ணி வைதிகச்ரத்தையைப் போக்கி, அவ்வளவிலும் கேளாதார்க்கு வடிவைக்காட்டி வாய்மாளப்பண்ணினபடி. தன்னுடைய வார்த்தைகளாலே அவர்களை சவப்ராயராக்கி, ஒருவனம்புக்கிலக்காம்படி பண்ணிவைத்தான். [அம்மானே] ஸம்பந்த மொத்திருக்கச்செய்தே. நீ அவர்களை யழியச்செய்தது ஆச்ரிதர்க்காகவன்றோ? "ஒருதைவமுண்டு" என்றிருக்கிறவர்களை யழித்தவோபாதிகிடாய் "ஒருதைவமில்லை" என்றிருக்கிற என்னை யொன்றுசெய்யச்சொல்லுகையாவது. "ஒருமாதெய்வமற்றுடையமோயாமே" என்றாரிறே. அவர்களுடைய வைதிகச்ரத்தையை அழித்தாப்போலே யிருக்கிறதாயிற்று ஸித்தஸாதநபரிக்ரஹத்தைநெகிழ்த்து ஸாதநத்திலேமூட்டுகிற இது. [செய்தவேள்வியர்] (விது:க்ருஷ்ணம்ப்ராஹ்மணாஸ்தத்த்வதோ யே தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ்ஸமாப்தா:) என்றாரிறே. வேறொன்று செய்யுமவனுக்குக் குறைகிடப்பதும் ஓரம்சமுண்டிறே. க்ருதக்ருத்யரிறே ஸித்தஸாதநபரிக்ரஹம் பண்ணினவர்கள். [வையத்தேவர்] பூஸுரர். அவர்கள் நித்யவாஸம்பண்ணும் ஸ்ரீவரமங்கலநகரிலே அங்குள்ளவர்கள் அடிமைசெய்ய. அதுவே தாரகமாக விருந்தாய். ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாகவுடைய நாம் இங்கே வந்து உமக்காக இருக்க, ஒன்றும் செய்திலோமாகச் சொன்னீரே? என்ன,—

இருந்தாய், அதில் தட்டில்லை. நான் அநுபூதாம்சத்தையில்லை செய்கிறேனல்லேன்; அநுபூதாம்சம் போராமல்படுகிறேன். [அதுநானுங்கண்டேனே] தேவர்செய்தருளின அம்சம் இவ்வளவுண்டு, அதில்குறையில்லை, எனக்கு அவ்வளவால்போராது; திருவடிகளில் கைங்கர்யமே யாத்ரையாகப்பெறவேணுமென்று வாக்ய சேஷமாய்க் கிடக்கிறது. ... ... (5)

ஆறும்பாட்டு. அந்தவாக்யசேஷத்தால் சொன்ன கைங்கர்யத்தை யபேக்ஷிக்கிறார்.

ஏனமாய்நிலங்கீண்டவென்னப்பனேகண்ணா ! என்றுமென்னையாளுடை*
வானநாயகனே ! மணிமாணிக்கச்சுடரே !
தேனமாம்பொழில்தண்சிரீவரமங்கலத்தவர் கைதொழவுறை*
வானமாமலையே ! அடியேன்தொழவந்தருளே. (6)

[ஏனமாய்நிலங்கீண்ட] ஆபந்நரானார் நிவிக்கையும் மிகையாம் படியன்றோ உன் படியிருப்பது. ரக்ஷணமொருதலையானால் உன்னைப்பேணாதவனன்றோ. [ஏனமாய் நிலங்கீண்டவென்னப்பனேகண்ணா] மஹாவராஹமாய் ப்ரளயங்கொண்டபூமியை யெடுத்தாய், ஸ்ரீக்ருஷ்ணனாய் ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னையெடுத்தாய். [ஏனமாய் நிலங்கீண்டவென்னப்பனே] ப்ரளயங்கதையானபூமிக்கு உதவினது தமக்கு உபகரித்ததாயிருக்கிறபடி. [என்னப்பனேகண்ணா] என்னுடைய ரக்ஷணத்துக்கு ஏதேனும் முகம்பண்ணவேணுமோ. என்னுடைய ரக்ஷணத்துக்கு ஒரு கோலங் கொள்ளவேணுமோ ? *கண்ணன்கோளிழைவாண்முகமிறே இவர்க்கு ரக்ஷகம். [என்றுமென்னை யாளுடை-வானநாயகனே] தனக்கீடானாரோடு இருக்கும்போதும் இவரிடையாட்டமாயிற்று ஆராய்ந்துபோருவது. இவர்ஸத்தையே தொடங்கிக் கைதொட்டுநோக்கிக்கொண்டாயிற்றுப் போந்தது. [மணிமாணிக்கச்சுடரே] உளரானபின்பு ஓர் ஏற்றம்பண்ணிக் கொடுக்கையன்றிக்கே, அடியேபிடித்து நோக்கிக் கொண்டு போந்து, இச்சைபிறந்தவாறே அவ்வளவிலே நித்யஸூரிகளுக்கு விடும்படியையும் இவர்க்குவிட்டான். [மணிமாணிக்கச்சுடரே] ரத்நச்ரேஷ்ட்டமென்னுதல். மணியினுடையவும் மாணிக்யத்தினுடையவும் தேஜஸ்ஸை யுடைத்தாயிருக்கை என்றுமாம். [தேனமாம்பொழில் இத்யாதி] தேனையுடைத்தான மாம்பொழிலையுடைத்தாகையாலே ச்ரமஹரமான சிரீவரமங்கலநகரத்திலுள்ளார். ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணவிருக்கிற. [வானமாமலையே] நித்யஸூரிகளை யடிமைகொண்டிருக்கும் வேண்டற்பாடுபோலேகாணும் இங்குள்ளார் அடிமைசெய்ய இருக்கிற விருப்பும். (வானமாமலையென்று ஆகாசத்திலே கிட்டும்படி யோங்கின மலை. இது திருநாமம்.) (அடியேன் தொழவந்தருளே) நான் அடிமைசெய்து வாழும்படிக் கீடாக என்முன்னே நடந்துவர வேணும். அடிமை செய்கையாவது "அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி" என்னுமாபோலே, அந்நடையழகுக்கு மங்களாசாஸநம் பண்ணுகை. [வந்தருளே] என் கண்வட்டத்திலே நீ யுலாவிநின்று அடிமை கொள்ளவேணும். ... ... (6)

ஏழாம்பாட்டு. "அடியேன்தொழவந்தருளே" என்கிற சொல்லோடே வரக்காணாமையாலே, "உபேக்ஷித்தானோ" என்று அஞ்சி, என்னையகற்றாதொழியவேணுமென்கிறார்.

வந்தருளியென்னெஞ்சிடங்கொண்ட வானவர்கொழுந்தே*உலகுக்கோர்
முந்தைத்தாய்தந்தையே ! முழுவேழுலகுமுண்டாய்*
செந்தொழிலவர்வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர்*
அந்தமில்புகழாய் ! அடியேனையகற்றேலே. (7)

'வந்தருளி' இத்யாதிக்கு - "பட்டர், ஸ்ரீபுஷ்பயாக மணித்தானவாறே நஞ்சீயரைப் பலகாலும் இயல்கேட்டருளுவர். ஒரு கோடையிலே திருவீதியிலே நீரைவிட்டு எழுந்தருளியிருந்து இப்பாட்டை இயல்சொல்லும், என்று ஜீயரை யருளிச்செய்து, தாம் இத்தை யநுஸந்தித்திருந்து அநந்தரத்தே தாமும் இப்பாட்டை இயல்சொல்லி, 'யமநியமாதிக்ரமத்தாலே த்யேயவஸ்துவை மநநம்பண்ணிப் புறம்புள்ள பராக்கையறுத்து அநுஸந்திக்கப் புக்காலும் சுக்கான்பரல்போலேயிருக்கக் கடவ நெஞ்சுகள்பதஞ்செய்யும்படி, தார்மிகராயிருப்பார் இவைசில ஈரச்சொற்களைப் பொகட்டுப்போவதே 'என்றருளிச் செய்தார்; நஞ்சீயர் இவ்வார்த்தை யுருத்தோறும் அருளிச்செய்வர்" என்றருளிச் செய்வர்.

[வந்தருளி] நான் அபேக்ஷியாதிருக்க வந்தருளி, த்வீபாந்தரவஸ்துக்களிரண்டிறே ஸங்கதமாகிறது; பரமபதநிலயனனவனும், ஸம்ஸாரத்தை இருப்பிடமாக வுடையவரும். இவ்விருவருமிறே கூடுகிறார்கள். உத்தேச்யவஸ்து இருந்தவிடத்திறே இவன் தான் போகக்கடவனாயிருக்க, அதுபெறாவிட்டால் இருவரும் பாதிப் பாதிவழிதான் வரப்பெற்றதோ. வந்தருளியென்று - நெஞ்சுளுக்கிச் சொல்லுகிறாரிறே. ஆப்பான் திருவழுந்தூரரையர் கையிலே தாளத்தைவாங்கி "வந்தருளி, வந்தருளி" என்று மேல்போகமாட்டாதே படுவராம். [வந்தருளி] த்ரவ்யகுணங்கள் சேர்ந்தாப்போலே. த்ரவ்யமாயிருக்கச் செய்தேயும் குணங்களோடொக்கச் சில சேரக்காணாநின்றோமே; (ஆத்மாவைக் குறித்து சரீரமும், ஜ்ஞாநமும்; பரமாத்மாவைக் குறித்து ஜீவாத்மாவும், த்ரவ்யமாயிருக்கச் செய்தே குணவத் அப்ருதக்ஸித்தங்களிறே) [என்னெஞ்சு] அவனையொழிய விஷயங்களை உகந்துபோந்த நெஞ்சுகிடீர். ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக வுடையவன் என்னெஞ்சு பெறுகைக்கு அவஸரப்ரதீக்ஷனவதே! [இடங்கொண்ட] வந்தாலும் "நெஞ்சுக்கு விஷயம் வேறேயுண்டு" என்பரே. *ஆவாஸம்த்வஹமிச்சாமி* என்னாநின்றான். [என்னெஞ்சிடங்கொண்ட வானவர்கொழுந்தே] நித்யஸூரிகளுக்குத் தலையானவன் கிடீர்! நித்யஸம்ஸாரிகளுக்குத் தலையான என்னெஞ்சு பெறுகைக்கு ப்ரார்த்திக்கிறான். [உலகுக்கோர் முந்தைத் தாய்தந்தையே] அங்கு இரண்டுதலையும் கூடிவருமிறே. இங்கு வெறும் ஒருதலையேயாயிருக்கிறபடி. *பூதாநாம்யோவ்யய:பிதா* நாலுநாள் மணற்கொட்டகமிட்டு விளையாடுமாபோலே அழியும் தாயும் தமப்பனுமிறே அவர்கள், ஒருநாளும் அழியாத மாதாபிதாக்களிறே இவர்கள். *ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதாமாதாச மாதவ:, கச்சத்வமேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:* *கச்சத்வம்* ஒருதலையாகாமே நீங்களும் ஆபிமுக்யம் பண்ணப் பாருங்கோள். லோகத்துக்கு அத்விதீயனாய்ப் பழையனான தாயும் தமப்பனுமானவன். [முழுவேழுலகுமுண்டாய்] மாதாவானவள் பத்துமாஸம் வயிற்றிலேவைத்து தரிப்பது, "பிறந்துவளர்ந்தால் பின்னை நமக்கு து:கநிவர்த்தகனாம்" என்னும் ப்ரயோஜநத்தைப்பற்றவிறே; இவன் அங்ஙனன்றிக்கே, "இவைதான் நோவுபடாதொழியப் பெற்றோமே" என்று இது தன்பேறாயிருக்கும். [செந்தொழிலவர்]*தேஹிமே ததாமி* என்னாதவர்கள். அவனுக்கு ரக்ஷணம்போலேயிறே இவர்களுக்குக் கைங்கர்யம், இங்ஙனன்றாகில் வ்யர்த்தமாமே. அநந்யப்ரயோஜநதையாகிற ஆர்ஜவத்தை யுடைய வ்ருத்திவிசேஷத்தை யுடையவர்களுடைய. [வேதவேள்வியறா] வேதகோஷமும் வைதிகக்ரியா கோலாஹலமும் மாறாதேசெல்லுகை. ப்ராப்யவிரோதியாதல் ப்ராபகவிரோதியாதல் இல்லாமையாலே, நாய்ச்சிமாருடைய பரிஷ்வங்கத்தோபாதியாய்ச் செல்லாநிற்கும். அபிமதவிஷயத்தை அணைக்கிறதுக்கு வேறொரு பலமுண்டாகிலிறே இதுக்கு வேறொரு பலமுண்டாய் அவ்வளவில் தலைக்கட்டுவது. [சிரீவரமங்கலநகரந்தமில் புகழாய்] ஸ்ரீவைகுண்டத்திலே யிருந்தானாகில் புகழுக்கு அந்தமுண்டுபோலே காணும். [அடியேனையகற்றேலே] தேசாத்தேசாந்தர ப்ராப்தி பண்ணி நீபடைத்த புகழை. "ஓர் அநந்யகதியைக் கைவிட்டாய்" என்று பழியாக்

கித் தலைக்கட்டுவித்துக் கொள்ளப்பாராதே கொள்ளாய். [அகற்றேலே] அரைக்ஷணம் தாழ்க்கப் பொறுக்கமாட்டாமைச் சொல்லுகிறவார்த்தையிறே. விளம்பம் பொறாதார் சொல்லப் பெறுவர்போலேகாணும். [அடியேனை] இதினுடைய ரக்ஷணத்திலே உன்னையொழிய ப்ராப்தியுண்டாய்த்தான் அகற்றுகிறாயோ.... (7)

எட்டாம்பாட்டு. உம்மை யகற்ற ப்ரஸங்கமென், இங்குவந்து ஸந்நிஹிதராய் நின்றது உமக்காகவன்றோ? என்ன,—அடிமைக்கு விரோதியான சப்தாதிகள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்தபோதே என்னை யகற்றினாயல்லையோ வென்கிறார்.

அகற்றநீவைத்தமாயவல்லைம்புலன்களாமவை நன்கறிந்தனன்*
அகற்றியென்னையும்நீ அருஞ்சேற்றில்வீழ்த்திகண்டாய்*
பகர்க்கதிர்மணிமாடநீடு சிரீவரமங்கைவாணனே!*என்றும்
புகற்கரியவெந்தாய் புள்ளின்வாய்பிளந்தானே. (8)

[அகற்றநீவைத்த] ஸர்வசக்தியான நீ. உன்னையுகவாதாரகன்று போம்படிக்கீடாக, *மமமாயா துரத்யயா* என்றுகொண்டுவைத்த. [மாயவல்லைம்புலன்களாமவை] ஆச்சர்யமான செயல்களைப் பண்ணக்கடவதாய்த் தப்பவொண்ணாதபடியாயிருக்கிற ஐந்து இந்த்ரியங்களாகிறவை. உன்னை உகவாதார் அகன்று போம்படிக்கீடாக ஸர்வேச்வரனான நீ வைத்தவை. நீர் எங்ஙனே இது அறிந்தபடி என்ன,—[நன்கறிந்தனன்] மயர்வறமதிநலம் பெறுகையாலே நான் அழகிதாகவறிந்தேன். உகவாதார் அகன்று போகைக்குவைத்தோமாகில், அதுக்கு உமக்கென்? என்றான். [அகற்றி என்னையும் நீ யருஞ்சேற்றில் வீழ்த்திகண்டாய்] உன்னாலல்லது செல்லாதபடியாயிருக்கிற என்னையும் உன்பக்கல் நின்றும் நீ பிரித்து, கால்வாங்கவொண்ணாதபடியான சப்தாதிவிஷயங்களிலே தள்ளப்புகாநின்றாய். அவன்பக்கலிலே கார்யங்கொள்ள நினைக்கிறவர், நிர்தயரைச் சொல்லுமாபோலே கொடிதாகச் சொல்லுவானென்? என்னில்; "நமக்கே பழியாய்வந்து விளையப்புகாநின்றது" என்று நீர்மையுடையார் காரியஞ்செய்து தலைகட்டுவர்களென்று பார்த்து. இவ்வுடம்போடு எனக்கு ஒரு ஸம்பந்தமற்றிருக்க, நீ பொதுவான இதிலே வைக்கிறது கைவிடப் பார்த்தன்றோ? [பகர்கதிர் இத்யாதி] (புகரென்றும், கதிரென்றும் புகர்.) மிக்கவொளியை யுடைத்தாய், மணிமயமான மாடங்களினோக்கத்தை யுடைத்தான சிரீவரமங்கைக்கு ப்ரதானனானவனே. [பகற்கதிர்] என்று பாடமானபோது ஆதித்யபதத்தளவும் செல்ல உயர்ந்து ஒளியையுடைய மணிமாடங்கள். பகல் ஆதித்யன்.) [என்றும் இத்யாதி] (உகவாதார்க்கு ஒருநாளும் கிட்டவொண்ணாதபடியா யிருக்குமவனே.) நீ, கிட்டாமல் பண்ணுமதும் அழியச்செய்வதும் உகவாதாரையன்றோ. (புகற்கரிய - புகலுக்கரிய. [எந்தாய்] அஸாதாரணனாயிருக்கிற என்விஷயத்திலும் அத்தைச்செய்யவோ) [புள்ளின்வாய் பிளந்தானே] உமக்குக் கிட்டத்தட்டென்? என்ன,—பகாஸுரனை நிரஸித்தாப் போலே, என்ப்ரக்ருதிஸம்பந்தத்தைப் போக்கியருளாய் வந்துகிட்டும்படி யென்கிறார். ... ... (8)

ஒன்பதாம்பாட்டு. "அருஞ்சேற்றில் வீழ்த்திகண்டாய்" என்று அஞ்சுகிற உமக்கு நான்செய்யவேண்டுவதென்? என்ன,—சக்தனாய் ஸந்நிஹிதனாயிருக்கிற நீ என் விரோதியைப்போக்கி, உன் திருவடிகளில் கைங்கரியத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

புள்ளின்வாய்பிளந்தாய்! மருதிடைபோயினாய்! எருதேழடர்த்த* என்
கள்ளமாயவனே! கருமாணிக்கச்சுடரே!
தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார் மலிதண்சிரீவரமங்கை*
உள்ளிருந்தவெந்தாய் அருளாயுய்யுமாறெனக்கே. (9)

[புள்ளின்வாய் பிளந்தாய்] கலியர் சோறிட்டநாளை எண்ணுமாபோலே. பண்டு உபகரித்தபடிகளைச் சொல்லுகிறார், [புள் இத்யாதி] பகாஸுரநிரஸநம் பண்ணினாய், யமளார்ஜுநங்களைப்பொடிபடுத்தினாய், ருஷபங்களேழையும் ஊட்டியாகநெரித்தாய். [என்கள்ளமாயவனே] ஒருவர்க்கும் தெரியாத ஆச்சர்யமானசெயல்களையுடையையாய் அவையெல்லாம் எனக்குத் தெரியும்படிபண்ணி என்னை யகப்படுத்திக்கொண்டவனே! [கருமாணிக்கச்சுடரே] நப்பின்னைப்பிராட்டியுடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கி, அவளுக்குக்கொடுத்த உடம்பின் வாசியை எனக்கும் அறிவித்தவனே. [தெள்ளியார் இத்யாதி] *ராமஸ்யவ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்ய சதீமத:* என்கிறபடியே (ஆச்ரித விஷயத்தில் நீ வழிதப்பிலும் உன்னைத்திருத்தும் படி தெள்ளியார் மிக்கிருந்துள்ளதேசம். [தெள்ளியார்] தந்தாமுக்கும் சிலவுண்டேயாகிலும், அவற்றைப்பொகட்டு அவன்கைபார்த்திருக்குமவர்கள். இவர்கள் சைதந்யத்துக்கு விநியோகமிதுவேயிறே. அசோகவநிகையில் தனியிருப்பில் பிராட்டி தெளிவுபோலேயும் ஆச்ரயண வேளையில் ஸ்ரீவிபீஷணாழ்வான் தெளிவுபோலேயும் தெளிந்திருக்குமவர்கள். *ஸுக்ரீவம் தாம்ச்ச ஸம்ப்ரேக்ஷ்ய* என்கிறபடியே-நலியாநின்றாலும் தாய்முகமே பார்த்துக்கிடக்கும் ப்ரஜையைப்போலே, *வத்யதாம்* என்கிற மஹாராஜரையும் அவரிலுங்கொடிய முதலிகளையும் அழகிதாகப் பார்த்துக் கொண்டிருந்தான். [திருநான்மறைகள்வல்லார்] நூறாயிரம் வரியெழுதிக்கிடந்தாலும் அவற்றில்போகாதே, தாத்பர்யத்தை க்ரஹித்திருக்குமவர்கள். "மாதவன்பேர் சொல்லுவதே யோத்தின்சுருக்கு" என்றிருக்குமவர்கள். [மலிதண் இத்யாதி] அவர்கள் நெருங்கி வர்த்திக்கிற ச்ரமஹரமான சிரீவரமங்கையிலே அவர்களோடொக்கவிருக்கிற என்னாதனே. [அருளாயுய்யுமாறெனக்கே] அறச்சென்றற்றதுகிடாய், உன்திருவடிகளில் கைங்கர்யத்தைக் தந்தருளவேணும். கைங்கர்யமென்றும், உய்கையென்றும் - இரண்டன்று இவர்க்கு. த்வரித்திலராகில் அவன் வைலக்ஷண்யத்தில் ஜ்ஞாநமில்லையாகக் கடவது. இங்கே கால்பாவிற்றாகில் ஸம்ஸாரத்தில் தண்மையில் ஜ்ஞாநமில்லையாகக் கடவது. ... ... (9)

பத்தாம்பாட்டு. "அருளாயுய்யுமாறெனக்கு" என்றார், அப்போதே வந்தருளக்கண்டிலர்: ஏதேனும் தசையிலும் "உன்திருவடிகளே சரணம்" என்றிருக்கும்படி என்னைப் பண்ணியருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லையென்கிறார்.

ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்* உனக்கோர்கைம்
மாறுநானென்றிலேன் எனதாவியுமுனதே*
சேறுகொள்கரும்பும்பெருஞ்செந்நெலும் மலிதண்சிரீவரமங்கை*
நாறுபூந்தண்டுழாய்முடியாய்! தெய்வநாயகனே! (10)

[ஆறெனக்கு இத்யாதி] "ஆறென்று - வழி. வழியென்று - உபாயம்." "எவ்வாறு நடந்தனை", "இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய்" என்னக்கடவதிறே. சரணென்று - உபேயம். "உபாயோபேயங்களிரண்டும் உன்திருவடிகளேயாம்படி பண்ணித்தந்தாயே" என்று பிள்ளான் பணிக்கும். "இவைஇரண்டாலும். உபாயத்தையே சொல்லுகிறது" என்று பட்டர் அருளிச்செய்வர். எனக்கு உபாயம் உன்திருவடிகளேயாம்படி பண்ணித்தந்தாய். ஆறு - உபாயம். *உபாயார்த்தைகவாசகஃ* என்கையாலே, சரணென்றும் - உபாயம். எனக்கென்று - உபாயாந்தரநிஷ்டரிற்காட்டில் தமக்குண்டான வேறுபாடு சொல்லுகிறார். "நோற்றநோன்பிலேன்" என்று தொடங்கி உபாயாந்தரசூந்யதையை முன்னிட்டுக்கொண்டு உபாயநிஷ்கர்ஷம்பண்ணுகிற திருவாய்மொழியாகையாலே, அத்தையே நிகமிக்கிறது. அவதாரணத்தாலே *ஏகபதத்தை நினைக்கிறது. ஈச்வரனைப்பற்றின ஆற்றத்தாலே உபாயாந்தரங்களை நெகிழுகையொழிய, நாஸ்திக்யத்தாலே விடுமன்று அது

விஷயாந்தரப்ராவண்யஹேதுவாம்; ஔஷதஸேவை பண்ணினனொருவன் ஸர்ப்பத்தின் வாயிலே கைகொடுத்தால் அது நிர்பாதம், ஔஷதஸ்பர்சமில்லாதவன் அத்தைச்செய்தால் அது மரணஹேதுவாம். இத்தெளிவைப் பிறப்பித்த உனக்கு ஸத்ருசமான ப்ரத்யுபகாரங்காணுத மாத்ரமன்றிக்கே, போலியாயிருப்பதொரு ப்ரத்யுபகாரமும் அகிஞ்சநனான நான் காண்கிறிலேன். என்றிய, உம்முடைய ஆத்மாவைத் தந்தாலோவென்ன,—[எனதாவியுமுனதே] அதுவும் செய்து நெஞ்சாறல் கெட்டிருப்பனிறே, நீ * மயர்வறமதிநல மருளிற்றிலையாகில் ராஜமஹேந்த்ரன் படியையெடுத்து "என்னது" என்று வைத்துப் பெருமாளுக்குக் கொடுப்பாரோபாதி களவு வெளிப்படுகையிறே, ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையாவது. உம்மதான ஆத்மாவைத் தந்தாலோவென்ன, [நின்பாதமே! எனதாவியுமனதேயென்று] நின்பாதமே என்கிற விடத்தை இங்கே யந்வயித்து, சபதமாக்கி நிர்வஹிப்பர் ஆப்பான்திருவழுந்தூரறையர். (அப்போது; ஆறெனக்கு, சரணை திருவடிகளாக. எனக்கு உபாயம் திருவடிகளாக.) [சேறுகொள் இத்யாதி] மிக்க சேற்றையுடைத்தான கரும்பும், அதுக்கு நிழல் செய்யும்படியான செந்நெலும் மிக்குக் குளிர்ந்த சிரீவரமங்கை. [நாறுபூந்தண்டுழாய் முடியாய்] பரிமளிதமாய் தர்சநீயமான திருத்துழாய். இதுக்கெல்லாம் முதலியாகவைத்த வளையத்தை யுடையையாய். ஏத்தனையேனு மளவுடையார்க்கும் நிர்வாஹகனுயிராநின்றாய், ஆனபின்பு நான் உனக்கு என்ன ப்ரத்யுபகாரம்பண்ணுவது. நீயோ! கனக்க வுபகரித்துக்கொண்டு நின்றாய், நான் அஜ்ஞனுகப்பெற்றிலேன், இங்ஙனேயானலும் நான் சிலசெய்து தலைக்கட்டினேனுகவொண்ணுதபடி நீ பரிபூர்ணனுய். உபகாரங்கொள்ளாதார் உண்டுடுத்துத் திரியாநின்றார்கள், அறிவுகேடரானவர்கள் "சில ப்ரத்யுபகாரம் பண்ணினோம்" என்றிராநின்றார்கள்; நீ அபூர்ணனுகில் இவையெல்லாம் சிலசெய்ததாக நினைத்திருக்கலாயிற்றிறே, நீயோ' பூர்ணனுயிருந்தாய்; ஆனபின்பு, ஒன்று செய்து தலைக்கட்டப்போமோ நித்யஸூரிகளுக்கதிபதியானவனே. தெய்வம் தேவர்கள் (10)

நிகமத்தில் இத்திருவாய்மொழியை ஸாபிப்ராயமாகக் கற்குமவர்கள், நித்யஸூரிகளுக்கு என்றும் போக்யராவரென்கிருர்.

தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமனடியிணைமிசை*
கொய்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்*
செய்தவாயிரத்துள்ளிவை தண்சிரீவரமங்கைமேயபத்துடன்*
வைகல்பாடவல்லார் வானோர்க்காராவமுதே. (11)

[தெய்வநாயகன்] ஸர்வேச்வரன். [நாரணன்] தன்னுடைமை இழக்கவிடாத வத்ஸலன். [திரிவிக்கிரமன்] தன்னையிரந்தார்க்குத் தன்னையழியமாறியும் காரியம் செய்து தலைக்கட்டிக்கொடுக்குமவன். [அடியிணைமிசை] திருவடிகளிலே [கொய்கொள்பூம்பொழில் (சூழ்)] நித்யவஸந்தமானசோலை. (இவர் உபாயாத்யவஸாயத்தாலே தரித்தவாறே) எப்போதும் கொய்கைக்குப் பக்வமாயிருக்கை. [குருகூர்ச்சடகோபன்] ஸ்ரீகீதையில் வ்யாவ்ருத்தி. [செய்தவாயிரம்] அர்த்தம் வேதார்த்தமேயாகிலும், வேதம்போலே தான்றோன்றியன்று. பரத்வம்போலே வேதம், அவதாரம்போலே இதிஹாஸபுராணங்கள். அர்ச்சாவதாரம்போலே திருவாய்மொழி. *செய்தவாயிரமிறே. தமப்பனில்லாதவிழவுதீர சக்ரவர்த்திக்குப் பிள்ளையானப்போலே. (ஆயிரம் திருவாய்மொழியினுள்ளே ச்ரமஹரமான சிரீவரமங்கையை மேவினபத்தையும்.) [உடன் பாடவல்லார்] ஸாபிப்ராயமாகப் பாடவல்லார். இவர்தம் உபாயசூந்யதையை அநுஸந்தித்துப் பாடவல்லார். [வைகலும் வானோர்க்காராவமுதே] காலதத்வமுள்ளதனையும் நித்யஸூரிகளுக்கு போக்யபூதராகப்பெறுவர். தேவஜாதிகள் அம்ருதம்பெற்று க்ருதார்த்தராமாபோலே, நித்யஸூரிகள் "இவர்

களைப்பெற்றோம்" என்று க்ருதார்த்தராவர். ப்ராபகாந்தர நிரபேக்ஷமான பகவத்ருசியையுடைய அவர்கள், ப்ராபகாந்தர நிரபேக்ஷமான பகவத்ருசியையுடைய இவரை விரும்பியிருக்கையாலே; ப்ராபகாந்தர நிரபேக்ஷராய் இத்தை அநுபவிக்க வல்லரானவர்கள் நித்யஸூரிகளுக்கு போக்யராவர். ... ... (11)

நம்பிள்ளை திருவடிகளே சரணம்

திருவாய்மொழி நூற்றந்தாதி

நோற்றநோன்பாதியிலேன் உன்தனைவிட்டாற்றகில்லேன்*
பேற்றுக்குபாயம் உன்தன்பேரருளே— சாற்றுகின்றேன்*
இங்கென்னிலையென்னும் எழில்மாறன்சொல்வல்லார்*
அங்கமரர்க்காராவமுது.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந்திருவாய்மொழி—ஆராவமுதே : ப்ரவேசம்

ஸிரீவரமங்கலநகரிலே எழுந்தருளியிருக்கிற வானமாமலை திருவடிகளிலே, வேரற்றமரம்போலேவிழுந்து அநந்யகதிகளாய்க்கொண்டு சரணம்புக்கார்; இவர் அப்படி பெரியவார்த்தியோடே சரணம்புகச்செய்தேயும் வந்துமுகங்காட்டாதிருக்க; கடலிலமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப்பெற்று தரிக்குமாபோலே, "இவ்வளவிலும் 'வேறொன்றுலேபேறு' என்றிருத்தல். மற்றொருவர்வாசலிலே சென்று கூப்பிடுதல்செய்யும் ப்ரமத்தைத் தவிர்த்தானிறே" என்றுகொண்டு தரித்த இது தான் திருக்குடந்தையளவும் கால்நடைதந்துபோகைக்கு உடலாயிற்று. என்றான், இங்குத் தம்மபேக்ஷிதம் கிட்டாதொழியவும் அங்கேறப்போகவேண்டுவானென்? என்னில்,—"ஒருகால் ப்ரபத்திபண்ணினோம், அதுபலித்ததில்லை" என்ன, நாஸ்திக்யத்தாலே விச்வாஸம்குலைந்து ருசியும் நெகிழுமவரன்றே; "ஆச்ரிதார்த்தமாக எழுந்தருளியிருக்கிறவன் நங்காரியஞ்செய்து தலைக்கட்டாமையில்லை, இன்னவிடங்களிலே செய்யக்கடவோம்' என்று வ்யவஸ்த்திதமா யிருக்குமிறே; ஆனபின்பு, இங்குச் செய்யப்பார்த்திலனாகில் மற்றோரிடத்திலே செய்கிறான்; இனித்தான், ஸ்ரீபரதாழ்வான் 'பெருமாளை மீட்டுக்கொண்டுவந்து திருவபிஷேகம்பண்ணவேணும்' என்று பாரித்துக்கொண்டுசெல்ல, 'பதினாலாண்டும் கழித்தல்லதுமீளோம்' என்னும் ஸ்வதந்த்ரனிறே; ஆகையாலே நமக்கு நாலுநாள் தாழ்த்ததேயாகிலும் நங்காரியம் செய்யாமையில்லை, என்றுபார்த்து, "திருக்குடந்தையிலேசென்றுபுகவே நம்மபேக்ஷிதங்களெல்லாம் கிட்டும், நமக்கு ஒருகுறைகளுமில்லை" என்று புக; ஸ்ரீபரதாழ்வான் "ராஜ்யத்துக்கு நிமித்தபூதனானேன்" என்றத்தாலே ஒருபுண்பாடும், "'தாயைக்கொண்டு ராஜ்யத்தைவாங்கிப் பெருமாளைக் காடேறப்போகவிட்டான்' என்று நாட்டார் சீறுபாறென்றிருப்பார்கள்" என்றத்தாலேவந்ததொரு பயத்தையு முடையனாய்க்கொண்டு; நான் திருவடிகளிலே சென்றுகிட்டினால், ப்ராதாவல்லேனோ! ஸிஷ்யனல்லேனோ! தாஸனல்லேனோ! என்பக்கல் ப்ரஸந்நராய் க்ருபைபண்ணியருளாதொழிவரோ! என்று பார்த்து; அம்பெய்வார் படைதிரட்டிக்கொண்டு போமாபோலே திருவயோத்யையிலுள்ளாரில் வ்ருக்ஷங்களகப்பட ஆர்த்தியிலே தன்னில் குறைந்தாரில்லையிறே, நம்மார்த்திகண்டு மீண்டிலராகிலும் ஆர்த்தர்பலரையுங் கண்டால் மீளாமையில்லையென்றுபார்த்து*ஏபிச்ச ஸசிவை:*என்கிறபடியே இவன் செல்ல; பெருமாளும், "ராஜ்யதந்த்ரங்களிற் குறைபடாமல் நடத்தாநின்றாயே? காரியங்கள் செய்யுமிடத்தில் மந்த்ரிகளோடேகூடிச் செய்யாநின்றாயே?" என்றாப்போலே இவனுக்கிடமற வார்த்தை கேட்டாப்போலே; இவர்புக்கவிடத்தில் திருக்

கண்களை அலரவிழித்துக் குளிரநோக்கியருளுதல், திருப்பவளத்தைத்திறந்து ஒரு வார்த்தை யருளிச்செய்தல், அணைத்தல்செய்யக் கண்டிலர். *மாமக்ரூரேதிவக்ஷ்யதி* என்றாப்போலே ப்ரதிகூலர்சோறுண்டு வளர்ந்தவன் மநோரதம்பெற்றானிறே; அப்படியே தம்மையும் கிட்டவந்து அணைக்கப்பெறாமையாலே மிகவும் அவஸந்நராய். போக்யதையாலும் ஈடுபட்டு ஸௌந்தர்யாதிகளாலும் போரநொந்து, ஸ்தநந்தய ப்ரஜைதாய்பக்கலிலேகிட்டி முகம் பெறாவிட்டால் அலமந்து நோவுபடுமாப்போலே அவன் ஸந்நிதியிலே தளர்ந்துகிடந்து கூப்பிட்டு இன்னமெத்தனைத்திருவாசல் தட்டித் திரியக்கடவேன் என்னும் ஆர்த்தியோடே தலைக்கட்டுகிறார். ... *

முதற்பாட்டு. உன்னழகாலே என்னையுருக்குகிற உன்னைக் கண்வளர்ந்தருளக்கண்டேன் குளிரநோக்குதல், அணைத்தருளுதல் செய்யக்காண்கிறிலேனென்கிறார்.

ஆராவமுதே அடியேனுடலம்நின்பாலன்பாயே*
நீராயலைந்துகரைய உருக்குகின்றநெடுமாலே*
சீரார்செந்நெற்கவரிவீசும் செழுநீர்திருக்குடந்தை*
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே. (1)

[ஆராவமுதே] அநுபவியாநின்றாலும் க்ரமப்ராப்தி பற்றாதவிஷயத்தைப் பிரிந்தார் எங்ஙனே ஆறியிருக்கும்படி. முற்பட தர்சநமாய், அநந்தரத்திலே அணுகி, பின்னை ஸ்பர்சமாய், இப்படியேயிறே அநுபவப்ரகாரங்கள்; அத்தனைக்ரமம் பார்த்திருக்கவொண்ணாதபடியாயிருக்கை. [ஆராவமுதே] கடலில் உப்புச்சாறுகுடிப்பார்க்கு, தேவயோநியிலே பிறக்கவேணும், ப்ரஹ்மசர்யமநுஷ்டிக்கவேணும், இத்தனைபட்டால் ஸக்ருத்ஸேவ்யமாயிருக்கும்; இது அங்ஙனன்றிக்கே, ஸர்வாதிகாரமுமாய், ஸதாஸேவ்யமுமாய், ப்ரஹ்மசர்யாதி வைகல்யமுண்டானவையும் தானே பரிஹரிக்கக்கடவதாயிருக்கும். உத்தர பூமியிலே லோகஸாரங்க மஹாமுநிகள் வர்த்தியாநிற்க, இங்குத்தையானொருவன் அங்கேறச்செல்ல; "பிள்ளாய், தக்ஷிணபூமியில் விசேஷமென்?" என்றுகேட்க; "திருவாய்மொழி என்றொரு ப்ரபந்தமவதரித்து சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக்கொண்டாடிக்கொடுபோகாநின்றார்கள்" என்ன, 'அதிலே, உனக்குப்போவதொரு சந்தைசொல்லிக்காணாய்" என்ன, 'ஆராவமுதே' என்கிறவித்தனையும் எனக்குப்போம். என்ன, "நாராயணாதி நாமங்கள் கிடக்க, இங்ஙனேயுமொரு நிர்த்தேசமுண்டாவதே" என்று அத்ருப்தராய், 'இச்சொல்லுநடையாடுகிற தேசத்தேறப்போவோம்' என்று அப்போதே புறப்பட்டுப்போந்தார். [ஆராவமுதே] *ஸஹபத்ந்யா* ஆழங்காலிலே யிழிவார் ஒரு கொம்பைக்கொடியைப் பிடித்து இழியுமாபோலே. *பத்ந்யாஸஹ* கிண்ணகத்திலிழிவார் தேசிகரைக் கைப்பிடித்துக்கொண்டிழியுமாப்போலே, பெருமாள் பெரிய பெருமாளை யநுபவிக்கும்போது பிராட்டியைக் கூடக்கொண்டாயிற்றிழிவது. *விசாலாக்ஷ்யா* இவர்க்குப் பெரியபெருமாள்பக்கலுண்டான ப்ரேமாதிசயத்தைக் கண்டு, தன்னையணைக்கும்போதையிற்காட்டிலும் உடம்பெல்லாம் கண்ணானபடி. *நாராயணமுபாகமத்* இவர் நியதியிருக்கிறபடி. இக்கண்ணுக்கிலக்காய் ஆழங்காற்படாதே அவ்வருகுபட்டார். இத்தால் சொல்லிற்றாயிற்று - தான் தன்னையநுபவிக்கும்போதும் கூட்டுத்தேடவேண்டும்படியாயிற்று, ஆராமையிருக்கும்படியென்கிறது. [ஆராவமுதே] இத்திருவாய்மொழியில் இவர்க்குண்டான ஆற்றாமைக்கெல்லாம் பீஜம் இப்பதமாயிற்று. [அடியேன்] *மயர்வறமதிநலமருளப்பெற்ற ஸ்வரூபத்தால் சொல்லுகிறாரல்லர். போக்யதைக்குத் தோற்றுப் புறக்கவ்விச்சொல்லுகிறார். *பரவாநஸ்மி* என்றவர், *குணைர்தாஸ்யமுபாகத:* என்றாப்போலே. [உடலம்நின்பாலன்பாயே] சேஷத்வம் ஆத்மாவுக்கு ஸ்வரூபமானால் தேஹம் அதுக்கு விரோதி

யாய் நிற்கும்நிலை குலைந்தது. *அஹம்* என்றிருக்கக்கடவ இவர்தாம், அடியேனென்றது—விஷயத்தினுடைய போக்யதாதிசயமிறே; அப்படியே சரீரமும் விஷயாதீநமாக அழிந்தபடி. சேஷத்வாகாரமான ஆத்மாவைத் தன்வழியே இழுக்கை தவிர்ந்து, அதன்வழியே தானொழுகும்படியாயிற்று. ஜ்ஞாநைகந்த ஸ்வரூபனான ஆத்மாவாதல், அதுக்குத்தோள்தீண்டியான ஜ்ஞாந ப்ரஸரத்வாரமான மநஸ்ஸாதலன்றிக்கே இவற்றுக்கு அவ்வருகான த்வங்மாம்ஸ மேதோஸ்த்திமயமான சரீரமும் அழியும்படியாயிற்று. [நின்பாலன்பாயே] சேதநாசேதநவிபாகமற அழிக்கவல்ல உன்பக்கலிலே, அன்புக்கு ஆச்ரயமாகை தவிர்ந்து அன்புதான் ஒரு வடிவு கொண்டாற்போலே யிராநின்றது. [நீராயலைந்து] உடலம் அன்பாய், அன்புதான் நீராய்க்கொண்டு, அலையாநின்றது. முந்தற ச்ரவணமாய், அநந்தரத்தில் மநநமாய் பின்னை பாவனையாய், அது ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாய்க்கொண்டு அவ்வடைவிலே வருகிறதன்றே; விஷயமழிக்க, அழிகிறதித்தனையிறே. [நீராயலைந்துகரைய] நீர் தன்பக்கலிலகப்பட்டத்தைக் கரைத்துத்தான் கரையாதிருக்குமாயிற்று; இங்கங்ஙனன்று, நீர்தானாயிற்றுக் கரைகிறது. அன்புநீரானால், நீர்தான் கரையத் தட்டில்லையே. இத்தலையளவு இதுவானால் அத்தலை செய்கிறதென்? என்னில், [உருக்குகின்ற] அழிக்கைக் கடியிட்டவித்தனையாயிற்று. அழிப்பாளனானவன் “ஆபரணாதிகள்” என்றுபாராதே உருக்கியழிக்குமாபோலே காணும் இவனும் உருக்கியழிக்கிறபடி. *தேசமான வணிகலனு மிவர்கைகூப்புச் செய்கையிறே. ஆழ்வார்க்குள்ள வுடலையுருக்கி யழிக்குமித்தனையோ? என்னில்,—[நெடுமாலே] எதிர்த்தலையிலழிவுகண்ட பின்பிறே இத்தலையிலழிவு. அவனுடைய வ்யாமோஹத்தைப்பார்க்கில் இதொன்றும் போராதபடியாயிருக்கும். அவனுடைய அழிவு சொல்லும்போது இனி இவ்வடைவில் வாசகசப்தமிட்டுச் சொல்லவொண்ணாது. [நெடுமால்] என்னிலென்னுமித்தனை. மாலென்று - வ்யாமோஹம். நெடுமாலென்று - மிக்க வ்யாமோஹத்தை யுடையனாயிருக்கை. அன்றிக்கே, மாலென்று - பெரியோனென்றபடியாய், அதுதானும் ப்ரஹ்மருத்ராதிகளளவோ? என்னில்,—அல்ல, *மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவனென்கிறது. நெடுமாலென்று - ஸர்வேச்வரனென்றபடி. அவனுடைய பெருமையும் இவரையழிக்கைக்கு உடலாமித்தனையிறே. [சீரார் இத்யாதி] மிக்ககனத்தையுடைத்தான செந்நெற்கதிர்களானவை கண்வளர்ந்தருளுகிற அழகைக்கண்டு, பரிசர்யைபண்ணுவாரைப் போலே அசையாநிற்கும். சீர் - கனமும், அழகும். கவரிபோலே வீச. கவரி - சாமரம். அன்றிக்கே, செந்நெலுக்குச் சீர்மையாவது - ஆராவமுதாழ்வார்க்கு அமுதுபடியாகிற சீர்மையாகிலுமாகிறது. அப்போது *அஹமந்நம்* என்கிற சீர்மை. [கவரிவீசும்] *அகாலபலிநோ வ்ருக்ஷா: *என்னுமாபோலே. அறுத்து நடவேண்டாபோலேகாணும். கருத்தறிந்து அடிமைசெய்வாரைப் போலே. சேஷவஸ்துவின் வ்யாபாரமடைய சேஷி தனக்கு அடிமையாக நினைத்திருக்கிறபடி. [செழுநீர்] கண்வளர்ந்தருளுகிற ஸௌகுமார்யத்துக்குப்போரும்படி அழகிதான ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருக்குடந்தையிலே. செழுநீர்-பெருநீரென்றுமாம். [ஏரார் கோலம் இத்யாதி] அழகுசமைந்தவொப்பனை நிறம்பெறும்படி கண்வளர்ந்தருளினாய். நாட்டார் உலாவித்திரியும்போது அவயவங்களிலுண்டான பொல்லாங்குகள் மறைந்து ஒன்றுபோலேயிருக்கும்; ஓரிடத்திலே யிருத்தல் கிடத்தல் செய்தவாறே வைரூப்யந்தோற்றிக் கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடியிருப்பர்கள்; இங்கு அங்ஙனன்றிக்கே, *ஸமயா போதிதச் ஸ்ரீமாந்* என்று கிடந்த கிடைக்கு ஆலத்தி வழிக்கவேண்டும்படியிருக்கை. “இவனுணரில் செய்வதென்” என்று வயிறுபிடிக்க வேண்டும்படியிருக்கை. [கிடந்தாய்கண்டேன்] *ஸுகஸுப்த:* என்கிறபடியே கிடையழகைக் கண்ணாலே காணப்பெற்றேன். நினைத்தபரிமாற்றம் பெற்றிலேன், (என்னைப்பற்ற) எழுந்திருத்தல், இருத்தல், உலாவுதல், “என்செய்தாய்” என்னுதல் அணைத்தல் செய்யப்பெறுகிறிலேன். [எம்மானே] “இதுநம்

மது" என்று இராதொழியப்பெற்றேனாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே. வடிவோடொக்க ப்ராப்தியும் என்னை நலியாநின்றது. ப்ராப்தியையிட்டு இப்படி என்னை நலியலாமோ வென்கிறார். ... ... (1)

*இரண்டாம்பாட்டு இப்படி கூப்பிடச்செய்தேயும் ப்ரதிவசநம் பண்ணுமையாலே, உம்முடைய கார்யம் நீரே செய்புமித்தனையன்றோ" என்றிருந்தானாகக் கொண்டு. முன்புபண்ணின உபகாரங்களைச்சொல்லிக் கூப்பிடுகிறார்.

எம்மானேயென்வெள்ளைமூர்த்தி ! என்னையாள்வானே*
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாயெழிலேறே*
செம்மாகமலஞ்செழுநீர்மிசைகண்மலரும் திருக்குடந்தை*
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே ! என்னான்செய்கேனே. (2)

[எம்மானே] உடைமையோ ! உடையவனே உடைமையைநிர்வஹிப்பார். "நீயே உன்கார்யம்செய்து தலைக்கட்டிக்கொள்" என்கைக்கு வெறும் நானேயாயிருந்தேனோ. எம்மானே என்றதனே ! [எம்மானேயென்வெள்ளைமூர்த்தி] *பதிம் விச்வஸ்ய* *யஸ்யாஸ்மி* என்கிற ப்ரமாணங் கொண்டறிந்தேனோ. பின்னை எங்ஙனே செய்தபடி ? என்னில்,—சுத்தஸ்வரூபனாகையாலே, தன்படிகளிலொன்றும் குறையாதபடி எனக்குத் தன்பேறாகத் தானே காட்டக்கண்டேன். சிறிது மயர்வுகிடக்க நீ யருளினையாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே. (மூர்த்தி—ரூபமாய், ஸ்வபாவத்தைநினைக்கிறது. சுத்தஸ்வபாவனே) [என்னையாள்வானே] காட்டுகிற போது தெரியக்காட்டி, பின்னை என்வழியேயாக்கி என்னைக்கைவிட்டாயோ. *அஞ்சிறையமடநாரை, *மாசறுசோதிதொடக்கமான வ்யஸநங்களையும்போக்கி குணஜ்ஞாநத்தாலே தரிப்பித்துக்கொண்டு போந்தபடி. [எம்மாவுருவும்] எனக்காகவும் ஆச்ரிதர்க்காகவும் நீபடும்பாடு அறிவுதியே. எவ்வகையாலும் விலக்ஷணமான விக்ரஹம். அதாவது *ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய* என்கிறபடியே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநமாயிருக்கை. [வேண்டுமாற்றால்] "தனக்குவேண்டுருக்கொண்டு" என்கிறபடியே இச்சையாலேயென்னுதல். ஆச்ரிதர் வேண்டுமாற்றாலென்னுதல். "தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே" என்னக் கடவதிறே. [எவ்வுருவும் வேண்டுமாற்றாலாவாய்] "எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாய்" ஆச்ரிதார்த்தமாக நீகொள்ளாதவடிவுண்டோ. [எம்மாவுருவும்] எல்லாவடிவும் அவன்கொண்டதாகையாலே ச்லாக்கியமாயிருக்கிறபடி. அதாவது *ஆவிர்ப்பூதம்* என்கிறபடியே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தை இதர ஸஜாதீயமாக்குமித்தனையிறே. *ரூபமந்யத்த ரேர்மஹத்* என்னுமித்தனையிறே. [வேண்டுமாற்றாலாவாய்] கர்மமடியாக இவன் பிறக்குமாபோலேயிறே அநுக்ரஹமடியாக அவன்பிறக்கும்படி. இருவர்க்கும் பிறவியொக்கும். இவனுக்குக் கர்மக்ஷயம்பிறக்க ஜந்மக்ஷயம்பிறக்கும், இவன்கர்மம் அவன்காலிலே குனியப்போம் ; அவனுக்கு நித்யமாய்ச்செல்லாநிற்கும். இனி அவனுக்குக் கர்மமென்னப்பார்க்கிறது அநுக்ஹரத்தையிறே, அதுதானும் நித்யமிறே அவனுக்கு. இவனுக்கு இவன் தன்னளவிலே பிறக்கவமையும், அவனுக்கு எல்லார்க்குமாகப் பிறக்கவேணுமே. இவனுக்குக் கர்மமடியாக வந்ததாகையாலே ஸ்வார்த்தமாயிருக்கும். அவனுக்கு அநுக்ரஹமடியாக வந்ததாகையாலே பரார்த்தமாயிருக்கும். (பஹூநிமேவ்யதீதாநிஜந்மாநிதவச) விறே. தவசஎன்கிறது உன்னுடைய பிறவி மெய்யாயிருக்குமாபோலே என்னுடையஜந்மமும் ஐந்த்ரஜாலிகமன்றுகாண். இப்படியிராதவன்று இவனுக்கு மார்விலே கைவைத்துறங்கவொண்ணாதே. [எழிலேறே] இப்படி ஆச்ரிதார்த்தமாகப் பிறவாநின்றால் பழையபுகரிற் குறைந்துவருமோ ? என்னில்,—பண்டில்லாத வெழிலுமுண்டாயிருக்கை. கர்மத்தாலேபிறக்கிலிறே கிறக்கேடாவது. *பலபிறப்பாயொளிவருமுழுநலமிறே. *ஸஉ

ச்ரேயாந்பவதிஜாயமாந: ஸஏவ என்கிறதிறே. எல்லார்க்கும் பிறக்கப்பிறக்கப் புகர் அழிந்துவரும், இவனொருவனுக்கும் பிறவாநின்றால் புகருண்டாகாநிற்குமிறே. தேசமறியப்புகருண்டாய் நெஞ்சுவெறுத்திருக்குமோ? என்னில்,—"பிறக்கப்பெற்றோம்" என்னும் மேனாணிப்பையுடையனாயிருக்கும். "பட்டிமேய்ந்தோர்காரேறு" என்கிறபடியே. "வானிளவரசு" என்கிறபடியே அகம்படிவைத்த அரசாயிருக்கும் அங்கு, அச்செறுப்புத்தீர ஸ்வைரம் ஸஞ்சரிக்கப்போந்த விடமிறே இது; ஆகையாலே, அங்குநின்றும்போந்து பிறந்தபின்பாயிற்று எழிலேறாயிற்று. அடியறிவார் *பவாந்நாராயணோதேவ:* என்றால், அது அஸஹ்யமாய், *ஆத்மாநம்மாநுஷம் மந்யே* என்றும், (அஹம்வோபாந்தவோஜாத:) என்றும் சூழ்த்துக்கொடுக்கும்படியிறே அவதாரத்திலே மெய்ப்பாடிருக்கும்படி, [செம்மா இத்யாதி] அவதாரகாலத்திலுதவாதார்க்கும் இழக்கவேண்டாதபடியிறே கோயில்களிலேவந்து கண்வளர்ந்தருளுகிறது. [செம்மாகமலம் இத்யாதி] பரிமளம் முகத்தேவந்தலையெறிய அதுதானே தொடைகுத்தக்கிடந் துறங்குகிறபடி. சிவந்த பெரிய கமலங்களானவை தர்சநீயமான நீரையமுக்கி மேலேயலருகிறபோது, கடல்நிறமான வடிவையும் அங்குத்தையவயவங்களையும் காட்டாநின்றன. [செம்மாகமலம்] அரைக்ஷணத்திலே செவ்விமாறுகிறதாமரை அங்குத்தைக் கொப்பாகாதிறே, வருந்திச்சொல்லும்போதும் இத்தனையேறிட்டுச் சொல்லவேணுங்காணும் [அம்மாமலர்க்கண் வளர்கின்றானே] அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் அலரக் காண்கிறிலேன். [அம்மாமலர்] அவற்றோடே ஸஜாதீயமாயிற்றின இரண்டுபூ அலரக்காண்கிறிலேனென்றுமாம். [என்நான்செய்கேனே] இவையிரண்டு மலர்ந்தாலல்லது தரியாதிருக்கிற நான் என்செய்கேன். திருக்குடந்தையிலே தாமரைகள் அலர்ந்தால் மதுபாநம்பண்ணக்கடவவண்டுகள் மதுபாநம்பண்ணிக்களியாநின்றன, இத்தாமரைகள் அலர்ந்தால் மதுபாநம்பண்ணக்கடவவண்டு இங்ஙனே பட்டினிகிடந்துபோமித்தனையோ. [என்னான்செய்கேனே] "இக்கூப்பீடு உருவச்செல்லும்" என்றிருக்கிறாயோ, சென்றற்றதுகிடாய். "இவையொழிய மதுபாநம்பண்ணோம்" என்கையிறே இவர்க்கு இங்ஙன்படவேண்டுகிறது. இனி இவையலருகையாவது விசேஷகடாக்ஷம்பண்ணுகைகாணும். அவன்கண் விழியாதபோது இவர் கண்விழிக்கமாட்டாரே. ... ... (2)

மூன்றாம்பாட்டு. இப்படி நசையற்றாப்போலே துடித்துக்கிடந்து கூப்பிட்டவிடத்திலும், குளிரநோக்குதல் வினவுதல் செய்யாமையாலே, பேறு தம்மதானால் பெறுவார்க்கும் சில செய்யவேணுமென்று இருந்தானாகக்கொண்டு; நான் என் கார்யம் செய்கையென்று ஒன்றுண்டோ, நீசெய்து தலைக்கட்டித் தரவேணுமென்கிறார்.

என்னான்செய்கேன்யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்*
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றுங்குறைவேண்டேன்*
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாநாள்*
சென்னாளெந்நாளந்நாள் உனதாள் பிடித்தேசெலக்காணே. (3)

[என்னான்செய்கேன் யாரேகளைகண் என்னையென் செய்கின்றாய்] என்மேலே விட்டிருக்கிறாயோ? பிறர்மேலே விட்டிருக்கிறாயோ? நீயேசெய்யக்கடவதாக நினைத்திருக்கிறாயோ? [என்னான்செய்கேன்] "நான் செய்வது எது?" என்று கேட்கிறாரல்லர், நான் செய்து தலைக்கட்டுவதாக நினைத்திருக்கிறவற்றுக்கும் எனக்கும் என்னசேர்த்தியுண்டு. [யாரேகளைகண்] அமிழ்ந்துகிறார் அமிழ்ந்துகிறாரையெடுக்கவோ. *போதயந்த: பரஸ்பரம் பண்ணுகைக்கும் ஆளல்லாதவர்கள் என் கார்யம் செய்யவோ. [என்னை என்செய்கின்றாய்] நெறிகாட்டிநீக்குதியோ, நின்பால் கருமாமுறிமேனி காட்டுதியோ. நீ நினைத்திருக்கிறதென்? [என்னான்செய்கேன்

யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்] என்னையறியாயோ! பிறரையறியாயோ! உன்னையறியாயோ! என்னை நானாகவன்றோ புத்திபண்ணியிருக்கிறது. [யாரேகளைகண்] என்னளவுகிட்டாதார் எனக்கு ரக்ஷகராகவோ. [என்னையென்செய்கின்றாய்] நீசெய்து தலைக்கட்டப்பார்த்தாயோ? அன்றிக்கே, 'ஸாதநாநுஷ்டாநம் பண்ணி வாரும்' என்று நளன் தமயந்திக்கு வழிகாட்டினாப்போலேகைவிடப்பார்த்தாயோ? [என்னான்செய்கேன்] தாம் கைவாங்கினபடி. [யாரேகளைகண்] பிறர்பக்கல் நின்றும் கைவாங்கினபடி. [என்னையென்செய்கின்றாய்] *மத்யாஜீ மாம்நமஸ்குரு* என்னப் பார்த்தாயோ? மாசுச: என்னப் பார்த்தாயோ? [உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்] நீ *மாம்நமஸ்குரு* என்றால் எனக்கு சோகம் போகாதுகிடாய். பெறுவது உன்னையேயாகிலும் உன்னாலே பெறுமன்று வேண்டுவன், என்னாலும் பிறராலும் பெறும் உன்னையும் வேண்டேன். உன்னாலல்லால் என்கிற வித்தை - உபேயவிஷயமாக்கி, "உன்னையொழிய மற்றொன்றால் எனக்கொரு குறையில்லை" என்று சொல்லுவாருமுண்டு. [யாவராலும்] யாவையாலுமென்னாதே, யாவராலுமென்கிறது - "உபாயபாவம் ஒருசேதநனாலே" என்றிருக்கையாலே. [ஒன்றும் குறைவேண்டேன்] அல்லாதவற்றுக்கும் அபிமதஸித்தியுண்டேயாகிலும், காலன்கொண்டு மோதிரமிடுமாபோலே ஸ்வரூபவிரோதியானது எனக்குவேண்டா. கடல்கடத்தப்பெறவிருத்தல், சபித்துப்பெறவிருத்தல் செய்யாத பிராட்டியைப்போலே. அதாவது - இரண்டு தலையையும் அழிக்கையிறே. ஒருவராலும் ஒருகுறை நிரம்புவதாக வேண்டியிரேன். [கன்னார்மதில்சூழ்குடந்தைக்கிடந்தாய்] இவருடைய உபாயம் அரண்செய்து கிடக்கிறபடி. "அவனே உபாயோபேயம்" என்று அறுதியிட்டவர்கள், அத்தலையில் பரிவாலே அவனைக்காக்கைபணியிறே; *செவ்வடி செவ்விதிருக்காப்பிறே. [கன்னார் மதிள்] தொழில்மிக்க மதிளென்னுதல், செம்பாலே செய்யப்பட்ட மதிளென்னுதல். கன்னென்று - தொழிலும், செம்பும், சிக்கெனவும். [அடியேனரு] - உனக்கு அநந்யார்ஹமாய்த் தனக்குஉரித்தல்லாத இவ்வாத்மவஸ்து. [வாணாள்சென்னாளெந்நாள்]- ஜீவித்துக்கொண்டு செல்லும்நாள் யாதொருநாள். [அந்நாள] - அவ்வளவும். [உன தாள் பிடித்தேசெலக்காணே] - உன்திருவடிகளையேபெற்றுச் செல்லும்படி பார்த்தருளவேணும். காற்கூறும் விடாதபடி பார்த்தருளவேணும். "ஒன்றும்குறை வேண்டேன்" என்றவநந்தரம் வந்து குறைநிரப்பக்கண்டிலர்; இனி அநுபவம் பெற்றபோதுபெற, "உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்கிற இவ்வத்யவஸாயம் குலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார். அடிவிடில் அத்யவஸாயம் குலையுமே, அடியேபிடித்து ஜீவித்தவர் அத்தை விடாரே இப்போதாக. அத்யவஸாயமிது, ருசியில்வந்தால் பரமபக்தியுக்தர், விளம்பத்துக்கு அடியென்? என்னில்,—பக்திவிபாகத்துக்காகவும், இவருடைய ப்ரேமம்வழிந்த சொல்லாலே நாட்டைத் திருத்துகைக்காகவும். ... ... (3)

நாலாம்பாட்டு. ஸர்வேச்வரனிருந்துவைத்து ஆச்ரிதர்க்காகத் திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனாயிருக்க நினைத்தபரிமாற்றம் கிடையாமையாலே நோவுபடாநின்றேனென்கிறார்.

செலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய்*
உலப்பிலானே! எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி*
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய்! உன்னைக்காண்பான்நான்
அலப்பாய்* ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவனே. (4)

[செல இத்யாதி] - உன்னுடைய குணவத்தாப்ரதையடங்கலும் அழியப்புகாநின்றதுகிடாய். [செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்]-எத்தனையேனும் அளவுடையாரும் தாங்கள் நின்றவளவுகளைக்கழித்து அவ்வருகேகாணப்

புக்கால், அவ்வளவுகளை யுடையனாயிருக்கும். "பேசுவாரெவ்வளவுபேசுவர் அவ்வளவே - வக்கரனைக்கொன்றான்வடிவு" - திவ்யவிக்ரஹவைலக்ஷண்யத்தைப் பேசுமவர்கள் யாதோராளவுசொல்லுவர்கள், அவ்வளவாயிருக்குமத்தனை. [உலப்பிலானே] - ஸ்வரூபகுணங்கள் புருஷபுத்யதீநமல்லாதவளவாய், தான் ஸாவதியாயிருக்குமோ? என்னில், [உலப்பிலானே] - ஸ்வத: எல்லைகாணவொண்ணாதபடியாயிருக்கை. *தனக்குந்தன்தன்மையறிவரியானிறே. [எல்லாவுலகுமுடையவொரு மூர்த்தி] வடிவழகைக்காட்டி ஸர்வப்ராணிகளையும் காற்கீழேயிட்டுக்கொள்ளக்கடவனாய்,வடிவுகண்டபோதே,"இவனே இதுக்கெல்லாம்கடவன்"என்று தோற்றும்படியிருக்கும். மூர்த்திசப்தந்தான் - விக்ரஹத்துக்கு வாசகமாய், ஐச்வர்யத்துக்கும் வாசகமாயிருக்கும்; அப்போது, ஸகலலோகங்களுக்கும் நிர்வாஹகனாய் அத்விதீயனான ஸர்வேச்வரனென்றபடி. இத்தால் இவர்க்குப் பேறு என்? என்னில்,—உன் பெருமையை யழிக்கக்கிடாய் புகுகிறாயென்கை; "நீர் நோவுபடுகிறவிடம் என்னெல்லைக்குளன்று என்னவொண்ணாதே அவனுக்கு. [நலத்தால் மிக்கார்குடந்தைக்கிடந்தாய்] - நீ ஸ்வரூபங்களால் விஸஜாதீயனாய்க்கொண்டு அங்கேயிருந்தாயாகில் நான் ஆறியிரேனோ? உன்னையல்லது செல்லாதாருடைய தேசத்தைவிரும்பி விடமாட்டாதே படுகாடுகிடவாநின்றாய். [நலத்தால்மிக்கார்] - க்ரமப்ராப்திபற்றாதபடி ஸ்நேஹித்திருக்குமவர்கள். நலம் - ஸ்நேஹம். [உன்னைக்காண்பான்நான்] - ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க, ஆச்ரிதரை விடமாட்டாதே திருக்குடந்தையில் கண்வளர்ந்தருளுகிற உன்னை, அத்தலை இத்தலையாய் நான்காணவாசைப்பட்டு அலமாவாநின்றேன். அத்யபிநிவிஷ்டனான நான். [உன்னைக்காண்பான்நான்]-காண்கிறேன் நானன்றோ, காண்கிறது உன்னை யன்றோ; ஆனபின்பு, எங்ஙனே ஆறியிருக்கும்படி. [உன்னை] - கீழ்ச்சொன்ன போக்யதையுடைய உன்னையென்றுமாம். [அலப்பாய்] - அலமந்து. கண்டபோது "கண்டுகொள்ளுகிறோம்" என்று, சூது சதுரங்கம்பொருது ஆறியிருக்கும் விஷயமன்றே. காணப்பெறாமையாலேவந்த துடிப்பு, [ஆகாசத்தைநோக்கி] திருவடியுடைய த்வநி ஒருதிக்கிலேயா யிருக்கச்செய்தே *ஸா திர்ய சூர்த்வஞ்ச* என்று பிராட்டி எங்குமொக்கப் பார்த்தாளிறே. [உன்னை] என்னாநிற்கச்செய்தே, [ஆகாசத்தை நோக்கி] என்பானென்? என்னில்,- [அலப்பாய்] என்றதிறே. கலக்கத்தின் கார்யமிருக்கிறபடி. விஷயம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தே ஆகாசத்தைப்பார்க்கிறது, நினைத்த பரிமாற்றம் பெறாமையாலே. "ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்துதோற்றினாப்போலே தன்தசையைப்பார்த்துத் தோற்றுகிறானோ" என்று பார்த்து. ["ஆகாசத்தை நோக்கி] - என்னுடைய நிராலம்பநதையைப்பார்த்து" என்று ஆண்டான்வார்த்தை. அன்றிக்கே, *ககநாஸக்தலோசந:* என்றுகொண்டு, கண்களிலக்கில் தைக்கமாட்டாதபடியாயிற்றுச் சென்றற்றபடி. [அழுவன்தொழுவனே]-ஸ்நேஹிகள் செய்வதையும் செய்யாநின்றேன். க்ருபணர்செய்வதையும் செய்யாநின்றேன். சபலர்செய்வதையும் செய்யாநின்றேன், விரக்தர் செய்வதையும் செய்யாநின்றேன். ... ... (4)

அஞ்சாம்பாட்டு. "உன்னைக்காணவேணும்" என்னும் சாபலத்தாலே தயநீய ப்ரவ்ருத்திகள் பலவும் பண்ணினவிடத்திலும் காணப்பெற்றிலேன், உன்திருவடிகளை நான் பெறும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

அழுவன்தொழுவனாடிக்காண்பன் பாடியலற்றுவன்*
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்*
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்கண்ணா*
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். (5)

[அழுவன் தொழுவன்] பாலர்செய்வதையும் செய்யாநின்றேன், வேதாந்த ஜ்ஞானமுடையார் செய்வதையும் செய்யாநின்றேன். "மற்றவள்தனருள் நினைந்தேயழுங்குழவி" என்னக்கடவதிறே. [ஆடிக்காண்பன்] - கலியர் "இத்தனைசோறிடுகிறோம், ஆடவல்லையோ" என்றால் ஆடுமாபோலே, ஆடியும்பார்ப்பன். "என்பட்டால் பெறலாம்" என்றறியாரே. [பாடியலற்றுவன்] - ப்ரேமம்வழிந்தசொல் பாட்டாய், அதுதானும் அடைவுகெடக்கூப்பிடுகை - அலற்றுகை. [தழுவல்வினையால்] - இப்படிபட்டாலும் காணவொண்ணாதிறே உடன்வந்தியானவல்வினை. என்னைத் தழுவிவிடாதேநிற்கிற காதலாகிற ப்ரபலபாபத்தாலே. பக்தியை - பாபமென்கிறது, அநிஷ்டாவஹம் - பாபமாகையாலே. [பக்கம்நோக்கி] - "ஆர்த்தியே செப்பேடாகவரும்" என்றிருக்கையாலே வர ஸம்பாவனையுள்ள திக்கைப் பார்த்து. [நாணிக்கவிழ்ந்திருப்பன்] - அங்கு வந்து தோற்றக்காணாமையாலே, "ஆசைப்பட்டு அழகிதாகவுண்டோம்" என்று லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருப்பன். அன்றிக்கே. [பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்], "அருகுநின்றார் இவனை என்சொல்லுவார்களோ" என்றதுக்கு லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருப்பனென்றாராகவுமாம். "ஆசைப்பட்டார்க்கு அழகிதாக உதவினான்" என்று நாட்டார் சொல்லும் அவத்யத்துக்கு லஜ்ஜித்திருப்பன். [செழுவொண் பழனக்குடந்தைக் கிடந்தாய்] - பெருத்து அழகிதான நீர்நிலைகளையுடைய திருக்குடந்தையிலே கண் வளர்ந்தருளுகிறவனே. (செந்தாமரைக்கண்ணா) - முகாந்தரத்தாலே என் ஜீவநமாய்க்கிடக்கிறாயல்லை. கையிலேநிதியுண்டாயிருக்க ஆர்த்தர்க்கிடாதாரைப் போலே. என்ஜீவநம் ஒருமுகம் செய்துகிடக்கிறதன்றோ. (தொழுவனேனை) க்ருபணனென்னுதல், ஹேயனென்னுதல் புறம்புபுகலற்று, உன்னையல்லது, செல்லாதபடி க்ருபணனானவென்னை; பாஹ்யவிஷயங்களிலே ப்ரவணனாய் ஹேயனானவென்னை யென்னுதல். (உனதாள் இத்யாதி) - உன் திருவடிகளைக்கிட்டுவதொரு விரகு. நான் அறியாதபடி நீயே பார்த்தருளவேணும். தம்மாற்றாமை பேற்றுக்குடலன்றிக்கே அது ப்ரக்ருதியாய் "அவனாலேபேறு" என்றிருக்கிறபடி. (சூழ் கண்டாய்) - அநந்யப்ரயோஜநர்திறத்தில் கார்யசிந்தையும் அவனதாயிருக்கிறபடி.

ஆறாம்பாட்டு. உன்போக்யதையிலே யந்வயித்த எனக்கு ஒரு விச்சேதம் வாராதபடி த்வத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும் போக்கி, உன்னைப்பெறுவதொரு விரகு பார்த்தருளவேணுமென்கிறார்.

சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே* தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன்*
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே*
யாழினிசையேயமுதே அறிவின்பயனேயரியேறே. (6)

(சூழ்கண்டாயென்தொல்லைவினையையறுத்து) என்னுடைய ப்ராக்தநமான கர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி, உன் திருவடிகளை நான் வந்து கிட்டுவதொரு வழி நீயே பார்த்தருளவேணும். க்ரமத்திலே செய்கிறோமென்ன; அதுக்கவதியென்? என்கிறார். (உன்னடிசேருமூழ்கண்டிருந்தே) நாட்டாரோபாதி உன்னையறியாதொழியப் பெற்றிலேன். உன் திருவடிகளைக்கிட்டும் முறையை அறிந்து கொண்டிருந்தே. (தூராக்குழி தூர்த்து) துஷ்பூரமான இந்த்ரியங்களுக்கு இரையிட்டு. (எனைநாளகன்றிருப்பன்) இன்னமும் எத்தனைநாள் இங்ஙனேயிருக்கக்கடவேன். ஸ்ரீபரதாழ்வான்போல்வார்க்கோ ஒருநாளிட்டுக் கொடுக்கலாவது. (வாழ்தொல் புகழார்குடந்தைக்கிடந்தாய்) "பிரிந்திருக்கும் நாளெவ்வளவு" என்று கேட்கவேண்டாதவர்கள். அவன் கண்வட்டத்தில் வர்த்தித்து வாழப்பெறுகையால் வந்த ச்லாக்யமான புகழையுடையவர்கள். பழைய புகழென்றுமாம். விஷய

ஸந்நிதி தமக்கும் அவர்களுக்கும் ஒத்திருக்க, அவர்கள் வாழ்கிறபடி எங்ஙனே? என்னில்,—தம்மைப்போலே கூப்பிடாமையாலே நினைத்த பரிமாற்றம் பெற்றார்களென்றிருக்கிறார். (வானோர்கோமானே) அவர்கள் சிலவர் நாள்நடையாடாத தேசத்திலே வர்த்திக்கிறவர்கள்காணும். (யாழினிசையே) மிடற்றோசைபோலே கர்மாநுகுணமாகப் போது செய்கையன்றிக்கேயிருக்கை. "யாழ்பயில்நூல் நரம்பின் முதிர்சுவையே" என்னக்கடவதிறே. (அமுதே) செவிக்கதுவாய், நாக்குக் கொன்று தேடவேண்டாதபடி போக்யமாயிருக்கை. (அறிவின்பயனே) அறிவின் ப்ரயோஜநமான ஸுகம். மனஸ்ஸுக்கு போக்யமாயிருக்கிறபடி. (அரியேறே) ஸர்வவஸ்து விஸஜாதீயதையால்வந்த மேனாணிப்பை யுடையவனே. கண்ணுக்கு முகக்கொள்ளவொண்ணாத போக்யதையுடையவனென்றுமாம். (ஸிம்ஹச்ரேஷ்டம்போலே முககொள்ளவொண்ணாதபடி மேனாணித்திருக்குமவனே] இங்குள்ளார்க்கும் அங்குள்ளார்க்கும் உன்னை யநுபவிக்கக்கொடுத்து நிரதிசயபோக்யனாயிருக்க, நான் இந்த்ரியங்களுக்கு இரையிட்டு எத்தனைகாலம் அகன்றிருக்கக் கடவேன். ... ... (6)

ஏழாம்பாட்டு. உன்க்ருபையாலே உன் வைலக்ஷண்யத்தைக்காட்டி அடிமையாலல்லது செல்லாதபடியாக்கின பின்பு, உன் திருவடிகளைத்தந்து பின்னை ஸம்ஸாரத்தை யறுக்கவேணுமென்கிறார்.

அரியேறேயென்னம்பொற்சுடரே செங்கண்கருமுகிலே*
எரியேபவளக்குன்றே நால்தோளெந்தாயுனதருளே*
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே*
தரியேனினியுன்சரணந்தந்து என்சன்மங்களையாயே. (7)

(அரியேறே) ஸ்வவ்யதிரிக்தங்களுக்கெல்லாம் தானே கடவனாகையால் வந்த மேனாணிப்பு. (என்னம்பொற்சுடரே) அம்மேன்மைக்குச் சிறிது உள்ளாகப் பார்த்தவாறே ப்ரகாசித்துத்தோற்றுகிற தேஜஸ்ஸு. விலக்ஷணமான பொன் போலே ஸ்ப்ருஹணீயமான ஒளியையுடையவனே. அவ்வடிவில் வாசியை எனக்கறிவித்தவனே. (செங்கட்கருமுகிலே) அதுக்கும் அடியான திருக்கண்களும் திருமேனியுமிருக்கிறபடி (எரியேபவளக்குன்றே) - எரி—கேட்டை நக்ஷத்ரம். நக்ஷத்ரபதத்தளவாக ஓங்கின பவளக்குன்றே. ஸமுதாயமிருக்கிறபடி. எரியேய்ந்த பவளக்குன்றுபோலே யிருக்கை. அக்நிகல்பமான தேஜஸ்ஸையுடைய பவளக்குன்றே. இத்தால் நினைக்கிறது ஔஜ்ஜ்வல்யத்தையும். ஸ்ப்ருஹணீயதையையும். உகவாதார்க்கு அநபிபவநீயனாய், அநுகூலர்க்கு ஔஜ்ஜ்வல்யத்தாலே ஸ்ப்ருஹாவிஷயமாயிருக்கை. (குன்றே) அபரிச்சேத்யனானவனே. (நால்தோளெந்தாய்) கல்பகதரு பணைத்தாற்போலே யிருக்கிற திருத்தோள்களைக்காட்டி என்னை அநந்யார்ஹமாக எழுதிக்கொண்டவனே. திருவடிதோற்ற துறையிலேயாயிற்று இவரும் தோற்றது. (உனதருள் இத்யாதி) உன்னுடைய கேவலக்ருபையாலே என்னை ஆத்மாந்த தாஸ்யத்தைக்கொண்டாய். (அருளே) அருளாலே, (குடந்தைத் திருமாலே) அடிமைகொள்ளுகைக்காகப் பெரியபிராட்டியாரோடே கூடத் திருக்குடந்தையிலே வந்து கண்வளர்ந்தருளினவனே, "ஒருதேசவிசேஷத்தே" என்னாதபடி தேசத்தில் குறையில்லை, ச்ரிய:பதியாகையாலே ப்ராப்யத்திற் குறையில்லை. *பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா* என்ற இளையபெருமாளைப்போலே பற்றுகிறார் இவரும். தரியேனினி) அச்சேர்த்திகண்டபின்பு என்னால் பிரிந்து தரித்திருக்கப்போகாது. மாதா பிதாக்கள் ஸந்நிதியுமாய் அவர்கள் ஸ்ரீமான்களுமாய் உதாரருமாயிருக்க, ப்ரஜை பசித்து தரித்துக் கிடக்கவற்றோ? தரியாமை எவ்வளவு போருமென்ன,—(உன்சரணந்தந்து என்சன்மங்களையாயே) மூலை

கொடுத்து சிகித்ஸிப்பாரைப்போலே, முற்படத்திருவடிகளைத்தந்து. பின்னை ஜந்ம ஸம்பந்தத்தை யறுக்கவேணும். *புண்ணாராக்கையின் புணர்வினையறே யறுக்கப்புகுகிறது; அதுக்கடியிலே தரிப்பித்துக்கொண்டு, பின்னை யறுக்கவேணுமென்கிறார். ... . (7)

எட்டாம்பாட்டு. "தரியேன்" என்றபின்பும் முகங்கிடையாமையாலே கலங்கி; அநுபவம்பெற்றிலேனேயாகிலும், "உன்திருவடிகளே தஞ்சம்" என்றுபிறந்த விச்வாஸம் "குலைகிறதோ" என்று அஞ்சாநின்றேன்; அது குலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார்.

களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்*
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா*
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது*
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. (8)

[களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்]—நீ உன்காரியம் செய்யிலும்செய், தவிரிலும் தவிரு; நான் குறைவற்றேன். *த்வமேவோபாயபூதோமே பவ* என்கிற அம்சத்தில்குறையில்லை; *ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி* என்னும் உன்கூறு செய்யிலும்செய், தவிரிலும்தவிரு. அப்படி செய்கிறோம் என்னுமையாலே; என்னுடைய ரக்ஷணத்துக்கன்றோ இக்கிடையென்கிறார்மேல். [வளைவாய் நேமிப்படையாய்] - பார்த்தவிடமெங்கும் வாயான திருவாழியை ஆயுதமாக வுடையவனே. களையாதொழிகைக்குச்சொல்லலாம் கண்ணழிவுண்டோ. உன் கையில் ஆயுதத்துக்கு வாயல்லாத விடமுண்டோ. அது வாய்படைத்த ப்ரயோஜநம் பெறவேண்டாவோ. "பரிகரமில்லை" என்னப்போமோ. கைகழிந்து போயிற்று. இனிப்படைதிரட்டவேணும்" என்னும் கண்ணழிவுண்டோ. [நேமிப் படையாய் - களைகண்மற்றிலேன்]-அப்படியிருப்பது என்கையிலோராயுதமுண்டோ, பிறர்கையிலோராயுதமுண்டோ, உன்கையிலாயுதமில்லையோ. [குடந்தைக்கிடந்த மாமாயா] - நீ "மாம்" என்றதுக்குப்பின்பு இவ்வருகுள்ள ஏற்றமெல்லாம் பாராய். இத்தால் - அவதாரதசையிலும் அர்ச்சாவதாரம் ஸுலபமென்றபடி. திருக்குடந்தையிலேவந்து ஆச்சர்யமான அழகோடே கண்வளர்ந்தருளுகிறது ஆச்ரிதர்க்காக வன்றோ. சக்திவைகல்யம் சொல்லவொண்ணாது. "ஸுலபனன்று" என்னவொண்ணாது. "ருச்யுத்பாதகனல்லன்" என்னவொண்ணாது. [தளராவுடலம்] சரீரமானது கட்டுக்குலையா. தளரா - தளர. [எனதாவிசரிந்துபோம்போது]-என் ப்ராணனனது முடிந்துபோமளவாயிற்றுகிடாய். [போம்போது] - போம்போதாயிற்று. இதுதான் அந்திமஸ்ம்ருதியானாலோ? என்னில்,—"காஷ்டபாஷாண ஸந்நிபம்" என்றும் அஹம்ஸ்மராமி என்றும் சொல்லுகிறது இவரறியாரன்றே; இவர்தாம் அவ்வதிகாரிகளுமன்றே. விச்லேஷவ்யஸநத்தாலே சரீரமும் தளர்ந்து, ப்ராணனும் சரீரத்தைவிட்டுப் போம்தசையாயிற்று இப்போதென்கை. [இளையாது இத்யாதி] - அபேக்ஷிதம் பெற்றிலேனேயாகிலும், என்னபேக்ஷிதம் ஸித்திக்கும்படி உன்திருவடிகளைப் பற்றினபற்று நெகிழாமற்பண்ணி யருளவேணும். அநுபவம் கிடையாமையாலே, "அதுக்கடியான உபாயாத்யவஸாயமும் குலைகிறதோ" என்றஞ்சி; இது குலையாமல் பார்த்தருளவேணுமென்கிறார். ஒருங்க - ஒருபடிப்பட. (8)

ஒன்பதாம்பாட்டு. ஸர்வேச்வரனாய்வைத்து ஸர்வஸமாச்ரயணீயனாகைக்காக இங்கே ஸந்நிஹிதனாய் எனக்கு அடிமையாலல்லது செல்லாதபடிபண்ணின நீ, கண்ணாலே காணலாம்படி வரவேணுமென்கிறார்.

இசைவித்தென்னையுன்தாளிணைக்கீழிருத்துமம்மானே*
அசைவிலமரர்தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி*
திசைவில்வீசுஞ்செழுமா மணிகள்சேருந்திருக்குடந்தை*
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே. (9)

[இசைவித்தென்னை] - என்னை இசைவித்து நெடுநாள் விமுகனான என்னை அடிமையிலே இசைவித்து. இசையாத என்னை இசைவித்தவருமைவேணுமோ இசைந்திருந்த நீ கார்யம் செய்கைக்கு. [என்னை] நித்யஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகாயிருக்கிற என்னை. [உன்தாளிணைக்கீழிருத்தும்] - நித்யஸூரிகளடிமை செய்கிற உன் திருவடிகளிலே இருத்தினவனே- பரகுபரகு என்று திரியாதபடி தன்திருவடிகளிலே விஷயமாம்படி பண்ணுமவனென்கை. "நிழலுமடிதாறுமானோம்" என்கிறபடியே மிதியடியாம்படி ஸ்ரீசடகோபனுக்கி. பெருங்காற்றில் பூளைபோலே * யாதானும்பற்றி நீங்கும் விரதமாயிறே முன்பு வர்த்தித்தது. [அம்மானே] - பேறு இவரதாயிருக்க, அவன் இசைவிக்கவேண்டின ப்ராப்திசொல்லுகிறது. [அசைவிலமரர்தலைவர்தலைவா] - அசைவில்லாத அமரருண்டு - நித்யஸூரிகள், அவர்களுக்குத் தலைவனான ஸ்ரீஸேநாபதியாழ்வானுடைய கார்யமும் இவன் புத்யதீநமாயிருக்கிறபடி. அசைவில்லாமையாவது ப்ரஹ்மாதிகளுடைய அமரத்வம்போலே யாபேக்ஷிகமன்று. கல்பாவதியன்று என்றபடி. ஜ்ஞாநத்துக்கு ஸங்கோசவிகாஸங்களை யுடையரன்றிக்கே யிருக்கையென்றுமாம். [ஆதிப்பெருமூர்த்தி]- இவ்வருகுள்ளாருடையவும் ஸத்தைக்கு ஹேதுபூதனானவனே. ஜகத்காரணபூதனான ஸர்வாதிகனே. மூர்த்தி - ஸ்வாமி. [திசைவில் இத்யாதி] - ஸத்தையை நோக்கி, மேலுள்ளதிவர்கள் தாங்களே நிர்வஹித்துக்கொள்ள விருக்கையன்றிக்கே மேலுள்ளதும் தானே செய்வானாக நினைத்துவந்து கிடக்கிறபடி. திக்குக்களிலே தேஜஸ்ஸு பரவாநின்றதாய், தர்சநீயமாய், பெருவிலையனான ரத்நங்கள் சேராநிற்கிற திருக்குடந்தையிலே. வில் - தேஜஸ்ஸு. [அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்] - லோகமானது வருத்தமற்று ஆச்ரயிக்கும்படி கிடந்தாய். தௌர்லப்யசங்கையால் வந்த அலைச்சல்தீர்ந்து. அன்றிக்கே, அசைவில்லாத லோகமுண்டு - நித்யவிபூதி, அங்குள்ளாரும்வந்து ஆச்ரயிக்கக்கிடந்தாய். அன்றிக்கே, அசைவுண்டு - இடம் வலங்கொள்ளுகை, அத்தைக்கண்டு லோகமானது பரவும்படிகிடந்தாய். [கிடந்தாய் காணவாராயே] - கண்வளர்ந்தருளுகிற அழகுகண்டு அநுபவித்தேன், இனி நடையழகுகண்டு நான்வாழும்படி வரவேணும். [செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை] - ஆராவமுதாழ்வார். திருமழிசைப்பிரான்போல்வார் புருஷரத்நங்கள் சேரும் திருக்குடந்தை" என்று நிர்வஹிப்பர்கள். ... ... (9)

பத்தாம்பாட்டு. "திருக்குடந்தையிலேபுக, நம் மநோரதமெல்லாம் ஸித்திக்கும்" என்றுசெல்ல, மநோரதித்தபடி தாம் பெறாமையாலே; இன்னமும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக்கடவேனென்கிறார்.

வாராவருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய்*
ஆராவமுதாய் அடியேனுவியகமேதித்திப்பாய்*
தீராவினைகள்தீரவென்னையாண்டாய் திருக்குடந்தை
யூராய்!*உனக்காட்பட்டும் அடியேனின்னமுழல்வேனோ. (10)

[வாராவருவாய்]-வாராதவருவாய். பாஹ்யஸம்ச்லேஷம் பண்ணவாராத அருபித்ரவ்யமாய். [வருமென்மாயா] - [அருவாய் வருமென்மாயா] என்று, [அரு] என்கிற பதத்தை - இங்கேயுங் கூட்டிக்கொள்வது. மறந்து பிழைக்கவொண்ணாதபடி அகவாயிலே யருவாய்க்கொண்டு ப்ரகாசிக்கிற ஆச்சர்யபூதனே. [மாயாமூர்த்தியாய்]

நித்யமான திவ்யமங்களவிக்ரஹத்தை யுடையையாய். அல்லாதாருடைய தேஹங்களுடையஉத்பத்தி விநாசங்களை யுடைத்தாயிறேயிருப்பது. [ஆராவமுதாய்] - நிரதிசயபோக்யனாய்க்கொண்டு எனக்கு மறக்கவொண்ணாதபடி யிருக்கிறவனே. [அடியேனுடலநின்றுருகப் —] [அடியேனுவியகமேதித்திப்பாய்] - என்றும் உனக்கு ஸ்வம்மான என்னெஞ்சினுள்ளே உன் போக்யதையை யாவிஷ்கரித்து அநுபவிப்பித்தவனே. [தீராவினைகள்தீர வென்னையாண்டாய்]- அநுபவைகவிநாச்யமாய், உன்னையொழிய ஒருவரால் போக்கவொண்ணாத, த்வாநுபவவிரோதியான கர்மங்களைப் போக்குவித்து, அடியேனுவியகமேதித்திப்பாய் என்னும்படி புகுர நிறுத்தினவனே. *பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால்* என்கிறபடியே - *தீர்ப்பாரையாமினியில் வினைகள் தொடக்கமானவற்றைப்போக்கி என்னை யடிமைகொண்டாயென்றுமாம். [திருக்குடந்தையூராய்] - என்னை யடிமைகொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலேவந்து ஸந்நிஹிதனானவனே! பரவ்யூஹவிபவங்களை வ்யாவர்த்திக்கிறது. நான் கிட்டாத அம்சத்துக்கு நீ கிட்டவந்து கிடக்கிறவனே. ஒருநத்தமில்லாதானொருவனையோ நான் பற்றிற்று. [உனக்காட்பட்டும்] - ஸம்ஸாரிகளை அநுபவிப்பிக்க வந்துகிடக்கிற உனக்காட்பட்டும் [அடியேன்] - ஆருடையவஸ்து இங்ஙன் அலமந்துதிரிகிறது. [இன்னமுழல்வேனோ] என் ஸர்வச்ரத்தையும் உன்திருவடிகளிலேபொகட்டு, நீ செய்து தலைக்கட்டக்கடவையாக நினைத்திருக்கிற நான், இன்னம் எத்தனை திருப்பதிகள்புக்குத் தட்டித்திரியக்கடவேனென்கிறார். ... ... (10)

நிகமத்தில் இப்பத்தைப் பழுதறக்கற்கவல்லார், காமிநிகளுக்குக் காமுகரைப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவரென்கிறார்.

> உழலையென்பில்பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான்*
> கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்*
> குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்*
> மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே. (11)

[உழலையென்பில் இத்யாதி] - உழலை கோத்தாப்போலேயிருக்கிற எலும்புகளையுடைய பூதனைமுலைவழியே அவளுடையவுயிரையுண்டான். [கழல்களவையே சரணாகக்கொண்ட] - விரோதிநிரஸநசீலனுடைய திருவடிகளையே, அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் உபாயமென்று அத்யவஸித்த ஆழ்வார். விரோதியைப் போக்குவதும் அவனைத்தருவதும் திருவடிகளேயென்கை - அவதாரணத்தால். [கழல்களவையே சரணாகக்கொண்ட] - பலியாவிட்டாலும் தம்மடிவிடாரிறே யிவர். [குழலில் மலிய] - திருக்குழலோசையிற்காட்டிலும் மிஞ்சி, கேட்டார் நோவுபடும்படியாயிருக்கை. *மரங்கள் நின்றும் மதுதாரைகள்பாயவிறே அங்கு, *மரங்களுமிரங்கும்வகை இங்கு; இனி, நாமிரங்குகிறவிது தன்னேற்றமிறேயிங்குத்தைக்கு. அத்விதீயமான ஆயிரந்திருவாய்மொழியில் இப்பத்தையும். [மழலைதீரவல்லார்] - இளமைதீரவல்லார். அதாவது - "வரிற்பொகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கையன்றிக்கே, இவர்சொன்ன ஆற்றாமையோடே சொல்லவல்லார். "அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்" என்றிறே இவராற்றாமை. [காமர்மானேய்நோக்கியர்க்கே] - மானையேய்ந்தநோக்கையுடைய ஸ்த்ரீகளுக்குக் காமுகரைப்போலேயாவர். ஆவதென்? என்னில்,—"தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன்" என்றவிவர் இது பலமாகச்சொல்லும்போது கீழோடே வ்யாஹதமாம். ஆனால் சொல்லிற்றாயிற்று என்? என்றால்,—"மேல் கொடிதானநரகம்" என்னாநிற்கச்செய்தேயும், விஷயப்ரவணர் அதுபாராதே மேல்விழுமாபோலே, இது கற்றாரை எம்பெருமானும் ஸ்ரீவைஷ்ணவர்களும் மேல்விழுந்து போக்யராகக்கொள்ளுவர்கள். இங்ஙனன்றாகில், விப்ரலம்பகர் வார்த்தையாமிறே. இவர் ப்ரா

மாணிக ரன்றிக்கேயொழிவரே. ப்ரகரணத்துக்கீடாயிறே தலைக்கட்டியிருப்பதும். அவர்களுக்குப்போல் என்றொருசப்தம் இங்குக் கண்டிலோமே! என்னில்,—"முற்று வமை என்றொரு லக்ஷணமிருக்கிறபடி. த்ருஷ்டாந்தம் புக்கவிடத்தே தார்ஷ்டாந்திகமும் வரக்கடவது" தாவிவையங்கொண்ட தடந்தாமரைகள் என்னுநின்றதிறே.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஆராவமுதாழ்வாரா தரித்தபேறுகளை
தாராமையாலே தளர்ந்துமிக* - தீராத
வாசையுடனாற்றாமைபேசியலமந்தான்*
மாசறுசீர்மாறனெம்மான்.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம் திருவாய்மொழி—மானேய் நோக்கு: ப்ரவேசம்.

திருக்குடந்தையிலே போய்ப் புக்கவிடத்திலும் தம் அபேக்ஷிதம் பெறுமையாலே திருவல்லவாழேறப்போக வொருப்பட்டு, தம்மபிமதம் ஸித்தியாதவோபாதி அங்கு முட்டப்போகவுங்கூட அரிதாம்படி தமக்குப்பிறந்த அவஸாதத்தை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார். *மாசறுசோதியிலே - இவர்தாம் மடலெடுக்கப்புக்கு, அவனுக்கு அவத்யம் என்று தவிர்ந்தார்; இங்கு-ஆற்றாமைதோற்ற, கண்ட திருப்பதிகள்தோறும்புக்கு நுழைந்து திரியாநின்றார்; இதுக்கடியேதும் தெரிகிறதில்லை- அங்கு - அவன்ஸ்வரூபம் பரிஹரித்தார். இங்கு - தம்முடைய ஸ்வரூபம் நோக்கப்பார்க்கிறார்; அங்கு - வடிவிலே யணையவேணுமென்று ஆசைப்பட்டார்; பின்பு இவ்வளவும்வர அவ்வடிவிலே அவகாஹித்தபடியாலே ஆற்றாமைமுறுகி, *கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல்* என்கிறபடியே அடிமை செய்ய ஆசைப்படுகிறார். இனி இவர்தமக்குத்தான் ஸம்ச்லேஷமாவது - மாநஸாநுபவமென்றிறே ப்ரவேசத்திலே அடியிலே சொல்லிற்று; இங்ஙனேயிருக்க. திருவல்லவாழேறப் புறப்பட்டுப்போகையாவதென்? பந்துவர்க்கம் நிஷேதிக்கையாவதென்? என்னில்,—அந்த மாநஸாநுபவந்தனக்கு ஒருகலக்கம்வரவமையுமிறே.

எம்பெருமானோடே கலந்து பிரிந்து பிரிவாற்றாமைநோவுபடுகிறளொரு பிராட்டி, தன்னுடைய ஆபிஜாத்யாதிகளையும் பாராதே திருவல்லவாழேறப் புறப்பட்டுப்போகப்புக, இத்தை யறியும் தோழிமார் வந்து "இதுகார்யமல்ல, நந்தலைமைக்குப்போராதுகாண்" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, 'இனி நீங்கள் சொல்லுகிறவற்றால் நான்பெற்றதென்; அவ்வூரில் திருச்சோலையும், அங்குண்டான பரிமளத்தைக்கொய்துகொண்டுபுறப்படுகிறதென்றலும், அங்கேமதுபாநம்பண்ணிக் களித்துப்பாடாநின்றுள்ள வண்டுகளினுடைய இனிதான மிடற்றோசையும், ஊரிலுண்டான வைதிகக்ரியாகோலாஹலங்களும், நகரஸம்ப்ரமங்களும், இவையெல்லாம், நீங்கள் என்னை மீட்கநினைக்கிறவோபாதி 'அங்கேபோரு போரு' என்று அழையாநின்றது; ஆனபின்பு நீங்கள் சொல்லுகிறவற்றால் பெற்றதென்" என்று தன்னார்த்தியைஅவர்களுக்கு ஆவிஷ்கரித்து அவர்களை அநுநயியாநின்றுகொண்டு; திருவல்லவாழிலே நான் நினைத்தபடியே போய்ப்புக்குப் பரிமாறவல்லேனேயென்று அவர்களுக்குச் சொல்லுகிறாளாயிருக்கிறது. "இதுதான் நான் அநுபவித்தேன்" என்று ஜீயர் அருளிச்செய்வர் - பட்டர்திருவடிகளை யாச்ரயித்துப் பின்பொருகால் மேல்நாட்டுக்கெழுந்தருளி மீண்டு பெரியத்வரையோடே 'திருநாளுக்குதவவேணும்' என்றுவர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க; இராத்திருநாளெழுந்தருளி இங்குண்டான ஸம்ப்ரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்துபுகுரப்பெறுதொழிவதாய்க்கொண்டு "போரநோவுபட்டோம்" என்று

அருளிச்செய்வர். ஏகத த்வித த்ரிதர்கள் ச்வேதத்வீபத்தைச்சென்றுகிட்டி' உள் ளூப்புகுகைக்கு யோக்யதையில்லாமையாலே புறம்பேநின்று; அங்குள்ளார் எம்பெருமானைக்கண்டு படுகிற ஸம்ப்ரமத்தைச் செவியாலே கேட்டுநிற்பது. கண்ணால் காணப் போகா தொழிவதாய்க் கிடந்து பட்டாப்போலே கிடந்து கூப்பிடுகிறாராயிற்று இவரும். ... ... *

முதற்பாட்டு. தோழிமாரைக்குறித்து, திருவல்லவாழிலே நின்றருளின ஸர்வேச்வரன் திருவடிகளைக் கிட்டப்பெறுவதென்றோ வென்கிறாள்.

மானேய்நோக்குநல்லீர் ! வைகலும்வினையேன்மெலிய*
வானூர்வண்கமுகும் மதுமல்லிகைகமழும்*
தேனூர்சோலைகள்சூழ் திருவல்லவாழுறையுங்
கோனாரை* அடியேனடிகூடுவதென்றுகொலோ ? (1)

[மானேய் நோக்குநல்லீர்] - "நான் திருவல்லவாழிலே போய்ப்புகும்படி உங்கள் கண்ணாலே குளிரநோக்கி ப்ரஸாதிக்கவேணுமென்கிறாள்" என்று பிள்ளான் பணிக்கும். [மானேய் நோக்கு நல்லீர்] - மானையேய்ந்த நோக்கையுடையீராய் எனக்கு நல்லவர்களே. "பிரிவாற்றாமையாலே நோவுபட்டும், சோலையழகிலே ஈடுபட்டும், நம்முடைய ஹிதவசநத்தாலே தளர்ந்துமிருக்கிற இவளுக்கு நம்முடைய நிஷேதவசநம் செவிப்படுமாகில், இவள் மோஹிக்கும்" என்று நிஷேதகார்யம் தோற்றும்படி காதரேக்ஷணைகளாய்க்கொண்டிருக்க, [மானேய்நோக்கு நல்லீர்] என்கிறாள். இவள் தனக்கு *அநஸூயவே* என்று இவ்வளவேயிறே வேண்டுவது. *இதந்துதே குஹ்யதமம்ப்ரவக்ஷ்யாமி*-வைப்பாகவைத்தவையுமெல்லாம் சொல்லாநின்றேன் கேள். *அநஸூயவே* - அத்தலை குறையற்றபின்பு இனி இத்தலை கிடக்குமோ. [வைகலும்வினையேன்மெலிய] - ஒருகால் மெலிந்து தரித்திருப்பார்க் கன்றோ பிரிவாற்றலாவது. [வைகலும் - மெலிய] - காலங்கழியக்கழியக் காதல் கழியும்படியிறே விஷயாந்தரங்களை யாதரிப்பார்க்கிருப்பது; மநநம்பண்ணி, பாவனையாய், பின்பு தர்சநமாய், ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், பின்பு சரீரவியோகம் பார்த்திருப்பார் படியிறேயிது. *தஸ்ய* - மே *அத ஸம்பத்ஸ்யே* என்கிறமேலி லுத்தமனோடே கூடவேணுமே. *தாவதேவசிரம்* எனக்கு அவ்வளவேகிடாய் விளம்பம். யாவந்நவிமோக்ஷ்யே - *அதஸம்பத்ஸ்யே* அநந்தரத்தே ஸம்பந்நனைக்கடவேன். அதாவது *பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய* இறே. இப்படி சரீரவிமோக்ஷம் பார்த்திருப்பார்படியிறேயிது. [வைகலும் வினையேன்மெலிய] - தன்னை விச்லேஷிக்கும்படி மஹாபாபத்தைப்பண்ணின நான் நாடோறும் வ்யஸநபரம்பரையாலே அவஸந்நையாக. ஒருநாள் மெலியப் பொறுக்கமாட்டாத ப்ரக்ருதியானவள் கிடீர்! நெடுநாள் நோவுபடுகிறாள். திருவடிகண்டுபோந்தவநந்தரம் பிராட்டி பட்டதெல்லாம் படுகிறாளாயிற்று இவளும். ஒரு ராத்ரியில் வ்யஸநம் திருவடி பொருக்கமாட்டிற்றிலனிறே; *இமாமஸிதகேசாந்தாம்* மைவண்ணநறுங்குஞ்சியை யுடையவர்க்கும் பேணத்தகும் குழலையுடையவள் கிடீர். *சதபத்ரநிபேக்ஷணாம்* (கமலபத்ராக்ஷ:) என்கிற கண்களாலே கண்டுகொண்டிருக்கத்தக்க கருங்கண்ணையுடையவள்கிடீர். (ஸுகார்ஹாம்) - அவர்மடியிலேயிருக்கத் தகுமவள். (து:கிதாம்த்ருஷ்ட்வா) இவ்விருப்பிருக்கத் தகாதவளைக்கண்டு. *மமாபி வ்யதிதம்மந:* சோகஹர்ஷங்களுக்கு அழியாத என்னுடையநெஞ்சையும் வருத்திற்றுக்கிடீர். இப்படியேகாணும் இவளுக்கும் இருக்கிறபடி. [வினையேன்] நாள்செல்ல நாள்செல்ல ஆசைகழியாதபடியான பாபத்தைப் பண்ணினேன். (மெலிய - வானூர்வண்கமுகு மென்னுதல், மெலிய திருவல்லவாழுறையு மென்னுதல். அவ்வூரில், பரமசேதநனோடு அசித்கல்பமான ஸ்தாவரங்களோடு வாசியில்லை, மெலிவே விளைநீராகப் பல்குகைக்கு.) [மெலிய] நீர்ப்பண்டமாய்

அழிகிறபடி. [வானார் இத்யாதி] இத்தலை மெலிய மெலிய அத்தலை மல்காநின்றது. அவ்வூரிற்சோலைக்கு நீர் இத்தலையில் மெலிவுபோலேகாணும். [வானார்] ஆகாசத்தைக் கண்செறியிட்டாற்போலே யிருக்கை. இவளிருக்கிறவிடம் *அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: *அவனிருக்கிற விடம் *அகாலபலிநோ வ்ருக்ஷா:* [வண்கமுகும்] தர்சநீயமாயிருக்கை. "குலையார்ந்தபழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும் தலையார்ந்த விளங்கமுகு" என்னுமாபோலேயிருக்கை. [வண்கமுகு] கொடி தொடரவேண்டாதே, தான் கொடிக்கு உடம்புகொடுத்துநிற்கிறஔதார்யமென்றுமாம். மெய்யே கொடுக்கிற ஔதார்யமிறேயிது. [மதுமல்லிகைகமழும்] மலட்டுக்கொடியாயிராதே! பூகத்தோடே அணைகையாலே, பரப்பும் பூவாயிருக்கை. மதுவையுடைத்தான மல்லிகைகளின் பரிமளம் இவளிருந்தவிடத்தேவந்து அலையெறிகை. [தேனார் சோலைகள்சூழ்] இதுக்கு முன்பு சொன்னவையெல்லாம் ஆச்ரயமாத்ரமேயாய்த் தேனேமிக்கிருக்கை. வானார் வண்கமுகுகள் தேன்வெள்ளத்திலே யலைந்து, ப்ரளயகாலத்திலே மார்க்கண்டேயன் பட்டதெல்லாம் படாநின்றது. தேன்வெள்ள மிடுகிற சோலைகள் சூழ்ந்த திருவல்லவாழுறையும் கோனாரை. இருவருங்கூட மதுபானம்பண்ணிக் களிக்கவேண்டியிருக்க, நான் மெலியத் தாமே மதுபாநம் பண்ணி வர்த்திக்கிறவரை. பாவியேன், இவ்வளவில் *நசாபி மதுஸேவதே* என்னவேண்டாவோ. இவர் இவ்வாற்றாமையோடேயிருந்து சோலையைக் கவிபாடுகிறது உள்ளு நிற்கிறவனோடொக்க இவையும் போக்யமாயிருக்கையிறே. உபாஸ்யவஸ்து, மநஸ்ஸை ப்ரத்யக்ஷவிஷயமாக்கி யநுபவிக்கமாட்டாதார்க்குக் கண்ணுக்கிலக்காக்கிக் கொண்டு நிற்கிறாப்போலேகாணும் இவையும். ப்ராப்யனானவனுடைய உபாயபாவத்தில் நிலைபோலே. நித்யப்ராப்யனைக்கொண்டு அங்கே யிருக்கிறவன், ஆச்ரிதர் உகந்ததொரு த்ரவ்யத்தைத் திருமேனியாகக்கொண்டு முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறாப்போலே, அங்குள்ளாரும் இங்கேபோந்து ஸ்த்தாவரங்களாயும் ஜங்கமங்களாயும் திர்யக்குக்களாயும் அவனைவிடமாட்டாதே நிற்கிறபடி. நித்யரும் முக்தரும் பத்தரில் ருசியுடையாரும், உகந்தருளின நிலங்களைப்பற்றியிறே கிடப்பது; (*அஹ்ருதஸஹஜதாஸ்யா:* இத்யாதி) ராமாவதாரத்திலுமொருலக்ஷ்மணாதிகள், வாநரத்வங்களை யடைந்தார்கள், விபீஷணாதிகள் பற்றிக்கிடந்தார்கள்; அதுபோலே. அதிலும் நடையாடித் திரிவார்க்குப் போகைக்கும் யோக்யதையுண்டிறே. அதுவுமில்லையிறே ஸ்த்தாவரங்களுக்கு. ஜநநாதப்ரஹ்மராயர் திருமுடிக்குறையிலே ஒருமரம் வெட்டப்புக, அத்தை எம்பார்கேட்டு "அல்லாளப்பெருமாளே, ஈச்வரவிபூதியை அழிக்கப்பார்த்தாயோ" என்ன, இவர் சொல்லும்வார்த்தைகேட்கைக்காக, ஈச்வரவிபூதியல்லாத விடமுண்டோ" என்ன, "அவை போலன்றுகாண் இவை; ஸார்வபௌமனான ராஜாவும் மஹிஷியுமாக முற்றூட்டாகக் குடநீர்வார்த்து ஆக்கும் சோலைபோலே, பெருமாளும் பெரியபிராட்டியாருங்கூடக்கைதொட்டாக்குமவைகாண்" என்று அருளிச்செய்தார். உகந்தருளின நிலங்களிலே மெய்யே ப்ரதிபத்தி விளைந்தார்க்கு அங்குள்ளவையெல்லாம் உத்தேச்யமாய்த்தோற்றுமிறே. கால்வாங்கியல்லது நிற்கவொண்ணாத ஸம்ஸாரம் ததீயத்வாகாரத்தாலே ஒருகால் உத்தேச்யமாகாநின்றதிறே. ப்ரமாணத்தில் பிறக்கும் ப்ரதிபத்திபோலன்றிறே கண்ணுக்கிலக்கானால் இருப்பது; முக்தரோபாதி ப்ரத்யக்ஷஸமாநமிறே ஆழ்வார்க்கு ததீயத்வாகாரம். ப்ராமாணிகனுக்கு இங்ஙனல்லது ப்ரதிபத்தி யில்லையிறே. நல்லான், பட்டர் ஸ்ரீபாதத்தை யாச்ரயித்து நெடுங்காலம்ஸேவித்து, பின்பு அந்திமதசையிலே பட்டர் எழுந்தருளி, "என் நினைத்திருந்தாய்" என்ன, "'ஒரு ஸர்வசக்தியுபகரிக்கும்போது இங்ஙனே கனக்கவாகாதே யுபகரிக்குமது' என்று நினைத்திருந்தேன்" என்ன, "அதுவென், உன் தேசத்தைவிட்டு பந்துக்களைவிட்டு நெடுந்தூரம் போந்து இங்ஙனே நோவுபட்டுத் திருவடிசேரக்கிடந்தாயாகில் இங்கு உபகாரமென்" என்ன, "தேசாந்தரத்திலே யிருந்து அப்ரஸித்தனாய் விழுந்துபோகக்கடவ என்னை இவ்வளவும் அழைப்பித்து, உம்முடைய திருவடிகளை யாச்ரயிக்கப் பண்ணி ருசியை

விஜ்ஞாபித்து, இத்தேசத்திலே உம்முடைய கண்வட்டத்திலே சரீரவியோகமுண்டாம்படி பண்ணினனோ'' என்ன "ஆனாலும், தானாக அபிமாநித்த சரீரம் போகாநிற்க நீ இங்ஙன் நினைத்திருந்ததென்கொண்டு'' என்ன, "ப்ரமாணங்கொண்டு நினைத்திருந்தேன்'' என்றான். கண்ணழிவற்ற வெளிச்சிறப்புடையார்க்கு இங்ஙனே யிறேயிருப்பது. [தேனார்சோலைகள் சூழ் திருவல்லவாழுறையுங்கோனாரை].- இருவராய்க்கொண்டு பரிமாறவேண்டும் தேசத்திலே தனியே நின்றவர்கிடீர். [உறையும்]-அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதொழிகை. [கோனாரையடியேன்]- நாராயண சப்தத்திலும் ப்ரணவத்திலும்போலே. அவனைச்சொல்லும்போது தம்மையிட்டல்லது சொல்லப்போகாது; தம்மைச்சொல்லும்போதும் அவனை யிட்டல்லது சொல்லவொண்ணாது. கோனாரையென்றவிடம் - நாராயணசப்தார்த்தம், அடியேனென்றவிடம் ப்ரணவார்த்தம். ப்ரணவம் ஜீவப்ரதாநம், நாராயணசப்தம் ஈச்வரப்ரதாநம். அடிகூடுவதென்றுகொலோ என்கிறவிடம் சதுர்த்த்யர்த்தம். என்றுகொலோவென்று ப்ரார்த்தனையோடே தலைக்கட்டுகிறதிறே. [கோனாரை யடியேன்] நாயகன் தீரோதாத்தநாயகன், இவள் தைர்யமழிந்தவள். [அடியேனடி கூடுவதென்றுகொலோ] ஸ்வரூபத்துக்கீடாக விபக்தியிலர்த்தத்தோடே தலைக்கட்டுகிறபடி. எல்லாவளவிலும் ஸ்வரூபமழியாதிறே. தாமாகவுமாம், பிராட்டிமார்தசையை ப்ராப்தராகவுமாம், அதுக்கும் அவ்வருகே சில அவஸ்த்தைகளை யுடையராகவுமாம். ஸர்வகாலமும் ஸ்வரூபம் மாறாது, பிண்டத்வ கடத்வ கபாலத்வ சூர்ணத்வங்களாகிற அவஸ்த்தாந்தரங்களை பஜித்தாலும் ம்ருத்தானவாகாரத்துக்கு அழிவில்லையிறே. தாமான தன்மையில் "அடிதொழுதெழு' என்பர்; பரோபதேசத்தில் "திண்கழல்சேர்' என்பர்; தூதுவிடப்புக்கால் "திருவடிக்கீழ்க்குற்றேவல்'' என்பர்; பிறரைச் சொல்லப்புக்கால் "தாட்பட்டதண்டுழாய்த்தாமம் காமுற்றாயே'' என்பர்; கலங்கி மடலெடுக்குமளவானாலும் "தலையில்வணங்கவுமாங்கொலோ'' என்பர்; பித்தேறிச் சொல்லும்போதும் "கண்ணன் கழல்கள் விரும்புமே'' என்னுதல், "ஏறியபித்தினோடு எல்லாவுலகும் கண்ணன்படைப்பு'' என்னுதல் சொல்லுமித்தனை. ... (1)

இரண்டாம் பாட்டு. நிஷேதிக்கிற தோழிமார்கள் தங்களையே, அவன்பாத ரேணுவை நான் சூடுவதென்றென்கிறாள்.

என்றுகொல்தோழிமீர்காள்! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ?*
பொன்திகழ்புன்னைமகிழ் புதுமாதவிமீதணவி*
தென்றல்மணங்கமழும் திருவல்லவாழ்நகருள்
நின்றபிரான்* அடிநீறடியோங்கொண்டுசூடுவதே. (2)

[என்றுகொல்தோழிமீர்காள்]அதிமாத்ரப்ராவண்யமாகாது என்றுநிஷேதிக்கிறவர்களையே, தன்பேற்றுக்கு நாள் அவதியிட்டுத் தருமவர்களாகக் கேட்கிறாளிறே. அவர்கள் லோகாபவாதத்தைப் பற்றி நிஷேதிக்கிறார்கள்; இவள், தன் பேறு தங்கள்பேறாக நினைத்திருக்குமைககண்டயத்தாலே கேட்கிறாள். தோழிமாரிறே; இவளுடைய லாபாலாபமேயிறே அவர்களுக்கும் பேறிழவு. [தோழிமீர்காள்] உங்களுக்கு நான் பெறும்நாள் ஆராய்கையிலேயன்றோ அதிகாரம். [தோழிமீர்காள்] என்ப்ரக்ருதியை யறியும் உங்களுக்கு என்வழியே போகவேண்டாவோ, [எம்மை] - உங்கள் கையாலும் காலாலும் துகையுண்கிறவென்னை. [நீர்நலிந்து] - என்னுடைய உஜ்ஜீவநம் எண்ணுகையன்றோ உங்களுக்கு யாத்ரை. அவ்வூரிலே புக்கல்லது தரிக்கமாட்டாத என்னை. எனக்கு ப்ரியமேசெய்துபோந்த நீங்கள். [என்செய்தீரோ] - உங்கள் ப்ரக்ருதிக்கு இதுசேர்ந்தோ, என்ப்ரக்ருதிக்குச் சேர்ந்தோ. [தோழிமீர்காள் எம்மைநீர் நலிந்தென்செய்தீரோ] - உங்களுக்கு அவச்யம்நலியவேண்டினல் தென்றலையன்றோ நலிய வடுப்பது. என்னை மீளவொட்டாதே காற்கட்டாநிற்க, நான் மீளும்படியென். [பொன்திகழ் இத்யாதி] - நலிகைக்கு

அவையமையாதோ. கடிநப்ரக்ருதிகளாயிருப்பார் செய்வதை ம்ருதுப்ரக்ருதிகளாயிருக்கிற நீங்கள் செய்யவோ. [பொன்திகழ்புன்னைமகிழ்] - "புன்னைபொன்னேய் தாதுதிர்க்கும்" என்கிறபடியே, பொன்னோடொக்க ப்ரகாசிக்கிற புன்னை, அப்படியேயிருக்கிற மகிழ். [புதுமாதவி] அப்போதலர்ந்த குருக்கத்தி. [மீதணவித் தென்றல்மணம்கமழும்] இவற்றின்மேலே தென்றலானது வந்து அணைந்து பரிமளத்தைக்கொண்டு போந்து கமழாநின்றது. [மீதணவி] "ஆழுவிழியில் பூவில் வெக்கைதட்டும்" என்று மேலே ஸ்பர்சித்து, அங்குள்ளதெல்லாம் கொண்டுபோந்து கமழாநின்றது. *பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட:* என்னுமாபோலே - பூவில் கால் படாமே மேலெழுந்த பரிமளத்தைக்கொண்டுபோருகை. அத்தலையிலுள்ளதடங்கக் கொண்டு, தந்தாமதொன்றும் கொடாதேபோருகை அங்கிலத்திலுள்ள பதார்த்தங்களுக்கெல்லாம் ஸ்வபாவங்கிடீர். [பொன்திகழ் புன்னைமகிழ் புதுமாதவிமீதணவித் தென்றல் மணங்கமழும்] கலம்பகனல்லது சூடப்பொறாத ஸுகுமாரரைப்போலே காணும் தென்றலின் ஸ்வபாவம். செருக்கராயிருக்கும் ராஜபுத்ரர்கள் முலைசரிந்தாரை "போகயோக்யைகளன்று" என்று கழிக்குமாபோலே, கழிய அலர்ந்தவற்றைக் கடாக்ஷியாதே போருகிறபடி. பூவில் பரிமளம் தேடுவாரைப்போலே காணும் இது பரிமளத்தில் கலம்பகன் தேடுகிறபடி. [தென்றல்மணங்கமழும்] கண்ணுக்குத்தோற்ற நின்று நலியாமையாலேகாணும் "நோவில்லை" என்றிருக்கிறது. இவர்களுக்கு லாபாலாபம் ஒத்திருக்கச்செய்தேயும், ஹிதபுத்திவர்த்திக்கையாலே இவை நெஞ்சிற்படாதிறே. "நீங்கள் தாங்களங்வயத்தில் கூடாவிட்டால் வ்யதிரேகத்திலும் கூடலாகாதோ" என்று காணும் இவள்நினைத்திருக்கிறது, இவர்களுக்குப் பேறிழவு ஒத்திருந்தாலும், இவர்கள் இவள்தானாகமாட்டார்களே. இவளுக்கேவருமவையிறே இவையெல்லாம். [பொன்திகழ்புன்னைமகிழென்று] - சக்ஷுரிந்த்ரியத்துக்கு ஆகர்ஷகமாயிருக்கிறபடி. [தென்றல்மணங்கமழும்] - ஸ்பர்சேந்த்ரியத்துக்கும் க்ராணேந்த்ரியத்துக்கும். [திருவல்லவாழ்நகருள்நின்றபிரான்]-அவனத்தனைவிடுவதும் செய்திலன். நான் நோவுபடாநிற்க, இவ்வளவிலே ஸ்ரீவைகுண்டத்திலேயிருக்கை யன்றிக்கே, திருவல்லவாழிலே புகுந்து கிட்டவிருக்குமிதுக்கு மேற்பட உபகாரமுண்டோ. *பஹ்வேதத்* என்னுமாபோலேகாணும் இவ்வளவில் ஆச்வாஸம். *ஏகாம் தரணிமாச்ரிதௌ* இறே. *வாஹிவாத* என்று - இவர் கையாலே தொடவேண்டாதபடி இடைச்சுவரான கடல் கிடந்ததேயாகிலும், ஒருபடுக்கையிலே யிருப்பாரைப்போலே அவளிருந்த பூமியிலே யிருக்கப்பெற்றோமே என்றாரிறே பெருமாள். காலைப் பிடித்து "நீ இப்படி செய்யவேணும்" என்று வேண்டிக்கொள்ளுகிறாரிறே இவருடைய செல்லாமை. [நின்றபிரானடிநீறடியோங் கொண்டுசூடுவது - என்றுகொல்] - பூவில் சுண்ணம் பெறுவதென்றோ. [அடிநீறடியோங்கொண்டுசூடுவது - என்றுகொலோ] மயிர்கழுவிப் பூச்சூடவிருப்பாரைப் போலேகாணும். [அடியோம்] - இப்போது பிரிந்தார்களேயாகிலும் அங்வயத்தில் அநுபவம் இவர்களுக்கு மொத்திருக்கிறபடி. அவன்வந்தாலும் இவளுக்கு முன்னே கொண்டாடுவது இவர்களையிறே. [அடியோங்கொண்டுசூடுவது] *யாவந்ந சரணௌ பித்யாதி* - ஸ்ரீபரதாழ்வானை, "பிள்ளாய், உன்னுள்வெதுப்பு ஆறுவதெப்போது" என்ன; பெருமாளும் தமக்குவகுத்த முடிசூடி, நானும் எனக்குவகுத்த முடிசூடி, இருவரும் முறைதப்பாதே கூடிருக்கநின்றவன்றென்றான். *அவன் அவரிற்காட்டில் காற்கூறுவிஞ்சப்பெற்றான். "அவர் நாட்டுக்கு முடிசூடுகைக்கு லக்ஷணம் அவர்திருவடிகளிலே, எனக்கு சேஷத்வத்துக்கு லக்ஷணம் என்தலையிலே" என்றான். அவருக்கு அடியிலே வகுத்துக்கிடக்கிறதிறே, இவனைப்போலே தலையோட்டில்பொறியன்றே. "மாலடிமுடிமேல் கோலமாம் குலசேகரன்" என்றாரிறே - எனக்கு முடி யிவையல்ல; மாலடி-ஸர்வேச்வரன்திருவடி, எனக்குவகுத்த முடி.) "கோலமாமென்சென்னிக்கு உன்கமலமன்னகுரைகழல்" என்றிருக்குமவரிறே. ... ... (2)

மூன்றாம்பாட்டு. தோழிமாரைப்பார்த்து, நான் அவனை நித்யாநுபவம்பண்ணப்பெறும் நாள் என்று? என்கிறாள்.

சூடுமலர்க்குழலீர்! துயராட்டியேனைமெலிய*
பாடுநல்வேதவொலி பரவைத்திரைபோல்முழங்க*
மாடுயர்ந்தோமப்புகைகமழும் தண்திருவல்லவாழ்*
நீடுறைகின்றபிரான்கழல் காண்டுங்கொல்நிச்சலுமே? (3)

[சூடுமலர்க்குழலீர்]-"உங்களைச்சூடுமலர்க்குழலாராகநான் காண்பதென்றோ" என்று பிள்ளான். அதாவது-இவள்பூவுக்கிரங்க, அவர்கள் பூச்சூடியிரார்களிறே என்றாயிற்று அபிப்ராயம். அங்ஙனன்றிக்கே, அவன்தான் வந்து இவள்பக்கல் பாவபந்தமுறைக்கவுறைக்கக் கொண்டாடுவது இவர்களை யாகையாலே, பெரியதிருநாள்ஸேவித்தார் இரட்டைகள் அழுக்கானாலும் மடிகுலையாமை வைக்குமாபோலே, இவர்களும் அவன்கொடுத்த மாலையிற் செவ்வியழிந்ததேயாகிலும் மாறாதேவைத்துக்கொண்டிருப்பர்களிறே; அது இவளுக்கு ஸ்மாரகமாய் நலியாநின்றது. தென்றலுக்குப்பிழைக்கிலும் இவர்களுடையதர்சநத்துக்குப்பிழைக்கப்போகிறதில்லை. காலொருகையும் மயிரொரு கையுமாகப் பிடித்து நலிகிறதுகாணும். அவன்தான் வந்தாலும் இவளுக்குமுன்னே விரும்புவது இவள்ஸம்பந்தமுடையவர்களையிறே. (தத்ர காஷாயிண:) - தந்தாமைப்பேணுமவர்களல்லாமையாலே அழுக்குச்சட்டையும் தாங்களுமாயிறே யிருப்பது. *வ்ருத்தாந்* -தொண்ணூற்றஞ்சுவயஸ்ஸுக்குமேலாய் வீதராகராயிருப்பாரையிறே அந்த:புரங்களுக்குவைப்பது. *வேத்ரபாணீந்*-பெருமாள் விற்பிடித்தாப்போலேஅவர்கள் பிரம்புபிடித்தபடி. விற்பிடித்து ரக்ஷகரா யிருப்பாரும் பிரம்புபிடித்து ரக்ஷகராயிருப்பாருங்காணும். *ஸ்வலங்க்ருதாந்*-பேணுத பரிவட்டங்களையுடையராய் வ்ருத்தருமாயிருந்தார்களாகில் இவர்களுக்குஅலங்காரமாவதென்? என்னில்;-பெருமாள் சக்ரவர்த்திமாளிகையிலேபோய்த் திருமஞ்சனம்பண்ணியமுது செய்துமீண்டுதிவ்யாந்த:புரத்திலே எழுந்தருளும்போது,சக்ரவர்த்தியோபாதி,பழையராகையாலும் தங்கள் பரிவாலுமாக இவரைமடியிலே வைத்தணைத்து உச்சியை மோந்துவிடுவர்கள்; அத்தாலே குங்குமக்குழம்பும் கோயிற்சாந்துமாயிருப்பர்கள். பெருமாளுடையவும் பிராட்டியுடையவும் ஒப்பனைபோலன்று இவர்களொப்பனை. அப்படியேஇவர்களும்(சூடுமலர்க்குழலீர்) என்னும்படியாயிருக்கிறபடி. (துயராட்டியேனை மெலியப்பாடுநல்வேதவொலி) - எனக்குத் துயரைவிளைக்கைக் கித்தனைபோக்கி, ப்ராஹ்மணர் வேண்டிச் செய்கிறார்களன்றே. ப்ராஹ்மணராகில் தார்மிகராயிருக்கவேண்டாவோ, ஸ்த்ரீவதம்பண்ணலாமோ. (துயராட்டியேனை) - நலிவார்க்கு ஆச்ரயம் வேண்டாவோ. நலிகைக்குத் தென்றலே யமையாதோ. திருவடி மத்யராத்ரத்திலே சென்று பிராட்டியைக்கண்டு சிலவார்த்தை விண்ணப்பம் செய்ய, அவள் இவனை "இன்னான்" என்று அறுதியிடமாட்டாதே; "முன்பு ஸந்யாஸிவேஷங்கொண்டு அவர்பக்கல்நின்றும் பிரித்தாய், இப்போது வாநர வேஷங்கொண்டு சிலவார்த்தைகளைச்சொல்லி நலியாநின்றாய். இவையெல்லாம் உனக்காகாதுகாண்" *ஸந்தாபம் தந்நசோபநம்* - வாராய், நீயும் உன்னை யுகந்தாரைப் பிரிந்து நோவுபடுவுதிகிடாய். [மெலியப்பாடும்] - கர்த்தவ்யமானாலும் சிலர்க்கு நலிவானால் தவிரவேண்டாவோ. எல்லாவளவிலும் இவர்க்கு வேதத்திற் கிடக்கிற ப்ராவண்யம் பாரீர், முதல்வார்த்தைதான் *உளன் சுடர்மிகு சுருதியுளிறே. அதாவது *ஸர்வேவேதாயத்பதமாமநந்தி* (ஸர்வேவேதாயத்ரைகம்பவந்தி) *வேதைச்சஸர்வைரஹமேவவேத்ய:* என்றிறே ப்ரமாணங்கள். (மெலியப்பாடும்) – அவர்களெல்லாம் சமைந்தாலல்லது குருகுலாந்திவ்ருத்தராகார்களிறே: இவள் தனக்கு, வேதகோஷத்லைதக்கேட்டவாறே, நாயகன் பேர்வைத்துப்புணர்த்த புணர்ப்பு கேட்டாற்போலேகாணும் அஸஹ்யமாயிருக்கிறபடி. இருவருங்கூடவிருந்து கேட்கக்கடவதைத் தனியிருந்து கேட்கப்புக்கால் பொறுக்கவொண்ணு

திறே. அவன்பேர்வைத்துப் புணர்த்தாலும், *ஸீதாயாச்சரிதம்மஹத்* என்றிறே புணர்ப்புத்தானிருப்பது இனித்தான், *ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ* (ஈச்வரீம் ஸர்வபூதாநாம்) * அஸ்யேசாநாஜகதோவிஷ்ணுபத்நீ,* என்று இவையிறே அவன் விரும்பிக் கேட்பது. (பாடுநல்வேதவொலி) - ஈச்வரனைப்பாடுகிற பழம்புணர்ப்பான வேதமென்னுதல், காநத்தையுடைத்தான ஸாமவேதமென்னுதல். (நல்வேதம்) - "உளன் சுடர்மிகுசுருதியுள்" என்று, ப்ரமாணாந்தரங்களில் உத்கர்ஷமாதல்: (வேதாநாம் ஸாமவேதோஸ்மி) என்கிற உத்கர்ஷமாதல். ஸ்வரத்திலே வைகல்யமுண்டாதல், *வேதாநாம்ஸாமவேதோஸ்மி* என்கிறபடியே அந்தரங்கமான வேதமன்றிக்கே யொழிதல் தான் செய்ததாகில், நான் ஆறியிருக்கலாயிற்றே. (வேதவொலி பரவைத் திரைபோல் முழங்க) ஓதங்கிளர்ந்த கடல்போலே காணும் ஸாமத்வநி யிருக்கிறபடி. (முழங்க) அதில் பர்வமொழிந்தநாள்களும் பகலு மாறியிருக்கலாமிறே. (மாடுயர்ந்தோமப்புகைகமழும்) ஓத்துச்சொல்லிச் சொல்லாதவிடமெல்லாம் வைதிகக்ரியைகளேயாய்க்கிடக்குமித்தனை. மாடு—பர்யந்தம். (உயர்ந்தோமப்புகைகமழும்) ஆகாசமடங்கலும் இடமடைத்து. வைமானிகரை முகம்பார்த்து அநுபவிக்கவொட்டாதபடியெழாநின்றது. (மாடுயர்ந்தோமப்புகைகமழும்) *கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்த்திதாஜநகாதய:* என்கிறபடியே, ஜ்ஞாநத்தில் தலைநின்றவர்களிறே; இனிபலாபிஸந்திபண்ணி யநுஷ்ட்டித்து பலவ்யாப்தமானவாறே மீளுமவர்களன்றே. (கமழும்) ஹோமதூமமும். ஹவிஸ்ஸூக் கொள்ளவந்துநிற்கிற எம்பெருமானுடைய மாளிகைச் சாந்துமாகக் கமழுகிறபடி. (திருவல்லவாழ்நீடுறைகின்றபிரான்) அவதாரம் போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே பிற்பாடர்க்கு உதவும்படி ச்ரமஹரமான திருவல்லவாழிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். (கழல்காண்டுங்கொல்நிச்சலுமே) அவன் இங்கே நித்யவாஸம்பண்ணாநின்றால், நாமும் நித்யவாஸம்பண்ணும் தேசத்தில் போய்ப் பெறக்கடவபேற்றைப் பெறவல்லோமே. அங்கும் போனால் *ஸதா பச்யந்தி யிறே. ... ... (3)

நாலாம்பாட்டு. "இங்ஙன் மநோரதிக்கை ஈடன்று" என்று நிஷேதிக்கிற தோழிமாரைக்குறித்து; என்னுடைய நற்சீவன் அவன்பக்கலது, உங்களுடைய ஜல்பம் வ்யர்த்தமென்கிறாள்.

> நிச்சலுந்தோழிமீர்காள்! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ*
> பச்சிலைநீள்கமுகும் பலவுந்தெங்கும்வாழைகளும்*
> மச்சணிமாடங்கள்மீதணவும் தண்திருவல்லவாழ்*
> நச்சரவினணைமேல் நம்பிரானது நன்னலமே. (4)

[நிச்சலும்தோழிமீர்காள்] - தோழிமார் "உனக்கு இத்தனையாகாதுகாண்" என்று பலகாலும் சொல்லுவர்களே, அது பலியாதிருக்கச்செய்தேயும், இவளை இழக்கவொண்ணாதென்று பார்த்துத் திரியவும் சொல்லத்தொடங்கினார்கள்; நீங்கள் நலிகை தவிரீர் கோளாகில், நானிருந்தவிடத்தேபோய் நலியுங்கோளென்கிறாள். என்னுடைய நற்சீவனானது அவன்பக்கலிலே யானபின்பு, நீங்கள் சொல்லுகிறவற்றால் என்னப்ரயோஜனமுண்டு. எனக்கு "அவனைக்காணவேணும்" என்னும் ஆசை நித்யமாய்ச் செல்லுகிறாப் போலே, உங்களுக்கும் "என்னைமீட்கவேணும்" என்கிற இவ்வபிஸந்திமாறாதே செல்லுகிறபடி. [தோழிமீர்காள்] - நீங்கள் நீங்களாய்ச் சொல்லுகிறீர்கோளோ, தாய்மாராய்ச்சொல்லுகிறீர்கோளோ. இத்தனை ஸ்வரூபஜ்ஞாநமில்லாதார் உண்டாயிற்றே. ஒன்றுசொல்லுவார் தம்மையறிந்தன்றோ சொல்லுவது. [எம்மைநீர்] - உந்தாமையழியமாறியும் என்னுடைய ஜீவநமே எண்ணக்கடவநீங்கள், உங்கள்ஹிதவசநம்நெஞ்சிற்பட்டால் ஜீவியாத என்னை. [நலிந்தென்செய்தீரோ]-நான் ஜீவிப்பனோயோ! உங்கள் ஸ்வரூபத்தோடு சேர்ந்தோ. [நிச்சலும்தோழிமீர் இத்யாதி] "*மாசுசோகிதொடங்கி இவ்வளவும்வர ஹிதஞ்

சொல்லுகிற நீங்கள் என்னப்ரயோஜநம் பெற்றிகோள்" என்றுபிள்ளான். [தோழிமீர்காளெம்மைநீர் நலிந்தென்செய்தீரோ] - தாம்தாம் நலிவுபட்டும் பிறரை நோக்குவார், தாங்களே பிறரை நலியவும் பார்ப்பரோ. [என்செய்தீரோ] - ஒன்று செய்வது ஒரு ப்ரயோஜநத்தளவுமன்றோ. லாபாலாபமறிந்தாலும் கைவாங்க வேண்டாவோ. [எம்மைநீர் நலிந்தென்செய்தீரோ] - ப்ராவண்யத்துக்கு முற்பாடரானால் ப்ராப்திக்கு முற்பாடராகவேண்டாவோ. [பச்சிலை இத்யாதி] - அந்நிலத்திலே யகப்பட்டாரையும் சிலர் மீட்கநினைப்பாரோ. ஹிதஞ்சொல்லுவார் பசுமையுள்ளவிடத்தேயன்றோ சொல்லுவது, இங்கு விவர்ணமாயிறே கிடக்கிறது. பிரியாதிருப்பார்க்குப் பசுமைமாறாதிறே. [பலவும்] - பலா. "'[நீள் - கமுகும்] என்றாப்போலே, பலவும் - தெங்கும், வாழைகளும்" என்று (பச்சிலைநீள் என்கிறத்தை - அவற்றிலேயும்) உய்ந்தபிள்ளை கூட்டும்படிகாணும்' என்று ஜீயர் அருளிச்செய்வர். [மச்சணிமாடங்கள்] - பலநிலங்களையுடைத்தாகையாலே அலங்க்ருதமான மாடங்கள். [மீதணவும்] - செல்வப்பிள்ளைக்கு அணுக்கனிட்டாப்போலேகாணும் கவிந்துகொண்டுநிற்கிறபடி. [தண்திருவல்லவாழ்] - ச்ரமஹரமாம்படி சோலைசெய்தவூர். பசுமைமாறாத இலைகளையுடைத்தாய் நீண்ட கமுகும். அப்படிப்பட்டபலவும், தெங்கும், வாழைகளும், மச்சுக்களின் நிரையையுடைத்தான மாடங்களின்மேலே, அவ்வோநிலங்களுக்கு நிழல்செய்யும்படி யணவின குளிர்ந்த திருவல்லவாழிலே. (நச்சரவினணைமேல்) - மேலும்சுற்றும் சோலையுண்டானால் கீழும் சோலையுண்டாகவேணுமோ! இங்கும் சைத்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யங்களால் குறையில்லையே. (நச்சரவு) - படுக்கையும் தானேயாய்க்காத்தூட்டவும் வற்றாயிருக்கை. பச்சிலையித்யாதிக்கு - போகிகளாயிருப்பார் விடாதே வர்த்திக்கலாம் தேசம். (நச்சரவு) இளையபெருமாள் கையும்வில்லுமாய் வெளிக்காவல்நிற்க, பெருமாளும் பிராட்டியுமாய்க் காட்டிலே ரமித்தாப்போலே. *ரமமாணா வநேத்ரய:* இறே. அப்படியே இங்கும் காவலுண்டாயிருக்கிறபடி. அநந்தமுகமான காவலிறே. பெருமாளும் இளையபெருமாளும் பிராட்டியும் ச்ருங்கிபேரபுரத்திலே விட்டருளினவன்று ஸ்ரீகுஹப்பெருமாள் இளையபெருமாளைப்பார்த்து, "பெருமாளும் பிராட்டியும் கண்வளராநின்றார்கள். உமக்கீடாம்படி திருவடிகளிலே தலையாம்படி படுக்கைபடுத்தேன்; நாங்கள் காடராய் அங்கேயிங்கே திரிகையாலே எங்களுக்கு உறக்கம் வாராது, நீர் ராஜபுத்ரராகையாலே ஸுகுமாரர். பரதாதிகள் வருவர்கள் என்றஞ்சவேண்டா, நானும் என்பரிகரமுமுண்டு. நீர் கண்வளர்ந்தருளும்" என்ன,—*கதம் தாசரதௌபூமௌ சயாநேஸஹஸீதயா* வாரீர், மஹாராஜனை சக்ரவர்த்தி அறுபதினாயிரமாண்டு அநபத்யனாய் வருந்திப்பெற்ற ஸுகுமாரரான பெருமாள் தறைக்கிடைகிடக்க, எனக்குக்கண்ணுறங்குமோ; அவர்தாம் வஸிஷ்டாதிகள்கீழே தறையிலேயிருந்து மறிவர். அதுவுமின்றிக்கேயிருக்கிற பிராட்டியோடேகூடக்கிடக்கிறபடிபாரீர்; ஆனபின்பு, எனக்கு உறக்கமுண்டாய் அதுபோகைக்கு அபிஸந்திபண்ணியிருக்கிறேனல்லேன்காணும். உறக்கம் தேட்டமாய்க்கிடையாமையாலேயிருக்கிறேன். (நம்பிரானது நன்னலமே) - *அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்* என்னும்படியே யிருந்ததாகில் நான் ஆறியிரேனோ; இரண்டும் அங்கே யொருதலைத்தபின்பு நான் எங்ஙனே ஆறியிருக்கும்படி. (நம்பிரானது நன்னலமே) - திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தவடிவழகைக்காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன்பாடது என்னுடைய நற்சீவன். திருவநந்தாழ்வானைப்போலே என்னை அநந்யார்ஹமாக்கினவனென்றுமாம். அவன்பக்கலிலே நற்சீவனுயிருக்க, கேவலசரீரத்துக்கு ஹிதஞ்சொல்லுகிறவித்தால் ப்ரயோஜநமென்; அவன்பக்கலிலே சென்று ஹிதஞ்சொல்லுங்கோள் வேணுமாகில். (4)

அஞ்சாம்பாட்டு. நான் செய்தபடிசெய்ய, இக்கண்களின்விடாய்தீரக்காணப் பெறுவதென்றென்கிருள். ... ... (4)

நன்னலத்தோழிமீர்காள் ! நல்லவந்தணர்வேள்விப்புகை*
மைந்நலங்கொண்டுயர்விண் மறைக்கும் தண்திருவல்லவாழ்*
கன்னலங்கட்டிதன்னைக் கனியையின்னமுதந்தன்னை*
என்னலங்கொள்சுடரை என்றுகொல்கண்கள்காண்பதுவே. (5)

(நன்னலத்தோழிமீர்காள்) - நன்னலமாவது - இவள்பக்கல் இவர்களுக்குண்டான ஸ்நேஹம். தங்கள் கார்யம் தலைக்கட்டிக்கொள்ளுகையன்றிக்கேயிருக்கை. ஆனபின்பு, தாய்மார் பழிசொல்லுவர்கள் என்றஞ்சி என்வழியே உங்களுக்கு ஒழுகாதிருக்கப்போமோ ? *வாநராணாம் நராணஞ்ச கதமாஸீத் ஸமாகம:* குருகுலவாஸம் பண்ணாத திர்யக்குக்களுக்கும், வஸிஷ்டசிஷ்யர்களான ராஜபுத்திரர்களுக்கும் இதொருசேர்த்தியுண்டானபடி யெங்ஙனே ; சாஸ்த்ரவச்யரிறே குருகுல வாஸத்துக்கு யோக்யர். மேல் இதுக்கு அடிசொல்லுகிருன். (ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத) தங்களையும் அறியாதே எங்களையும் அறியாதே இங்ஙனே விழுந்துகொடுநிற்கக்கண்டோமித்தனை. அதாவது- இளையபெருமாள் கையும் வில்லுமாய் உணர்ந்துகொண்டுநின்று நோக்கக்கடவ அந்த:புரகார்யத்துக்கு அடியேன் வரும்படியன்றே அவர்கள் ஸங்கதரானபடி. இளையபெருமாள் அடிமையில் தப்பினின்றவளவுக்கும் திருவடியைக்கொண்டு இழையிடவேண்டும்படியாகவிறே அவர் நிலவரானபடி, இளையபெருமாள்பேரநிற்கையிறே பிரியவேண்டிற்று. (ஏவம்ஸமஜாயத) தங்களளவிலும் பெருக்கப்பார்த்தார்கள். ஐச்வர்யம் அவனுக்குக் காடுபடும்படியிறேபார்த்தது. இப்படியிறே ஸக்யமிருப்பது ; இவர்களும் தோழிமாரிறே. (நல்லவந்தணர்) - அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர். அவர்கள் கண்டிகோளே அத்தனைக்கு ஈடாகப் பரிமாறுகிறபடி ; ஆனபின்பு, நீங்களும் அப்படியாயிருக்க வேண்டாவோ. அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களிலுண்டானஹோமதூமமானது, வெளிறுகழித்துக்கொண்டு அந்தரிக்ஷத்தளவன்றியே உயர்விண்மறைக்கும். கறுத்தெழுகிற தூமங்கள், இங்கே கண்ணழிவறப் புண்யங்களை யநுஷ்டித்து ஸம்ஸாரவெக்காயம் தட்டாதபடிபோய் அப்ஸரஸ்ஸுக்களோடே அநுபவிக்கிற வைமாநிகரை முகத்தோடு முகம்பார்க்க வொட்டாதே மறைக்கிறபடி. மிதுநமாய்க் கலப்பாரை முகத்தோடு முகம் பார்க்கவொட்டாமை அந்நிலத்திலுள்ளார்க்கு ஸ்வபாவம்போலேகாணும். அவர்கள் புகைத்தலிருக்கிறபடி. (தண்திருவல்லவாழ் கன்னலங்கட்டிதன்னை) "இன்னமலையின்கட்டி" என்னுமாபோலே, கரும்பினுடைய கோதற்றகட்டியை. (கனியை) - அவ்வளவும் பார்த்திருக்கவேண்டாதபடி பக்வமான பலமாயிருக்கை. (இன்னமுதந்தன்னை) - உடம்பைப்பூண்கட்டிக்கொடுக்க வற்றாயிருக்கை. அதாவது- போக்த்ருத்வசக்தியைக் கொடுக்கை. (இன்னமுதம்) - தேவர்களுடைய உப்புச்சாறுபோலன்றிக்கே, ஆத்மோஜ்ஜீவநம்பண்ணிக்கொடுக்க வற்றாயிருக்கை. (என்னலங்கொள்சுடரை) - என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி, அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவனை. என்னையெழுதிக்கொண்ட அழகையுடையவனை யென்றுமாம். இத்தலையை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணினமை தன்பேறு என்னுமிடம் வடிவிலே தோற்றும்படியாயிருக்கை. (என்றுகொல் கண்கள்காண்பதுவே) - "நான்பட்டது பட, ப்ரஜை ஜீவிக்கப்பெறுவதுகாண்" என்பாரைப்போலே, என்கண்களின் விடாய்தீர்வதென்றோ ? என்கிருர். *முடியானேயிற்கரணங்களுடையவரிறே. இந்த்ரியங்களும் தாமும் தனித்தனியே சேதநஸமாதியாலே விடாய்க்குமவரிறே. *காத்ரைச் சோகாபிகர்சிதை:-ஸம்ஸ்ப்ருசேயம்* ப்ரஜைகள் ஜீவித்தால் பசிகெடுவாரபிமாநிகளிறே. ... ... (5)

ஆறும்பாட்டு. திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமநனுடைய போக்ய மான திருவடிகளை நான் காண்பதென்றோவென்கிறாள். (5)

காண்பதெஞ்ஞான்றுகொலோ வினையேன்கனிவாய்மடவீர் !
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும்*
சேண்சினையோங்குமரச் செழுங்கானல்திருவல்லவாழ்*
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே. (6)

[காண்பதெஞ்ஞான்று கொலோவினையேன்] - ப்ரஜைகள் செய்தபடிசெய்ய நான் முன்னம் என்பசிதீர்வதென்றோ. [வினையேன்] - லோகவிஸஜாதீயமான பாபத்தைப் பண்ணினேன். காணாமைக்கு பாபம் பண்ணிலுருங்கூடக் காணும் படியான விஷயத்தை, காண்கைக்கு யோக்யதையுண்டாய் வைத்தே காணும்படி யான பாபத்தைப் பண்ணினேன். *மாண்குறட்கோலப்பிரானிறே. [காண்பதெஞ் ஞான்று கொலோவினையேன்] நீங்கள் காட்டுகைக்குக்கு த்வரிக்க ஆறியிருக்கக் கடவ நான், இன்று "காண்பதெஞ்ஞான்று கொலோ" என்னும்படியான பாபத் தைப் பண்ணினேன். [கனிவாய்மடவீர்] உங்களை நான் பண்டுபோலே காண்ப தென்றோ. *ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் *என்னும்படியிறே அவர்க ளிருப்பது. இவள் *மாசுடையுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம் வெளுத்திருக்க அவர்கள் தங்களைப்பேணியிரார்களே. அவர்கள் பண்டுபோலே யிருக்கக்காண் கையும் இவளுக்கு ப்ரார்த்யமானபடி. [பாண்குரல்வண்டினொடு] - இவற்றின் த்வனியில் வெள்ளோசையாய்க் கழியுண்பதில்லை, பரப்படங்கலும் பாட்டாயிருக்கும். அதாவது - இயல்கற்று இசையோடே கூட்டிற்றன்றே அவற்றுக்கு, பேச்சே தொடங்கி யிசையிறே. "தேன் போலே இனியபாட்டு" என்னக்கடவதாயிருக்கு மதுபோய், வடிவே தேனாய் அதுக்குமேலே பாட்டுமானால் மிகவும் இனிதாயிருக்கு மிறே. பாண் குரல் - காநரூபமான மிடற்றோசை. [பசுந்தென்றலுமாகியெங்கும்] - கலப்பற்ற தென்றலுமாயிருக்கை. பலவிடங்களிலே காவிட்டுவாராதே தாய்தலையா யிருக்கை. [பசுந்தென்றல்] - இளந்தென்றலென்னுமாம். [சேண்சினை இத்யாதி] - கவடுகளானவை சுற்றிலே பணைத்திருப்பனவாய் மேலோக்கத்தையுடைத்தான மரங்களையுடைத்தாகையாலே, அழகியசோலையையுடைய. [செழுங்கானல்] - தர்சநீய மான கானல். கானலென்று - கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். சேண் - உயர்த்தி, சினை - கவடு. பணைக்கு ஓக்கம் - சுற்றிலே வளருகை மரத்துக்கு ஓக்கம் - மேலே. [மாண்குறள் கோலப்பிரான்] - தன்னுடைமைபெறுகைக்குத் தான் அர்த்தியாய், பெருவிலையனான வடிவைச் சிறுகவிட்டு மிக்கவழகையுடைய வனாய், ஸௌலப்யத்தையும் அழகையும் திருவல்லவாழில் ஆச்ரிதரையநுபவிப் பித்துக்கொண்டு நிற்கிறவனுடைய நிரதிசய போக்யமான திருவடிகளை - காண்ப தெஞ்ஞான்றுகொலோ. [மலர்த்தாமரைப் பாதங்கள்] - அப்போதலர்ந்த தாமரைப் போலே நிரவதிகபோக்யமான திருவடிகளை அடியிலே இவர்க்குத் தானேயிறே ருசியையுண்டாக்கினான். "அடிகள் அடிகள்" என்று வாய்புலற்றும்படியிறே திருவடிகளில் போக்யதையிருப்பது. ... ... (6)

ஏழாம்பாட்டு. அவன்திருவடிகளிலே நித்தியமாகப் பூவையணிந்து தொழ வல்லோமே யென்கிறாள்.

பாதங்கள்மேலணிபூந்தொழக்கூடுங்கொல் ? பாவைநல்லீர் ?
ஓதநெடுந்தடத்துள் உயர்தாமரைசெங்கழுநீர்*
மாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்துந்திருவல்லவாழ்*
நாதனிஞ்ஞாலமுண்ட நம்பிரான்தன்னைநாடொறுமே. (7)

[பாதங்கள் மேலணிபூந்தொழக்கூடுங்கொல்] - திருவடிகளின்மேலே புஷ்பங்களையணிந்து நமக்குத்தொழக்கூடவற்றோ? [பாவைநல்லீர்] இவளை நிஷேதிக்கைக்கு க்ஷமைகளன்றிக்கே ஸ்திமிதைகளாயிருந்தபடி. எழுதின பாவைபோலேயிருந்தார்கள். நிஷேதியாமையாலே யுகந்து ஸம்போகிக்கிறாளாகவுமாம். [ஓதம் இத்யாதி] - கடல் போலேபொருந்தியுள்ள தடாகங்களிலுள்ள, ஒக்கத்தையுடைத்தான தாமரை செங்கழுநீரானவை. அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய ஒளியையுடைத்தான முகத்தையும் கண்ணையும் தரியாநின்றன. (ப்ரகாசிப்பியாநின்றதென்றபடி.) அன்றிக்கே. திருவோலக்கத்திற்படியே அவற்றைத்தள்ளும்படியாயிருக்கை. (திருவோலக்கத்தில் அலங்காரார்த்தமான தாமரைகளை நிராகரிக்குமென்றபடி.) [மாதர்கள் வாண்முகமும் கண்ணுமேந்தும்] ஊருக்கும் வயலுக்கும் வாசிதெரிகை அரிதாயிருக்கை. [திருவல்லவாழ்நாதன்] - ஸ்ரீவைகுண்டநாதனிலேற்றம். ஸ்ரீவைகுண்டத்துக்குக் கடவனாயிருக்கிறது - அந்த:புரத்துக்குக்கடவனென்கிறமாத்ரமிறே, *ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்ப இருக்கிறவிடமிறே. இது அங்ஙனன்றிக்கே, ஒருவர்கூறையை யெழுவருடுக்கிறதேசத்தில் தரிசறவிருக்கிறவிடமிறே. [இஞ்ஞாலமுண்ட] - மேன்மைபாராதே தளர்ந்தார்தாவளமாயிருக்கும். ஆபத்தே செப்பேடாக வயிற்றிலேவைத்து நோக்கும். அது கதையில் கேட்கவேண்டியிருந்ததோ? [நம்பிரான்] - ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னை எடுத்து இவ்வளவாக்கி யுபகரித்தவன். நாடொறும் பாதங்கள் மேலணி பூந்தொழக்கூடுங்கொல். (7)

எட்டாம்பாட்டு. ஸர்வஸுலபனானவன் திருவடிகளிலே ஸர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக்கூடவற்றே யென்கிறாள்.

நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்? நன்னுதலீர்!
ஆடுறுதீங்கரும்பும் விளைசெந்நெலுமாகியெங்கும்*
மாடுறுபூந்தடஞ்சேர் வயல்சூழ்தண்திருவல்லவாழ்*
நீடுறைகின்றபிரான் நிலந்தாவியநீள்கழலே. (8)

(நாடொறும் இத்யாதி) - நாடொறுமென்று தர்சபூர்ணமாஸாதிகளை வ்யாவர்த்திக்கிறது. வீடின்றியேயென்று நித்யாக்நிஹோத்ரத்தை வ்யாவர்த்திக்கிறது. *ஒழிவில்காலமெல்லாம்* என்கிறபடியேயிறே இவர் ப்ரார்த்திப்பது. ஆசார்யோபதேசத்தை விச்வஸித்து அபேக்ஷிக்கிற நம்மைப்போலன்றியே, தாஸ்யம் ரஸித்து ராகத்தாலே யபேக்ஷிக்கிறாரிறே. (நன்னுதலீர்) - அவன்வந்தவுபகாரத்துக்கு அவன்திருவடிகளிலே விழுந்து ப்ரணாம பாம்ஸுல பரார்த்ய லலாடைகளாக உங்களைக்காணவல்லேனே. *தலையில்வணங்கவுமாங்கொலோ* என்று தொழக்கடவளே, அப்போது இவர்களும் தொழுவர்களே; இவளுக்கு கைங்கர்யத்தில் உகப்புப்போலே, இவள்பேறே தங்களுக்கு உகப்பா யிருக்குமவர்களே. [ஆடுறு தீங்கரும்பும்] - கரும்புகள் எப்போதும் ஆடுகையிலே யுற்றிருக்கை. தீ - தித்திப்பு. செந்நெலும் எப்போதும் அறுக்கைக்குப்பக்வமாய் விளைந்து கிடக்கை. அங்குள்ளவையடைய பக்வபலமாய்க்காணு மிருப்பது. (மாடுறுபூவித்யாதி) - அருகேயுற்றிருப்பதாய் பூக்களையுடைத்தான தடாகங்களைச் சேர்ந்த வயல்களாலே சூழப்பட்டிருப்பதாய் ச்ரமஹரமான திருவல்லவாழிலே. ஊரைத் தடாகங்கள்சூழ்ந்து. தடாகங்களை வயல்கள்சூழ்ந்திருக்க. இப்படிகளாலே குளிர்ந்துகாணும் ஊர்தானிருப்பது. (நீடு இத்யாதி) குணாகுணநிரூபணம்பண்ணாதே எல்லார் தலைமேலும் பொருந்தும்படி ஸுலபமான திருவடிகளைக்கொண்டு, அவதாரம் போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரமே இங்குத்தைக்குத் தன்னேற்றம். நிலந்தாவியநீள்கழல் நாடோறும் வீடின்றியே தொழக்கூடுங்கொல். (8)

ஒன்பதாம்பாட்டு. நம்முடைய கழலுகிற வளைகள் பூரிக்க அவனைக்கண்டு தொழும்படி அவனருள் கூடவற்றேயென்கிறாள்.

கழல்வளைபூரிப்பயாங்கண்டு கைதொழக்கூடுங்கொலோ*
குழலென்னயாழுமென்ன குளிர்சோலையுள்தேனருந்தி*
மழலைவரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ்*
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே. (9)

(கமல்வளைபூரிப்ப) "வெள்வளை" என்னுமாபோலே, கழல்வளையென்று வளைக்கு விசேஷணமாய்விட்டதுகாணும். இவளைக்கைவிடுகையாலேயிறே இது விசேஷணமாகவேண்டிற்று. பூரிப்ப - பூர்ணமாக. அவன்வரில் கைமேலே காணலாமேயிவற்றை. (யாங்கண்டு கைதொழக்கூடுங்கொலோ) இதுக்குமேலே க்ரியை. (யாம்) விச்லேஷத்தில் வளைகழலுவது தனக்கேயானாலும் காட்சி எல்லார்க்கும் ஒத்திருக்குமே. (குழலென்னயாழுமென்ன) குழலென்னவுமாய் யாழென்னவுமாயிருக்கை. நாட்டிலினியவற்றையெல்லாம் சேரக்கேட்டாப்போலேயிருக்கும். *விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்சந:* என்னுமாபோலே. (குளிர்சோலையுள்தேனருந்தி) ச்ரமஹரமான சோலையிலே குளிருக்குப் பரிஹாரமாகத் தேனைப்பருகி. அருந்தல் - உண்டல். (மழலைவரிவண்டுகள்) முக்தமாய் தர்சநீயமான வண்டுகள், ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடாநின்றுள்ள திருவல்லவாழ். இதிலேநிற்பானாய் (இசைபாடும்) செருக்கருமாய் ஸுகுமாரருமாயிருப்பார். மரம் என்று சந்தநத்தைக்கழித்துப் புழுகுநெய்யையேநிட்டுக் கொண்டு திரியுமாபோலே, இவையும் இயலைவிட்டு இசையையேபாடும். (சுழல் இத்யாதி) ப்ரதிகூலநிரஸநத்வரையாலே மிகவும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியையுடைய ஸர்வேச்வரன். (சுழலின் மலிசக்கரம்) சுழல்வதுபோலத் துளங்காநின்றுள்ள சக்கரமென்னவுமாம். (தொல்லருள்) ஸ்வாபாவிகமான அருளாலே - கழல்வளைபூரிப்ப யாங்கண்டு கைதொழக்கூடவற்றே. ... ... (9)

பத்தாம்பாட்டு. அவனுடைய ஸ்வாபாவிக க்ருபையாலே அவனைக்காணப் பெற்று, ப்ரீதியாலே இனிதாய்க்கொண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றேயென்கிறாள்.

தொல்லருள்நல்வினையால்சொலகூடுங்கொல்? தோழிமீர்காள்*
தொல்லருள்மண்ணும்விண்ணும் தொழநின்றதிருநகரம்*
நல்லருளாயிரவர் நலனேந்துந்திருவல்லவாழ்*
நல்லருள்நம்பெருமான் நாராயணன்நாமங்களே. (10)

(தொல்லருள் இத்யாதி) அவனுடைய ஸ்வாபாவிகமான அருளாலே. (நல்வினையால்) அதாவது - அவனைக்காணப்பெற்று. அப்ப்ரீதியாலே, சொல்லக்கூடவற்றே. ஸ்வாபாவிக க்ருபையாலே அவனைக்காணப்பெற்று, ப்ரீதியாலே யுகந்துகொண்டு திருநாமத்தைச் சொல்லக்கூடவற்றேயென்னுதல்; நல்வினை - உகப்பு. அன்றிக்கே. ஸ்வாபாவிகக்ருபையாலுண்டான ஸுக்ருதத்தாலே அவனைக்கண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றேயென்னுதல். "'நா, நீரற்றிருக்கை பாபபலமிறே. நா நீருண்டாய்த் திருநாமம் சொல்லவல்லோமே யென்கிறாள்' என்று அம்மங்கியம்மாள் வாக்யார்த்தமாகச்சொல்லும்" என்று அருளிச்செய்வர். (தொல்லருள் இத்யாதி) தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரத்திலுள்ளாரும் நித்யவிபூதியிலுள்ளாரும் தொழநின்ற மஹாநகரம். (நல்லருளாயிரவர்) எம்பெருமானிலும் ப்ரஜாரக்ஷணத்தில் அநுக்ரஹசீலராயிருக்கிறவர்கள். (நலன் இத்யாதி) அவனுடைய கல்யாணகுணங்களைக்கொண்டாடி வர்த்திக்குமூரென்னுதல்; ப்ரேமத்

திலே மங்களாசாஸநம்பண்ணி வர்த்திக்குமூரென்னுதல். (நல்லருள் நம்பெருமான்) நல்ல அருளையுடையனாய் நமக்கு ஸ்வாமியாயிருக்குமவன். நல்லருளாகிறது - வாத்ஸல்யம். வாத்ஸல்யஸ்வாமித்வங்கள் நாராயணசப்தார்த்தம். அர்த்தத்தை யருளிச்செய்து பின்னை சப்தத்தையருளிச்செய்கிறார். (நாராணன் நாமங்களே) நாராயணசப்தம் - தர்மிநிர்தேசம், இஸ்ஸ்வபாவங்களாலே நிரூபிதவஸ்துவுக்குண்டான குணசேஷ்டிதங்களுக்கு வாசகம் அல்லாத திருநாமங்கள்.

நிகமத்தில் இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார் ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்தே பகவத்குணாநுபவத்தாலே எல்லாரிலும் சிறந்தவர்களென்கிறார்.

நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல்*
சேமங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த*
நாமங்களாயிரத்துள் இவைபத்துந்திருவல்லவாழ்*
சேமங்கொள்தென்னகர்மேல் செப்புவார்சிறந்தார்பிறந்தே. (11)

(நாமங்கள் இத்யாதி) *தேவோ நாமஸஹஸ்ரவாந்* என்கிறபடியே, குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களை யுடையனாகையாலே ஸர்வேச்வரனாக ப்ரஸித்தனானவன். நம் - ப்ரஸித்தி. பெருமான் - ஸர்வேச்வரன். (அடிமேல் சேமங்கொள்) புறம்புள்ள காற்கட்டுக்களைவிட்டு, அவன்திருவடிகளே தமக்கு ரக்ஷகமாகப்பற்றின ஆழ்வார். (தெரிந்துரைத்தநாமங்களாயிரத்துளிவைபத்தும்) அவனுக்குத் திருநாமங்கள் போலே குணசேஷ்டிதாதிகளுக்கு ப்ரதிபாதகமான ஆயிரத்திலும் ஆராய்ந்துரைத்த. ஆயிரந்திருநாமங்களைச் சொன்னால் அவன்குணங்கள் தோற்றுமாப்போலேயிறே இவற்றுக்கும் அவன்குணங்கள் தோற்றும்படி. இவை பத்தையும், திருவல்லவாழாகிற சேமமுடைத்தான தென்னகரிலே கூட்டிச்சொல்லுவார். தென்னகர் - அழகிய நகரி. (சிறந்தார்பிறந்தே) ஒருவனுக்குப் பிறக்கை போக்கித் தாழ்வின்றிக்கேயிருக்க, அவனுக்கு *பலபிறப்பாயொளிவருமாப்போலே இவர்களும் இங்கே பகவதநுபவம் பண்ணுகையாலே சீரியர்கள். *சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியர் என்னக்கடவதிறே. இப்பத்தை யப்யஸிக்க வல்லார், என்னைப்போலே அவனிருந்த தேசத்திலே போகப்புக்கு, பலஹாநியாலே நடுவழியிலே விழுந்து நோவுபடாதே உகந்தருளின தேசத்திலே புக்கு அநுபவிக்கப் பெறுவர்கள். இவர்கள் ஜந்மங்கள் கர்மநிபந்தநமா யிருக்கச் செய்தே அவனுக்குறுப்பாகையாலே முக்தசரீரத்திலுங்காட்டில் ச்லாக்யம். ஆச்ரிதார்த்தமான பகவதவதாரம்போலே ச்லாக்யமென்கை ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி:

மாநலத்தால்மாறன் திருவல்லவாழ்புகப்போய்*
தானிளைத்துவீழ்ந்தவ்வூர் தன்னருகில்—*மேல்நலங்கித்
துன்பமுற்றுச் சொன்னசொலவுகற்பார் தங்களுக்குப்*
பின்பிறக்கவேண்டாபிற.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

பத்தாந்திருவாய்மொழி—பிறந்தவாறும் : ப்ரவேசம்

திருவல்லவாழிலே போய்ப்புக்கு அங்குநிற்கிறவனோடே பரிமாறவேணும் என்று மநோரதித்துக்கொண்டுபோக, கால்நடைதாராமல் நடுவழியிலே விழுந்து கிடந்து கூப்பிட்டார். இனி இவ்வளவில் குணாநுபவம்பண்ணியாகிலும் தரிப்போம் என்று பார்க்க, அதுதானும் பேற்றோபாதியரிதாம்படி சைதில்யத்தை

விளைப்பிக்க ; ஸர்வாவஸ்த்தைகளிலும் உன்னைப்பிரிந்துநின்றும் தரித்துநின்று குணநுபவம்பண்ணவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று அவன் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

ருஷிகளுக்குண்டான ஸம்ஸாரபயத்தோபாதியும் போருமாயிற்று ஆழ்வார்களுக்கு பகவத்விரஹத்தால்வரும் க்லேசம். அவர்கள் தந்தாம்பேற்றுக்குத் தாந்தாம் சிலயத்நம் பண்ணுநிற்பர்கள். இவர்கள் அத்தலையாலே பேறுமளவும் அசோகவநிகையில் பிராட்டியைப்போலே துடியாநிற்பர்கள். அவர்களுக்குத் தங்கள் தலையிலேயும் சில கிடக்கையாலே விளம்பம் பொறுக்கலாம்; இவர்களுக்கு அங்ஙன் சொல்லலாவதொன்றில்லையாகையாலே கிடந்து அலமாப்பர்கள். அவனடியாலே நம்பேறு என்றிருக்கிறவர்களுக்கு ஒருகண்ணழிவில்லையே சொல்லலாவது. *நசீதா த்வயாஹீநா நசாஹமபிராகவ* என்கிறபடியே, லாபாலாபங்களில் பிராட்டியையும் தம்மையும் ஏகப்ரக்ருதியாகச் சொன்னாரிறே. *பாவோ நாந்யத்ர கச்சதி* என்று, திருவடி ராமாவதாரமொன்றிலும் ஸக்தனாயிருக்குமாபோலே, இவர் எல்லாவவதாரங்களிலும் எல்லாசேஷ்டிதங்களிலும் அகப்பட்டிருப்பாரொருவர். அர்ச்சாவதாரத்திலே தம்மபேக்ஷிதம்பெற ஆசைப்பட்டவர், அதுகிடையாமையாலே அவதாரங்களிலே போகிறார்; விபவமுள்ளவிடத்தேசென்றால் சிறிது அபேக்ஷிதம் கிடைக்கும் என்றிருப்பரே. விபவங்களிலே இழந்தார்க்கும் இழவுதீர்க்கிறவிடமாயிருக்க, இத்தைவிட்டு பெறலாம் என்று விபவமுள்ளவிடந் தேடிப்போகையாவதென்? என்னில்,— அர்ச்சாவதாரத்தில், அதீந்த்ரியனானதன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்குகையும் ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுக்கையுமொழிய, குளிரநோக்குதல் வினவுதல் அணைத்தல் செய்யக்கடவதன்றாக ஸங்கல்பித்திருக்கையாலே, ஸத்யஸங்கல்பனுடைய ஸங்கல்பம்குலையும்படி அதிநிர்ப்பந்தம் பண்ணக்கடவோமல்லோம் என்று, *ஸம்ஸ்ப்ருச்யாக்ருஷ்யச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே* என்னும் க்ருஷ்ணாவதாரத்திலே போந்தார் ப்ரத்யாஸத்தியாலே. “இவ்வாழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணாவதாரமென்றவாறேபோர மண்டியிருப்பர்கள்: இதுக்கு ஹேதுவென்?” என்று பட்டரைக்கேட்க, “ஒருவனுக்கு து:கம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப்போகாதிறே. அப்படியே அல்லாத அவதாரங்களைப்போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே ஒருசெவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம், பாவியேன்! பல்விலேபட்டுத் தெறிப்பதே - என்னுமிழவாலே வயிறெரித்தலேயாயிருக்கும்” என்று அருளிச்செய்தார். இனித்தான் ராமாவதாரத்தில், தமப்பன் சம்பராந்தகனைப் ஏகவீரனாயிருப்பானொருவன்; பிள்ளைகள் தாங்கள் ஆண்புலிகள், குடிதானே வன்னியமறுத்திருப்பதொருகுடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத்தாக்கிக் கொண்டிருப்பர்கள். ஆகையால் எதிரி என்கிற சப்தமுமில்லை. இங்கு அங்ஙன்றிக்கே. தகப்பன் ஒருஸாதுவ்ருத்தன்; பிறந்தது கம்ஸன்சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவனகத்தருகே; ஸ்ரீப்ருந்தாவநத்திலே, எழும் பூண்டுகளகப்பட அஸுரமயமாயிருக்கும். ரக்ஷகரானவர்கள் ஓரடிதாழநிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று இவன்தன்படிகளிருப்பது. அப்படியானால் வயிறெரியாதே செய்வதென் இவர்கள்? அக்காலத்திலே உணர்ந்துநோக்கப்பெற்றிலர்கள். அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள். அவர்களிலே யொருவரானவிவர் சொல்லுகிறபடியிறேயிது - *தெரிந்துணர்வு இத்யாதி* - மாயாம்ருகத்தின்பின்னேபோய் இளைத்து மீண்டெழுந்தருளினபோது அடிசுட்டுப்பொறுக்கமாட்டாமையாலே தழைகளைமுறித்துப்பொகட்டு அவற்றிலே நின்று ஆறியெழுந்தருளினார் என்று கேட்டு, பாவியேன்! அன்று உதவி அத்திருவடிகளிலே என்தலையை மடுக்கப் பெற்றிலேன். வ்யர்த்தமேபோயிற்றிறே அநாதிகாலமெல்லாம் என்று நொந்தாரிறே. இப்படியேயிறே போனதுக்கு இவர்கள் வயிறெரியும்படி. *திருநீல

மணியார்மேனியோடு என் மனம்சூழவருவாரே* என்றும் வயிறுபிடித்தாரிறே இவர்.

"இவர் அவனுடைய அவதாரங்களையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும். *தாயர்மகிழ வொன்னார்தளரத் தளர்நடை நடந்த என்கிறபடியே, ஆச்ரிதரை வாழ்விக்கவும் அநாச்ரிதரை யழியச்செய்யவும் அடியிட்டு அப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணாவதாரத்தையும் அநுஸந்தித்து மிகவும் சிதிலரானவிவர். தரித்து நின்று உன்னை யநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருள வேணுமென்று அவனை சரணம் புகுகிறார்" என்று ஆழ்வான் பணிக்கும். அன்றியே, "விச்லேஷ ஸமயத்திலே உன்குணங்கள் புத்திஸ்த்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவுபடுகை தவிர்ந்து, உன்திருவடிகளிலே வந்துசேர்ந்து உன்னைக் கிட்டி யநுபவிக்கும்படி பண்ணி யருளவேணுமென்று அவனைக்குறித்து அருளிச் செய்கிறார்' என்று எம்பார் அருளிச்செய்யும்படி. அங்ஙனன்றிக்கே. "ஸர்வேச்வரன், க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம் பண்ணித்திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான் என்றுகேட்டு, அங்கே யதாமனோரதம் நமக்குக் கலந்துபரிமாறலாம் என்று தெற்குத் திருவாசலாலே சென்றுபுக. இப்போது இங்ஙனே வடக்குற்றிருவாசலிலே புறப்பட்டு *தன்னுடைச் சோதியேறவெழுந்தருளினான் என்று கேட்டு விழுந்துகிடந்து கூப்பிடுகிறார் என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச் செய்வர். ... ... *

முதற்பாட்டு, இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்யாநின்றுகொண்டு; உன்னுடைய அவதாராதிகள் என்னை மர்மத்திலேதொட்டு சிதிலமாக்காநின்றன; இச்சைதில்யம் நீங்கி உன்னை தரித்து நின்று நான் அநுஸந்திப்பதெப்போதென்கிறார்.

பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதங்கைசெய்து* ஐவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களும்*
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்ற*இச்
சிறந்தவான்சுடரே! உன்னையென்றுகொல்சேர்வதுவே. (1)

[பிறந்தவாறும்] மாதாபிதாக்களுக்குக் காற்கட்டறும்படியிறே பிறந்தது. தன்னைப் பெற்றவர்களுடைய பந்தத்தை அறுத்துக்கொண்டுவந்து பிறப்பாருமுண்டோ. "இவனிறே நமக்குக் காற்கட்டானான்" என்றிருந்தார்கள் அவர்கள்; அது பொறுக்கமாட்டாமை, "உங்களுடைய பந்தம் நான் பொறுக்கமாட்டேன்" என்றுவிட்டான். *தந்தை காலில் விலங்கறவிறே வந்து தோன்றிற்று. பிறக்கிறபோதே மாதாபிதாக்கள்காலில் க்ரந்தியை சிகித்ஸித்துக்கொண்டுகாணும் பிறந்தது. [பிறந்தவாறும்] பிள்ளாய், பிறக்கிறபோதும் ஒரு விளக்கெரிந்தாலாகாதோ; தானே விளக்காகவிறே பிறந்து. *ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கிறே. [பிறந்தவாறும்] அகர்மவச்யனை தான் கர்மவச்யரோடொக்கப் பிறப்பது, பிறந்தால் ஆச்ரிதஸம்ரக்ஷணமே தனக்கு ப்ரயோஜநமாயிருப்பது, அவர்கள் ஆபத்துபடும்காலமே தனக்குப் பிறக்கைக்கும் காலமாவது, பிறவாநின்றால் தன் ஐச்வர்யத்திலொன்றும்குறையாமற் பிறப்பது, அப்ராக்ருதஸம்ஸ்த்தாநத்தை இதரஸஜாதீய மாக்காநிற்பது, தன் ஜந்மத்தை யநுஸந்தித்தாருடைய ஜந்மங்கள் போம்படியாயிருப்பது, இவையெல்லாவற்றையும் நினைக்கிறது. "நமக்காக இவர்கள் பிணைப்பட்டுச் சிறையிருக்கும்படி இவர்களுக்கு இங்ஙனே பிறப்பதே!" என்று ஈடுபடாநிற்பதான படிகளையெல்லாம் நினைக்கிறது. [பிறந்தவாறும்] *ஆவிர்ப்பூதம்* என்கிறத்தைக்கொண்டு, தோற்றினவாறும் என்னுதொழிவானென்? என்னில்,—ஸம்

ஸாரிகள் பத்து மாஸம் கர்ப்பவாஸம்பண்ணுவர்களாகில் *தசச த்வாதசே மாஸே* என்கிறபடியே பன்னிரண்டுமாஸம் கர்ப்பவாஸம்பண்ணுகையாலும், அவளுக்கு முலே சுரக்கையாலும், முலே பெருவிடில் இவன்றான் நோவுபடுகையாலும், தன்னைக் கட்டவும் அடிக்கவுமாம்படி எளியனுக்கிவைக்கையாலும் பிறந்தவாறுமென்கிறார். பகல்கண்டகுழியிலே யிராவிழுவாரைப்போலே, பருவம் முற்றினவளவிலே *எத்திறம்* என்று மோஹித்து விழக்கடவ இவர் அதுக்குமவ்வருகேபோய் இழிகிறாரிறே கலக்கமிருக்கிறபடி. "எத்திறம்* என்று அங்கே ஆறுமாஸமும், *பிறந்தவாறும்* என்று இங்கே ஆறுமாஸமும் மோஹித்துக்கிடந்தாரென்று ப்ரஸித்தமிறே. ஸ்ரீபரதாழ்வான் ராமவிச்லேஷத்தாலே மோஹித்துத் தறைப்பட்டுக்கிடக்க, தாய்மாரடங்கலும் சுற்றும்பார்த்து நிற்க, *சத்ருக்நோநந்தரஸ்த்தித:* என்கிறபடியே ஸ்ரீசத்ருக்நாழ்வான் கிட்டவுங்கூட பயப்பட்டு ஸ்தப்தனாய் நின்றானிறே. அப்படியே; *நல்லார் நவில்குருகூரிறே. ஜகத்தில் அறிவுடையாரடங்கலும் திரண்டு இவர்படிகளைக்கண்டு அறிவுகெடும்படியிறே இவர் கலங்கிக் கிடந்த கிடை. [வளர்ந்தவாறும்] வளர்ந்தபடியை யநுஸந்தித்தால் பிறந்தவாற்றிலே கால்வாங்கி இளைப்பாறவேண்டும்படியிறே யிருப்பது. பிறக்கிறபோது சிறைக்கூடத்திலேதான் பிறந்தால், வளருகிறபோது நாட்டாரோடொக்க வளரத்தான்பெற்றதோ? [வளர்ந்தவாறும்] பூதநாதிகளுயிர்மாளவும், யசோதாதிகளுடைய ஸ்நேஹம் வளரவுமிறே வளர்ந்தது. *தாயர்மகிழ வொன்னார்தளரத் தளர்நடைநடந்து* என்கிறபடியே. *மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப்போய்ப் படிறு பலசெய்திப்பாடியெங்கும் திரியவிறே அவர்கள் உகந்திருப்பது [வளர்ந்தவாறும்] இவன்கால் நெடுக நெடுக. ப்ரதிகூலருடலும்மாண்டது; அநுகூலருடலும்மாண்டது; *பொட்டத்துற்று *என்றும், *வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு* என்றும்அநுகூலருடலே யிறேமாண்டது. இப்படிப்ரதிகூலர்மண்ணுண்ணவும், தான்நெய்யுண்ணவும், அநுகூலர் கண்ணுண்ணவுமிறே வளர்ந்தருளிற்று. [பெரியபாரதம்] "மஹாபாரதம்" என்றிறேப்ரஸித்தி. [கைசெய்து] கையுமணியுமாக வருக்கைதொடக்கமான பூசலுள்ளதெல்லாம் நினைக்கிறது. [ஐவர்க்குத்திறங்கள்காட்டியிட்டு] அறிவுபிறப்பதற்குமுன்பு ஸத்தையே ப்ரதிகூலநிரஸநத்துக்குடலாயிற்று, ஸஹாவஸ்த்தாநமில்லையிறே திமிரதேஜஸ்ஸுக்களுக்கு; பருவம் நிரம்பினபின்பு அநுகூலர்க்குக் கையாளானபடி. [திறங்கள்காட்டியிட்டு] தூதுபோயும், ஸாரத்யம்பண்ணியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலையிரவாக்கியும், எதிரிகள் உயிர்நிலைகளைக் காட்டிக்கொடுக்கை தொடக்கமானவற்றையெல்லாம் சொல்லுகிறது. [செய்து] இப்படி செய்து. [போனமாயங்களும்] ஆச்ரிதரக்ஷணத்துக்காக வந்து பிறந்து அவர்களுடைய ஆபத்துக்களைப்போக்கி யுபகரித்தால், "இதுநமக்காகச் செய்தானிறே" என்று இருக்கையன்றிக்கே, இவன்தன்னோடே எதிரிடும்படியான ஸம்ஸாரத்திலே யிராதே, ஓரளவிலே இங்குநின்றும்போன ஆச்சர்யசேஷ்டிதங்களும். *க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந:, மோஹயித்வா ஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம் ஸ்த்தாநமுத்தமம்*. வந்து திருவவதாரம்பண்ணி, அநுகூலர்கார்யங்களடையத் தலைக்கட்டி; ப்ரதிகூலரையடைய முடகோலுக்கிரையாக்கி, அநுகூலரையடையக் கண்ணாலேவிழவிட்டு, உபயகோடியையும் நோவுபடுத்தி; இங்கு நின்றும் போய்த் தப்பப்பெறுவதே! என்கிறது. [ஸ்வம் ஸ்தாநமுத்தமம்] இங்குள்ளாரடங்கலும் எதிரம்புகோக்குமாபோலேயிறே அங்குள்ளாரடங்கலும் எதிரேற்கப்போனபடி. [நிறந்தனூடுபுக்கு] தோல்புரையே போமதன்று, நிறத்திலே - மர்மத்திலே, நலிகிறபடி. [எனதாவியை] அல்லாதாரடங்கலும் இவற்றைக்கேட்டு உண்டுடுத்துக் காலம்போக்கித் திரியாநின்றார்களிறே. [ஆவியை நின்றுநின்றுருக்கி] அச்சேத்யமுமாய் அதாஹ்யமுமாயிருக்கிற ஆத்மாவை இடைவிடாதே சிதிலமாக்காநின்றன. [நின்று நின்றுருக்கியுண்கின்ற]அது ஒருகால்செய்துபோகச்செய்தேயும் இது உருவநின்று

நலியாநின்றது. [இச்சிறந்த வான்சுடரோ] தகுதியாய் அபரிச்சேத்யமான இவ் வழகையுடையவனே. வஸ்து பிறக்கப்பிறக்கவாயிற்றுத் தேஜஸ்ஸு உஜ்ஜ்வல மாவது. [இச்சிறந்த] பூதகாலமாயிருக்கச் செய்தேயும், இவர்க்கு இது ஸமகாலம் போலேயும், கண்ணுக்கு விஷயமாயிருக்கிறபடி. [வான்சுடர்] இங்கே வந்தபின்பு சிறந்ததென்றுமாம். பிறந்தவாற்றாலும், வளர்ந்தவாற்றாலும், பெரியபாரதம்கை செய்து ஐவர்க்குத் திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களாலும், நிறந்த னூடுபுக்கு எனதாவியை நின்றுநின்றுஉருக்கியுண்கின்ற - இச்சிறந்தவான்சுடரே என்று அவன்தனக்கு விசேஷணமாக்குதல்; உருக்கியுண்கின்றவென்று குணபர மாக்குதல். அதாவது - பிறந்தவாறென்றுதொடங்கி, மாயங்களும் உருக்கியுண் கின்றன வென்றபடி. இதுவே நிர்வஹித்துப்போருமது. [உன்னையென்றுகொல் சேர்வதுவே] நான் தரித்துநின்று அநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருள வேணுமென்கிறார். அன்றிக்கே, சேருகையாகிறது இரண்டுதலையும் சேருகை யாய், நான் அநுஸந்தித்து சிதிலனைகை தவிர்ந்து உன்னைப் பிரியாதபடி கிட்டப் பெறுவது என்று? என்கிறாராகவுமாம். ... ... (1)

இரண்டாம்பாட்டு. ஏறடர்க்கைதொடக்கமான உன்சேஷ்டிதங்கள் என்னை சிதிலமாக்காநின்றன. நான் தரித்துநின்று அநுபவிக்கும்படி பண்ணவேணு மென்கிறார். இனி, அல்லாதவவதாரங்களையும் ஆராய்ந்தால் இத்தன்மையவாயிருக்கு மிறே; ஆகையாலே அவ்வருகு போகமாட்டார், அடியில் இழியமாட்டார், இனி வளர்ந்தவாறேறப் போமித்தனையிறே. *சீராற்பிறந்து* இத்யாதி. பிறந்தவாறு அவனே செய்கையாலே இவர்க்கு அங்குச் செய்யலாவதில்லை. இனி அநுகூலர்க்குக் கண்டு பரிகைக்கு விஷயமுள்ளது வளர்ந்தவாற்றிலேயிறே. அவ்வளர்ந்தவாறு தான் இருக்கிறபடி சொல்லுகிறார்.

வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும் மாயமாவினைவாய்பிளந்ததும்*
மதுவைவார்குழலார் குரவைபிணைந்தகுழகும்*
அதுவிதுவுதுவென்னலாவனவல்ல என்னையுன்செய்கைநைவிக்கும்*
முதுவையமுதல்வா! உன்னையென்றுதலைப்பெய்வனே? (2)

. [வதுவைவார்த்தையுள்] வதுவை - விவாஹம். [வார்த்தையுள்] "எருதுக ளேழையும் நிரஸித்தார்க்கு இவளைக் கொடுக்கக்கடவோம்" என்று பிறந்த ப்ர ஸித்தி. [ஏறுபாய்ந்ததும்] ஏறுகளின்மேல் விழுந்தபடிகளையும். இவர்க்கு ம்ருத்யு வின்வாயிலே விழுந்தாப்போலேயாயிற்றிருக்கிறது. பொய்கையிலே பாய்ந்தாப் போலே யிராநின்றது அவனுக்கு. கருமாரிபாய்ந்தாலாகாதோ என்னும்படியிறே அவளுடைய போக்யதை. [மாயமாவினைவாய்பிளந்ததும்] கம்ஸப்ரேரிதமாய் க்ருத் ரிமவேஷங்கொண்டு வந்ததாயிற்று. க்ருத்ரிமமாகக் குதிரைவடிவைக்கொண்டு வாயையங்காந்துகொண்டு ஓர் அஸுரன் வந்துதோன்ற, சிறுபிள்ளைகள் த்வாரங் கண்டவிடத்திலே கைநீட்டும் வாஸனையாலே அதின் வாயிலே கையை நீட்டினான். அபூர்வதர்சநத்தாலே கை விம்மிற்று, பூரித்தவாறே இரண்டு கூறாய் விழுந்தான். ஸ்ரீநாரதபகவான் *ஜகதஸ்தமிதம்* என்று வந்து விழுந்தாப்போலே இவர்க்கு இப்போதிருக்கிறது. *வ்யாதிதாஸ்யோ மஹாரௌத்ரஸ்ஸோஸுர: க்ருஷ்ண பாஹுநா, நிபபாத த்விதாபூதோ வைத்யுதேந யதா த்ரும:* இத்தால்-ஸ்ரீப்ருந்தா வநத்துக்கு வழியிசங்கும்படி பெண்களுக்கு வன்னியமறுத்துக் கொடுத்தபடி. [மது வைவார் இத்யாதி] மதுஸ்யந்தியான குழலையுடையவர்கள். மதுவைவார்குழலா ரென்றது - மதுவார்குழலாரென்றபடி. சொற்பாடு. குரவைகோப்பிலே தன்னையும் ஒருவனுக்கித் தொடுத்தபடி. [குழகும்] அவர்கள் அபிஸந்தியைக் குலைத்து பக்நாபி

மானைகளாகப்பண்ணி, அவர்களோடொக்கத் தான் கலந்தபடி. அதாவது - வேற்றாள் என்னவொண்ணாதபடி, இவர்களிலே ஒருவனென்னலாம்படி புக்குநின்றானாயிற்று. [அதுவிதுவுதுவென்னலாவனவல்ல] அதுவாகவும், இதுவாகவும், உதுவாகவுமாம், எனக்கு இதிலொரு நிர்பந்தமில்லை. [என்னையுன்செய்கைநைவிக்கும்] அச்செயலாகவுமாம், இச்செயலாகவுமாம், உச்செயலாகவுமாம். அதில் எனக்கொரு தாத்பர்யமில்லை; உன்னுடைய சேஷ்டிதங்களாகையும், நானாகையுமே எனக்கு நோவுபடுகைக்கு வேண்டுவது. "இத்தால் சொல்லிற்றாயிற்று - இப்பாட்டில் மூன்றர்த்தம் சொல்லாநின்றது. அதாவது - அநுகூல ஸம்ச்லேஷமும், ப்ரதிகூலநிரஸநமும், மத்யஸ்த ரக்ஷணமுமானவிவற்றை - அதுவிதுவுது என்கிறது" என்னும் பிள்ளான். [முதுவைய முதல்வா] இவர்தம்மதும் அவ்வளவாகாதேதான். ப்ரளயங்கொண்ட ஜகத்தோபாதியாகாதே இவரும் அழிந்தபடி, இத்தோடொக்க இவரையும் அடிதொட்டும் உண்டாக்க வேண்டியிருக்கிறபடி. பழையதான பூமிக்குக் காரணமென்னுதல், பூமிக்குப் பழைய காரணமென்னுதல். [உன்னையென்றுதலைப்பெய்வனே] உன்னையநுஸந்தித்து சிதிலனாகாதே, தரித்துநின்று அநுஸந்திக்கும்படி பண்ணவேணும். உன்னை வந்துகிட்டப் பெறுவதென்றோ என்றுமாம். தலைப்பெய்கை - கிட்டுகை. ... ... (2)

மூன்றாம்பாட்டு. உன் பாலசேஷ்டிதங்கள் என்னை நலியாநின்றதென்கிறார்.

பெய்யும்பூங்குழற்பேய்முலையுண்ட பிள்ளைத்தேற்றமும்* பேர்ந்தோர்சாடிறச்
செய்யபாதமொன்றால் செய்தநின்சிறுச்சேவகமும்*
நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள நீயுன்தாமரைக்கண்கள்நீர்மல்க*
பையவேநிலையும்வந்து என்நெஞ்சையுருக்குங்களே. (3)

(பெய்யும்பூங்குழற் பேய்முலையுண்ட) ப்ரதிகூலருடைய ப்ராணனும் ஆச்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யமுமே தாரகமாக வளர்ந்தானென்று - "வளர்ந்தவாறு" என்று சொன்னவிடத்தை விவரிக்கிறது இங்கு. பிள்ளையைத் திருமஞ்சனம்செய்து ஒப்பித்துக் கண்வளரப்பண்ணிக் கடக்கநின்றாள் யசோதைப்பிராட்டி. அவ்வளவிலே வந்துகிட்டினாள் பூதனை. [பெய்யும்பூங்குழல்] பிள்ளை என்று அங்கேசொல்லுதல்; அன்றிக்கே, பெய்யும் பூங்குழல் பேய் என்று பூதனையோடே கூட்டுதல். பிணக்கோலமாக ஒப்பித்துவந்தாள் காணும். "பிள்ளையனுங்கவொண்ணாது" என்று தாய்மார் எப்போதும் ஒப்பித்தபடியே இருப்பர்களாயிற்று, இவளும் அப்படியே வந்தாளாயிற்று; *பெற்றதாய்போல்வந்த பேய்ச்சியிறே. வைத்தபூவையுடைய மயிர்முடியுடைய பேய். (பேய்முலையுண்டபிள்ளைத்தேற்றமும்) ஐச்வர்யமான ஜ்ஞாநமின்றிக்கே, "தாய்முலை" என்றும் "வேற்றுமுலை" என்றும் அறியும் தெளிவு. அத்யந்தசைசவத்திலும் பிள்ளைகள் முலைவாசியறிவர்களிறே. இவனும் "தாய்" என்றே நினைத்து உண்டான்கிடீர். (பிள்ளைத்தேற்றமும்) பால்யத்தில் தெளிவிருக்கிறபடி. அதாவது - யசோதைப்பிராட்டி முலைகொடுக்க ப்ரீதியினாலே பண்ணும் முக்தஜல்பிதங்களை இவள்பக்கலிலே பண்ணினானாயிற்று. பாதகரென்று அறியவுமாம், அறியாதிருக்கவுமாம், சத்ருக்கள் கிட்டினால் முடியக்கடவதான வஸ்துஸ்வபாவமிருக்கிறபடி. (பேர்ந்து) அதுக்குமேலே. (ஓர்சாடிற) ப்ரதிகூலமென்று சங்கிக்கவுமொண்ணாதுகிடீர். பூதனையை, இன்னாளென்று ஆராய்கைக்காகிலும், விஷயமுண்டு, இது ரக்ஷகமாகவைத்ததுகிடீர். யசோதையைக்கண்டவாறே "இவளார்" என்று ஆராய்ச்சிப்படுமிறே. (ஓர்சாடு) பாதகத்தில் கொடுமைக்கு இத்தோடொப்பதில்லைகிடீர். (இற) முறிய. *தளர்ந்தும் முறிந்தும்* இத்யாதி. (செய்யபாதம்) சிவந்ததிருவடிகள். என்னுடைய ஜீவநத்தைக்கொண்டுகிடீர் விரோதியைப்

போக்கிற்று. இவர்க்கு ஜீவநம் அடியிலே கல்பித்திறேகிடப்பது. (ஒன்றால்) இன்ன திருவடியென்று நியதியில்லையிறே. கருவிச்செய்கிறானன்றே. (செய்தகின்சிறுச் சேவகமும்) நீ சேவகம் செய்யவடியிட்டபடியும். ராஜகுமாரனாய்ப்பிறந்து, பருவம் நிரம்பி, ஆயுதச்ரமம்பண்ணி, வஸிஷ்ட்டாதிகளைப்பின் சென்று, விச்வாமித்ராதிகள் பக்கலிலே அஸ்த்ரலாபமுண்டாய், பின்பிறே தாடகாமாரீசஸுபாஹுக்களை நிரஸித்தது. அதெல்லாம் பருவம் நிரம்புவதற்குமுன்னே. வாயாலும் காலாலுமாயிருக்கிறபடி இங்கு. வாயால் வலியார்க்குத் தாயாரும்வேண்டாவாயிற்றுகாணும். இவனைப்போலே கால்கடியாரில்லை. ஆகையிறே காலிலே கொடிகட்டிவைக்கிறது, *த்வஜாரவிந்தாங்குசவஜ்ரலாஞ்சநம், த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம் *என்கிறபடியே. அப்போதும் *அவுணனுள்ளத்தெண்மதியுங்கடந்து அண்டமீது போயிற்றதும் கடுகித்திருவடிகளிறே. (நெய்யுண் இத்யாதி) பருவம் நிரம்புவதற்கு முன்பு தான் ப்ரதிகூலரை யஞ்சப்பண்ணுமாபோலேகாணும் பருவம் நிரம்பநிரம்ப அநுகூலர்க்குத் தான் அஞ்சும்படியும். [நெய்யுண் வார்த்தையுள்] நெய்யைக் குறியிட்டுக்கடக்கவைத்துப்போய் அநந்தரத்திலே வந்துபார்த்தாள். குறியழிந்துகிடக்கையாலே "நெய்களவுபோயிற்று" என்றாள். அவ்வளவிலே பையாக்க விழிக்கத்தொடங்கினான். (அன்னைகோல்கொள்ள) "மாதாவிறேயெடுத்தாள்" என்னும் விபாகமறிகிறிலன். அவள்வார்த்தையிறே 'உந்தமடிகள்முனிவர்' வாரீர் பிள்ளாய், உங்கள் தமப்பனார் கேட்பராகில் உம்மைப்பொடிவர்; "உன்னை நான் என்கையிற்கோலால் நொந்திடமோதவுங்கில்லேன்"-இதுதான் இருக்கிறபடி கண்டீரே; இத்தைக்கொண்டு இனி நீர் ஒன்றும் செய்யாதபடி பண்ணிக்கொள்ளலாமிறே வல்லார்க்கு, நான் அதுக்கு சக்தையாகிறிலேன். *தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடியிறே, "அச்சமுறுத்துகிறபடியிது. பட்டாலும் நோவாது" என்றறிகிறிலன். தமப்பனார் எடுத்தாராகிலும் சிறிது ஆறலாங்காணும், ஹிதகாமராகையாலே அது ப்ராப்தமிறே; உகப்பேபின்செல்லக்கடவ விவள் பொடிந்தால் பின்னைப் பொறுக்கப்போகாதிறே. இவள்தான் இப்படி செய்வானென்? என்னில்,—ஸ்நேஹமின்றிக்கே யொழிந்தால் இன்னாரென்றுண்டோ கல்லும் தடியும் கொள்ளுகைக்கு. (நீயுன் தாமரைக்கண்கள்நீர்மல்க) வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படி யிருக்கிற நீ, அதுக்குமேலே கண்களும் கோட்புக்கால் பொறுக்கப்போமோ. (கோட்புகுகையாவது - பாலசூதாதிகள் அபிநவமாக பலவத்துக்களாகை.) (உன் தாமரைக்கண்கள்) *ராகவோர்ஹதி வைதேஹீம்* என்கிறபடியே உனக்குத் தகுதியான கண். *தக்கதாமரைக்கண்* என்னக்கடவதிறே. (பையவேநிலையும்) "அடிக்க" என்று அவள் கோலையெடுத்தாள். அவளைப் பார்த்து நின்று கண்ணநீரை விழவிடாநிற்பது உடம்பு வெளுப்பதாய்ப் பேகணித்துநின்ற நிலையும். அன்றிக்கே, அஞ்சி அவள் முகத்தைப்பார்த்து நிற்கச் செய்தே பின்பே கால்வாங்கக் கணிசித்துமாட்டாதொழிவது. ஊன்றநிற்க மாட்டாதொழிவதாய்த் தறையில் கால்பாவாதபடி பொய்க்க அடியிட்டுக்கொண்டு நின்ற நிலைகாணும். பைய - மெள்ள. (வந்து இத்யாதி) அச்செயல்கள் என்னை நலியாநின்றன. உனக்கானல் தப்பியாகிலும்போகலாம். அதுவுமொண்ணாதபடி புக்கவிடம்புக்கு வடிம்பிட்டு நலியாநின்றன. (பையவேநிலையும் வந்தென்னெஞ்சை யுருக்கும்) என்னை ஓரடிபோகவொட்டாதே காற்கட்டாநின்றதென்கிறார். (நெஞ்சை யுருக்கும்) இவர்நெஞ்சிலேயடியிட்டபடி. (உருக்கும்) முதல் நெஞ்சை யுருக்கவடியிட்டது. ... ... (3)

நாலாம்பாட்டு. பௌத்தாவதாரவ்ருத்தாந்தம் மிகவும் என்னை நலியாநின்றதென்கிறார். அநுகூலவிஷயத்தில் களவுசொல்லிற்று கீழ்ப்பாட்டில்; ப்ரதிகூலவிஷயத்தில் களவுகண்டபடி சொல்லுகிறது இப்பாட்டில்.

கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும்*கலந்தசுரரை
உள்ளம்பேதஞ்செய்திட்டு உயிருண்டவுபாயங்களும்*
வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடைவேறலாமைவிளங்கநின்றதும்*
உள்ளமுள்குடைந்து என்னுயிரையுருக்கியுண்ணுமே. (4)

(கள்ளவேடத்தைக்கொண்டு) *யதாஹி சோரஸ்ஸ ததா ஹிபுத்த:* என்கிறபடியே, க்ருத்ரிமவேஷத்தைக்கொண்டு. *வேதைச்ச ஸர்வைரஹமேவவேத்ய:* என்று வேதார்த்ததத்வஜ்ஞனானவன், வேதாப்ராமாணிக வேஷத்தைக்கொண்டு. கண்டார் நெஞ்சுகளடங்கலும் அபஹ்ருதமாம்படி, கறுத்துநெய்த்தவடிவும் வடிந்த காதும் இடுக்கின புஸ்தகமுமாய் நின்றநிலையைக்காணும் நினைக்கிறது. "இவன் சொன்னதுக்கு மேற்பட அர்த்தமில்லை" என்று, கேட்டார்நெஞ்சிலே தேறும்படியிறே வடிவையிட்டு மயக்கினபடி. (போய்) அதாவது "காலுக்குட்பட்ட க்ஷுத்ர பதார்த்தங்கள் நோவுபடுகிறது" என்னும் பயந்தோற்றப் பொய்க்க அடியிட்டுக் கொண்டு போனபடி. அவர்கள் தாங்கள் சாஸ்த்ர விரோதமானவற்றை ப்ரவர்த்தியாநிற்கச்செய்தேயும், முகப்பில்நின்று ஒன்றுபோலேயிருக்க, "பரஹிம்ஸை பண்ணலாகாது, நிஷித்தத்ரவ்யஸேவை பண்ணலாகாது, க்ருத்ரிமபாஷணம் பண்ணக்கடவதன்று, விஷயப்ராவண்யமாகாது" என்றாப்போலே, சில சொல்லுவர்களாயிற்று; அவையெல்லாம் தோற்றும்படிக்கீடாகப் போனபடி. பெருமாள், வனத்துக்கெழுந்தருள, என்று புறப்பட, ஜாபாலிகன் மீண்டு புகுரும்படிக்கீடாகச் சிலவற்றைச்சொல்ல, பெருமாள் சிவிட்கென்று செவியைப்புதைத்து, "வாராய், என்முன்னேநின்று தர்மருசி குலையும்படிக்கீடாக நாஸ்திகவாதம் பண்ணுவதே, உன்னை வெறுக்கிறதென், உன்னைக்கொண்டு கார்யங்கொண்ட ஐயரையன்றோ வெறுப்பது" என்ன; "நாயன்றே! நீர் மீண்டெழுந்தருளித் திருவபிஷேகம் பண்ணியருளி ஸ்ரீபரதாழ்வான்கண்ணிலே கண்ணநீரைமாற்றினவாறே, நான் நாஸ்திகனானைதவிர்ந்து ஆஸ்திகனும்படிபாரீர்" என்ன:-அவ்வளவிலே இவனை *ஜாபாலிர்ப்ராஹ்மணோத்தம:* என்றார்களிறே. நாங்களுமெல்லாம் நூலிட்டிருக்கையாலே, ப்ராஹ்மணரென்று கொள்ளுமித்தனை; ப்ரஹ்மஸம்பந்தீ ப்ராஹ்மண: இறே, ப்ராஹ்மணனாகிறான் ப்ரஹ்மஸம்பந்தியானவனிறே: அதுள்ளது இவனுக்கேயிறே. இவ்வளவிலே லோகாயதமதத்தை உபந்யஸித்தானொருவனிறே. (புரம் புக்கவாறும்) ஊரைக்கிட்டினபின்பு பண்ணின நியதிகளையெல்லாம் நினைக்கிறது. அதாவது - வைதஹிம்ஸையையும் ஸாமாந்யஹிம்ஸையோபாதியாக்கப்புகுகிறவனாகையாலே, பசும்புல்லும் சாவமிதியாதே கூசியடியிட்டுப்புக்கபடி. (கலந்து) இவர்களிலே யொருவனாய்ப் புக்குநின்று இவ்வர்த்தத்தை உபந்யஸித்தபடி. தன் வார்த்தையை விச்வஸிக்கைக்காக இவர்களோடே ஒரு நீராய்க்கலந்து பரிமாறினபடி. (அசுரரையுள்ளம்பேதம்செய்திட்டு) ஆஸுர ப்ரக்ருதிகளான இவர்களுக்கு அவைதிகமதத்தையுபந்யஸித்து வைதிகச்ரத்தையைப் போக்கினானாயிற்று. இவர்களுக்கு வைதிகச்ரத்தையுண்டோ? என்னில்,—*அக்நிஹோத்ராச்ச வேதாச்ச ராக்ஷஸாநாம் க்ருஹே க்ருஹே* இறே. எல்லார்க்கும் சிலவுண்டாகை தவிராதிறே. தர்மருசியுள்ளவையுண்டாகிலும் குலைந்துபோம்படி மதிபேதங்களைப் பண்ணினானாயிற்று. (உயிருண்டவுபாயங்களும்) - இவர்களுடைய உயிரைப்போக்கின உபாயங்களும். இவர்களுடைய வைதிகச்ரத்தையைப்போக்கிசவப்ராயராம்படிபண்ணி நின்றானொரு பிக்ஷுகனுக்குங்கூட மேல்விழலாம்படி அவர்களை யடியறுத்து "நான் செய்தேன்" என்று கவிபாடுவித்துக் கொள்ளலாம்படி பண்ணினபடி. "அவன் செய்தான்" என்று சொல்லாநிற்கச் செய்தேயும் இச்செயலொன்றும் அவன் தலையில் அந்வயியாதபடி சொன்னபடிபாரீர்! *விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ: தஸ்மாத்

தநுர்ஜ்யா ஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே மஹேச்வர:* என்கிறபடியேயிறே - சேதநனைக்கொண்டு கார்யங்கொண்டதத்தோடு, அசேதநத்தைக்கொண்டு கார்யங்கொண்டதத்தோடு வாசியில்லை. ருத்ரன் தன்னோடு அவன் கையில் வில்லோடு வாசியில்லை இவனுக்கு. காரணவஸ்த்தையில் சிதசித்துக்களைக் கொண்டு கார்யங்கொண்டவோபாதி யாயிற்று. முன்பு அவன்தானே செய்வானாகக்கொண்டெடுத்துப்பார்த்தானிறே; அது முடியாதொழிய, பின்பு இவன் உள்ளீடாய் நிற்கையிறே செய்து தலைக்கட்டவல்லனாயிற்று. பண்டு ஒருராஜா, ருத்ரதத்வமே பரதத்வம்" என்றெழுதி. "எழுத்திட்டுத்தாருங்கோள்" என்ன, அப்படி பலரும் எழுதியெழுத்திடா நிற்கச்செய்தே; ஒருவர், "வாராய், நீ இவ்வோலைகெடாமே நோக்கி வைத்தாலிறே இவனுடைய பரத்வம் ஸாதிக்கலாவது; நீ நினைக்கிற தேவதைக்குண்டான உச்ச்ராயங்கள் 'ஸர்வேச்வரனாலே' என்று ப்ரமாணங்கள் சொல்லாநின்றன; ஆனபின்பு, இன்று நீ சொல்ல, நான் எழுத்திட்டுப்போகிறேன்; நாளை ஒருவிவக்ஷிதன்தோன்றி 'இவன் அஜ்ஞனாயிருந்தானீ!' என்னக்கேட்பதில், இன்று நீ நினைத்ததைச் செய்துகொள்ளமாட்டாயோ" என்றார். (உபாயங்களும்)-அப்போதிருந்து சிந்தித்தவற்றையெல்லாம் நினைக்கிறது. (வெள்ளநீர் இத்யாதி) - இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி:—"ப்ரஹ்மருத்ரர்கள் நடுவே நின்றதொரு முதல்களவுண்டு, அத்தைச்சொல்லுகிறது" என்றாயிற்று. அதாவது - ருத்ரனையும் தன்னையும் ஸமமாகச்சொல்லலாம்படி த்ரிமூர்த்தி மத்யஸ்த்திதியைச் சொல்லுகிறதென்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "அழகிது, ஆகிலும் அத்தனைதூரம் தேடிப்போகவேணுமோ, இவன் தன் விஷயத்திறே முன்புபண்ணின உபகாரத்துக்கு ஓரளவுண்டோ, இதுதானே யமையாதோ" என்று அருளிச்செய்தார். [வெள்ளநீர் இத்யாதி] - கங்காஜலத்தைத் தன்ஜடையில் ஏகதேசத்திலே தரித்த ப்ரபாவத்தையுடைய ருத்ரனும் உன் பக்கல் வேறல்லாதபடிதோற்ற நின்றமையும். அதாகிறது - சரீரபூதன் என்னுமிடம் தோற்றநின்றபடி. இங்ஙன்சொல்லுகிறதென், ஐக்யமாகக் கொண்டாலோ இத்தை யென்னில்,—அங்ஙன் கொள்ளுமன்று *விஷ்ணுராத்மா* என்கிற ப்ரமாணத்துக்கு விஷயமின்றிக்கே யொழியுமே. *நலந்திகழ் சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயுங் கலந்திழிபுனலால் புகர்படுகங்கை" அவனுடைய சேஷத்வத்துக்கும் இவனுடைய சேஷித்வத்துக்கும் ப்ரமாணம் ஒரு வெள்ளமென்கிறார் காணும். ருத்ரன்ஜடையில் கொன்றையும் ஸர்வேச்வரனடியில் திருத்துழாயும் கூடிவந்திழிகிறபடி. (உள்ளமுள்குடைந்து) - என் அந்த:கரணத்தைப் புக்கு அவகாஹித்து, *அச்சேத்யோயமதாஹ்யோயம்* என்கிற ஆத்மாவைப் புக்கு அழித்து நோவுபடுத்தாநின்றது. ஜ்ஞாநப்ரஸரத்வாரமான மநஸ்ஸிலே புகுந்து ஆத்மாவை நீராக்கி முடியாநின்றன. ... ... (4)

அஞ்சாம்பாட்டு-ஆச்ரிதவிஷயமாகவும் ஸர்வவிஷயமாகவும்பண்ணினசேஷ்டிதங்களை யநுஸந்திக்குந்தோறும் என்மநஸ்ஸு மிகவும் அழியாநின்றதென்கிறார்.

உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப்படுத்தவடிசிலுண்டதும்*
வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்ததும்*
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்தமாயங்கள்*
எண்ணுந்தோறுமென்னெஞ்சு எரிவாய்மெழுகொக்கும்நின்றே. (5)

[உண்ண இத்யாதி] - வானவர்கோனுக்கு - உண்ண - ஆயரொருப்படுத்த வடிசிலுண்டதும். தான் பிறந்துவளருகிறவூரிலே சிலர் வர்ஷார்த்தமாக இந்த்ரனுக்குச் சமைத்த அடிசிலைத் தான் புகுந்து புஜித்தவதுவும். "நாம் பிறந்து வளருகிறவூரிலே வேறேயும் ஓராச்ரயணீயவஸ்துவுண்டாகையாவதென்?" என்று

பொறுமையாலே, "வாரிகோள், இந்த்ரனுகிறனெவன்? கண்டறியாதானொரு வனே நமக்கு உபகரிக்கப்புகுகிறன்? ஆனபின்பு, மேகங்களும்வந்து பணியும் படிக்கீடாய், புல்லுந்தண்ணீருமுடைத்தாய், பசுக்களுக்கும் இடங்கொடுத்து நிற்கிற மலையன்றோ நமக்கெல்லாம்கடவது" என்று சொல்ல, இடையராகையாலே சொல் விற்றைக்கேட்பார்சிலரே, இனி இவன்தானே சொன்னவை மறுக்கவொண்ணாத படியாயிருக்குமே; "இம்மலையின் முன்னேயிடுங்கோள்" என்ன, அங்கே கொடு வந்து குவித்தார்கள்: அத்தைத்தான் புக்கிருந்தமுதுசெய்தான். தனக்கு அஸா தாரணராயிருப்பாருடைய த்ரவ்யத்தை வேறேசிலர்க்குக் கொடுக்கையாவது, மஹி ஷீஸ்வேதத்தைப் பிறர்க்குக்கொடுத்தமாத்ரமிறே. அவன்தன் பரிகரத்தோடுங் கூட இது கொண்டு த்ருப்தனாக விருக்க, இத்தைத்தான் கைக்கொண்டானுயிற்று. அவன் க்ரோதத்தாலே வர்ஷிப்பிக்கத்தொடங்கினன். [வண்ணமால்வரை இத் யாதி] - அடைகொண்டு பாழ்போக்குவானொருவனன்றே. "நம்மபிமதம்பெற் றோமாகில் என்செய்தால் நல்லது" என்று பொகட்டுப்போகாதே. நாநாவான தாதுக்களையுடைத்தாய் ஒருவரால் கணிசிக்கவொண்ணாத பெரியமலையை, ஸுகு மாரமான கையைக்கொண்டு ஏழுநாள் ஒருபடியேதரித்து, ஒருபசுவின் மேலே யாதல் ஓரிடையன்மேலேயாதல் ஒருதுளிவிழாதபடி காத்ததும், அவனை நிரஸிக்க லாயிருக்கச்செய்தேயும், "தேவப்ரக்ருதியான இவனை நலிகிறதென், பசிக்ராஹத் தாலே செய்தானுகில் தானே கையோய்ந்துவிடுகிறன், அவ்வளவும் நம் ரக்ஷ்ய வர்க்கத்தை நாம் கடகிட்டு நோக்குவோம்" என்று ஆந்ருசம்ஸ்யம் கொண்டாடி விட்டான். "நம்விபூதியை இவன் நோக்கவல்லன், இவன்கண்ணுடையன்" என் றிறே இவனைத்தான் இங்குத்தைக்கிட்டது. இப்படியிருக்கச்செய்தேயும் இவன் கண்ணறையர் செய்வதைச் செய்தான். [மண்ணை இத்யாதி] வேண்டாவென் றாலும் தேவதாந்தரபஜநம் தவிராதார் ஒருரளவன்றிக்கே இருக்கிற ஜகத்தி லுள்ளார் விஷயத்திற்செய்யுமவற்றைச் சொல்லுகிறது. அர்த்தித்வாநிரபேக்ஷ மாக இவற்றையுண்டாக்கி, ப்ரளயாத்யாபத்துக்கள்வர, இவை நோவுபடாதபடி வயிற்றிலேவைத்துநோக்கி, "உள்ளேகிடந்து மறைந்துபோக வொண்ணாது" என்று பார்த்து வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, பின்பு மஹாபலிபோல்வார் அபஹரிக்க, எல்லைநடந்து மீட்டுக்கொடுத்து, பின்பு அவாந்தரப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்துக்கொண்டேறி, இவையெல்லாம் பிராட்டிப் படுக்கைப் பற்றாகையாலே அவளுக்கு ப்ரியமாகச்செய்து, அவளோடே ஸம்ச்லே ஷித்த ஆச்சர்யமான சேஷ்டிதங்களை. [மணந்த] ஸம்ச்லேஷித்த. [எண்ணுந் தோறும்] அவனுடைய ரக்ஷணத்திலும் பரப்புண்டாகாதே இவருடைய பாரிப்பு. எண்ணமாட்டார், எண்ணுதிருக்கமாட்டார். ரக்ஷணத்துக்கு அவன் சமைந்தாப் போலேகாணும் அழிகைக்கு இவர்சமைந்தபடி. [என்னெஞ்சு] இத்தையநுஸந் தித்தே நாட்டார் உண்டுடுத்துக் காலம்போக்காநின்றார்களிறே. [எரிவாய்மெழு கொக்கும்] அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே உருகாநின்றது. [நின்றே] அது ஒருகாலே யுருகுதல் கரிதல் செய்யுமிறே; இது உருகினபடியே இராநின்றது. (5)

ஆறும்பாட்டு. உன்ஸகலசேஷ்டிதங்களையும் காண, விடாய்ப்பட்ட நான் நினைக்கவும் க்ஷமனுகிறிலேன். ப்ரளயாபத்தில் ஜகத்தைரக்ஷித்தாப்போலே அநு ஸந்திக்க வல்லேனும்படிபண்ணி என்னைரக்ஷிக்கவேணுமென்கிறர்.

நின்றவாறுமிருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன*
ஒன்றலாவுருவாய் அருவாயநின்மாயங்கள்*
நின்றுநின்றுநினைகின்றேன் உன்னையெங்ஙனம் நினைகிற்பன்? *பாவியேற்கு
ஒன்றுநன்குரையாய் உலகமுண்டவொண்சுடரே. (6)

[நின்ற இத்யாதி] - இவர் இவ்விஷயத்திற்படுகிறபாடெல்லாம் நமக்கு இதர விஷயங்களிலே அநுபவஸித்தமிறே; இவ்விஷயத்திலின்றிக்கே யொழிகிறவித்தனை. வடக்குநின்றும் போரப்பாடவல்லராயிருப்பாரொருத்தர் பெருமாளைத்திருவடிதொழ வேணுமென்று வர, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் தீர்த்தத்தினன்றிராத் திருமாலையைப்பாடிச் சமைந்து பெருமாளை மத்தகஜங்களையேத்துமாபோலேயேத்தி வசமாக்கிக்கணிசங்கொண்டு, "நாயன்றே, தேவர்திருவடிகளுக்குப்போரநல்லானொருத்தன் எழுநூற்றுக்காதமாறுண்டு தேவரை திருவடிதொழவேணுமென்று வருகிறது; இவனை அழைத்துக்கொண்டு ஸம்பாவனைபண்ணியருளவேணும்" என்ன, பெருமாளும் "அப்படியேசெய்கிறோம்" என்று திருவுள்ளமாய் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக்கீழ்நின்றும் அவர்நின்றவிடத்தளவும்செல்ல நாலுகோல் தரை திருக்கைத்தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பஞ்செய்வார்களையெல்லாம் அருளப்பாடிட்டு. "வாரீகோள், இவன்வந்ததூரத்துக்கெல்லாம்போருமோ நாம் இவனுக்குச்செய்த தரம்" என்று திருவுள்ளமானார். இப்படியேயிறே நம்மிழவுகளும் திருவுள்ளத்திலேபட்டவையெல்லாம் ஆறும்படிக்கீடாக முகந்தந்தருளவல்லபடியும். ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவவண்ணத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாகவாட்டி எம்பெருமானார்க்குக் கொண்டுவந்து காட்ட, போர த்ருப்தராய் இவனையுங்கூடக் கொண்டு பெருமாள்பாடேபுக்கு, "நாயன்றே! இவன்திருவரைக்கீடாம்படி இவற்றைத்தொட்டபடி பார்த்தருளவேணும்" என்றுகாட்ட, கண்டு போரவுகந்தருளி எம்பெருமானாரை அருளப்பாடிட்டு, "இவனுக்காக, கம்ஸனுடைய ஈரங்கொல்லி நம் திறத்திற்பண்ணின குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமானார். [நின்றவாறும் இத்யாதி] - லங்காத்வாரத்திலே கையும்வில்லுமாய் நின்றபடியாதல், வாலிவதம் பண்ணிக் கையும்வில்லுமாய் நின்றபடியாதல்; [*அவஷ்டப்யச திஷ்டந்தம் ததர்ச தநுரூர்ஜிதம் - சுபா*] வாலிவதம்பண்ணிக் கையும்வில்லுமாய்க்கொண்டு வென்றிபுனைந்துநின்ற பெருமாளையும், அவரையிடுவித்து கொல்லுவித்த தம்பியாரையும், இருவரையும் அநுவர்த்தித்து முடிசூடவிருக்கிற மஹாராஜரையுங்கண்டவிவள் "நமக்கு சத்ருக்கள்" என்றிராதே, சுபஹ்ருதயையானாள் அவர்பக்கல் சாங்கத்தாலே. இனித்தான் தண்ணீர் குடிக்ககல்லின ஏரியிலே கல்லைக்கட்டிக் கொண்டு விழுந்துமுடிந்துபோவாரைப்போலே, ஆஸுரப்ரக்ருதியானவாறே முடிந்துபோனான் வாலி; இவர்செய்தகுற்றமுண்டோ? என்றிருந்தாள். அவர் தம்முயிர்நிலையிலே நலிந்தாரைவிட்டுவைப்பரோ. [இருந்தவாறும்] - *உடஜே ராமமாஸீநம்* என்றிருந்தவிருப்பும் [கிடந்தவாறும்] *அஞ்சலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததே: *என்கிறபடியே, கடற்கரையிலே கிடந்த கிடையும். *ப்ரதிசிச்யே* என்கிறதிறே, ஒருகடலோடே யொருகடல் ஸ்பர்த்தித்துகிடந்தாப்போலேயிருக்கையாலே; "கருணையென்னுங்கடல் கருங்கடலைநோக்கிக்கிடந்ததே" என்றானிறே. அதாகிறது-பின்பு விடக்கடவதாகத்தொடுத்த அம்பு முன்புவிடமாட்டாமையில்லையிறே; அப்படிப்பட்ட அம்பிருக்க, தந்தோள்வலி கிடக்க, தரம்போராதார் முகங்காட்டாதேயிருக்கப் பொறுத்துக்கிடந்த கிடையைச்சொல்லுகிறது. நின்றுமிருந்தும்கிடந்தும் என்று திரளச்சொல்லவமையுமாயிருக்க, நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமென்கிறாரிறே - தனித்தனியே உளுக்கினபடி. அங்ஙனன்றிக்கே, கோவர்த்தநோத்தரணம்பண்ணி நின்றநிலையாதல், திருக்குரவைக்கு மூற்சாமமாகப் பெண்களோடே கழகமிருந்தவிருப்பாதல். ஓரொருத்தர் மடிகளிலே சாய்ந்தபடியாதல். நின்றானாகில் "நிலையாரநின்றான்" என்பார்கள். "நின்றவன் இருத்தல்சாய்தல் செய்யிற் செய்வதென்?" என்று வயிறுபிடிக்கவேண்டும்படியிறே அதிருப்பது. இருந்தானாகில்; "பிரானிருந்தமைகாட்டினீர்" என்னும்படியிருக்கும். கிடந்தானாகில், "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள். *நிற்பதுமோர்வெற்பகத்திருப்பவிண்கிடப்பதும் நற்பெருந்திரைக்கடலுள்* என்கிறபடியே, திருமலையிலே

நின்றபடியும், பரமபதத்திலே இருந்தபடியும், திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியுமாகவுமாம். *நிற்பதுமிருப்பதுங்கிடப்பதுமென்னெஞ்சுளே* என்கிறபடியே, இவர்திருவுள்ளத்திலே*திகழுமணிக்குன்றமொன்றேயொத்து நின்றபடியும்; "செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த வவ்வாயன்றி யானறியேன்" என்னும்படி இருந்தபடியும்; "நின்றுமிருந்துங்கிடந்தும்" என்கிறபடியே, தந்திருவுள்ளத்திலே நின்றபடியும் இருந்தபடியும் கிடந்தபடியுமென்னுதல். அன்றிக்கே, திருவூரகத்திலே நின்றபடியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்தபடியுமாதல். "நின்றவாறுமிருந்தவாறுங்கிடந்தவாறும்" என்று ஆழ்வார் பாடாநிற்க, "இவையெல்லாம் தொட்டிலிலே" என்று அருளிச் செய்தார் எம்பெருமானர். தொட்டிற்பழுவைப் பிடித்துக்கொண்டு நிற்கும்படியும் தரித்து நிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும், அதுதான் பொறுக்கமாட்டாமை சாய்ந்து கிடக்கும்படியுஞ் சொல்லுகிறது. அதவா, [நின்றவாறுமிருந்தவாறும் கிடந்தவாறும்] - *போரார்வேற்கண்மடவாள் போந்தனையும் பொய்யுறங்கி, அவள்போனவாறே எழுந்திருந்துநின்றவாறும்; அடியோசைப்பட்டவாறே வந்திருந்தபடியும், நிழலாடினவாறே முன்கிடந்ததானத்தேயோராதவன்போல் கிடந்தவாறுமென்றுமாம். [நினைப்பரியன] அது ஒருகால் செய்துபோகச் செய்தேயும் இவர்க்கு இன்றுங்கூட நினைக்கவும் அரிதாயிராநின்றது. "இமையோர் தமக்கும் - செவ்வேநெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச்சொல்" என்றாரிறே முன்பே. [ஒன்றலாவுருவாய்] - இவர்தமக்கு ஒன்றேபோருமாகாதேயுள்ளதனையும் நோவுபடுகைக்கு. ஒன்றல்லாத ப்ரகாரங்களையுடையவாய். [அருவாய நின்மாயங்கள்] - கண்ணுக்கு அவிஷயமாயிருக்கிற உன்னுடைய ஆச்சர்யமான சேஷ்டிதங்களை. [நின்றுநின்று நினைகின்றேன்] - நினைத்துத்தலைக்கட்டமாட்டார், நினையாதிருக்கமாட்டார். வருந்தி உன்னைநினைக்கப்புகுவன், நினைக்க மாட்டுகிறிலேன். அன்றிக்கே, நினைக்கைதான் தேட்டமாய் "நினைக்கலாவதொருவழியேதோ" என்று ஆராயாநின்றேன். [உன்னையெங்ஙனம்நினைகிற்பன்] - ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வசக்தியுமான நீ, நான் உன்னை நினைக்கலாவதொரு வழியிட்டுத்தரவல்லையே. "தொண்டெல்லாம் நின்னடியே தொழுதுய்யுமா கண்டு" - சேஷவர்க்கமடங்கலும் ஐச்வர்யார்த்திகள், ஆத்மப்ராப்திகாமர், பகவத்ப்ராப்திகாமர்; இவரடங்கலும் சென்றுகிட்டித் தந்தாம் ப்ரயோஜநங்களைப்பெற்று மீளுகிறபடியைக்கண்டு, "தான்கணபுரந்தொழப்போயினள்" - நமக்கும் கலந்து பரிமாறி மீளலாமென்றுபோனுள்; "தான்" - விஷயத்தையே பார்க்குமித்தனையோ, தந்தாமையும் பார்க்கவேண்டாவோ. ஒருப்ரயோஜநத்துக்காகப் போவார்க்கன்றோ அதுகொண்டு மீளலாவது, தன்னையே ப்ரயோஜநமாகப்பற்றிப் போவார்க்கு மீளவிரகுண்டோ. இப்படியேயிறே பகவத்ப்ராவண்யமுடையார்படி. [பாவியேற்கு] - என்னையொழிக்காரடங்கலும் நினைப்பாரும் அபிமதம்பெறுவாருமாய்க்கிடீர்! செல்லுகிறது. *ஸம்ருத்தோயச்சதிசோபகம்* என்கிறபடியேயிறே நாடடங்கலும் [ஒன்றுநன்குரையாய்] அர்ஜுநனுக்குச் சொன்னப்போலே எனக்கும் ஒருநல் வார்த்தைசொல்லவல்லையே, அவ்வளவாகாதே இவர்தம்மதம். இனி "ப்ராப்திக்கும் விரோதிபோகைக்கும் கடவேன்நான்" என்றானிறே, அவ்வளவேயிறே வேண்டுவது, பின்புவருமவை தன்னடையேவருமவையிறே. ஸ்வஸ்வரூபஸித்தியிறே ப்ராப்யம், ப்ராப்தி பலமான கைங்கர்யம் சொல்லவேண்டாவே, ப்ராப்தியளவிறே ப்ரமாணம் சொல்லுவது. அவ்வருகுள்ளது ப்ரமாணத்துக்கு விஷயமன்றே. அப்படியே "உனக்கும் நானே கடவேன்" என்று ஒருவார்த்தை சொல்லவல்லையே. [உலகமுண்டவொண்சுடரே] - உண்டியுடல் காட்டுமே. நினைக்கை குற்றமாய் விட்டதோ? நினைவுங்கூடத்தேட்டமானல் நீயேசெய்து தலைக்கட்டவேண்டாவோ, இவை ஆபத்துங்கூடவறிவிக்கமாட்டாத ஸமயத்திலே நீயேயறிந்து வயிற்றிலே வைத்து நோக்கி, இவ்வுபகாரம் இவையறியாதொழிய, இது உன்பேறென்னுமிடம்

வடிவில் புகரிலேதோற்றவிருப்பானொருவனல்லையோ. [உலகமுண்டவொண் சுடரே] - "உன் பேறாக ரக்ஷித்தாய்" என்று மெய்யேயன்றோ சொல்லுகிறது. (6)

ஏழாம்பாட்டு. மாநஸாநுஸந்தாநமேயாய் சிதிலனாய்ப்போகாமே, கண்ணாலே கண்டு அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

ஒண்சுடரோடிருளுமாய் நின்றவாறும் உண்மையோடின்மையாய்வந்து *என்
கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன*
எண்கொள்சிந்தையுள்நைகின்றேன் என்கரியமாணிக்கமே!* என்கண்கட்குத்
திண்கொள்ளவொருநாள் அருளாயுன்திருவுருவே. (7)

[உண்மையோடின்மையாய்வந்து - ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும்] - எனக்கு உண்மையோடே ஒண்சுடராய்நிற்கும் ஹார்த்தமாக; இன்மையோடிருளாயிருக்கும் பாஹ்யாபேக்ஷையில். அன்றிக்கே, ஆச்ரிதர்க்குத் தன்படிகளிலொன்றும் குறையாதபடி காட்டிக்கொடுத்து, அவர்களுக்கு இவ்வளவென்று பரிச்சேதிக்கலாம்படி ப்ரகாசித்து நின்றபடியும்; அநாச்ரிதர்க்குத் தன்படிகளிலொன்றும் தெரியாதபடிபண்ணி, அத்தாலே அவர்களுக்கு இல்லை என்னும்படி இருளப்பண்ணிக்கொடு நின்றபடியும். ஆச்ரிதர்க்கு ஒண்சுடரோடு உண்மையாய் நின்றும், அநாச்ரிதர்க்கு இருளோடு இன்மையாய் நின்றும். [வந்தென்கண்கொளாவகை நீ கரந்தென்னைச்செய்கின்றன] - இவையெல்லாம்தவிர, என்பக்கல்பரிமாறுகிற வேறுபாடும். ஒண்சுடராதல் இருளாதல், இரண்டத்தொன்றாகப் பெற்றிலேன்; நடுவேநின்று க்லேசியாநின்றேன். முக்தர்க்குக்கூட்டல்லர், ஸம்ஸாரிகளுக்குக் கூட்டல்லர், அந்தரப்பட்டு நிற்கிறாரிறே இவர்தாம். என் நெஞ்சிலே வந்து புகுந்து என் கண்ணுக்கு அவிஷயமாம்படி மறைய நின்று நீ என்னை நலிகிறவற்றையும், [கண்கொளாவகை]-கண் க்ரஹியாதபடி. [எண்கொள்சிந்தையுள் நைகின்றேன்]- பெற்ற வம்சங்கொண்டு கார்யங்கொள்ளமாட்டுகிறிலேன். கைப்புகுந்ததுகொண்டு மேலுள்ளதுபெற விரகு பார்க்கமாட்டுகிறிலேன். எண்ணப்புக்கு, மநோரதமாத்ரத்திலே சிதிலனாகாநின்றேன். [என்கரியமாணிக்கமே] - சக்ஷுர்விஷயமான பதார்த்தங்களைக்கொண்டு நான் காலம்போக்கமாட்டாமே, உன்வடிவின்சுவட்டை அறிவித்தாயே [என்கரியமாணிக்கமே] - இவ்வடிவைப் பிரிந்தார்க்கு ஜீவிக்கவுமாம்'' என்று தோற்றியிருந்ததோ ? [என்கண்கட்கு] - இவற்றின்விடாய் உனக்குத் தெரியுமிறே; நான் பெற்றேனென்றாலும் ஆறியிராதவையன்றே? வேறொன்றிட்டு மறைக்கலாமவையன்றே. [திண்கொள்ள] - மாநஸாநுபவத்தை ப்ரத்யக்ஷஸமாநாகாரமாகப் பண்ணினோமே என்று நீ சொல்லுமது எனக்குவார்த்தையன்றுகிடாய். [திண் கொள்ள] - ஸ்வப்நாநுபவம்போலே மாநஸாநுபவமாகவொண்ணாது, ப்ரத்யக்ஷிக்க வேணும் த்ருடமாக. இங்ஙன் செய்யப்போமோ? என்னில் - சிலர்க்கு ஸதாதர்சநயோக்யனாகாநின்றாயே ஒருநாளருளாய்] - ஒருநாளமையுமென்கிறாரல்லர், விடாயின்பெருமை சொல்லுகிறார்; தாபார்த்தன் "ஒரு கால் நாக்குநனைக்கவமையும்'' என்றாப்போலே; கிட்டினால் பின்னை விடும்படி சொல்லுகிறோம் என்று. [உன்திருவுருவே] இதேதேனுமுன்னதோ, நோக்கிக் கொண்டு கிடக்கைக்கு *நதே ரூபம் - பகதாநாம்? அன்றோ? ... ... (7)

எட்டாம்பாட்டு. உன்குணசேஷ்டிதாதிகளைக்கேட்ட கேட்டபோதுதோறும் சிதிலனாகாநின்றேன். என்செய்கேனென்கிறார்.

திருவுருவுகிடந்தவாறும் கொப்பூழ்ச்செந்தாமரைமேல்* திசைமுகன்
கருவுள்வீற்றிருந்து படைத்திட்டகருமங்களும்*
பொருவிலுன்றனிநாயகமவை கேட்குந்தோறுமென்னெஞ்சம் நின்றுநெக்கு*
அருவிசோருங்கண்ணீர் என்செய்கேனடியேனே. (8)

[திருவுருவுகிடந்தவாறும்] - காந்திமிக்கவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும். தர்சநீயமானவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும். [கொப்பூழ் இத்யாதி] - ஏகார்ணவத்திலே ஸ்ருஷ்ட்யுந்முகனாய்க் கண்வளர்ந்தருளிப் பின்பு அக்காலம் வந்தவாறேயெழுந்திருந்து இவற்றையெல்லா முண்டாக்கினான். ப்ரஹ்மஸ்ருஷ்டியளவும்செல்ல அவ்வருகுள்ளதெல்லாம் தானேயுண்டாக்கிப்பின்பு திருநாபியிலே யுண்டான தாமரைப்பூவில்ப்ரஹ்மாவினுடைய வுத்பத்திக்குத்தானாதாரமாய், பின்பவன்தன்னைத் தனக்காதாரமாகக்கொண்டு இவ்வருகுண்டான கார்யவர்க்கங்களையடங்கவுமுண்டாக்ினபடியும். [திசைமுகன் கருவுள்வீற்றிருந்து] - சதுர்முகனாகிற சரீரத்தையதிஷ்டித்துக்கொண்டுநின்று. *ஸ்ருஷ்டிம்தத: கரிஷ்யாமி த்வாமாவிச்ய* என்கிறபடியே, *ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்டௌ* இன்ன ஆஸனத்தை யுடையனைக்கொண்டு என்றாப்போலே. [வீற்றிருந்து] - தன்னைச்வர்யத்தால் உள்ள மேன்மை தோன்றவிருந்தபடி. பொற்குப்பியிமாணிக்கம் போலே (அழகிய திருமேனியோடே கண்வளர்ந்தபடியும், அந்த வடிவில்கொப்பூழில் சிவந்த தாமரையின்மேலேயுண்டான சதுர்முகன் கருவுக்குள்ளே அந்தராத்மாவான வேறுபாடு தோன்றும்படியிருந்து) [படைத்திட்ட கருமங்களும்] ஸ்ருஷ்டித்தவ்யாபாரங்களும். [பொருவில் இத்யாதி] ஒப்பின்றிக்கே அத்விதீயமாய் ஐச்வர்யப்ரகாசகமான உன்குண சேஷ்டிதங்கள் கேட்குந்தோறு மென்னெஞ்சானது மெழுகெகிழ்ந்தாப்போலே நெகிழ்ந்து, கண்ணநீரருவியாய் ப்ரவஹியாநின்றது. [என்செய்கேனடியேனே] - பரதந்த்ரனான நான் கார்யம் செய்துகொள்ளப் பார்த்திருக்கிறேயோ? வேறொன்றாலே போதுபோக்கித் தரித்திருக்கவோ? நானெத்தைச் செய்வேன்? ... . (௮)

ஒன்பதாம்பாட்டு த்ரைவிக்ரமாபதாநத்தை யநுஸந்தித்து அத்தாலே சிதிலனாகிற நானுன்னைதரித்து நின்றநுபவிப்பதென் றென்கிறார்.

அடியைமூன்றையிரந்தவாறும் அங்கேநின்றாழ்கடலும்மண்ணும்விண்ணும்
முடிய*ஈரடியால் முடித்துக்கொண்டமுக்கியமும் *
நொடியுமாறவைகேட்குந்தோறும்என்னெஞ்சம்நின்றனக்கேகரைந்துகும் *
கொடியவல்வினையேன் உன்னையென்றுகொல்கூடுவதே? (9)

[அடியைமூன்றைபிரந்தவாறும்]-இவையபேக்ஷிக்கமாட்டாதவன்றும் இவற்றின் ஹிதசிந்தை பண்ணுமளவேயோ. இவையுண்டானாலும் சிறியத்தைப்பெரியது நலியாதபடி நோக்குவானவனென்கிறது. [அடியைமூன்றையிரந்தவாறும்] - நேராய்ப் போகாமே மூன்றையிரந்தபடி. இரண்டடியிரந்தானாகில் அவனைச்சிறைசெய்யவிரகில்லையே [அங்கே நின்று] - கடக்கநாலடிபோனானாகில் "க்ருத்ரிமம் பண்ணினான்" என்று அவனுக்கு வழக்குப்பேசலாமிறே. [ஆழ்கடலித்யாதி] - இவருடைய நெஞ்சைக் கரைக்கவடியிடுகிறபடி. பூம்யந்தரிக்ஷாதிகளடங்கவுமிரண்டடியிலேயடங்கும்படிக் கீடாக அளந்து தலைக்கட்டிக்கொண்டபடியும் [முக்கியமும்] - முக்யமும் வேண்டப்பாடும். அதாவது- ஆச்ரிதார்த்தமாகப்பண்ணின வஞ்சனையால் வந்தவேண்டப்பாடிருக்கிறபடி. அன்றியே, ஸ்வவ்யதிரிக்தங்களும் தன்றிருவடிகளின்கீழே யகப்படுகையாலே வந்தவேண்டப்பாடும். [நொடியுமாறித்யாதி] - நொடிதல் - சொல்லுதல். திருவுலகளந்தருளின வ்ருத்தாந்தத்தை வ்யாஸாதிகள் சொல்லாநிற்பர்கள். அவர்கள் சொல்லும் ப்ரகாரங்களைக் கேட்குந்தோறும், நான் சொல்லவேண்டா. [என்னெஞ்சம் நின்றனக்கே கரைந்துகும்] - மஹாபலியைப்போலே ஔதார்யம் கொண்டாடுகிறேனல்லேன். இந்த்ரனைப் போலே ராஜ்யமாளுகிறேனல்லேன். என்னுடைய மநஸ்ஸானது உன்பக்கலிலே சிதிலமாய் மங்காநின்றது. [கொடியவல்வினையேன்] - *யந்நாமஸங்கீர்த்தநதோ

மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி * என்கிறபடியே திருநாமஸங்கீர்த்தநம் மஹாபாதகங்களையும் போக்குமென்று சொல்லாநிற்க, அதுதானே சைதில்யஹேதுவாம்படி மஹாபாபத்தைப் பண்ணினேன். [உன்னையென்றுகொல்கூடுவதே] - உன்னை நான் தரித்தநுபவிப்பதென்றோ? அநுபவிப்ப வந்துகிட்டுவதென்றோ? (9)

பத்தாம்பாட்டு, ஸமுத்ரமதநவைசித்ர்யத்தை யநுஸந்தித்து சிதிலனாகாநின்றேன், உன்னை தரித்துநின்றநுஸந்திக்கவல்லேனாம்படி விரகுசொல்லவேணுமென்கிறார்.

கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதந்தேவருண்ண*அசுரரை
வீடும்வண்ணங்களேசெய்து போனவித்தகமும்*
ஊடுபுக்கெனதாவியையுருக்கியுண்டிடுகின்ற* நின்தன்னை
நாடும்வண்ணஞ்சொல்லாய் நச்சுநாகணையானே! (10)

[கூடிநீரைக்கடைந்தவாறும்] - "நாம் ஸமவிபாகம்பண்ணி புஜிக்கக்கடவோம்" என்று அஸுரர்களோடேகூடிஸமுத்ரத்தைக்கடைந்தபடியும். கடைந்துபிடித்துக்காணுமிவருடைய ஆவியையுருக்கிற்று. [அமுதம் தேவருண்ணவித்யாதி]-பலவேளையிலே வந்தவாறே ப்ரயோஜநரூபமான அம்ருதத்தை யநுகூலவர்க்கமான தேவஜாதியே புஜித்து, ஆஸுரப்ரக்ருதிகள் "அம்ருதத்தைநாய்க்கிடு" என்று அத்தைவிட்டு அவர்கள் பின்தொடரும்படிக்கீடாக தர்சநீயமான ஸ்த்ரீவடிவைக்கொண்டுபோன விஸ்மயநீயமான செயலும் * மாயயா மோஹயித்வா தாந் விஷ்ணுஸ்ஸ்த்ரீரூபமாஸ்த்தித: 'வானவரைப் பெண்ணாகியமுதூட்டும் பெருமானார்' கடைந்தவாற்றாலும் வித்தகத்தாலும். [ஊடுபுக்கு] – தோற்புரைபோகாதே மர்மத்திலேபுக்கு. [எனதாவியை] - * அச்சேத்யோயமதாஹ்யோயம் * என்கிற ஆத்மவஸ்துவை. [உருக்கியுண்டிடுகின்றநின்றன்னை] - த்ரவத்ரவ்யமாக்கி, முடித்துவிடாதேயொழிகிற உன்னை. "புருஷோத்தமனிப்படி செய்வதே" என்று இக்குணப்ரஸங்கத்திலே சிதிலனாகா நின்றேன், தரித்தநுபவிக்கும்படி நல்விரகு சொல்லவேணும், உம்மை தரிப்பிக்கப்போமோ நம்மாலென்ன; ஒருவன் பரமபோகியாய் நின்று தரித்து உன்னை யநுபவிக்கப்பண்ணிக்கொடுத்திலையோ; அப்படியே நானும் தரித்துன்னையநுபவிக்கும்படி பண்ணியருளவேணும். ... ... (10)

நிகமத்தில், இப்பத்தும்கற்றார் பரமபதத்திலே போய் நித்யாநுபவம்பண்ணப் பெறுவரென்கிறார்.

நாகணைமிசைநம்பிரான்சரணேசரண்நமக்கென்று*நாடொறு
மேகசிந்தையனாய்க்குருகூர்ச்சடகோபன்மாறன்*
ஆகநூற்றவந்தாதியாயிரத்துள்ளிவையுமோர்பத்தும்வல்லார்*
மாகவைகுந்தத்துமகிழ்வெய்துவர்வைகலுமே. (11)

[நாகணையித்யாதி] - திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரன் திருவடிகளே நமக்குபாயம் என்று. அநந்தசாயித்வம்—ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாகையாலே, ஸர்வாதிகனே சரண்யனென்கிறது. (திருவநந்தாழ்வானுடைய புருஷகாரபாவம் சொல்லுகிறதென்றுமாம்.) இவனுடைய வுபாயபாவத்தில் புருஷகாரமாகவல்லார் அவள் பரிகரத்திலுள்ளாராகாதே. படுக்கை கிடப்பது அந்தஃபுரத்திலேயிறே. [நம்பிரான்] ஆச்ரிதவிஷயத்திலுபகார சீலனானவன். [சரணே சரண் - என்று.] அவதாரணத்தாலே உபாயநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது. ஸாம்ஸாரிக ஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமே பலியாநின்றாலுமப்படி

யடிக்கழிவு செய்வாரொருவரல்லரேயிவர். இதொழிய வேறொன்றில் கால்தாழா தொழிகை - மஹாவிச்வாஸமாகிறது. இத்தால் ஏகபதத்திலர்த்தம் சொல்லுகிறது. [நாடொறுமேகசிந்தையனாய்.] - புறம்புண்டான சிந்தனைபோய், இவ்விஷயத்திலே ஏகாகாரமான மநோரதமுடையராய், அர்த்தார்ஜநம் பண்ணப் போவாரொரு சிராயை விச்வஸித்து நாலாண்டு பதிற்றாண்டிழியாநின்றார்களிறே. பேற்றின் சீர்மையைப் பார்த்தால் அவ்வளவாகிலும் வேண்டாவோ இவ்விஷயத்தில். ஸம்ஸார ஸ்வபாவத்தால் வ்யஸநபரம்பரைகள் வந்தாலும் வ்யவஸாயங்குலையாமே போருமதிறே ஸ்வரூபமாவது. [குருகூர்ச்சடகோபன்மாறன்] - அதுக்கெல்லாவற்றுக்கு மடியான பிறப்பிருக்கிறபடி. [ஆக நூற்றவந்தாதி] - தாமுளராகைக்காகச் சொன்னவந்தாதி ஆயிரத்திலுமிப்பத்தை அப்யஸிக்கவல்லார். [மாகமித்யாதி] - மஹாகாசமென்று பேரையுடைய ஸ்ரீவைகுண்டத்திலே. [வைகலும் - மகிழ்வெய்துவர்] - காலதத்த்வமுள்ளதனையும் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர். அநுஸந்தானத்துக்கு விச்சேதம் வாராதபடி பண்ணியருளவேணும் என்று ப்ரார்த்திக்க வேண்டும்படியான ஸம்ஸாரத்தைவிட்டு, பகவதநுபவத்துக்கு விச்சேதமொருநாளுமில்லாத பரமபதத்திலே புக்கநுபவிக்கப்பெறுவர், மாவென்று - மஹத்தை, கம் என்று ஆகாசம். ... ... (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பிறந்துலகங்காத்தளிக்கும் பேரருட்கண்ணன்*உன்
சிறந்த குணத்தாலுருகுஞ்சீலத்—திறந்தவிர்ந்து*
சேர்ந்தநுபவிக்கு நிலை செய்யென்ற சீர்மாறன் *
வாய்ந்தபதத் தேமனமே வைகு.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம்,

ஜீயர் திருவடிகளே சரணம்.

தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறியான

ஈடு முப்பத்தாறாயிரப்படியில்

ஐந்தாம்பத்து முற்றிற்று.